இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 92 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 14 ஞாயிற்றுக்கிழமை 26.02.2017

மகாராஜா பொதிகள் சேவை
அவுஸ்திரேலியா 800/-
பிரான்ஸ் 750/-
உணவு பொருட்களை விரைவாக அனுப்ப நாடவேண்டிய ஒரே இடம்
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961

## வடமராட்சி கிழக்கு மீனவர்கள் கடற்படை முகாம் முன் மறியல்

### இந்திய இழுவைப் படகுகளை உடனடியாகத் தடுக்குமாறு கோரி

யாழ்ப்பாணம், பெப்.26



இந்திய மீனவர்களின் ஊடுரு வலை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு கோரி வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி மீனவர்கள் நேற்றுக் >> 52

## இந்திய இழுவைப் படகுகளின் அடாவடி வடக்கில் அதிகரிப்பு

*பல கோடி ரூபா பெறுமதியான வலைகள் அறுத்து நாசம் என உள்ளூர் மீனவர்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், பெப்.26
நல்லெண்ணத்தின் அடிப் படையில் இந்திய மீனவர்க ளையும், அவர்களது படகுக ளையும் இலங்கை அரசு விடு வித்த நிலையில், வடக்கு மீன வர்களின் பலகோடி ரூபா பெறு மதியான வலைகள் இந்திய இழுவைப்படகுகளால் அறுத்து நாசமாக்கப்பட் >> 52



## வடக்கு வைத்தியசாலைகளில் பிளாஸ்ரிக், பொலித்தீன் தடை

### நாளை திங்கள் முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், பெப். 26
வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலை களில் பிளாஸ்ரிக் மற் றும் பொலித்தீன் பாவ னையை முற்றாகத் தடை செய்யவேண்டும். நாளை திங்கட்கிழமை முதல் அனைத்து வைத்திய சாலைகளுக் >> 52

காலஅட்டவணையுடன் கூடிய

## புதியதொரு தீர்மானம் இலங்கை மீது தேவை

*பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகம் ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்தல்*

கொழும்பு, பெப். 26
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது அமர்வு நாளை திங்கட்கிழமை ஆரம்பமாக வுள்ள நிலையில், இலங்கை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு >> 52

# சீனா பக்கம் சாய்கிறதா கொழும்பு?

## இந்தியா, அமெரிக்கா கடும் கண்காணிப்பில்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 26

மகிந்த அரசைப் போன்றே தற்போதைய கூட்டு அரசும், சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்கு - நாடி பிடித்துப் பார்ப்பதற்கே, இந்தியா மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் கடந்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். அரச மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக்களின்போது இந்த விடயத்துக்கே அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தனர்.

அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் இந்தியாவின் அயலுறவுத்துறைச் செயலர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் ஆகியோர் கடந்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது இந்திய அயலுறவுத்துறைச் செயலர் சு.ஜெய்சங்கர், வடக்கு - கிழக்கில் இந்திய முதலீட்டுக்குக் கூட்டமைப்பு ஒத்துழைக்கவேண்டும் எனக் கோரியிருந்தார். சீனாவின் >> 52

முச்சந்தி முரளி



இவர் உடும்புப் பிடியாய் இருக்கிறார். அவை என்ன செய்யப் போகினம்...

## சு.க.வின் கூட்டத்தில் பங்கேற்பாரா மகிந்த?

கொழும்பு, பெப். 26
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள் ளது. >> 53



## தீர்வு கிடைக்காவிட்டால் போராட்ட வடிவம் மாறும்

### காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.26
எங்களுக்குத் தீர்க்கமான முடிவு கிடைக்கப் பெறாது விட்டால் போராட்ட வடிவம் மாறும். அது உணவு ஒறுப்புப் போராட்ட மாக அமையாது எனத் தொடர் >> 52

## கல்வி அமைச்சின் விளையாட்டு பணிப்பாளராக ராணுவ அதிகாரி

### கல்விப்புலத்தில் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 26
கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவுக் கான புதிய பணிப்பாள ராக இராணுவ கேணல் ஒருவரை நியமித்தமைக் குக் கல்விப் புலத்தில் கடும் எதிர்ப் >> 53

## பிலக்குடியிருப்பு மக்களுக்கு உரமூட்டிய இயக்குநர் புகழேந்தி



>> 53

## வடக்குக் கல்வியில் அரசியல் ஆதிக்கம்

*தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், பெப். 26
வடக்கு மாகாணக் கல்வியில் இன்று அரசியல் ஆதிக்கம் செலுத்துகின்றது. நியமனம் உள்ளிட்ட அனைத்தையும் அரசியல்வாதிகளே தீர்மா னிக்கின்றனர் என்று இலங் கைத் தமிழர் >> 53

## தமிழ், முஸ்லிம் தலைவர்களை சந்திக்கவுள்ள மகிந்த

கொழும்பு,பெப்.26
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அடுத்த வாரம் தமிழ், முஸ் லிம் தலைவர்க ளைச் சந்தித்து அடுத்த மாதம் 7 ஆம் திகதி பேச்சு நடத்த திட்டமிட்டுள் ளார். நடைபெற வுள்ள உள்ளூ ராட்சித் தேர்த லில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் ஆதரவைப் பெற் றுக் கொள்வதற் காகவே மகிந்த ராஜபக்ச இந்தச் சந்திப்பை மேற் கொள்ளவுள்ளார்.
(த-5)

## காணி விடுவிப்புக் குறித்து முடிவு எதுவும் இல்லை

### 23ஆவது நாளாகத் தொடர்கிறது புதுக்குடியிருப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 26



காணிகள் விடுவிப்புத் தொடர் பாகப் பொறுப்பு வாய்ந்தவர் களிடம் இருந்து உறுதியான முடிவுகள் கிடைக்கப் >> 53

## பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிப்பதில்லை என சகலருக்கும் கூறிவிட்டேன்

*கூறுகிறார் அரச தலைவர் மைத்திரி*

கொழும்பு, பெப். 26
பன்னாட்டு நீதிபதிகளை எந்தவொரு சந் தர்ப்பத்திலும் நாட்டுக்குள் அனுமதிக்கமாட் டோம். இதனை ஐ.நா. பொதுச் செயலர், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர், உல கின் பலம் வாய்ந்த நாடுகளின் >> 53

## புலனாய்வுத் தலைவரின் வங்கிக் கணக்குக்கு வடக்கிலிருந்தும் பணம்

*விசாரணைகளைத் தீவிரப்படுத்தியது பொலிஸ்*

கொழும்பு, பெப். 26
முன்னாள்தேசியப்புலனாய் வுப் பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவின் வங்கிக் கணக்கில், யாழ்ப் பாணம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந் தும் 3.2 மில்லியன் ரூபா பணம் வைப் >> 52

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி
011 5 411 411
12.50% வ.தே.வ. 13.10% 03 மாதங்கள்
12% வ.தே.வ. 12.36% 06 மாதங்கள்
12.25% வ.தே.வ. 12.25% 12 மாதங்கள்
SDB வங்கி
Fitch Rating BB+ (stable). Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். பல்கலை துணைவேந்தர் தேர்தல்;

# பேராசிரியர் சாம் தியாகலிங்கம் போட்டியிட அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்.பெப். 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடப் பேராசிரியர் சாம் தியாகலிங்கம் விண்ணப்பித்திருந்த நிலையில், அவருக்கு அனுமதி வழங்குவதா மறுப்பதா என்று நேற்றைய பேரவைக் கூட்டத்தில் நீண்ட நேர வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அவருக்கான அனுமதியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் வழங்கியிருக்காத நிலையில் விண்ணப்பித்த 5 பேராசிரியர்களுக்கும் இன்று துணைவேந்தர் பதவிக்கான தேர்தல் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது. துணைவேந்தர் பதவிக்கான தேர்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெறவுள்ளது. அதில் போட்டியிடுபவர்கள் தமது திட்டங்கள் உள்ளிட்ட விவரங்களை நேற்றுப் பேரவைக் கூட்டத்தில் கூறுவர் என்று முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தபோதும் பேரவைக் கூட்டத்தில் நீண்டநேர வாதப்பிரதிவாதம் இடம்பெற்றமையால் திட்டங்கள் பற்றிக் கூறப்படவில்லை. அது இன்று முற்பகல் இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் துணைவேந்தருக்கான தேர்தல் இன்று முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெறும் என்று கூறப்பட்டது.

பேராசிரியர் சாம் தியாகலிங்கம் துணைவேந்தராகப் போட்டியிட அனுமதி வழங்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் கோரியிருந்தது. அது நேற்றைய பேரவைக் கூட்டத்தில் முக்கிய விடயமாக விவாதிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அவருக்கு அனுமதி வழங்கவில்லை. அவரது விண்ணப்பம் தாமதமாகக் கிடைத்ததாகக் கூறப்பட்ட நிலையில் அதனை ஏற்றுக்கொள்வதா நிராகரிப்பதா என்பது பற்றிய முன்னறிவிப்பைப் பல்கலைக்கழகத் தரப்பு முன்னரே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்து, அனுமதிக்கவேண்டாம் என்று பதிலைப் பெற்றிருந்தது.

நேற்றுப் பேரவைக் கூட்டம் ஆரம்பித்தபோது இந்த விடயம் முதன்மைப் பிரச்சினையாக விவாதிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினை சுமார் 3 மணித்தியாலங்களாக நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் இன்றைய தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் 5 பேரும் பேரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறியிருந்தனர். கூட்டம் நிறைவடையும் நேரத்தில் மீண்டும் இணைந்து கொண்டனர்.

பேராசிரியர் சாம் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவேண்டும் என்று வாதத்தை முன்வைத்த தரப்பினரின் கோரிக்கையைச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிச் சட்டத் தெளிவைப் பெறவிருப்பதாகப் பேசப்பட்டது. ஆனால் அது பற்றிய முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

பேராசிரியர் சாம் தியாகலிங்கத்துக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் துணைவேந்தருக்கான தேர்தல் இன்று இடம்பெறவுள்ளது. அதில் பேராசிரியர்களான விக்னேஸ்வரன், சிறிசற்குணராசா, ரவிராஜ், மிகுந்தன், வேல்நம்பி ஆகியோர் போட்டியிடுகின்றனர். (த-4)

# தேக்கவத்தை கொலை; நேற்று ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப் 26

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் கடந்த மாதம் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் 11 ஆம் திகதி வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

சம்பவம்தொடர்பில் பொலிஸ் குழு தீவிர விசாரணைகளை நடத்தியிருந்தது. இதனடிப்படையில் இது கொலையெனத் தெரிவித்த பொலிஸார் சந்தேகநபரைத் தேடி வந்தனர். கொலை நடந்த தினத்தன்று அந்த வீட்டில் நின்ற ஒருவரையே பொலிஸார் தேடி வந்தனர். மருதானைப் பகுதியில் ஹோட்டல் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த நிலையில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் தெடுவன, மதுகம பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் சிலவற்றில் தொடர்புபட்டிருந்த நிலையில் தலைமறைவாகி வவுனியாவில் வசித்து வந்ததாகவும், வவுனியாவில்இடம்பெற்ற கொலையின் பின் மருதானைப் பகுதியில் சென்று வசித்து வந்ததாகவும்விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (த-5)

# புதிய தேர்தல் முறைக்கு 10 கட்சிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 26

உள்ளூராட்சித் தேர்தலைப் புதிய முறையின் கீழ் நடத்த முக்கியமான 10 கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., புதிய சமசமாஜக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஐக்கிய சோ-லிச கட்சி போன்ற கட்சிகளே புதிய தேர்தல் முறைமைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தற்போது 5 ஆயிரம் உறுப்பினர்கள் வரை உள்வாங்கப்படுகின்றனர். ஆனால், புதிய முறையின் கீழ் 11 ஆயிரம் வரையான உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்வடையும்.

இவ்வாறு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையானது அரசுக்குப் பெரும் செலவினத்தை ஏற்படுத்தும் என்பதுடன், பெரும்பான்மை இனத்திற்குப் பெரும் சாதகமான தேர்தல் முறையாக மாற்றமடையும். இதனால் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என்பதாலலே சிறுபான்மைக் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் போர்க் கொடி உயர்த்தியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(த-4)

# கம்பசிலயும் ஓ.பி.எஸ் மற்றும் ஈ.பி.எஸ் மாதிரி ஒருவரை போடப்பாக்கிறாவாம்?



பேரப்பிள்ளையள் வெளிநாட்டுக்காரர் கொண்டு வந்த டப்பு மற்றது ஐபாட் இதுகளை கிண்டிக் கொண்டிருக்கிறதிலேயே பொழுதைக் கழிக்கிதுகள். பக்கத்தில இருக்கிறது போறது வாறது என்று ஒன்றும் விளங்காமல் சீவிக்குதுகள். நான் என்ர கட்டையில போற வயதில கொம்பியூட்டரை கையால தொட்டு அழையப்படுகிற பாட்டுக்கு சின்னதுகள் தன்ர பாட்டுக்கு தண்ணிபட்ட பாடா தடவித்தடவி அலுவல் பாக்குதுகள். எனக்கு பார்க்க அதிசயமா இருக்குது. உதுல நல்ல அலுவல்களும் நடக்குது பாருங்கோ. ஏன்ர பேரப்பெடியான்று டப்பில செஸ் விளையாடிப்பழகினவன். அன்றைக்கு பள்ளிக்கூடத்தில ரீம் செலக்சன் என்று போய் எல்லா மச்சிலயும் வெற்றியோட வந்தான். உங்க இப்ப செஸ் பழக்கிறது ஒரு பெரிய பிசினஸ்சா நடக்குதெல்லே ஆயிரக்கணக்கில காசை வாங்கி பழக்கிறம் எண்டுறாங்கள். ஆனால் ஒரு பிள்ளையும் நாசனலில போய் வென்று வாறதா தெரியேல்ல. சதுரங்க ஜாம்பவான் விஸ்வநாதன் ஆனந்த் மாதிரி யாரும் உருவாகுவினமோ என்று நானும் ஏங்கிறன். ஊகும்... ஒழுங்குமுறையா என்னதான் நடக் குமோ. எல்லா இடமும் முகத்துக்கஞ்சி என்னமோ செய்யிறதெண்ணுவினமே அது தான் நடக்குது பாருங்கோ. என்ன அப்புச்சி இருந்தாப்போல செஸ் பக்கம் பாயிறார் என்று யோசிக்காதைங்கோ. எல்லா ஆரம்பங்களும் ஆரோக்கியமா இல்லை என்றதைப் பார்க்க கொதிதான் வருகுது. என்னத்தில தான் நாங்கள் தேறப்போறமோ ஒன்றுமா விளங்கேல்ல. குண்டுச்சட்டிக்க குதிரை விட்டுக் கொண்டு வீரம் பேசத் தான் நாங்கள் திறமாக்கள்.

நல்லாத் தூங்கி எழும்பி சாப்பிட்டிட்டு இருக்க ரெலிபோன் வந்துது நீங்கள் ஓடர் கொடுத்த கண்ணாடி வந்திட்டுது மிச்சக்காசைக் கட்டிட்டு எடுங்கோ என்று [illegible] கொஞ்ச நாளா தொடர்ச்சி[illegible] கேலாமல் இருக்கு கண்ணுக்க கூசுது. அதுவும் முக்கியமான நேரத்தில தமிழ் நாட்டில திறிலிங் சீனுகள் ஓடேக்க ரி.வி பார்க்கேலாமல் இருந்தா எப்பிடி இருக்கும். ரெலிபோனில சொன்ன உடனயே சைக்கிள எடுத்துக்கொண்டு ஓடிப்போய் கண்ணாடியை எடுத்துக்கொண்டு வந்திட்டன். நான் கண்ணாடியைப் போட பேரப்பிள்ளையள் சொல்லுதுகள் இப்பதான் தாத்தா மாதிரி இருக்கிறியள் என்று. இவ்வளவு வயசுவரைக்கும் கண்ணாடி போடாமல் வாசிச்சிருக்கிறன் என்று நினைக்க சந்தோசமா இருந்துது. நாங்கள் திண்ட சாப்பாடும் சுவாத்தியமும் தான் அதுக்குக்காரணம் பாருங்கோ. ரி.வியில திறிலிங் சீன் கிறியேற்பண்ணி சசிகலாவை வில்லியாயும் ஓ.பன்னீர்ச்செல்வத்தை ஹீரோவாயும் மாறி மாறி உந்தச் சனல்கள் காட்ட நானும் புதுக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு எப்படா கிளைமாக்ஸ் வருமென்று பார்த்துக்கொண்டு இருந்தன். கடைசியில சப்பென்று முடிஞ்சு போட்டுது. ஜெயலலிதா பதவியில இல்லாம இருக்கேக்க ஒரு டம்மியா ஓ பன்னீர் செல்வத்தை வைச்சு ஆட்டம்காட்ட. அதே போல ஜெயலலிதாவோடையே முப்பத்தாறு வருசம் இருந்த சசிகலா தனக்கும் ஒரு டம்மி வைச்சிட்டாள். சசிகலாவின்ர டம்மி பீஸ் எடப்பாடி பழனிச்சாமி முதல்வரா வந்ததோட ஹீரோ ஓ.பி.எஸ் வெறும் சீரோவா போனார். இப்ப எடப்பாடியை ஈ.பி.எஸ் என்று மீடியா எல்லாம் செல்லமா கூப்பிடுது. ஓ.பி.எஸ் வேர்சஸ் ஈ.பி.எஸ் சீன் நடக்கிறமாதிரி ரி.வி காரர் காட்டிறதுகளைப் பார்க்க வயித்தைப்பத்தியெரியுது. புதுக்கண்ணாடியையும் மடக்கி வைச்சிட்டு இப்ப ரி.வியில இந்தியாக்காரனின்ர சனல் ஒன்றையும் பார்க்கிறதில்லை. இரவு போன் கோல் ஒன்று வந்துது. பழுத்து கொட்டை போட்ட பேராசிரியர் இடசுகம் கதைக்கிறவர், அவர் தான் எடுத்தார். ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ் விளையாட்டுக்கள் என்னவாம் என்றார். உதைப்பார்க்கிறதை விட்டு நாட்கண்க்காகுது. அதைவிட்டிட்டு வேற என்னைத்தை யாவது கதைப்பம் என்றன். இஞ்ச கம்பசிலயும் அம்மா ஆட்சி முடிஞ்சு போகேக்க தன்ர வண்டவாளங்களை அடியொட்ட கிட்டாத படி ஆட்சியில [illegible] போகப்போறாவா [illegible] எல்லாம் கதறுது அது. தெரியுமே என்றார். கம்பசு பெரிய பள்ளிக்கூட விசயங்களை நீங்கள் சொன்னாத் தானே எனக்குத் தெரியும். மற்றப்படி படிச்சவயளின்ர விசயம் கண்டபடி கசியுமே. ஏன் என்ன நடக்குதாம், அம்மா ஆறு வருசம் இருந்தது போதாதாமே, கதிரையால இறங்க என்ன பிரச்சினையாம்? என்றன். புதிசா கம்பசுக்கு துணை வேந்தரை நியமிக்க அப்ளிக்கேசன் கோல் பண்ணினவையாம். இப்ப எல்லா இடமும் ஒன்லைன் அப்ளிகேசன் கோல் பண்ண இங்க யாழ்ப்பாணக் கம்பசில மட்டும் தபாலில போட வேணும் என்று தங்கட பழைமை பேண் பண்பைக் காட்டுகினமாம். அதுக்கு ஒரு தமிழன் அமெரிக்காவில இருந்து விண்ணப்பிச்சவராம். அந்தாள் ஒரு மாசத்துக்கு முன்னம் தபால் அனுப்பிப் போட்டாராம். எங்கட சேடமிழுக்கிற தபால் விநியோகத்தால இரண்டு நாள் பிந்திப்போச்சாம். மனிசி உடன தனக்கேற்றதா கொமிற்றி போட்டு அந்த விண்ணப்பத்தை எடுக்கேலாதென்று முடிவெடுத்துப் போட்டுதாம். நல்ல தகுதியானவை பரந்து விரிஞ்ச பார்வையோட அனுபவத்தோட வரேக்க வரவேற்க மாட்டாங்கள். குண்டுச்சட்டிக்க குதிரை விடுகிறமென்று நிக்கிறாங்கள். அந்தாள் புற்றுநோயில பெரிய ஆய்வுகள் செய்து கனக்கக் கண்டு பிடிச்சிருக்கிறாராம் என்று மூச்சு விடாமல் சொல்லி முடிச்சார். நாங்களும் உந்த மருந்தடிச்ச எல்லாத்தையும் விழுங்கிப்போட்டு புற்றுநோயால அவதிப்படுகிறம். இப்பிடி உலகளவிலான ஆக்கள் வாரது நல்லது தானே என்று நான் பதிலுக்கு சொல்ல. அம்மா தான் பதவியில இல்லாம இருக்கேக்க தமிழ்நாட்டின்ர அரசியல் மாதிரி ஒரு ஓ.பி.எஸ் அல்லது ஈ.பி.எஸ் போல ஒருத்தரை இருத்திப்போட்டு போகப்பாக்கிறாவாம் என்றார் பேராசிரியர். அந்தாள் பழுத்து கொட்டை போட்டாளெல்லே. என்னத்தையோ நோட்டமிட்டுப்போட்டுத்தான் சொல்லுதென்று விளங்கிக் கொண்டன். எங்கட அரசியலில ஒரு வெற்றிடம் இருக்குத் தானே, கம்பசில இருந்து பதவியால இறங்கினா அரசியலில நல்ல எதிர்காலம் இருக்கு.' ஒரு நீதியரசரை நம்பி அரசியலுக்குக் கொண்டு வந்த மாதிரி அம்மாவையும் கொண்டு வந்தா என்ன? என்று நான் கேட்க உனக்கு எப்பவும் பகிடிதான் நான் வைக்கிறன்' என்று போட்டு அந்தாள் போனைக் கட்பண்ணிப் போட்டுது.

அம்பலத்தாடி
அப்புச்சி
aappuchchi@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது இந்தியா

## கூறுகிறார் கோத்தபாய

கொழும்பு, பெப். 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இந்திய வம்சாவளித் தமிழர்களும் இங்கிருப்பதால் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்துள்ள இந்தியா, இலங்கையில் பெரிய அளவில் விடயங்களை காரியங்களை மேற்கொள்ள முடியும். அதனை இந்தியா கடந்த காலங்களில் செய்துள்ளது.

இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார். கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுடனான உறவுகள் மிகவும் முக்கியமானவை. இதனை நாம் ஆரம்பத்திலேயே புரிந்து கொண்டு, இந்தியாவை அணுகியிருந்தோம். துரதிர்ஷ்டவசமாக, இந்தியாவின் அரசு, காங்கிரசிடம் இருந்து பா.ஜ.க.விடம் மாறியது. புதிய அரசின் சில அதிகாரிகள் சீனாவுடனான எமது உறவுகளைத் தவறாகப் புரிந்து கொண்டனர்.

இந்தியாவிலும்,, இலங்கையிலுமாக இரண்டு தடவைகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலைச் சந்தித்தேன். அந்தச் சந்தர்ப்பங்களில் அவர், இலங்கையில் சீனாவின் முதலீடுகள் குறித்து தாங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்று என்னிடம் கூறினார்.

நாம் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்தி, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் என்னிடம் திட்டவட்டமாகக் கூறினார். கொழும்புத் துறைமுகத் தெற்குக் கொள்கலன் முனையத்தின் முழு செயற்பாடுகளையும் எம்மை மீளப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கேட்டார். இவை முக்கியமான விடயங்கள். நான் அவருக்கு விளக்கமளிக்க முயன்றேன். இந்தியாவுக்கு எதிராக எதையும் செய்வதற்கு, இலங்கை மண்ணைப் பயன்படுத்த யாரையும் அனுமதிக்கமாட்டோம் என்று நாம் உத்தரவாதம் அளித்தோம்.

சீனாவுடனான எமது உறவுகள் வித்தியாசமானவை, நாம் சீனாவுடன் நீண்டகால இராஜதந்திர உறவுகளை வைத்திருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் எமது பொருளாதார அபிவிருத்திக்கு உதவக் கூடிய நிலையில் உள்ள ஒரே நாடு சீனா தான். எமக்கு அபிவிருத்தி அவசியம் தேவை. அதனால் இந்த உதவிகளை நாம் ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

துரதிர்ஷ்டவசமாக, அப்போது மேற்குலகின் தலையீடுகள் காரணமாக இந்தியா நம்பவில்லை. மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராகச் செயற்பட இந்தியா முடிவு செய்தது. அவர்களால் பெரியளவில் செய்ய முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் சொல்லைக் கேட்கும். இந்திய வம்சாவளித் தமிழ்ச் சமூகம் இருக்கிறது. இவர்களை இந்தியா கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. அவர்களால் நிறையச் செய்ய முடியும். இது ஒரு காரணி என்றார்.

(த-5)

# மைத்திரிபாலவும் போர்க்குற்றவாளி

## கூறுகிறார் சிவாஜிலிங்கம்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் ஒருபோர்க் குற்றவாளி. போரின் இறுதிக் கட்டத்தில் ஒரு வாரமாகப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். அவரும் தலைமை அமைச்சரும் பன்னாட்டு நீதிபதிகளை ஒருபோதும் இலங்கைக்குள் கொண்டுவரமுடியாது என்று கூறுகின்றனர். இவ்வாறு காலம் காலமாக எங்கள் தமிழ்த் தலைவர்களைஒப்பந்தங்கள் மூலம் ஏமாற்றி வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜி லிங்கம்.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசனின் நினைவு தினம் கரவெட்டி யாக்கருவில் கிராம மக்களால் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலட்சக்கணக்கான மக்களின் படுகொலைக்குப் பன்னாட்டு விசாரணை கட்டாயம் வேண்டும். அரசியல் தீர்வு என்று அவர்கள் வீசுகின்ற எலும்புத் துண்டுகளை நக்குவதற்கு யார் என்றாலும் செல்லுங்கள். இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒருபோதும் இடம் பெறாது.

அன்னப் பட்சி பாலையும் தண்ணீரையும் பிரித்து பாலைக் குடிப்பதுபோல,மைத்திரி என்னும் அன்னப் பட்சியும் சிங்களவரைப் பாலாகவும் தமிழர்களை நீராகவும் பயன்படுத்தி வருகிறார்.

வடக்கு கிழக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் பொது வாக்கெடுப்பு இடம் பெற வேண்டும் இதனால் தமிழர் தம்மையே ஆளுகின்ற நிலை வரவேண்டும்.

மாமனிதர் சிவனேசன் சிங்கள தேசத்துக்கு சிம்மசொப்பனமாக இருந்தார். தனக்கு உயிராபத்து ஏற்படும் என்று தெரிந்துகொண்டும் இந்த மனிதர் வன்னிக்கு அடிக்கடி சென்று வந்தவர். இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினால் படுகொலை செய்யப்பட்டார்.

2004ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேரடிப்பங்களிப்போடும் முழு ஆதரவோடும் மாமனிதர் சிவனேசன் உட்பட 22 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அதைக் கண்டு சிங்கள தேசம் அதிர்ந்தது.

கொலை செய்யப்பட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் கொலை பற்றிப் பேசுகின்றனர். கொலை செய்யப்பட்ட சிவனேசன் பற்றிச் சிங்கள அரசோ எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களோ நாடாளுமன்றத்தில் கதைப்பதில்லை. என்றார்.

(த-426-ரி)

### பிலக்குடியிருப்பு போராட்டம் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.26

பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தொடர்பில், யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புக்களுடனான கலந்துரையாடல், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைமாலை3.30மணிக்கு, கோண்டாவிலிலுள்ள சர்வதோயம் அமைப்பின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. [illegible] பேரவை மேற்கொண்டுள்ளது.

(த-5)

## ஸ்ரீதர் தியேட்டரில் ஈ.பி.டி.பி. பாவித்த மின்கட்டண நிலுவை 85 இலட்சம் ரூபா

*உடன் செலுத்துமாறு கடிதம்*

ஈ.பி.டி.பியின் அலுவலகமாகப் பயன்படுத்தப்படும் ஸ்ரீதர் தியேட்டரின் மின்சாரக் கட்டண நிலுவையான 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபாவைச் செலுத்துமாறு அறுவுறுத்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் ஞானகணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிலுவை தொடர்பில் உடன் கவனம் செலுத்தி பணத்தைச் செலுத்துமாறு தற்போது கடிதம் அனுப்பப்பட்டது.

நிலுவை அதிக தொகையாக உள்ளபோதிலும் பாவனையாளர் முன்னாள் அமைச்சராகவும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளமையால் எம்மால் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க முடியவில்லை. இதனாலேயே எழுத்தில் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் அலு வலகப் பணியாளர்கள் மின்சார சபைக்கு வந்து இறுதி மீதி தொடர்பிலும் உறுதிப்படுத்திச் சென்றனர். ஆயினும் எந்தவிதமான கொடுப்பனவுகளும் செலுத்தப்படாது நிலுவை அப்படியே உள்ளது. இந்தக் கட்டணத்தை எவ்வாறு அறவிடுவது என்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்றார்.

(த-101)

## சன்னா என்று நினைத்து சகோதரன் நேற்று கைது

யாழ்ப்பாணம், பெப். 26

வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் தேடப்படும் சன்னா என்று நினைத்து பொலிஸார் சன்னாவின் சகோதரன் உள்ளிட்ட 3 பேரை நேற்றுக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவதில்கூட கடும் சிரமங்களை எதிர்கொண்டதாகக் கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

தென்மராட்சி வேம்பிராயில் வைத்து நேற்றுக் காலை அவர்கள் கைது செய்யப்பட்டனர். வீடு ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்தபோதே பொலிஸார் அவர்களை ஆள்மாறிக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சன்னா என்றழைக்கப்படும் தேடப்படும் நபரின் மூத்த சகோதரன் சில மாதங்களுக்கு முன்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வாள்வெட்டுக்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தேடப்படும் சன்னா இன்றுவரை பொலிஸாரால் தேடப்படும் நபராகவே உள்ளார். இன்னும் கைது செய்யப்படவில்லை.

(த-4-106)


## கருத்தரங்கு

**தமிழருக்கு நீதி கோரும் போர்க்குற்ற விசாரணை நீர்த்துப் போகுமா ?**

**இடம் :- நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**காலம் :- 26.02.2017 ஞாயிறு 4.00 மணிமுதல் 7.00 மணிவரை**

**தலைவர் :-பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்.**

**கருத்துரைகள் :- அரசியல் கட்சிகள், சிவில் சமூகப்பிரதிநிதிகள்.**

**ஆர்வமுள்ள தமிழர்கள் அனைவரும் வருக !**

**-தமிழர் அரசியல் ஆய்வு வட்டம்.-**

**தகவலுக்கு :- 077 744 7288**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### வீடு வளவு விற்பனைக்குண்டு
டிஸ்பென்சரி லேன், உரும்பிராயில் 6 பரப்பில் அமைந்துள்ள மேல்மாடி வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
021 221 9526, 077 628 5831, 077 610 1872

### வீடு விற்பனைக்கு
புதிய தொடர்மாடி விற்பனைக்கு. St Jame's Street Colombo 15. உறுதி உண்டு. 5 வீடுகள் மாத்திரம் உண்டு. மொத்தம் 10 வீடுகள் பதிவுகளுக்கு. 600,000.00 2BHD - 9000 sqft / 3 BHD 1100 sqft
(C/28217)(11.17.18)
RE / MAX - கஜன் -077 934 7222 ( 9am - 9pm)

### வீடு விற்பனைக்கு
205/3, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 459 2915

### வீடு விற்பனைக்கு
கோண்டாவில் மேற்கு, நவரட்ணராஜா வீதியில், நான்கு பக்க சுற்றுமதிலுடன் 2 பரப்பு 11 குளி காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
076 390 9732

### காணி விற்பனைக்கு
பண்ணாகம் தெற்கு, சுழிபுரம், 14 ஆம் கட்டை காரைநகர் செல்லும் வழியில் சித்தன்கேணி சிவன் கோயிலுக்கும் வடக்கம்பரை அம்மன் கோயிலுக்கும் இடைப்பட்ட 14 ஆம் கட்டையில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
T.P : 077 5587153 (J 5511) (16,17,19)

### காணி விற்பனைக்கு
புலோலி கிராமக்கோட்டுச் சந்தியிலிருந்து போகும் மருதங்கேணி வீதியில் சூசையப்பர் கோவிலுக்கும் வாசிகசாலைக் குமிடையில் வீதியிலிருந்து 25 மீற்றர் தூரத்தில் அகலமான பாதை வசதியுடன் மிகவும் பாதுகாப்பான சூழலில் 5 பரப்பு 08.11 குளி விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்குண்டு. (AJA/CS/1405) (27,18)
076 892 2720, 075 038 9056

### விற்பனைக்கு
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் நல்ல நிலையில் உள்ள பாவித்த Panasonic குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 978 9752

### காணி விற்பனைக்கு
K.K.S. வீதி, சுன்னாகத்தில் வீட்டுடன் 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வீடு, திருமணமண்டபம், விடுதி அமைக்க உகந்த இடம்.
077 513 2261

### வாகன விற்பனை
வெங்கலச்செட்டிகுளம் ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான 43-5677 இலக்கமுடைய டாட்டா ரக வாகனம்(பாரஊர்தி) ஏலத்தில் விற்பனை செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதனை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் வேலை நாள்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.00மணி வரை நேரில் பார்வையிடலாம்.
077 466 9875

### கம்பனி சொந்த வாகனங்கள் உடனடி விற்பனைக்கு
Car - **Honda Fit Aria** (2005)
1490 CC, Petrol, Auto

Van – **KDH 201** (2008)
2980 CC, Diesel, Auto
Power Steering, Power Door

Bus – **Leyland Mini AC Bus** (2013)
6540 CC, Diesel, Manual, 33 Seats

Bus – **Nissan Civilian** (1992)
4160 CC, Diesel, Manual, 29 Seats

தொடர்புக்கு:
ஜயனந்த- 0714 178 700

## தேவை

### தையல் வேலைக்கு ஆள் தேவை
தையல் தெரிந்த பெண்கள் தேவை
தொடர்பு: 077 332 1937

### விற்பனை பிரதிநிதி தேவை
கோழி இறைச்சி
(உயிருடன் / பைக்கற்றில்)
விற்பனைஅனுபவமுள்ளவர் தேவை.
1Kg கோழி 225/= (AJA CS 1421) (14,17,18)
077 389 7314 / 077 454 6371

### வேலையாள்கள் தேவை
தளபாட உற்பத்தி நிறுவனத்திற்கு கீழ்வரும் வேலை யாள்கள் உடன் தேவை.
01. தச்சு வேலையாள்கள்
02. றோதை வாள்பட்டறை இயக்குபவர்
03. குசன் வேலையாள்கள்
04. லேபர் (கூலிவேலையாள்கள்)

லிப்றா மரத்தளபாட நிலையம்
249,4/4 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
077 300 1763

### தேவை
வீட்டில் தங்கியிருந்து பிள்ளைகளைப் பார்ப்பதற்கும், பாடசாலைக்கு அழைத்துச் செல்லுவதற்கும் பெண் ஒருவர் தேவை. தனியான தங்குமிடம், சாப்பாடு, மற்றும் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Dial : 077-6844016

### தேவை
ம.கங்காதரம் எழுதி வெளியிட்ட இளநிலைப் பிரயோக கணிதம் அட்டை உட்பட நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். புத்தகம் நல்ல பெறுமதிக்கு வாங்கப்படும்.
077 088 0675,077 117 2525

### வேலைக்கு ஆள் தேவை
திருநெல்வேலியில் இயங்கும் சுப்பர் மார்க்கட் ஒன்றுக்கு ஆண் ஒருவர் (Sales boy) உடனடியாக தேவை.
077 748 0357

### வீடு/Annex வாடகைக்குத் தேவை
அரச தொழில் புரியும் சிறு குடும்பத்துக்கு Advance இன்றி வீடு/Annex வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 504 8095

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1993 இல் பிறந்த பூசநட்சத்திரம் உடைய தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 344 8863

### பணிப்பெண் தேவை
கொழும்பில் உள்ள கௌரவமான குடும்பம் ஒன்றுக்கு 45 வயதுக்குட்பட்ட வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்குப் பணிப்பெண்கள் தேவை. தகுந்த ஊதியமும் கௌரவமும் வழங்கப்படும்.
(இது வீட்டு உரிமையாளரால் கொடுக்கப்படும் விளம்பரம்)
தொடர்பு: 076 652 8447 (AJA EN 1382) (14,17,18)

## வாடகைக்கு

### அறைகள் வாடகைக்கு
யாழ் வளாகத்துக்கு அண்மையில் அறைகள் வாடகைக்கு உண்டு.
(ஆண் மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும்)
தொடர்பு: 076 803 5262 (AJA CS 1424) (14,17,18)

### வீடு வாடகைக்கு உண்டு
அரியாலை, நாவலடி கிழக்கு வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
077 804 2848, 021 222 3483

## ஏனையவை

### வீடு வாடகைக்குண்டு
நல்லூர் பிரதேச சபைக்கு முன்பாக சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
077 101 6407

### Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்
சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புக்கள் ( Notes ) விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
077 703 1293

### SUPER LUXURY BUS FOR HIRE
Call
076 822 7522
076 822 7515
076 822 7523



29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi
581, K.K.S ROAD, JAFFNA.

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கந்தர்மடச் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் மேற்குப் பக்கமாக அரசடி வீதியில் நான்கு பக்கமும் சுற்றுமதிலுடன் கூடிய கிழக்கு மற்றும் மேற்குப் பக்க இருவழிப் பாதையுடன் கூடிய இரண்டு (2) பரப்பு விஸ்தீரணம் கொண்ட சதுரக்காணி விற்பனைக்குண்டு. (AJA/1433)(11,17,18)
077 905 4181

### வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம், திருநெல்வேலி சந்திக்கருகில் Compus Lane இல் 3 அறைகள், சமையலறையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
077 109 4085


### AUTO CAD
Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D
Full time : 2 Weeks Part time : 2 Months
BRITISH COLLEGE 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna.
103, Mannar Rd, Vavuniya.
Pettah Rd, Mannar. Main Street, Mullaithivu.

### SB விசா Ticket குறைந்த விலையில்
சகல நாடுகளுக்குமான பயணச் சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவுக்கான Ticket களை 29,500/= க்கும் வீசா விண்ணப்பப்படிவம் 100/= பூர்த்தி செய்து தரப்படும். அத்துடன் பிரயாண காப்புறுதி, திகதி மாற்றமும் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு
SB Travels and Tours Pvt Ltd.
021 222 9555, 021 222 8555,
076 691 1080, 076 691 1083

### பூக்கன்றுகள் விற்பனை
நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச்சாடிகள், மீன் தொட்டிகள், பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.
917.K.K.S.றோட், யாழ்ப்பாணம்.
075 991 0060, 077 707 0711

### அறை வாடகைக்கு
யாழ் தட்டாதெரு சந்தி அருகில் அறை வாடகைக்கு உண்டு.(பெண்களுக்கு மட்டும்)
077 721 1763

### MAJESTIC CINEPLEX Jaffna
A CEYLON THEATRES CINEMA
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




10.00 / 1.00 / 4.00 / 7.00 வெள்ளி/சனி/ஞாயிறு 9.30 PM
10.15 / 1.15 / 4.15 / 7.15
10.30 / 1.30 / 4.30 / 7.30
வெள்ளி/சனி/ஞாயிறு 9.30 PM
விசாரணை ☎ 021- 2227712
facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### அறை வாடகைக்கு
குறைந்த விலையில் நாள் வாடகைக்கு Room ரூபா 700 - ரூபா 4000 வரை A/C, T.V Attach Bathroom வசதிகளுடன் உண்டு. Hotel Villa City 422/1, Galle Road Wellawatte இராமகிஷ்ண Shed க்கு அருகில் 072 255 2222

### தவறிவிட்டது
நாகலிங்கம் இரத்தினசிங்கம் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் , காப்புறுதிப் பத்திரம்,வரிப்பத்திரம் என்பன 22.02.2017 அன்று கே.கே.எஸ்.வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
புதிய கஜீபன் நகைமாடம், கே.கே. எஸ். வீதி, இணுவில். 077 830 9817

### சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
| | |
|---|---|
| German & Swiss மொழிப் பாடநெறி | Deutsch |
| French மொழிப் பாடநெறி | French |
| Netherlands மொழிப் பாடநெறி | Dutch |

அரச, தனியார் துறையில் தொழில் புரிபவர்களுக்கான சனி, ஞாயிறு மற்றும் இரவு நேர
ENGLISH, SINHALA
பாடநெறிகள் ஆரம்பமாகின்றன
BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcharinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Street, Mannar. Tel : 023-4924124
Hot Line : 0777-596148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை செயலர்கள் மீது குற்றச்சாட்டு

வடமராட்சி, பெப்.26

வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் ஆலோசனை சபைகளுக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டபோதும் அவர்களை உள்ளூராட்சி சபை செயலாளர்கள் அழைப்பதில்லை என்று மாகாண சபை உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.

உள்ளூராட்சி சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் உள்ளபோது நிலையியல் குழுவே (வீடமைப்பு, சுகாதார தொழில்நுட்ப மற்றும் சுற்றாடல் குழு) மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்னின்று செயற்பட்டது. உள்ளூராட்சிசபைகள் கலைக்கப்பட்டபோது ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களையும் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பெயர் குறித்து ஆலோசனை சபைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

மாகாணசபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டபோதும் உள்ளூராட்சிச் சபைச் செயலாளர்கள் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு ஆலோசனைசபைக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்காமல் கூட்டங்களை நடத்துகின்றனர் என்று உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேவேளை, மாகாண சபை உறுப்பினர்களுக்குக் கூட்டங்களுக்கு அழைப்புவிடுக்காத உள்ளூராட்சி சபைகளின் விவரங்கள் முதலமைச்சரின் அமைச்சு செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரனால் திரட்டப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-50)


## REST HOUSE

புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஓய்வு நேர விடுதிக்கு (Restaurant) கீழ்கண்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.

| | |
|---|---|
| சமையல் காரர் - | 02 |
| சமையல் உதவியாளர் - | 02 |
| உணவு பரிமாறுபவர் (வெய்டர்) - | 03 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் - | 04 |
| சுத்திகரிப்பாளர் - | 03 |
| களஞ்சியப் பொறுப்பாளர் - | 01 |
| காசாளர் - | 02 |
| வரவேற்பாளர் - | 01 |

இவர்களுடன் மூன்று மொழிகளிலும் சரளமாக பேசத் தெரிந்த பெண் ஒருவர் உட்பட மேலும் 7 பேர் வேலைகளுக்கு தேவைப்படுகின்றனர். மேலுள்ள வேலைகளுக்கு தகுதியானவர்கள் கிராமசேவையாளரின் தங்களை உறுதிப்படுத்தும் பதிவுப்பத்திரத்துடன் கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

Ward No. 04 Kompavil, Maththalan Road,
Puthukkudiyiruppu, Mullaitivu
021 791 7694 / 077 034 7868



**திருநெல்வேலி**
**பழங்கிணற்றடி**
**வீரகத்தி விநாயகர் ஆலயம்**
**இன்று 26.02.2017**
**16 ஆம் திருவிழா**
**தீர்த்தோற்சவம்**

காரார் கயமுகக் கணபதியே
காவிய பாரதக் கணபதியே
கூரார் பாசாங்குசத்தவனே
கூவிளங் கொன்றை குவித்தவனே
நீரார் அறுகினில் நிறைந்தவனே
நீறணி கோலம் நிறைந்தவனே
சீரார் திருவடி சேர்ந்திறஞ்சிச்
சிறப்போம் சிறப்போம் சிறப்போமே

**ஐங்கரன் களஞ்சியம்**
**பலாலி வீதி, திருநெல்வேலி.**

## CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில். விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

## Study In Canada

புதிய சட்ட திட்டத்தின் படி...
**Diploma / Degree / Masters**
பாடக்கட்டணம் விசாவிற்கு பிறகு செலுத்தலாம்.
**IELTS** தேவையில்லை.
அனைத்து பயிற்சியும் வழங்கப்படும்.
அடிப்படை தகமை : G.C.E. (O/L)

Age Limit : 15 to 48

Call / SMS
0755-091-091

*Any countries...Any Course !*
*Bank Loans and Bank Balance facilities*
*Visa Guidance - Interview Training*

**SPC**
**STUDENT PLACEMENT CENTER**
Amazon College
294, 2nd Floor, Galle Road,
Bambalapitiya, Colombo-4
managerlk2014@gmail.com

GOODWIN

## Ocean University of Sri Lanka, Regional Centre, Jaffna

**இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், பிராந்திய நிலையம், யாழ்ப்பாணம்**
**முதலாம் கல்வியாண்டிற்காக பின்வரும் கற்கைநெறிகள்**
**எமது பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளன**

அனைத்து
கற்கைநெறிகளும் இலவசம்


| இல. | கற்கைநெறிகள் | காலம் |
|---|---|---|
| 1 | நீரில் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி (Diploma in Aquaculture and Aquatic Resource Management) | 12 Months |
| 2 | மிதவை கப்பல் இயந்திர பொறிவலர் NVQ 4 (Floating Vessel Mechanic) | 6 Months |
| 3 | வெளி இணைப்பு இயந்திர பொறிவலர் NVQ 3 (Out Boat Motor Mechanic) | 6 Months |
| 4 | கடலக மாலுமி பயிற்சி நெறி NVQ 4 (Fishing Vessel Skipper) | 9 Months |
| 5 | சுழியோடிப் பயிற்சி நெறி NVQ 4 (Scuba Divers) | 6 Months |
| 6 | உயிர் பாதுகாப்பு பயிற்சி நெறி NVQ 3/4 (Life Guard) | 6 Months |
| 7 | கடலக வரைபடம் வாசித்தலும், செய்மதி தொடர்பாடலும் Marine Chart Reading Communication & operation of Satellite Navigator | 10 Days |

மேற்படி கற்கை நெறிகளைப் பயில விரும்புவோர் உரிய விண்ணப்பங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் இக்கற்கைநெறிகளுக்கான மேலதிக தகவல்களை பல்கலைக்கழகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும்.

**எமது இணையத்தின் முகவரி:** www.ocu.ac.lk
**மேலதிக தகவல்களுக்கு:**
**தொலைபேசி இலக்கம்:** 1) 021 738 8188
2) 071 834 9073
3) 077 375 5063
**தொலைநகல் :** 021 222 6251

(AJA/IN/ 851)

edexcel | PEARSON | CIOB | RICS




| | | |
|---|---|---|
| HND | BUSINESS MANAGEMENT MARKETING \| HRM | Leading to BA (Hons) from the UK Universities |
| HND | QUANTITY SURVEYING | Leading to BSc (Hons) from the UK Universities |
| HND | BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY | Leading to BSc (Hons) from the UK Universities |
| HND | CIVIL ENGINEERING | Leading to BEng / BSc (Hons) from the UK Universities |
| HND | TELECOM ENGINEERING | Leading to BEng (Hons) from the UK Universities |
| HND | COMPUTING | Leading to BSc (Hons) from the UK Universities |
| HND | ELECTRICAL & ELECTRONIC ENGINEERING | Leading to BEng / BSc (Hons) from the UK Universities |
| LLB | LAW | Leading to LLB (Hons) from the UK Universities |

UGC Recognized / TVEC Approved

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131 / 077 960 3753
COLOMBO 077 283 4595

18 YEARS

**Jaffna Campus**
16, Point Pedro Road, Jaffna.

City Campus
256, Galle Road, Colombo 6.
T : 011 236 4459

Mount Campus
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

Kandy Campus
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

Batti Campus
294, 1/4, Trinco Road, Batticaloa.
T : 065 222 8451

Wayamba Campus
103, Dambulla Road, Kurunegala.
T : 037 223 3339

**Corporate Office**
32, Dharmarama Road, Colombo 6.
T : 0112597217

Kalmunai Campus
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016
Academic Impact Winner by QSi - UK 2016
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD 2014
BTEC Gold Partner by Pearson - UK 2013
Performance Excellence Award by Pearson - UK 2011
Fastest Growing BTEC Centre by Pearson - UK 2010

**HOTLINE : 021 221 9910**
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

**சுத்திகரிப்பு தொழிலாளர், சுத்திகரிப்பு இயந்திர பராமரிப்பாளர் தேவை.**

- எமது நிறுவனத்தால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சுத்திகரிப்பு சேவையில் ஈடுபடுவதற்கு ஆண்/பெண் தொழிலாளருக்கான, சுத்திகரிப்பு இயந்திர பராமரிப்பாளருக்கான "வெற்றிடம்" உள்ளது.
- யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு தொழிலாளர் தேவை.
- சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலை செய்வதற்கு 45 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பதாரி பெயர், வேலைசெய்ய விரும்பும் மாவட்டம், நற்சான்றிதழ் பத்திரம், கற்ற கல்வி தகைமை என்பனவற்றை குறிப்பிடவும்.
- விண்ணப்பங்களை 08.03.2017ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
**"மனிதவள முகாமையாளர்"**
**கீளீன்வெல்(பிறைவேட்) லிமிட்டெட்,**
**இல.154,1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**
**021 222 4128**

## இலங்கையில் முதல்தடவையாக

பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகளைக் கொண்ட அழகுக்கலைப் பயிற்சிக் கல்லூரி

### ஒளிஅழகன் ஸ்ருடியோ

**British College Of Beauty Studies**

இணைந்து நடத்தும் பயிற்சி வகுப்புக்கள்



**புதிய அழகுக்கலை,**
**சிங்கள பயிற்சி வகுப்புக்கள்**
**ஆரம்பமாகவுள்ளன.**


வெகுவிரைவில் சிங்களம் பேச, எழுத வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இன்றே பதிவை மேற்கொள்ளுங்கள். எங்கள் கல்லூரியில் அனைத்து பாடநெறிகளும் பெண் ஆசிரியர்களே பயிற்சியளிப்பார்கள்.
பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.

- வெளிநாடு செல்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட குறுகிய கால பயிற்சி வகுப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- பெறுமதி வாய்ந்த சான்றிதழே வழங்கப்படும்.
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சொந்த தொழில் பெற்றுக்கொள்ள முடியும்.
- இணைய விரும்புவோர் நேரில் வருகைதரவும்.

பலாலி றோட், திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம்.
உதயன் பணிமனை அருகில், கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 . 05 . 1944 | 25 . 01 . 2017 |



### அமரர் நடராஜா தனபாலசூரியர்
(தங்கராசா)

**அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் யாவருக்கும் வழிகாட்டியாய் இருந்த தங்களின் ஞாபகங்கள் என்றென்றும் எம்மைவிட்டு அகலாது.**

31 ஆம் நினைவு நாளில் தங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சமூக வலைத் தளங்களில் மறைவுச் செய்தியை பரிமாறியவர்களுக்கும் அதனைப் பார்த்தவுடன் தொலைபேசியிலும் கடிதங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கடைசிவரை எம்மோடு தோளோடு தோள்நின்று உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

227, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
மனைவி, சகோதரிகள்.

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு நல்ல சூழலில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0774975572

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு
தொடர்பு: 077 9583831/077 7120979

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு K.K.S.வீதி முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1 3/4 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 077 711 1400

## வான் வாடகைக்கு

நாளாந்த அடிப்படையில் டொல்பின் வாகனம் வாடகைக்கு கொடுக்கப்படும்(3500/=)
Airportdropping and pickup (18000/=)
**கு. பகீரதன்- 077 241 4588**

## உடனடி வேலைவாய்ப்பு

**மேற்பார்வையாளர்**

சூழலை சுத்தமாக்கும் சேவையை வழங்கும் எமது நிறுவனத்திற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் மேற்பார்வையாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள விரும்பத்தக்கது. தகைமையுள்ளவர்கள் கீழ்குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு தங்கள் விண்ணப்பங்களை 05.03.2017 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
கீளீன்வெல் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.154, 1ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

## நவாலி வீதி, மானிப்பாய்

10 பரப்பு வீட்டுடன் காணி
தண்ணீர் மற்றும் மின் வசதி
**தம்பகாமம், பளை**
10 பரப்பு
தொடர்பு - 078 275 7286

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1973 திருவோணம், முதலாம் பாதம், கிரகபாவம் 23, UK(PR) ஐ உடைய மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
077 990 6084

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1975 திருவாதிரை , B.Sc Maths Teacher மணமகளுக்கு உள்நாட்டில் தகுதியான மணமகனை தேடுகின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும்.
வெள்ளவத்தை சாயிநாதன் திருமணசேவை
011 236 4146/ 077 735 5428
Email- saainathan.lk@gmail.com

## கணக்குப் பதியுநர் தேவை

மருந்தகத்தின் கணக்குகளை பதிவு செய்வதற்கும் விற்பனையில் ஈடுபடுவதற்கும் ஆள்கள் தேவை. யாழ் நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு :- 075 943 1018

## நாஹா மருத்துவ நிலையம்

- கை,காலில் அதிக விறைப்புடன் கூடிய வாதம், பாரிசவாதம் நோய் எதுவென கண்டறிய முடியாத நோய், தீராத புண்
- குழந்தையின்மைக்கான சிறப்புச் சிகிச்சை

வாங்கி முன் லேன், சாத்தாவத்தை வயிரவர் கோவிலடி (ஜெகபதி வீடு) மானிப்பாய்.
077 321 2740

## பணியாளர் தேவை

வெள்ளவத்தை ,மாறவிலை , சிலாபம் பகுதியிலுள்ள நார் இழை (FIBER) தொழிற்சாலைக்கு ஆண்/பெண் தொழிலாளர் தேவை. நாள் ஒன்றுக்கு சம்பளம் 1000/- வீதம் கிழமை தோறும் வழங்கப்படும் உணவுதங்குமிடம் இலவசம். தங்கியிருந்து பணிபுரியக்கூடியவர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும் :-
071 865 2510,
077 9495 422, 072 4122 851

## வேலையாள்கள் தேவை

வேம்படி ரெக்ஸ்ரைல் விற்பனை நிலையத்துக்கு
**1. விற்பனையாளர்கள்**
ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
021 568 3611/ 077 990 1002
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு

## வழிபடுநர் சபைப் பொதுக்கூட்டம்

**26.02.2017**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கான அழைப்பிதழ் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக பின்வருவனவற்றை உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

01) கூட்டத்துக்கு சமுகமளிக்கும் போது உறுப்பினர்கள் கூட்ட அழைப்பிதழைக் கொண்டு வருதல் வேண்டும்.

2) உறுப்பினர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப் படுத்துவதன் பொருட்டு உரிய ஆவணத்தையும் கொண்டு வருதல் வேண்டும்.

அன்னையின் பணியில்
பொ. அன்பரசன் செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு.

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 620
சீட்டிழுப்பு திகதி 25.02.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
25 45 60 72 M
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.51,684, 203/=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
திங்கட் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2847 திகதி 25.02.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
03 24 61 69 A
போனஸ் இல. 65
புதன்கிழமை ஜக்பொட் ரூ. 48,847,442/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
01 ஆம் திகதி புதன் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 20
சீட்டிழுப்பு திகதி 25.02.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 23 33 55
சுப்பர் இலக்கம் 05
அதிர்ஷ்ட மாதம்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 7,981, 910/= | 3, 510, 643/= | 1, 167, 464/= |

2017.03.02 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## வேலை வாய்ப்பு

கா.பொ.த சாதாரணதரம், மற்றும் உயர்தரம் படித்துவிட்டு வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் மாணவர்களுக்க ஓர் அரிய சந்தர்ப்பம் எமது **Everest Company** புதிய கிளைகளை இலங்கையில் வடக்கு பகுதி முழுவதிலும் ஸ்தாபிக்கப்படவுள்ளதால் எமக்கு திறமையான அலுவலர்கள் தேவைப்படுகின்றனர். வேலையாள்கள் நேர்முகத் தெரிவின்மூலம் தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு :- தங்குமிட வசதிகள், உணவு வசதிகள் உண்டு.

தொடர்பு :- NO. 28, 3 ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.
Phone :- 021 568 9060, 077 077 1377, 077 039 3160

## மரண அறிவித்தல்

### சின்னப்பு சூசைப்பிள்ளை
( இளைப்பாறிய கனிஸ்ர தபால் பரிசோதகர், யாழ்.தபாலகம்)



(25.02.2017) சனிக்கிழமை காலமானார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.
021 222 6102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காவது நாளையும் கடந்தது விக்ஸ்காட்டு மக்கள் போராட்டம்

வவுனியா, பெப்.26
தமது காணிகளில் தாம் வாழ்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் எனக் கோரி வவுனியா, இராசேந்திரகுளம், விக்ஸ் காட்டுப் பகுதியில் வசிக்கும் மக்கள் வவுனியா மாவட்டச் செயலகத்தின் முன்பாக நடத்தும் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.



கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட மக்களுடைய போராட்டம் இரவு பகலாகத் தொடர்கின்றது. சிறுவர்கள், முதல் பெரியவர்கள் வரை இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

விக்ஸ் காட்டுப் பகுதி மக்கள் தாங்கள் குடியமர்ந்துள்ள காணிகளைத் தமக்குதரவேண்டும் என்று கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர், காணிகளை விடுவிக்கும் பட்சத்தில் மக்களுடைய தேவைளை எம்மால் மேற்கொள்ள முடியும் என்று மாவட்டச்செயலகத்தால் நேற்றையதினம் வனஇலாகாத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டது. அந்தக்கடிதம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. அவர்கள் அதை ஏற்கவில்லை. வனஇலாகாத் திணைக்களத்தினர் எமது காணிகளை விடுவிக்க வேண்டும், அதற்கான ஆவணங்களை எம்மிடம் தரவேண்டும் என்று வலியுறுத்தி நேற்று மக்கள் போராட் டத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். நேற்று முன்தினம் இரவு நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் மக்களிடம் சென்று கலந்துரையாடினார்.

**பின்னணி**

விக்ஸ்காட்டுப்பகுதியில் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக வசிக்கும் சுமார் 47 குடும்பங்கள் தாம் தொடர்ந்தும் வன இலாகாவால் தொந்தரவுக்கு ள்ளாகின்றோம் என்றும், தமக்கு காணி உறுதிப் பத்திரமோ, வீட்டுத்திட்டமோ இது வரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்து கடந்த புதன் கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்தின் முன்பாக போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

2ஆம் ஆம் நாளான கடந்த வியாழக்கிழமை மக்களுடைய நிலமைகளை ஆராய்வதற்கு வவுனியா மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் இராசேந்திரகுளம் விக்ஸ் காட்டுக்குச் சென்றனர். மக்கள் இருப்பதற்கு இடவசதிகள் இன்றியே காட்டை அழித்துக் குடியமர்ந்துள்ளனர் எனத் தெரிவித்த குழுவினர் அந்தப் பகுதியிலே உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பகுதியில் 47குடும்பங்களையும் குடியமர்த் துவதற்கான காணியைத் தெரிவு செய்தனர். அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை மேற்கொண்டனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த மக்கள் தாம் 6 ஆண்டுகளாக குடியமர்ந்த விக்ஸ் காட்டுப் பகுதியில் உள்ள காணிகளே எமக்கு வேண்டும். அதற்கானபத்திரங்களைத்தாருங்கள் எனத் தெரிவித்துப் போராட்டம்நடத்துகின்றனர். (ந-21)

# துவாரகேஸ்வரனுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 26
ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா துவாரகேஸ்வரனைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி யாழ். நகரில் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. யாழ்ப்பாண வர்த்தகர்களில் ஒரு தொகுதியினரும், தனியார் சொகுசு பேருந்து சாரதிகள் - நடத்துநர்களும் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தின் முடிவில் துவாரகேஸ்வரனின் உருவப் பொம்மையைத் தீ மூட்டி எரித்தனர்.

ஐக்கி தேசியக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா துவாரகேஸ்வரன், முகநூல் ஊடாக தொடர்ச்சியாக அவதூறு பரப்பும் வகையில் செயற்பட்டு வருகின்றார். அவரது அராஜகங்கள் எல்லை மீறுகின்றன. அவரைக் கைது செய்ய வேண்டும்.- என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.


'வைரத்தைப் பெற்ற தியாகராஜாவே இந்த வைரஸை ஏன் பெற்றாய் ?', 'மானங்கெட்டவனே மாமா வேலை பார்க்காதே', 'கொலைகாரனே உனக்கு எதற்கு பேஸ்புக்', 'அரசியல் விபச்சாரியே அராஜகம் செய்யாதே', 'நல்லாட்சி அரசிற்கு நீ ஒரு சாபக்கேடு', 'பொலிஸே இந்தப் பொறுக்கியை கைது செய்', 'படிக்காத எருமையே ஐ.தே.கவின் பெயரைக் கெடுக்காதே' போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளைத் தாங்கியிருந்த போராட்டக்காரர்கள், துவாரகேஸ்வரனுக்கு எதிராகக் கோசமும் எழுப்பினர்.

போராட்டத்தின் முடிவில், துவாரகேஸ்வரனின் உருவப்பொம்மையை மண்ணில் போட்டு இழுத்து தீ மூட்டி எரித்தனர். அங்கிருந்து பேரணியாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, துவாரகேஸ்வரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி மனுக் கையளித்தனர். (ந-5,-105)

# ஐ.தே.க துவாரகேஸ்வரனை கைது செய்


## யாழ்.நகரில் நேற்று கண்டனப் போராட்டம்













ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா துவாரகேஸ்வரனுக்கு எதிராக யாழ். நகரில் நேற்று மாலை கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஓலைத்தொடுவாயில் கடலட்டைப் பண்ணை 400 பேருக்கு வேலைவாய்ப்பு

## வடக்கு மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு



மன்னார், பெப்.26

"ஒரு வருடத்தில் இயங்கவுள்ள மன்னார் ஓலைத்தொடுவாய் கடலட்டைப் பண்ணையின்மூலம் 400 இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்".

இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ப.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு அமைச்சின் 185 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னாரில் அமைக்கப்படவுள் கடலட்டை இனப்பெருக்கக் கட்டட தொகுதிக்கான, அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று மன்னார் ஒலுமடு மீனவ கிராமத்தில் நடைபெற்றது.

கொழும்பு மீன்பிடி அமைச்சர், மகிந்த அமரவீர, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உப்பாலி மொகட்டி ஆகியோர் இணைந்து அடிக்கல் நட்டனர்.

அங்கு உரையாற்றியபோதே வடக்கு மீன்பிடி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

"வடக்கு மாகாணத்தில் மன்னாரில் அமைக்கப்படும் இந்த கடலட்டை இனப்பெருக்கக் கட்டடத் தொகுதி (கடலட்டை பண்ணை) வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாது இலங்கையிலேயே பெருமளவு வருமானத்தை ஈட்டித் தரும் கடலட்டை உற்பத்தி பண்ணை எனக் கருதப்படுகின்றது, கொழும்பு அமைச்சின் 185 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பண்ணை அமைக்கப்பட உள்ளது. இந்த ஆண்டின் நிறைவில் இதனுடைய கட்டுமானப் பணிகள் நிறைவடையும். பண்ணையின் மூலம் 400 இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும். மன்னார், ஓலைத்தொடுவாய் மீனவகிராமத்தைச் சேர்ந்த இளையோர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட உள்ளது, இதைக் கொழும்பு அமைச்சரும் ஏற்றுள்ளார். சில இடங்களில் சிறிய அளவில் கடலட்டை உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரமாண்டமான முறையில் இங்கு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் 750 மில்லியன் ரூபா ஓர் ஆண்டுக்கான எதிர்பார்க்கப்படும் வருமானமாகக் கூறப்பட்டுள்ளது - என்றார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாளஸ் நிர்மல நாதன், காதர் மஸ்தான், மற்றும் ஓலைத்தொடுவாய் மீனவர்கள் கலந்துகொண்டனர்.

(ந-21)

## மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதில் இதய சுத்தியுடன் செயற்படுவோம்

### அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு



மன்னார், பெப்.26

"மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அது தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சருக்கும், உயர் மட்டத்தினருக்கும் உணர்த்தியுள்ளேன்."

இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார், ஓலைத்தொடுவாயில் கடலட்டைப் பண்ணைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் விழா நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடலட்டைப் பண்ணையை இங்கு உருவாக்க நாங்கள் முயற்சித்தபோது மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் அச்சமடைந்தனர். 2010ஆம் ஆண்டு இந்தத் தொழில் முயற்சிக்கு நெக்டா நிறுவனம் இந்தப் பிரதேசத்தில் ஒரு ஏக்கர் காணி கேட்டபோது மீனவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது.

அவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்திய பின்னர் இந்த முயற்சி அதிகார பூர்வமாக சூழல் அறிக்கைகளைப்பெற்று முன்னெடுக்கப்பட்டு வெற்றி காணப்பட்டுள்ளது.

கடலட்டைகளை நாற்று வளர்ப்பு மேடைகளில் வளர்த்து தொழிலாளர்களின் வாழ்வையும், வளத்தையும் பெருக்கும் வகையில் இந்தச் சிறப்பான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வாரம் மன்னாரில் என்னைச் சந்தித்த மீனவர்கள் தாங்கள் எதிர்நோக்கும் சவால்களைத் தெரிவித்தனர். அவற்றை நான் அமைச்சருக்குத் தெளிவுபடுத்தியுள்ளேன்.

மாகாண அமைச்சரதும், மத்திய அமைச்சரதும் உதவியுடனும் எனது ஒத்துழைப்புடனும் மாந்தைப் பிரதேசத்தின் பல்லாயிரம் ஏக்கர் காணிகளைப் பெற்று நன்னீர் மீன்வளர்ப்பையும் கடற்றொழில் விரிவாக்கத்தையும் மேற்கொண்டு தொழில்வாய்ப்பைப் பெருக்கவுள்ளோம்-என்றார்.

(ந-56)

## அடிப்படை வசதிகள் வழங்கக் கோரி செல்வாநகர் மக்கள் ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சி, பெப்.26

அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கோரி கிளிநொச்சி, செல்வாநகர் மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

"எமது கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. காட்டுப் பகுதி என்பதால் எங்களுடைய பிள்ளைகள் அந்தப் பகுதியூடாகச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் கிராம சேவகருக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வீதி மிக மோசமானதாகக் காணப்படுகின்றது. ஒருவரை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்வதானால் எமது கிராமத்துக்கு முச்சக்கர வண்டி கூட வரமுடியாத நிலையில் காணப்படுகின்றது வீதிகளைச் சீரமைத்துத் தர வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

"நல்லாட்சி அரசே காட்டுக் காணிகளில் மக்களைக் குடியமர்த்து, நாமும் குடி நீரைப் பெற ஏற்பாடு செய்யுங்கள், அரசே வீதிகளை சீரமைத்துத் தாருங்கள், என்.ஈ.எப் குறை வீட்டுத்திட்டத்தை முழுமைப்படுத்துங்கள்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

(ந-6)

## அரச ஊழியர்கள் குறைகளை முறையிட திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.26

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், ஊழியர்களின் பிரச்சினைகள் மனக்குறைகள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், சம்பளங்கள், பதவி உறுதிப்படுத்தல்கள், கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து முறையிடலாம்.

இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபேயகோன் அறிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

"ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" என்ற தீர்மானத்துக்கு அமைய ஊழியர் தினம் ஊடாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. உத்தியோகத்தர்கள் தமது சகல பிரச்சினைகள், மனக்குறைகள், அலுவலக கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினைகளை கீழ்வரும் திகதிகளில் முறையிடமுடியும்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கு மார்ச் மாதம் 28ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 4, 6,11ஆம் திகதிகளும், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதியும், வவுனியா மற்றும் மன்னார் உள்ளூராட்சி சபைகளுக்கு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம் விவசாயம் போன்ற அமைச்சுக்களின் கீழ் பணியாற்றும் அலுவலர்களும் தமது மனக்குறைகளை முறையிடலாம்.

விவரங்களையும், திகதிகளையும் சகல திணைக்களத் தலைவர்கள், பணிப்பாளர்கள், செயலாளர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார்.

(ந-50)

## கரிப்பட்டமுறிப்பு கிராமத்தை அச்சுறுத்துகின்றது சிறுத்தை

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப். 26

முல்லைத்தீவு கரிப்பட்டமுறிப்பு கிராமத்துக்குள் சிறுத்தை புகுந்து அச்சுறுத்துகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. வயல்வேலைகளுக்குச் சென்றவர்கள் சிறுத்தையைக் கண்டதால் உழவு இயந்திரத்தையும் விட்டுவிட்டு தப்பியோடி வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகப் பிரதேச மக்கள் தெரிவித்ததாவது

நேற்று முன்தினம் மாலை நெல் ஏற்றுவதற்காக உழவு இயந்திரத்தில் சாரதியும் மேலும் சிலரும் சென்றுள்ளனர். பாதையின் அருகில் உள்ள குளம் ஒன்றில் நீர் [illegible] இயந்திரத்தின் சத்தம் கேட்டு நகர்வதை அவதானித்தனர். உடனே அங்கிருந்து தப்பியோடிவந்தனர். நேற்றிரவு வீடொன்றிலிருந்த கோழிக் கூட்டுக்குள் நுழைந்த சிறுத்தை கூட்டில் இருந்த 18 கோழிகளில் 11 கோழிகளைக் கொன்றுள்ளது.

முல்லைத்தீவு அம்பகாமம் காட்டுப்பகுதியில் சிறுத்தையினால் அச்சம் ஏற்பட்டுள்ளது - என்றனர்.

"இவை தொடர்பாக எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. கடந்த இரண்டு நாள்களும் விடுமுறை என்பதனால் அலுவலக ரீதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அலைபேசியில் தகவல் வழங்கப்பட்டது" [illegible] டுசுட்டான் பிரதேச செயலாளர் அ.நிருத்தனன் தெரிவித்தார்.

(ந-4,101)

## சி.ரி. ஸ்கானர் பரிசோதனை தனியார் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், பெப்.26

தனியார் வைத்தியசாலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்முறையாக சி.ரி ஸ்கானர் இயந்திரம் மூலமான உடற் பரிசோதனை ஆரம்பமானது. யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள நோர்தேன் வைத்தியசாலையில் நேற்று இந்த உடற்பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது.



இது வரை காலமும் எம்.ஆர்.ஐ பரிசோதனை ஊடாக நோயாளிகளுக்கான உடற்பரிசோதனைகள் இடம்பெற்றுவந்தன. இந்த பரிசோதனையின் ஊடாக மனித உடலில் உள்ள மூளை, முள்ளந்தண்டுப் பகுதி,கழுத்துப்பகுதி போன்ற சில பரிசோதனைகளை மட்டுமே மேற்கொள்ள முடியும்.

இந்த பரிசோதனையை விரிவு படுத்தும் வகையில் அதி நவீன தொழில்நுட்ப சாதனமான சி.ரி.பரிசோதனை இயந்திரம் குறித்த வைத்திய சாலையில் பொருத்தப்பட்டது.

இந்த பரிசோதனை இயந்திரத்தின் ஊடாக மனித உடலின் முழுப்பகுதியையும் பரிசோதனை செய்ய முடிவதுடன், உடலின் நோய்த்தன்மைகளைத் துல்லியமாகவும் கண்டறிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நைலோன் கயிறுகள் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

சாவகச்சேரி, பெப்.26

வர்த்தக நிலையங்களில் நைலோன் கயிறுகளைத் திருடி விற்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவரை விளக்கமறியலில்வைத்தது சாவகச்சேரி நீதிமன்று.

கைது செய்யப்பட்டவர் சாவகச்சேரி நகரில் உள்ள கடைகளில் வைக்கப்பட்டிருக்கும்நைலோன் கயிற்றுச் சுற்றுக்களைத் திருடி விற்றார் என்றும், கடந்த வாரம் சாவகச்சேரி சந்தியில் உள்ள கடையொன்றின் முன்புறத்தில் வைக்கப்பட்டிருந்த நைலோன் கயிற்றுச்சுற்றையும், தலைக்கவசம் ஒன்றையும் திருடியுள்ளார் என்றும்தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுபதிவுசெய்யப்பட்டது. நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் அந்த நபர் அடையாளம் காணப்பட்டார்.

கடந்தவியாழக்கிழமைஅந்தநபரின் நடமாட்டம் நகர்ப் பகுதியில் காணப்பட்டதை அடுத்து, பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார்அவரைக்கைது செய்தனர். நேற்று முன்தினம் நீதிவானிடம்முற்படுத்தினர். (ற-9)

## யூனியன்குளம், கோணாவிலில்

# போக்குவரத்து வசதியின்மையால் பாடசாலை செல்லாத மாணவர்கள்

யாழ்ப்பாணம், பெப்.26

கிளிநொச்சி, கோணாவிலைச் சேர்ந்த மாணவர்கள் பலர் பாடசாலைசெல்லாமைக்குபோக்குவரத்து வசதியின்மையே காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அந்தப்பிரச்சினையைச்சீர்செய்து தரவேண்டும்என்றுபிரதேசசெயலரிடம் கோரப்பட்டுள்ளது.

யூனியன்குளம், கோணாவிலைச் சேர்ந்த மாணவர்கள் பலர் ஸ்கந்தபுரம்பாடசாலைக்கேசெல்கின்றனர். அவர்களில்பலர்தாமதமாகச் செல்வதும், சிலர்பாடசாலைசெல்லாதிருப்பதும் அவதானிக்கப்பட்டது. அது தொடர்பாக ஆராய்ந்த போது பேருந்துகளின் சேவை நேரமேபிரதானகாரணம்என்று கண்டறியப்பட்டது.

குடியிருப்புப் பகுதிக்குள்ளான பேருந்துச் சேவை காலை 7.30 மணிக்கே இந்தப்பகுதியைவந்தடையும். அந்தப் பேருந்து சுற்றுப் பாதையால்பயணிப்பதால்பாடசாலையைச் சென்றடைய காலை 8.30 மணியாகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தபுதன்கிழமைபிரதேசசெயலகத்தில் நடைபெற்ற வாராந்த சந்திப்பில்அந்தப்பகுதிகிராமசேவையாளர்கள் இந்த விடயத்தை பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

"இந்த விடயம் கிராம சேவையாளர்களால்மட்டுமல்லாதுவேறு சிலராலும்அன்றையதினம்எனது கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டது. போக்குவரத்துசேவைவழங்குவோர், மாவட்டச் செயலர் ஆகியோரின்கவனத்துக்குக்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. மாற்றுஏற்பாடுகள்தொடர்பாகவும்ஆராயப்படுகின்றது. இந்த விடயம் மாணவர்களின் எதிர்காலத்துடன் தொடர்புபட்ட விடயம் என்பதால் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்தார். (ற-101)



## மன்னாரில் எரிக்கப்பட்ட ஓட்டோ யாழ்ப்பாணத்தில் திருடப்பட்டது!

*பொலிஸார் பல கோணங்களில் விசாரணை*

யாழ்ப்பாணம், பெப்.26

மன்னார், சௌத்பார் பகுதியில் கடந்த வியாழக்கிழமை எரிந்த நிலையில் மீட்கப்பட்ட முச்சக்கர வண்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த முச்சக்கர வண்டி யாழ். பல்கலைக் கழக வளாக வீதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் களவாடப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி களவாடப்பட்டமை தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. செ.பிரசாத் என்பவருக்குச் சொந்தமான ஏ.பி.ஜே-7093 என்ற புதிய முச்சக்கர வண்டியே களவாடப்பட்டது.

இந்த முச்சக்கர வண்டி சௌத்பார் கடற்கரைப் பகுதியில் முற்றாக எரிந்த நிலையில் மீட்கப்பட்டது. முச்சக்கர வண்டி தீயிடப்பட்டமைக்கான காரணம் இதுவரைகண்டறியப்படவில்லை. இதுதொடர்பாகப்பொலிஸார்பல கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். சந்தேகநபர்கள் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை. (ற-101)

## காட்டுத் தீயால் 8 ஏக்கர் நாசம்

நுவரெலியா, பெப்.26

ஹற்றன், தலவாக்கலைரத்னிலகல பகுதியில் நேற்று மதியம் பரவிய காட்டுத் தீயில் சுமார் எட்டு ஏக்கருக்கு மேற்பட்ட வனப்பகுதி எரிந்து நாசமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும், பொது மக்களும் இணைந்து தீயை அணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்தப்பிரதேசத்தில்நிலவிவரும் வெயில்மற்றும்கடும்காற்றுகாரணமாகதீயைக்கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தீயால்அரியவகைமூலிகைகள், விலங்கினங்கள் மற்றும் நீரூற்றுக்கள் போன்றன அழிந்து போயிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (ய-43)

## யானை தாக்கி விவசாயி சாவு

மட்டக்களப்பு, பெப்.26

மட்டக்களப்பு பதுளைவீதி கரடியனாறு புத்தம்புரி ஆறு வயல் பிரதேசத்தில் காட்டுயானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்காலைக்கடன்களை முடிப்பதற்காக வந்து, ஆற்றருகே நின்றபோது, காட்டுக்குள்இருந்து வந்த யானை இவரைத் தாக்கி தண்ணீரில் அமிழ்த்திக் கொன்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ய-46)

# வன்னிப் பல்கலைக்கானபேரணியில் பேதங்களை மறந்து திரள அழைப்பு

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் விடுத்தார்

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ். பல்கலைக்கழகத்தின்வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக் கழகமாகத் தர முயர்த்த வேண்டும் என்று கோரி நாளை மறுதினம் வவுனியாவில் நடைபெறவுள்ள பேரணியில் அனைவரும்அணிதிரள வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அழைப்புவிடுத்தார். அமைச்சின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளசெய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அதில் உள்ளதாவது;

1992 ஆம் ஆண்டு இலங்கையின் 9 மாகாணங்களிலும் பல்கலைக் கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. 25 வருடங்கள் கடந்துள்ள நிலையில் நாட்டின் ஏனைய மாகாணங்களின் பல்கலைக்கழககல்லூரிகள்பல்கலைக் கழகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. வவுனியா பல்கலைக் கழகக் கல்லூரியானது தொடர்ந்தும் யாழ்ப்பாண பல்கலைகழக நிர்வாகத்தின் கீழ் வவுனியா வளாகமாக இயங்குகின்றது.

காலத்தின் தேவை கருதி வவுனியா வளாகமானது பல்கலைக் கழகமாகதரமுயர்த்தப்படவேண்டியஅவசியம்எழுந்துள்ளது. இதுவரைகாலமும்பலமுயற்சிகள் மேற்கொண்டும் எதுவும் இதுவரைகைகூடவில்லை. வன்னிப் பிரதேசமானது கடல்வளம், விவசாயம், இயற்கை யான காடுகள் மற்றும் பல்வகையானநீர்வளங்களைக் கொண்ட பிரதேசமாகும். இந்த பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்திக்கு துறை சார்ந்த ஆராய்ச்சிகளைமேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளது. வன்னிப்பிரதேசத்துக்கென தனியான பாரம்பரியம், வரலாறுகள்உள்ளன. இவற்றையெல்லாம்ஆராய்ச்சிசெய்வதற்கு இந்தப் பிரதேசத்துக்கென தனியானபல்கலைக்கழகம்ஒன்று அமைக்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும். பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும்சந்தர்ப்பத்தில் வன்னிப் பிரதேசத்துக்கு பொருத்தமான புதிய பீடங்களையும் இங்கே ஆரம்பிக்கமுடியும்.

மூன்று இனங்கள் வாழ்கின்ற இந்த பிரதேசத்தின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டுவவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்த அரசை வலியுறுத்தியே இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட வேறுபாடுகளை மறந்து, அனைவரும் ஒற்றுமையுடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தனிப்பட்ட அரசியல் வேறுபாடுகளால் நாம் பிரிந்து நின்றுஎமதுமாவட்டத்துக்குவந்த பெரியஅபிவிருத்தித்திட்டங்களை கோட்டைவிட்டகசப்பான அனுபவங்கள்எமக்குள்ளன. இந்தவிடயத்திலும்அவ்வாறானதுரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் நடைபெறுவதை அனுமதிக்கமுடியாது.

நாளைமறுதினம்மு.ப.10மணிக்கு குருமண்காட்டில் அமைந்துள்ள வவுனியா வளாகத்தின் பௌதிக விஞ்ஞான பீடத்துக்கு முன்பாக ஆரம்பமாகவுள்ள பேரணியில் அனைவரும்கலந்துகொள்ளுங்கள் - என்றுள்ளது. (ற-10)

## மாற்றுத் திறனாளிகளுக்கு தனியான சிகிச்சைப் பிரிவு

சாவகச்சேரி, பெப்.26

சாவகச்சேரிஆதாரவைத்தியசாலையில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனியானசிகிச்சைப்பிரிவு(கிளினிக்) ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுகின்றது. நோயாளர்கள் பிரதி திங்கட்கிழமைகளில் பி.ப.1மணி தொடக்கம் 4 மணி வரை சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வைத்தியசாலை விளம்பரப் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில்பொதுமருத்துவம்மற்றும்நீரழிவு சிகிச்சைப்பிரிவுகளில் வாராந்தம் 600 முதல் 800 வரையான நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். கிளினிக்குகளில் வைத்தியநிபுணர்ஒருவரும்நான்கு வைத்தியர்களும்கடமையாற்றுகின்றனர். இந்த கிளினிக்குகளுக்கு பார்வையிழந்த, நடக்க முடியாத, படுக்கையில் உள்ள நோயாளர்களும் அழைத்து வரப்படுகின்றனர்.

கடமையில் உள்ள மருத்துவர்கள் காலை 8 மணி தொடக்கம் ந.ப.12 மணிவரையானபகுதியில்அனைத்து நோயாளர்களையும் பார்வையிட்டுச் சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது. சிகிச்சைக்காக வரும் மாற்றுத் திறனாளிகளும் சிரமங்களை எதிர்நோக்காமல் இருப்பதற்காக வடமாகாணத்தில் முதன்முறையாக சாவகச்சேரிஆதாரவைத்தியசாலையில் மாற்றுத் திறனாளிகளுக்கு தனியான சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள்திங்கட்கிழமைகளில் அவர்களுக்கு நடத்தப்படும் கிளினிக்கில்சிரமங்களின்றிசிகிச்சை பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# அங்காடி விற்பனைக் கூட கட்டுமானம் மாத இறுதியுடன் நிறைவு

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ். நகரில் அமைக்கப்பட்டு வரும் விசேட அங்காடி விற்பனைக் கூடத்தின் கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

மத்திய பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில் உள்ளமாநகராட்சிமன்றத்துக்குச்சொந்தமான வளாகத்தில் [illegible] அமைக்கப்படுகின்றது. அங்காடி விற்பனைக் கூடம் சுமார் 13 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டும் வருகின்றன. கட்டுமானப் பணிகள் இந்த மாதத்துக்குள் நிறைவு பெற்று [illegible] முனீஸ்வரன் வீதியில் உள்ள [illegible] வியாபாரங்கள் யாவும் இந்த விற்பனைகூடத்துக்கேஇடமாற்றப்படும்என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பக்கடையில் கூடும் இளைஞர்களால் மாணவிகளுக்கு பெரும் தொல்லை

### பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,பெப்.26
பாலிநகர்ப் பாடசாலையின் நேரெதிரே அமைக் கப்பட்டுள்ள அப்பக் கடையில், தினமும் ஒன்று கூடும் இளைஞர்களால், பாடசாலை மாணவிகள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அந்தக் கடையைத் தாண்டி, தனியாக பாடசாலைக்குச் செல்ல முடியாத மாணவிகள், பெற்றோர் அல்லது உறவினர்களின் பாதுகாப்புடனேயே பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு பாலிநகர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் நேரெதிரே உள்ள அப்பக்கடை ஒன்றிலேயே இளைஞர்கள் இவ்வாறு ஒன்று கூடுகின்றனர்.

அப்பக்கடையில் தினமும் கூடும் இளைஞர்கள் சிலர் பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளுடன் பகிடி சேட்டைகளில் ஈடுபடுகின்றனர். அதனால் மாணவிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது குறித்த அப்பக்கடையானது மேலும் விரிவாக்கப்பட்டு பல பொருள்களும், உணவு வகைகளும் விற்பனை செய்யப்படுகின்றன. அதனால் அதிக இளைஞர்கள் ஒன்றுகூடும் இடமாகி விட்டது. இளைஞர்களுடைய இந்த அட்டகாசத்தால், ஒவ்வொரு நாளும் காலை வேளையும், பாடசாலை முடிவடைந்த பின்னரும், பெற்றோர்களும் மாணவிகளுடன் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

"இந்த அப்பப்கடை இராணுவத்தினரால் நடத்தப்படுவதால், அவ்வாறு சேட்டையில் ஈடுபடும் இளைஞர்களைத் தட்டிக்கேட்பதற்கு முடியாது உள்ளது. இளைஞர்களைத் தட்டிக் கேட்டால் இராணுவத்தினருடன் முரண்பட வேண்டிய நிலை ஏற்படும். எனவே இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்றனர் ஊரவர்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை என்று மாந்தை கிழக்கு பிரதேச் செயலர் எஸ்.ரமேஸ் தெரிவித்தார்.

(ஐ-101,7)

# முல்லைத்தீவில் டெங்கு நுளம்பு மிகவும் குறைவு

### சுகாதாரப் பகுதியினர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, பெப்.26
முல்லைத்தீவில் டெங்கு நுளம்பு உற்பத்தி குறைவு என்று மாவட்ட சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் டெங்கு தொற்று இனம் காணப்பட்டவர்களில் அதிகமானவர்கள் பணிநிமித்தம் வெளி மாவட்டங்களுக்கு செல்பவர்களே எனவும் அவர்கள் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய மாவட்டங்களைப் போல் அல்லாது முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் உற்பத்தி குறைந்தே காணப்படுகின்றது.

முல்லைத்தீவில் பல பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கு நுளம்புகள் பெருகக் கூடியதாக இனம் காணப்படும் பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. நுளம்புப் பெருக்கம் தொடர்பாக மக்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மக்கள் கூடியளவு ஒத்துழைப்பை வழங்குகின்றனர்.

பாடசாலைகள், கோவில்கள் மற்றும் பொது இடங்களில் இது தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது. இதனால் மாவட்டத்தில் டெங்குத் தொற்று குறைந்தே காணப்படுகின்றது. எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பணிக்காகச் செல்பவர்கள் எமது மாவட்டத்தில் டெங்குத்தொற்றுக்கு ஆளாகியதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றிய புள்ளி விவரங்கள் மாவட்டப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன- என்றனர்.

''முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு உட்பட பல கிராமங்களில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் காணப்படுகின்றது. அண்மைய சில வாரங்களில் 27 க்கும் மேற்பட்டவர்கள் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். சமூக மட்ட அமைப்புக்கள் ஊடாக நுளம்புகள் பெருகும் இடங்களை உடனடியாகச் சுத்தம் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதாரப் பணிமனை மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை ஆகியவற்றின் அதிகாரிகள் இணைந்து நுளம்புப் பெருக்கம் உள்ள கிராமங்களைச் சென்று பார்வையிடவுள்ளோம். பொதுமக்கள் தங்கள் சுற்றாடலை நுளம்புகள் பெருகாத வகையில் துப்புரவாக வைத்திருப்பது முக்கியமாகும்' எனப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர் ந. ஜெயராஜ் தெரிவித்தார். (கு-21-7)



இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான மகா சிவராத்திரி பூசை வழிபாடுகள் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்தின் பிரதமகுரு கீர்த்தி ஸ்ரீ வாசன் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற பூசை வழிபாட்டில் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர்.

(ஐ-7)

## சமுர்த்தி தரவில்லை என 15 குடும்பங்கள் முறையீடு

முல்லைத்தீவு, பெப். 26
சமுர்த்தியைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியிருந்தும், ஐயன் குளத்தைச் சேர்ந்த 15 குடும்பங்கள் புறக் கணிக்கப்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கவலை தெரிவித்தன.

'கிராம மக்களை ஏழ்மையில் இருந்து மீட்டெடுப்பதற்காக, ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு சமுர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. எமது கிராமத்தைப் பொறுத்த மட்டில் சமுர்த்தி வழங்க வேண்டிய குடும்பங்கள் உள்வாங்கப்படவில்லை. எமது குடும்ப நிலையை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறி, சமுர்த்தியை வழங்குமாறு கேட்ட போது, தராலாம் என்கின்றார்கள். இரண்டு வருடங்களுக்கு மேலான நிலையில் எமக்கு இன்னமும் சமுர்த்தியை பெற்றுத் தருவதற்கு அவர்கள் முன்வரவில்லை. ஐயன்குளம் கிராமத்தில் 15 குடும்பங்களுக்கு மேல் சமுர்த்தியைப் பெறக்கூடிய தகுதி இருந்தும் அவர்களுக்கு சமுர்த்தி வழங்கப்படவில்லை.' என்று பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவித்தன.

'இது தொடர்பாக யாரும் எனக்குத் தெரியப்படுத்தவில்லை. தகுதியற்ற ஒருவருக்கு சமுர்த்தி வழங்குவதை எம்மால் நிறுத்த முடியும், ஒரு குடும்பத்தைச் சமுர்த்தியில் உள்வாங்குவதானால், உடனடியாகச் செய்ய முடியாது. சமுர்த்தி வழங்கப்பட்ட காலத்தில் மீள்குடியமராது, பின்பு வந்தவர்களுக்கு சில இடங்களில் சமுர்த்தி வழங்கப்படாது இருக்கலாம். சமுர்த்தி வழங்கப்பட வேண்டிய குடும்பத்துக்கு, வழங்கப்பட்ட உதவிகள் நிறுத்தப்பட்டிருந்தால் உத்தி யோகத்தர்கள் பாரபட்சமாக நடப்பதாகக் கூற முடியும். சமுர்த்திப் பயனாளியை உடனடியாக உள் வாங்க உத்தியோகத்தர்களால் முடியாது. விடுபட்டவர்களின் பெயர்களை அமைச்சுக்கு அனுப்பியே உள்ளவாங்க முடியும்.' என்று துணுக்காய் பிரதேச செயலர் ஐ.பிரதாபன் தெரிவித்தார். (ஐ-7)

# வவுனியாவில் மூன்று சேக்கிற் பங்களாக்கள் தொடர்ந்தும் அரசியல்வாதிகளின் கைகளுக்குள்

முல்லைத்தீவு, பெப்.26
அரசியல் வாதிகளால் மூவரால் வவுனியாவில் கையகப்படுத்தப் பட்டுள்ள பங்களாக்களை, உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அவற்றை அந்த அரசியல்வாதிகள் இன்னமும் விடுவிக்கவில்லை.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டச் செயலகத்தின் சேக்கிற் பங்களாக்களை கையகப் படுத்தியுள்ள வடக்கின் மூன்று அரசியல்வாதிகளும், அவற்றை மீள ஒப்படைக்க வேண்டும் என கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும், எவருமே இன்று வரை அவற்றை மீள ஒப்படைக்கவில்லை என்பது மாவட்டச் செயலகத்தின் தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இன்று வட மாகாணத்தில் முக்கிய விடயமாக காணி விடுவிப்புக்காணப்படுகின்றது. அந்த வகையில் பல இடங்களில் மக்களின் காணிகளை படையினர் அபகரித்துள்ளது போல், அரச செயலக நிலங்களை அரசியல்வாதிகள் அபகரித்து வைத்துள்ளனர்.

குறிப்பாக படையினர் போர்க் காலத்தில் தங்குவதற்காக கையகப்படுத்தியது போன்றே, இந்த அரசியல்வாதிகளும் போரைக் காரணம் காட்டி காணிகளை அபகரித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகத்துக்குச் சொந்தமான 3 சேக்கிற் பங்களாக்களை வடக்கின் 3 அரசியல்வாதிகள் கையகப்படுத்தி வைத்துள்ள போதிலும், அவற்றை இன்று வரையில் மீளக் கையளிக்க வில்லை. அவ்வாறு மீளக் கையளிக்காத கட்ட டங்களுக்கு அவர்கள் பயன்படுத்திய 10, 15 வருடங்களாக வாடகைப் பணமும் இன்று வரையில் செலுத்தவில்லை.

இதனை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய போது, குறித்த கட்டடங்களை மீளப்பெறுமாறு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

எனவே அவற்றை உடன் கையளிக்க வேண்டும் என்று மாவ[illegible] அன்றைய கூட்டத்தி[illegible] பட்டது. ஆனால் இன்று வரை அவை மீள ஒப் படைக்கப்படவில்லை.

அமைச்சர் ரிசாத் பதீயுதீன் , நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரே அந்தக் கட்டடங்களை தமது பிடியில் வைத்துள்ளனர். இவர்கள் அரச கட்டத்தை மீளக் கையளித்து, ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதோடு, பொதுச் சொத்துக்களை உரியவர்களிடம் ஒப்படைப்பதில் முன் மாதிரியாகவும் நடந்து கொள்ள முன்வர வேண்டும்.

இவ்வாறு எமது தீர்மானத்தை எம்மவர்களே நடைமுறைப்படுத்தாது இருந்து விட்டு, தென்னிலங்கை அரசியல்வாதிகள் நடை முறைப்படுத்தவில்லை எனக் கூறுவதும், நாமே காணிகள், கட்டடங்களை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு பிறர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர் என்பதும், இரட்டை முகத்தின் வெளிப்பாடாகும்.

எனவே அதற்கு இடமளிக்காது அவற்றை உடன் விடுவிக்க அரசியல்வாதிகளும், அவற்றைக்கையகப்படுத்த [illegible] எடுக்க வேண்டும் என்றார்.

(ஐ-101)

## வித்தியானந்தக் கல்லூரியின் 66ஆவது ஆண்டு நிறைவு விழா



முல்லைத்தீவு,பெப்.26
முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் 66 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன. இதன் போது கல்லூரி மாணவர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்களை வரவேற்றனர். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லைத்தீவுக் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி யு.புவன ராஜா, கல்லூரியின் முதல் நிலை மாணவர்கள் 60 பேருக்கு, மாணவ முதல்வர்களுக்கான சின்னத்தைச் சூட்டினார். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெற்றன.

(ஐ-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.26

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் 2017 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்குப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி) சு.முரளிதரன் கலந்து கொள்வார். (ற-21)


## வீடு விற்பனைக்கு

யாழ் நகரிலிருந்து 1Km தூரத்தில் இல472, மானிப்பாய் வீதியில் நான்கு பக்க சுற்றுமதில் மற்றும் கிணற்றுடன் கூடிய 7 அறைகள் 1700 சதுரஅடி பரப்பளவுள்ள வீட்டுடன் கூடிய 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

077 312 7083

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

பழைய பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் சுன்னாகத்தில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

021 205 2604/
077 942 6408/021 224 2237

## வீடு வாடகைக்குண்டு

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதியில் (Layiden) உள்ள சகல வசதியுடனும் கூடிய அடுக்குமாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள்/விடுதி தேவைகளுக்கு விரும்பத்தக்கது.

077 045 1107

## கடை, அறை, வாடகைக்கு

நல்லூர் வடக்கு கல்வியங்காட்டில் தனிவழி, பல்கனி, கார் பாக்கிங் உட்பட சகல வசதிகளுடனான கடை மற்றும் அதே வசதிகளுடன் கூடிய இரு பெரிய அறைகளும் வாடகைக்குண்டு.

மதி- 077 329 6035, 021 223 0310

## வேலையாள்கள் தேவை

- Technical Officer(Minimum 2 year Experience)
- Technical Assistant(Minimum 1 year Experience)
- Technical Trainee
- Accounts Assistant
- Marketing Officer(Building Contruction with 2 year Experience)
- வெல்டர். உதவியாளர்
- தச்சுத் தொழிலாளி. உதவியாளர்

beststarcon@hotmail.com
076 310 1597

## விற்பனைக்கு



Toyota Town Ace CR 41 1997
4 Door Flet Roof Auto நல்ல நிலையில் உள்ள தனிப்பாவனை. உடனடி விற் பனைக்கு.

072 255 2222

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் பிரபல்யமான ஹொட்டல் ஒன்றிற்கு

1. அலுவலக கணக்குப் பதிவாளர்(Clerk) (தகைமை A/L கணக்கியல் படித்தவர் விரும்பத்தக்கது) ஆண்.பெண்
2. சிற்றுண்டி தயாரிப்பாளர்-(ஆண்) உணவு. தங்குமிடம் உண்டு. சம்பளம் 40000/= இற்கு மேல்

011 272 2840/ 077 368 6129

## விற்பனையாகிறது......!

சீனாவிலிருந்து பெறப்பட்ட Hand Bag வகை. School Bag வகை. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்கள். MP3 - USB -DVD பிளேயர். வாகனங்களுக்கான DVD - USB பிளேயர். றிவர்ஸ் கமரா.இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த ரீ-சேட் வகைகள் மற்றும் திரைப்படம். வீடியோ பாடல். ஓடியோ பாடல்களுக்கான சீடிக்களையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ்.ஆர்.சேல் சென்ரர்
இல.7, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
021 222 4129

## விற்பனைப் பிரதிநிதி தேவை

கடதாசி உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி உடனடியாகத் தேவை. கட்டடம் கைவசம் உள்ளவராயின் கவனத்தில் கொள்ளப்படுவர்.

(C28209)(11.18) 011 727 2072

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
- இள நரையா?
- முடிகொட்டுகிறதா?
- தலையிடியா?
- பேன். பொடுகு தொல்லையா?

பொன்னாங்காணி. வல்லாரை. இலாமிச்சைவேர். மருதாணி. கருசலாங்கண்ணி. கருவேப்பிலை சேர்த்துக் காய்ச்சிய ஆயுள் வேத எண்ணை 100 % இயற்கை மூலிகைகளால் ஆன இவ்வெண்ணையைப் பாவித்து 2 வாரங்களில் பலனை உணர்வீர்கள்

பதிவு இல: 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(AJA CS1435) (13.18)

## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

தெற்காசியாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றுடன் வெளிவாரிப் பட்டப்படிப்புக்காக இணையுங்கள்

**விரிவுரைகள் ஆரம்பம் :-**

04.03.2017 (சனிக்கிழமை காலை 9.00)

- B.Sc - Business Administration.
- B.Sc - Public Management
- B.Com
- B.A - English

**விண்ணப்ப முடிவு திகதி - 31.03.2017**

**WHITE LOTUS CAMPUS**
No.154, A1,Navalar Road Jaffna
021 722 3773 / 077 622 3963

முன்னேற்றப் பாதையை நோக்கி இன்னுமோர் அடியை எடுத்து வைக்க உங்களுக்கோர் **திரிபல!**



தொழிற்சாலைகள் | சேவைகள் | வணிகம் | கமத்தொழில்

### சிறிய மற்றும் நடுத்தர வியாபார அபிவிருத்திக்கு, நிதி உதவிக்கும் அப்பாற்பட்ட பல சேவைகள்

உங்களின் வியாபாரத்தினை தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் வெற்றிகரமாக்கிக் கொள்ளுங்கள். இந்த அடியினை எடுத்து வைக்க உங்களுக்கு உந்துசக்தியாகத் திகழ்கின்றது கொமர்ஷல் வங்கியின் திரிபல அபிவிருத்திக் கடன்.

- வியாபாரம் சம்பந்தமான திட்ட அறிக்கை அவசியமில்லை
- சூழல் நட்புறவு சம்பந்தமான திட்டங்களுக்கு விசேட வசதி
- வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு அவசியமான தொழில்நுட்ப, சக்திவள மற்றும் நிதி முகாமைத்துவ அறிவுரைகள்
- நாடு முழுவதும் பரந்துள்ள கிளை வலையமைப்பு ஊடாக விரைவான, இலகுவான கடன் வசதி

உள்ளடங்கலாக நிதி உதவியுடன் கூடிய சக்தியாக திரிபல அபிவிருத்திக் கடன் திட்டம்.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்: 011 2 353 850 / 011 2 353 851 / 011 2 353 852

திரிபல
அபிவிருத்திக் கடன்

COMMERCIAL BANK

Fitch Rating: AA(lka) *நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.facebook.com/combanksl www.combank.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விநியோகஸ்தர்கள் தேவை

" SUN AQUA " FMCG

உடனான குடிதண்ணீர்ப்போத்தல் யாழ்ப்பாணத்தில் விநியோகம் செய்வதற்கு அனுபவமுள்ள விநியோகஸ்தர்கள் தேவை.

களஞ்சிய வசதி, வாகனவசதி, வங்கி உத்தரவாதம் உடைய ஆர்வமுடைய வர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 359 8440

Velummayilum Foundation

## வேலும்மயிலும் பவுண்டேசன்
### இலவச வகுப்புக்கள் ஆரம்பம்

* தரம் – 06–11 வரையான மாணவர்களுக்கான கணிதம் விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணினி வகுப்புக்கள்.
* விசேட ஆங்கில வகுப்புக்கள்
* கணினி வகுப்புக்கள்
  + Ms Office
  + Photo Shop
  + Coral draw
  + Page maker
  + Internet & Email

வேலும்மயிலும் பவுண்டேசன்
ஓடக்கரை வீதி,
பருத்தித்துறை.
021–2261933
www.velummayilumfoundation.org

## மீன்பிடி வலை உற்பத்தி தொழிற்சாலைக்கு பணியாளர்கள் தேவை

கொழும்பு ஜாஎல பகுதியில் இருக்கும் எமது தொழிற்சாலைக்கு பணியாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் 04.03.2017 அன்று காலை 9மணிமுதல் பி.ப 2மணி வரை சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். தங்குமிடம் இலவசம், சாப்பாடு வசதிகள் செய்து தரபடும் நேரில் சமுகமளிக்க விரும்புபவர்கள் நிர்வாக இயக்குநர் திரு.சரவணபவன் காண்டீபன் அவர்களை - MALBAROPES PVT Ltd. (மல்பாறோபீஸ்) 212, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சத்திரச் சந்தியிலிருந்து 75M இல்) நேரில் சந்திக்க முடியும். நேரம் - மு.ப 9 மணி முதல் பி.ப 2மணி வரை.

தொடர்புகளுக்கு: சரவணபவன் காண்டீபன்
நிர்வாக இயக்குநர்.
MALBA ROPES (PVT)Ltd.
15A, TEMPLE ROAD, EKALA JA ELA
Tel: 077 770 1695/ 021 222 0090

## மணிவிழா வாழ்த்துக்களும் பணிநயப்பு விழாவும்

உயர்திருவாளர்
### யோசப் மாசிலாமணி

(முதல்வர் மு/ முள்ளிவாய்க்கால் மேற்கு க.உ.வித்தியாலயம்)
அவர்களது பணிநயப்பு விழாவும் மணிவிழாவும்

காலம் - 2017.02.27

இடம் - பாடசாலை பிரதான மண்டபம்

எமது பாடசாலையில் சேவையாற்றி மணிவிழாக் காணும் எமது பாடசாலை அதிபர் திரு.யோசப் மாசிலாமணி அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் உடல் உள ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
மு/முள்ளிவாய்க்கால் மேற்கு,
க.உ.வித்தியாலயம்,
முள்ளிவாய்க்கால்.




(AJA/871)(11.18)

## உடல் எடை குறைய வேண்டுமா?

* உடல் எடை குறைக்க வேண்டுமா?
* ஊளைச்சதையா?
* வயிறு மார்பு குறைக்க வேண்டுமா?
* எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
* 100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (டொனிக் குளிசை, கிறீம்)

ஆச்சரியம் 10 நாள்களில் வயிறு மார்பு குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு

விலை 3500/= 5500/= 9000/=

இதனைப் பாவித்து 10 நாள்களில் அபரீதமான மாற்றத்தை உணர்வீர்கள்

பதிவு இல: 16168

221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 210 6155

(AJA CS1434) (13.18)


## 40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற ' றோயல் குளுக்கோஸ்'

தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

" றோயல் குளுக்கோஸ்"

Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670




### சிவா நறுமணப் பூங்கா

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2567

(ச/00348)(11.17)

## கேள்வி விலைமனுக் கோரல்

இலங்கையில் சர்வோதய சிரமதான சங்கம் ஒரு பெரியமக்கள் நிறுவனமாகும். சர்வோதயம் என்பது "பூரணவிழிப்பூட்டல்" என்றபொருளுடைய சமஸ்கிருதசொல் மற்றும் சிரமதானம் என்பது "முயற்சியைதானம்" செய்வது என்பதாகும். சர்வோதயம் ஒரு கிராமத்தில் ஆரம்பித்து இன்று 15000 கிராமம் வரை வியாபித்து நாடுபூராகவும் ஒருங்கிணைக்கப்பட்ட சமுக அபிவிருத்தித் திட்டங்களை இந்தக் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சர்வோதயம் 1958 இல் உருவாக்கப்பட்டு தற்போது இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் மீள்குடியேற்றம், புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் தோசோதயம் என்ற தேசிய மீண்டெழும் திட்டம் ஊடாக நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்தை வளர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

1. சர்வோதய சிரமதான சங்க கேள்வி விலைமனுக் கோரல் சபையின் தலைவரான நான், பொருத்தமான ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைமனுக்களைக் கோருகின்றேன். ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தேசிய பதிவு மற்றும் தரப்படுத்துகைத் திட்டம் மூலமாக கட்டடம் கட்டுமான ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்யப்பட்டு இருக்கவேண்டும். (ICTAD ) தரப்பட்டியல் கீழேதரப்பட்டுள்ளது.
2. விலைமனு கோரல் பத்திரம் வேலைநாள்களில் காரியாலய வேலைநேரத்தில் 27.02.2017 ஆம் திகதி முதல் 03.03.2017 வரை சர்வோதய யாழ்ப்பாண மாவட்ட நிலையத்தில் விநியோகிக்கப்படும். முத்திரை இடப்பட்டு மூடப்பட்ட விலைமனு 08.03.2017 வரை ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் இந்தமனுக்கள் கேள்வி விலைமனுக் கோரல் (TENDER) சபையினால் திறக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு ஒருகிழமைக்குள் அறிவிக்கப்படும்.
3. முழுவதுமாக முத்திரை இடப்பட்டு மூடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் கேள்விமனுக் கோரல் (TENDER) தலைவருக்குப் பெயரிடப்பட்டு லங்காஜாதிக சர்வோதய சிரமதானசங்கம், இலக்கம் 98, ராவத்தவத்தை வீதி, மொறட்டுவ என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் இடதுபக்கமேல் மூலையில் விலைமனு தொடர்பாக தெளிவாக எழுதப்பட்டு இருத்தல் வேண்டும். கையால் வழங்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பூர்த்தி அற்ற விண்ணப்பங்கள் அகற்றப்படுவதுடன் கேள்வி விலைமனுக் கோரல் (TENDER) சபையின் முடிவே இறுதியானது.

| # | விபரம் | தேவையான ICTADபதிவும் தரமும் | ஒப்பந்தகாலம் | மீளப்பெறப்பட முடியாதவைப்பு |
|---|---|---|---|---|
| 1 | Cutting and Removal of earth, Transporting, Filling by 6" layers & compacted as directed by the Consultant to the level of adjoining land | C9 or மேல் | 14 நாள்கள் | 1000/= |

மேலதிகமான தகவல்களுக்கு சாதாரண வேலை நேரத்தில் திரு.ரணில் (செயலாளர் TENDER சபை) அவர்களைத் தொடர்பு கொள்ளவும். (Tel: 0112655255) அல்லது திரு.யுகேந்திரன் [illegible] (Tel: 0212211213) அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

தலைவர் – TENDER சபை,
லங்காஜாதிக சர்வோதய சிரமதான சங்கம், 98, ராவத்தவத்தை, மொறட்டுவ.

## 2 லட்சம் பேர் வறட்சியால் பாதிப்பு

கொழும்பு, பெப். 26

இலங்கையில் வறட்சியுடன் கூடிய காலநிலையின் காரணமாக 2லட்சத்து 28 ஆயிரத்து 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளனா என இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது: வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அடுத்த மாதம் முதல் தொடர்ச்சியாக நான்கு மாத காலங்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

தற்போது நிலவும் வறட்சியுடன் கூடிய காலநிலையின் காரணமாக யாழ்ப்பாணம், நுவரெலியா, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, களுத்துறை, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை, அனுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம், கண்டி, மற்றும் மாத்தளை ஆகிய 16 மாவட்ட செயலகங்களைச் சேர்ந்த 103 தொகுதிகளுக்குட்பட்ட இரண்டு இலட்சத்து 28 ஆயிரத்து 400 பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக நிதி அமைச்சு 50 மில்லியன் ரூபா மானிய நிதியை வழங்கியுள்ளது. தண்ணீருக்கான கட்டணம், தண்ணீர் சுத்திகரிப்பு, தண்ணீர் பௌசர்களுக்கும், எரிபொருள் மற்றும் சாரதிகளுக்கான மேலதிக கொடுப்பனவுகளுக்கும் நிர்வாக செலவுக்குமாக அரசு தற்போது 32 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கு மேலதிகமாக இரண்டாயிரத்து 370 நீர்த்தாங்கிகளும் விநியோகிக்கப் பட்டுள்ளன. 3 ஆயிரம்தண்ணீர்த் தாங்கிகளை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மனுக்களும் கோரப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட நெற்காணி ஒரு ஏக்கருக்காக பத்தாயிரம் ரூபா நட்டஈடு வழங் கப்படும். ஏனைய விவசாய உற்பத்திகளுக்காகவும் நட்ட ஈடுகள் வழங்கப்பட வுள்ளன என்றார். (ந–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியருக்கான புலமைசார் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் பெப்.26

ஆசிரியர்களுக்கான புலமைசார் கற்றல், கற்பித்தல் பயிற்சி நெறிகளும் பிரவேச, பால, பண்டிதர் வகுப்புக்களும் கீழைத் தேயக் கல்விக் கல்லூரியில் ஆரம்பமாக வுள்ளன.

இதுவரை காலமும் இணுவில் இளம் தொண்டர் சபை, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் நடைபெற்றுவந்த மேற் படி வகுப்புக்கள் இனி தற்போது நல்லூர் வடக்கு, புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் இடம்பெறும்.

இந்த வகுப்புகள் எதிர் வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி ஆரம் ப மாகவிருக்கின்றன.(ற)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள எமது நிறுவனமான Dynamic ORG (PVT) LTD இன் புதிய கிளைகளுக்கு பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன. வேலையாள்கள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர். கவர்ச சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**வெற்றிடங்கள் :**

Administrative
Team Leaders
Supervisors
Assistant Managers.

யாழ்ப்பாணம் ; வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மலையகம் ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**076 678 1042 , 077 664 4442**

## VACANCIES

### MARKETING EXECUTIVE (Male & Female)

We are a Company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

Requirements
- GCE (A/L) Qualified
- Below 35 years old (School leavers may apply for trainee position)

If you believe that you are the right cantidate, Please e-mail or contact immediately
Branch Manager G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130

Benifits
- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

Marketing Executive 25 000/= +++
After 3Months Management Executive 42 500/= +++

**Pioneer House (PVT) Ltd.**
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com

## தேவை

**காட்சியறை வசதிகள், 22 வருடங்களுக்கு மேலாக காகித உற்பத்தி வணிகத்தில்**

**W.U.Senaviratne & Co. (Pvt) Ltd**

**நிறுவனத்தை விரிவாக்கம் செய்வதற்கு யாழ்.நகரத்தை அண்மித்த பகுதியில் வீடு அல்லது கட்டடம் ஒன்று வாடகை / குத்தகைக்கு உடனடியாகத் தேவை.**


(C/28208)(11.17.18)

**தொடர்பு : 011 727 2072**

# புதிய வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க ரூ.200,000 கடன் உதவி

ஆரம்பகட்ட கடன் தொகைக்கான வட்டி 5.5%

இந்த கடன் தொகைக்கு மேலதிகமாக, நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார ஆரம்ப செலவுகளுக்கு ரூ.50,000 கொண்ட உயர்ந்தபட்ச நன்கொடையொன்று வழங்கப்படும். ஏற்கனவேயுள்ள வியாபாரங்களுக்கு 5.5% வட்டியுடன் ரூ.250,000 கொண்ட உயர்ந்தபட்சக் கடன் கிடைக்கும்.



கடன் பெற்றுக்கொள்ளக்கூடிய துறைகள்

சேவைகள் விவசாயம் கைத்தொழில்

பத்து இலட்சம் தொழில்களை உருவாக்கும் தேசிய செயற்றிட்டத்தின் ஒரு நடவடிக்கை

**சுயசக்தி**

இருபத்தையாயிரம் எண்ணங்கள் - இருபத்தையாயிரம் வியாபாரங்கள்

மேலதிக விபரங்களுக்கு: அழையுங்கள் 011 2 669 234.
பிரவேசியுங்கள் www.swashakthi.lk

கீழே உள்ள வங்கிகளின் எந்தவொரு கிளைக்கும் செல்லுங்கள்.

BANK OF CEYLON, HDFC BANK, PEOPLE'S BANK, RDB, SLS Bank, SDB bank, Sampath Bank, SEYLAN BANK, HNB, COMMERCIAL BANK, NDB bank, UNION BANK, PAN ASIA BANK, DFCC BANK

PHOENIX OGILVY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



அமரர் சோமு நவரத்தினம்


(நவம் மோட்டோர்ஸ் உரிமையாளர்)

குடும்பத்தின் முதல்வனாய்
இல்லறம் காத்தவரே!
கருணை நெஞ்சை உறவுக்காய்
கசிந்தவரே!
எங்கும் நிறையும் சிவன்
திருநாளில்
சிவபதம் எய்திய அன்புமிகு சுடரே!
பல்லாண்டு அழுதுபுரண்டும்
ஆறாதே
ஒளிவீசிட்ட உம் நினைவலைகள்
என்றும் உம் நினைவுடன்
வாழ்வோம்!

குடும்பத்தினர்.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தோற்றம் 12.05.1953 — மறைவு 08.03.2016

## அந்தியேட்டி அழைப்பு



அமரர்
செல்லத்துரை
சிவராசா

தோற்றம்
27.05.1939

மறைவு
27.01.2017

கடந்த 27.01.2017 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் செல்லத்துரை சிவராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை வீட்டில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடிலேன்,
உயரப்புலம்,ஆனைக்கோட்டை. (AJA/CS/1407) (22,18)

மனைவி
சரஸ்வதி(பாப்பா)

## அதிகாரிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி




யாழ்ப்பாணம் பெப் 26

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் அரச உயர் அதிகாரிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி தியத்தலாவை இராணுவப் பயிற்சி முகாமில் கடந்த 21 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து மூன்று நாள்கள் நடத்தப்பட்டன.

பயிற்சியில் அரச உத்தியோகத்தர்களுக்கு பல்வேறுவகையான பயிற்சிகள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன பயிற்சிகளில் அனர்த்தங்கள் ஏற்படும்போது அதிலிருந்து மக்களை உடனடியாக எவ்வாறு காப்பற்றுவது என்பது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. பயிற்சிகளை அரநாயக்க மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய்கள் வழங்கினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர் பளிகக்காராவால் அரச உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளை எவ்வாறு செய்ய வேண்டும்.பணிகளின் போது பொதுமக்களுடன் எவ்வாறு பணியாற்ற வேண்டும், அரச கடமையில் இருக்கும்போது ஒரு விடயம் தொடர்பாக எப்படி எவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பன தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சியின் நிறைவு நாளின் போது பங்குபற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சான்றிதள்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்ச் செயலகத்துக்கு என சான்றிதழ் ஒன்றும் மாவட்டச் செயலர் நா.வேத நாயகனுக்கு வழங்கப்பட்டது. இவ்வாறான பயிற்சிகளை தொடர்ச்சியாக அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன. (ற-8)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
குமாரசாமி சரஸ்வதி

தோற்றம்
22.05.1925

மறைவு
2017.01.28

கடந்த 2017.01.28 ஆம் திகதி சனிக்கிழமை எமது குடும்பத் தலைவி சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியூடாகவும் இரங்கல் தெரிவித்தவர்கட்கும் இறுதிக்கிரியைகளில் பங்கேற்று நின்ற உற்றார் . உறவினர் . நண்பர்கள். அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதுடன் அன்னார் நோயுற்றிருந்த வேளையில் தன்னலங் கருதாது சேவையாற்றிய வைத்தியர்கள். தாதிய உத்தியோகத்தருக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் நாளை (27.02.2017) திங்கட்கிழமை 41. சங்கிலியன் வீதி. நல்லூர் யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

41, சங்கிலியன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 28.01.2017
சனிக்கிழமை சிவபதம்
எய்திய எமது குடும்பத்
தலைவர்

அமரர்
இராமலிங்கம்
கனகலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26:02:2017) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

'அரசி அரண்'
அல்வாய் மேற்கு, திக்கம்.

குடும்பத்தினர்.
077 607 3444

## 31 ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 27 |
| 07 | 01 |
| 1930 | 2017 |

### கதிரித்தம்பி வேலாயுதபிள்ளை

(Retd. Financial Assistant- Education Department, Jaffna)
(அகில இலங்கை சமாதான நீதிவான்).

அன்பின் அணிகலனாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய் தந்தைக்கோர் இலக்கணமாய் பக்தியின் சின்னமாய் நல்வழிகாட்டி எம்மை வாழவைத்த அன்புத்தெய்வமே! உங்களின் இனிய நினைவலைகள் எங்களின் எண்ணங்களில் நிறைந்திருக்க உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 27-01-2017 வெள்ளிக்கிழமையன்று இறைபதம் அடைந்த எமது அன்பு தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் சகல உதவிகளையும் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு,05-03-2017 அன்று மு. ப 11:00 மணியளவில் பம்பலபிட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடரும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

No. 6-2/1, Pinto Place, Wellawatte. Tel: 0772942761

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 09 |
| 04 | 03 |
| 1939 | 2016 |

திதி:- அமாவாசை

### திருமதி கமலாதேவி தர்மலிங்கம்

(BSc. Hons, Dip.in.Edu.)

(ஓய்வுநிலை ஆசிரியை – கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் – கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம், உடப்பு மகாவித்தியாலயம். பழைய மாணவி – சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

ஆண்டொன்று கடந்ததம்மா நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
அனுதினமும் உங்கள் நினைவால் வருந்துகின்றோம்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எம் மனதை விட்டகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]
பிரதான வீதி,
வேலணை – 2

கணவர் – செல்லப்பா தர்மலிங்கம்,
மகள் – Dr.சதாபானு ஜனகன் +
குடும்பத்தினர்.

## தமிழரசுக் கட்சியின் கிளைகள் சீரமைப்பு

வடமராட்சி,பெப்.26

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளில் இலங்கைத் தமிழரசுக்கட்சிக் கிளைகள் சீரமைக்கப்படுகின்றன.

பருத்தித்துறைத் தொகுதியில் உடுத்துறை, மருதங்கேணி, நாகர்கோவில், குடத்தனை ஆகிய கிளைகளும் உடுப்பிட்டித் தொகுதியில் கரணவாய் தெற்கு, கரணவாய் வடக்கு ஆகிய கிளைகளும் சீரமைப்புச் செய்யப்பட்டு ஒவ்வொரு கிளைக்கும் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

சீரமைப்புக் கூட்டங்கள் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனக சபாபதி, நிர்வாகச் செயலாளர் சூ.சே.குல நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் வாரங்களில் இரு தொகுதிகளிலும் எஞ்சிய கிளைகள் சீரமைக்கப்பட்டதும் தொகுதிக் கிளைகள் சீரமைக்கப்படும் என கட்சியின் நிர்வாகச் செயலாளர் தெரிவித்தார். (ற-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்கான கடன்கள் இந்த வருடத்தில் மீளளிக்கப்படும்

## ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்

கொழும்பு, பெப். 26
அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளுக்காக, பெற்றுக் கொண்ட கடன் தொகையில், 80 வீதமானவை இந்த வருடத்தில் மீளளிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அக்மீமன பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல்போன காலகட்டத்திலேயே நாம் அரசைப் பொறுப்பேற்றோம்.
அம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்திக்காக பெற்ற கடன்களை இந்த வருடத்தில் மீள வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். அந்தக் கடனில் 80 வீதமானவற்றை இந்த வருடத் துக்குள் செலுத்துவோம். அம்பாந் தோட்டைத் துறைமுகம் அபிவிருத்தி யடையும்போது தெற்குக்கான சுற்றுலாத் துறையும் அபிவிருத்தி யடையும் என எதிர்பார்க்கிறோம்- என்றார். (ஐ-10)

# க.பொ.த. சாதாரண பரீட்சை தொடர்பில் இணையத்தளத்தில் பொய்யான பரப்புரை

## கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, பெப். 26
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை, இந்த வருடம் முதல் ஒக்ரோபர் மாதத்திலிருந்து நடத்தப்படும் என வெளியான கடிதம் தொடர்பாக, விசாரணைகள் முன்னெடுக்கப்பட வுள்ளது. அந்தப் பொறுப்பைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
"கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத் தின் தலைமையில் இடம்பெற்ற குழுக் கூட்ட மொன்றில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு அமை வாக, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர் வரும் டிசம்பர் மாதம் அல்லாது ஒக்ரோபர் மாதம் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
பேராசிரியர் அமல் கருணாரத்ன என்ற பெயரில், அரச முத்திரையுடன் இந் தக் கடிதம் இணையத்தளங்களில் வெளியிடப் பட்டுள்ளது.
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக் கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான வதந்திகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது. (ஐ-10)

# பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற கடற்படையினர் நாடு திரும்பினர்

கொழும்பு, பெப். 26
பாகிஸ்தானில் பயிற்சியை நிறைவு செய்த, 186 இலங்கைக் கடற்படையினருடன், சமுத்திரா கப்பல் நேற்று முன்தினம் கொழும்பை வந்தடைந்தது.
இந்தக் கப்பல் கராச்சியில் இடம்பெற்ற ஏ.எம்.ஏ.என்.-17 என்ற பன்னாட்டுக் கடற்படைப் பயிற்சிக்காகக் கடந்த 3 ஆம் திகதி இங்கிருந்து சென்றது.
இலங்கைக் கடற்படையினருடன், மாலைதீவு கடற்படையினர் 8 பேரும் இந்தப் பயிற்சியில் பங்குபற்றியிருந்தனர்.
அந்தப் பயிற்சியை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்புத்துறைமுகத்துக்குத் திரும்பிய சமுத்திரா கப்பல் மற்றும் பயிற்சிக்குச் சென்ற கடற்படையினரையும், இலங்கைக் கடற்படையினர் முழுமரியாதையுடன் வரவேற்றனர் என்று தெரிவிக்கப் பட்டது.
இந்த மாதம் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கராச்சியில் இடம்பெற்ற ஏ.எம்.ஏ.என்.-17 என்ற சர்வதேச கடல் கடற்படைப் பயிற்சியில் 36 நாடுகளைச் சேர்ந்த கடற்படையினர் கலந்து கொண்ட னர். (ஐ-4)




வேலைப்பளுமிக்க நாளில் இருந்து சிறிது உற்சாகம் பெற சிறிய நடைப்பயிற்சி உங்களுக்கு உதவும். அது வாழ்வில் மேலும் முன்னோக்கி செல்ல தேவையான ஆரோக்கியம் மற்றும் சக்தியையும் வழங்கும். தற்போது நடைப்பயிற்சி செய்வதனை AIA Vitality மேலும் சிறப்பாக்கியுள்ளது.

AIA Vitality - இலங்கையில் முதல்முறையாக மக்கள் நடைப்பயிற்சி செய்யும் நல்ல பழக்கத்தை ஊக்குவிக்க அறிமுகமாகியுள்ள விஞ்ஞானரீதியிலான நலத்திட்டமாகும். எமது சிறந்த வெகுமதிகள் உங்களை ஊக்கப்படுத்தி மேலும் நடைப்பயிற்சி செய்ய ஆர்வமூட்டும். இலங்கையை ஆரோக்கியமான தேசமாக திகழச் செய்யும் எமது நோக்கத்தின் இன்னுமொரு முயற்சியே இதுவாகும்.

AIA Vitality - வாழ்க்கைக்கு வெகுமதியளிக்கும் ஒரு புதிய வழியாகும்.

இப்போதே Download செய்யுங்கள்
App Store
Google play

AIA Vitality
AIA
THE REAL LIFE COMPANY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர்களுக்கு விருதுகள்

இலங்கை சாரணர் சங்கத்தில் நீண்டகாலம் பணியாற்றிய வர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் 140 தமிழ் சாரண ஆசிரியர்கள், சாரணர் மாவட்ட ஆணையாளர்கள், உதவி சாரண மாவட்ட ஆணையாளர்கள் உட்பட சாரணர் சேவையிலுள்ள 600 பேருக்கு இந்த விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (ஐ-9)


## மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் உலகத் தரமான தகைமையைப் பெற உங்களுக்கு ஓர் இலவச வாய்ப்பு

"மோட்டார் வாகனத் தொழில்நுட்பவியலாளராக வரும் நோக்கத்துடனேயே நான் DATS அமைப்பில் ஒரு பயிலுநராக இணைந்தேன். ஆனால், நான் அங்கு பெற்ற பயிற்சியும் அனுபவமும் என்னை டிமோ நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் ஆக்க உதவின. தொழிற்றுறையில் உயர்ந்த நிலை அடைவதற்கும் வாழ்க்கையில் வளம் பெறுவதற்கும் என்னைப் போலவே மேலும் பலருக்கு DATS வழிகாட்டியுள்ளது."

**அனுர விஜேசிங்க**
பிரதிப் பொது முகாமையாளர்
DIMO



**டிமோவின் நிலைபேறுகு முன்முயற்சியான DATS அமைப்பின் மோட்டார் தொழில்நுட்பப் பயிற்சிக்கு இன்றே விண்ணப்பியுங்கள்**

DIMO Automobile Training School (DATS) என்பது Daimler AG உடனிணைந்து இலங்கையில் முழுமையான மோட்டார் வாகனப் பயிற்சியை வழங்கும் முதலாவது பயிற்சி நிலையமாகும். அது மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் உயர் தரத்திலான விளக்கமுறை மற்றும் செய்முறைப் பயிற்சிகளைப் பூரண அர்ப்பணிப்புடன் வழங்குகிறது.

இப் பயிற்சி நெறி உலகத் தரமான வசதிகள், சிறந்த தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த தொழில்நுட்பப் போதனாசிரியர்கள், Mercedes-Benz க்கு அமைவான பாடத்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பதால், மோட்டார் வாகனத் தொழில்நுட்பத் துறையில் உயர்ந்த நிலையை அடைய DATS உங்களுக்குச் சிறந்த வாய்ப்பளிக்கும்.

மகத்தான நிறுவனமாகிய DIMO வழங்கும் எல்லையற்ற வாய்ப்புக்களினால் உங்கள் தொழில் நிலையை முன்னேற்ற ஆர்வமிருந்தால் இன்றே எம்முடன் இணையுங்கள்!

**பிரவேசத் தகுதிகள்**
வயது: 17 முதல் 24 வரை

கல்வித் தகைமைகள்: க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 'B' சித்தியுடன் 6 பாடங்களில் சித்திகள். **2017–2019 காலத்திற்கான பயிற்சிநெறி 2017 ஜூன் 1ஆம் திகதி ஆரம்பமாகும்.**

உங்கள் சுயவிபரக் கோவையை dats@dimolanka.comக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் அல்லது பின்வரும் முகவரிக்குத் தபாலில் அனுப்புங்கள்:

DIMO Automobile Training School,
No.09, A9 Road, Ariyalai, Jaffna.

விண்ணப்ப முடிவு தினம் 2017 மார்ச் 17ஆம் திகதி.

**DIMO Automobile Training School**
Diesel & Motor Engineering PLC,
இல. 09, A9 வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
www.dimolanka.com
www.facebook.com/DIMOSriLanka

GREAT PLACE TO WORK Best companies to work for 2016 Sri Lanka


# இனவாதக் கட்சிகளுடன் இணைந்து தே.சு.மு. தேர்தலில் போட்டியிடாது

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, பெப்.26

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, எதிர்காலத்தில் இனவாத அரசியல் கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடாது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் சில இனவாதக் கட்சிகள் எம்முடன் இணைந்ததால் கட்சியின் கொள்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தற்போதும் சுதந்திர ஐக்கியமக்கள் முன்னணியுடன் கூட்டுச்சேர பல கட்சிகள் விருப்பம் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. அந்தக்கட்சிகளைச் சேர்த்துக் கொள்வது தொடர்பில் இறுதியான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இனவாத அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடவும் மாட்டோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி பிரிந்து செல்வது நல்லது – என்றார். (ஐ-10)

# குடும்பப் பெண் சடலமாக மீட்பு

கொழும்பு,பெப்.26

பாழடைந்த வீடொன்றிலிருந்து, இளம் குடும்பப்பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

தென்பகுதி ஹெவாஹெட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடையே குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த குடும்பப் பெண், 33 வயதுடைய நபர் ஒருவருடன் தகாத உறவு வைத்திருந்துள்ளார். அந்த நபரே இந்தப் பெண்ணைக் கொலை செய்திருக்கலாம். கடந்தமாதம் 29 ஆம் திகதியை அண்மித்த காலப் பகுதியில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொலைச் சந்தேகநபர் தலைமறைவாகி இருப்பதால், அவரைத் தேடி வருகிறோம். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியில் 'பந்தி' நிகழ்வு

### உணவினூடாக ஒருமைப்பாட்டிற்கான ஒரு முன்முயற்சி



யாழ்ப்பாண மாநகர சபை, இலங்கை மாநாட்டு பணியகம் மற்றும் சர்வதேச வர்த்தக மன்றம் அகியவற்றின் ஆதரவுடன் Lanka Exhibition & Confernce Services (Pvt) Ltd (LECS) யாழ்ப்பாண கைத்தொழில் வர்த்தக மன்றத்துடன் இணைந்து ஜனவரி மாதம் 27ம் 28ம் 29ம் திகதிகளில் இடம்பெற்ற யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பந்தி எனும் நிகழ்வு அனைவரினதும் விஷேட கவனத்தை ஈர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல சுவை – ஒரு திசை, எனும் நிகழ்வு தலைப்புடன் இடம்பெற்ற பந்தி நிகழ்வானது நாட்டின் பிற பகுதிகளில் உள்ள இலங்கையர்களால் விரும்பி சுவைக்கப்படும் பல்வேறு வகையான உணவுகளை சுவைத்து மகிழ்வதற்கும், அவற்றை தயாரிக்கும் முறைகளை அறிந்து கொள்வதற்கும் வடபகுதிவாழ் மக்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பினை வழங்கியிருந்தது. உணவினூடாக ஒருமைப்பாடு, என்ற GIZ இன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு அங்கமாகவே இந்நிகழ்வு அமைந்திருந்தது. அனைவரும் அவசியமான உணவு என்ற மையப்பொருளின் அடிப்படையில் இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த வரிசையில் முதலாவது நிகழ்வான யாழ் சமையலறை என்ற நிகழ்வில் வடக்கிற்கே உரித்தான தனித்துவம் மிக்க உணவு தயாரிப்பு முறைகள் கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற Profood Pro Pack கண்காட்சியில் பிரபலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்தி நிகழ்வில் இலங்கையின் புகழ்பெற்ற சமையற்கலை நிபுணரான கலாநிதி. ஜெயந்தன் அவர்கள் பல்வேறு வகையான உணவுகளை தயாரிக்கும் முறைகளை மூன்று நாட்களும் செய்துகாட்டியிருந்தார். இன, மத, பால், வயது வேறுபாடுகளின்றி ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு வகையான உணவு தாயாரிப்பு முறைகளை அறிந்தும், அந்த உணவுகளை சுவைத்தும், நடைபெற்ற போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களை வெற்றிபெற்றும் பயனடைந்திருந்தனர்.

பந்தி காட்சிக்கூடத்தில் இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர்களின் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், ரசசரனீ அமைப்பினரால் உணவுக்கலை தொடர்பான 'சிந்தனை பலதும்' என்ற தமிழ்மொழி மூலம் ஒன்றும் சஞ்சிகை வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.










| கொள்ளளவு | 9000btu | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|---|
| சாதாரண விலை | ரூ.114,990 | ரூ.124,990 | ரூ.204,990 | ரூ.224,990 |
| விசேட விலை | ரூ.89,990 | ரூ.114,990 | ரூ.194,990 | ரூ.209,990 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அறிவுக் கண்ணின் கண் எப்போது திறக்கப்படும்?

ஒரு சமூகத்தின் அறிவுக்கண் அதன் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதையும் தாண்டி ஓர் அரசியல் பிடிப்பையும் உணர்வு ரீதியான இணைப்பையும் தமிழ்ச் சமூகத்தினுள் கொண்டுள்ளது. இன்று அந்தப் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவரும் குரலைக் கேட்கையில் தமிழ்ச் சமூகத்தின் அறிவுக் கண்ணின் கண் எப்போது திறக்கப்படும்; யாரால் திறக்கப்படும் என்கிற கேள்விதான் எழுகிறது.

ஒரு பல்கலைக்கழகம் தனக்கென ஒரு அரசியல் சிந்தனையை சித்தாந்தத்தைக் கொண்டிருப்பது உலகெங்கும் நடப்பதுதான். ஒருவர் எந்தப் பல்கலைக்கழகத்தில் இருந்து கற்று வருகிறார் என்பதைத் தெரிந்துகொள்வதிலிருந்து அவரது சிந்தனைப் போக்கை ஓரளவுக்கு மதிப்பிட்டுக்கொள்ளவும் முடியும். ஏனெனில் அவரது அடிப்படைச் சித்தாந்தம் (School of thought) அந்தப் பல்கலைக்கழகத்தின் சித்தாந்தத்தை அடியொட்டியதாக இருக்கும் என்று அனுமானிக்கப்படுவதாலாகும்.

1980களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் அதுபோன்றதொரு சிந்தனைப் பள்ளியாக, சித்தாந்த நிலையமாகச் செயற்பட்டது தமிழர்கள் அறியாததல்ல. தமிழ்த்தேசியச் சித்தாந்தமும், புரட்சியின் சிந்தனையும் பொதுவுடமை மற்றும் மார்க்சிய வெளிபாடுகளும் அதன் ஊடாகத் தமிழ்ச்சமூகத்திற்குள் பெருமளவில் ஊடுகடத்தப்பட்டிருக்கின்றன. அதன் வெளிப்பாடாக பல்கலைக்கழக மாணவர்கள் பலரே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபடும் நிலையும் இருந்தமை வரலாறு.

ஆனால், காலப் போக்கில் இந்த அரசியல் சித்தாந்தத்தை யாழ். பல்கலைக்கழகம் இழந்துபோனமை வெள்ளிடைமலை. விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற்றிருந்த காலத்தில் தமக்குத் தொல்லைதரும் அரசியல் சித்தாந்தங்களை பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கம் செய்ய விரும்பிய கொழும்பு அரசு, அதற்கு ஏற்புடையவர்களையே பதவியில் இருத்தியது. பதவியேற்றவர்களும் தமது கடமையை செவ்வனே நிறைவேற்றினர். அதன்படி நிலை வளர்ச்சியாக, ஒரு கட்சியைச் சேர்ந்த அமைச்சரின் ஏவலைச் செய்யும் ஒரு கல்வி நிலையமாகப் பல்கலைக்கழகத்தைக் குறுக்கிக் கொள்ளவும், பதவியில் இருந்தவர்கள் தவறியதில்லை. அந்தப் பழக்கம் படிமுறை இன்னமும் விலகியபாடில்லை. அதற்கு முக்கிய காரணம், துணைவேந்தர் பதவிக்கு, உரிய தெரிவுகள் இன்றி இருந்தமையும்தான்.

இந்தத் தடவை அப்படியில்லாமல், பல்கலைக்கழகத்திற்கு மேலும் உந்து சக்தியையும் உத்வேகத்தையும் தரக்கூடியவர் என்று கருதப்படுபவரான பேராசிரியர் சாம் தியாகலிங்கம் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்திருக்கிறார். இவர் அமெரிக்காவின் பொஸ்டன் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராக உள்ளவர். ஆனால் அவரது விண்ணப்பம் முடிவுத்திகதியின் பின்னர், தாமதமாகவே கிடைத்தது என்று தெரிவித்து அதனை நிராகரித்துவிட்டனர். முடிவுத் திகதிக்குப் பல நாள்களுக்கு முன்னரே அந்த விண்ணப்பம் தபாலில் இடப்பட்டபோதும் அது கிடைத்த திகதியைக் குறிப்பிட்டு நிராகரித்திருப்பது அந்த விண்ணப்பத்தை திட்டமிட்டுத் தட்டிக் கழிக்கும் முயற்சி என்றே பல்கலைக்கழகச் சமூகமும் தமிழ்ச் சமூகமும் கருதுகின்றது.

அரசுசார் நிறுவனங்களில் பொதுவாக விண்ணப்பங்கள் அவை தபாலில் இடப்பட்ட திகதியிலேயே கணக்கிலெடுக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது வழமை. இங்கு அந்தப் பொதுமுறைமை புறக்கணிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் சாம் தியாகலிங்கத்தை நேரில் எதிர்கொள்ளும் நெஞ்சுரமும் நேர்மைத் திறமும் இல்லாதவர்களே அவரது விண்ணப்பத்தை இப்படி அற்ப காரணத்துக்காக நிராகரிக்கிறார்கள் என்று சமூகம் எண்ணுவதைத் தவறென்று சொல்லிவிட முடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பின்னடைவுகளில் இருந்து மீண்டு, ஒரு புதிய பாதையில் உத்வேகத்துடன் பயணிப்பதற்கு அதற்குப் புதிய குருதி பாய்ச்சப்படவேண்டியது காலத்தின் தேவை. ஒருவேளை சாம் தியாகலிங்கம் அதற்குப் பொருத்தமானவராக இருக்கலாம். இல்லாமலும் போகலாம். ஆனால் அதனைப் பரிசீலனைக்கே எடுக்காமல் அவரை நிராகரிப்பதுதான் ஒரு அறிவுசார் சமூகம் செய்யக்கூடிய காரியமாக இல்லை. பல்கலைக்கழகம் தனது மதிப்பைத்தானே [illegible] கொள்கிறது.

# தீர்வுக்கு அல்ல முதலீடுகளுக்கே முக்கியத்துவம்

அரச தலைவர் மைத்திரிபால - தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான கூட்டு அரசு, இந்தப் போராட்டங்களை கண்டு கொள்ளாமலேயே இன்னும் இருந்து வரு கின்றது. இந்தக் கூட்டு அரசை ஆட்சியில் அமர்த்துவதற்குத் தமிழர் தரப்பு வழங்கிய பங்களிப்பு மிகக் காத்திரமானது.

அதிரன்



கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழரின் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயம் இழுபட்டுக்கொண்டே போகிறது. காலம் காலமாக தெற்கில் ஆட்சிக் கதிரையில் அமரும் அரசுகள், தமிழரின் தீர்வு விடயத்தில் திடமான ஒரு நிலைப்பாட்டை எடுக்காமல் காலத்துக்கு ஏற்ற விதத்தில் செயற்பட்டுத் தமது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளப் பாடுபடுகின்றன.

தமிழர் அரசியல் தரப்புக்களுக்கு வழங்கப்படும் உறுதிமொழிகளும் உருப்படியாக நிறைவேற்றப்படுவதில்லை. தேர்தல் காலத்தில் ஒன்றும், ஆட்சிக்கு வந்தபின்னர் இன்னொன்றுமாகவே ஆட்சியாளர்கள் நடந்துகொள்கின்றார்கள்.

போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடக்கின்றன. ஆயினும் போரினால் ஏற்பட்ட வடுக்களில் இருந்து தமிழ் மக்கள் இன்னமும் மீளவில்லை. தமது சொந்த இடங்களுக்கு - வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் பல தமிழ் மக்கள் இன்னமும் வேறு இடங்களிலேயே தங்கித் தமது வாழ்க்கையை நகர்த்துகின்றனர். அவர்களது வாழ்விடங்கள் பல இன்னும் இராணுவ முற்றுகைக்குள்ளேயே உள்ளன.

இவ்வாறு இராணுவ-முற்றுகைக்குள் உள்ள நிலங்களை மீட்டெடுப்பதற்காக கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் பொது மக்களால் தொடர்ச்சியான அறவழிப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வரு கின்றன. இராணுவம் தங்களது சொந்த நிலங்களை விட்டு வெளியேறினால் அன்றி, தமது போராட்டங்களைக் கைவிடப்போவதில்லை என மக்கள் தமது நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக உள்ளனர். போராட்டங்களுக்கு நாளுக்கு நாள் ஆதரவும் வலுத்து வருகிறது.

## தம்மைப் பதவியில் அமர்த்த உதவிய தமிழர் தரப்பை அலட்சியப்படுத்தும் அரசு

ஆயினும், அரச தலைவர் மைத்திரிபால - தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான கூட்டு அரசு, இந்தப் போராட்டங்களை கண்டு கொள்ளாமலேயே இன்னும் இருந்து வருகின்றது. இந்தக் கூட்டு அரசை ஆட்சியில் அமர்த்துவதற்குத் தமிழர் தரப்பு வழங்கிய பங்களிப்பு மிகக் காத்திரமானது. கடந்த ஆட்சியாளரான மகிந்தவை வீழ்த்துவதையே ஒரே நோக்காகக் கொண்டு இந்தக் கூட்டு அரசுக்குத் தமிழர் தரப்பு தனது ஆதரவை வழங்கியிருந்தது. தமிழர்களின் ஏகோபித்த பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை அடுத்து இந்த ஆதரவு கூட்டு அரசுக்குக் கிடைத்தது. ஆயினும் அவற்றை எல்லாம் சிறிதும் கருத்தில் கொள்ளாமல் கூட்டு அரசு நடந்து கொள்ளும் விதம் தமிழர் மனங்களில் பெரும் வேதனையை உண்டு பண்ணுகின்றது.

அரசியல் தீர்வுக்கு அல்லாமல், பன்னாட்டு முதலீடுகளுக்கும் பொருளாதார உயர்வுக்குமே கூட்டு அரசு முக்கியத்துவம் அளித்து வருவதை தலைமை அமைச்சர் ரணிலின் அண்மைய ஆஸ்திரேலியப் பயணம் நன்கு தெளிவுபடுத்தியது.

கடந்த 13 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஆஸ்திரேலியாவுக்கான பயணம் ஒன்றை தலைமை அமைச்சர் ரணில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமசிங்க மேற்கொண்டிருந்தார். ஆஸ்திரேலிய அரசின் அழைப்பின் பேரிலேயே அவரது இந்தப் பயணம் அமைந்தது.



அங்கு ஆஸ்திரேலிய அரச தலைவர் உட்பட அந்த நாட்டு அமைச்சர்கள் பலரையும், ராஜதந்திரிகளையும், முதலீட்டாளர்களையும் தலைமை அமைச்சர் ரணில் சந்தித்துப் பேசியிருந்தார்.

### முதலீட்டு வாய்ப்பை எதிர்பார்ப்பதாய் அமைந்த ரணிலின் ஆஸ்திரேலியப் பயணம்

இந்தச் சந்திப்புக்கள் எல்லாம் இலங்கையின் பொருளாதார முன்னேற்றம், முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பிலேயே அமைந்திருந்தன. இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தோ அல்லது போரினால் மோசமான இழப்புக்களைச் சந்தித்திருக்கும் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவது குறித்தோ இந்தச் சந்திப்புக்களின்போது ஒரு சிறு வார்த்தைகூடப் பேசப்படவில்லை.



மாறாக பன்னாட்டு முதலீடுகளை இலங்கைக்கு எப்படிப் பெறுவது என்பதிலேயே ரணில் குறியாக இருந்தார். அவர் அங்கு ஆற்றிய உரைகளும், முதலீட்டுவாய்ப்புக்களை எதிர்பார்ப்பனவாகவே இருந்தன. ஆஸ்திரேலியாவில் இருக்கும் பெரும் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு மேற்கொள்ள வருகை தருமாறு ரணில் அங்கு பகிரங்கமாகவே அழைப்பு விடுத்திருந்தார். சீனா, இந்தியா மட்டுமல்ல, ஏனைய நாடுகளும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள எந்தத் தடையும் இல்லை என்பதை அவர் தனது பேச்சுக்களில் அடிக்கடி வெளிப்படுத்தியிருந்தார். ஒட்டுமொத்தத்தில் அவரது ஆஸ்திரேலியப் பயணம் முதலீடுகளை நாடி ஓடுவதாகவே அமைந்தது.

போரினால் அல்லற்பட்டு, நொந்துபோயுள்ள தமிழினத்துக்கு நிரந்தரத் தீர்வொன்றை ஏற்படுத்துவதில் இன்னமும் இழுபறி நிலையே நீடித்து வருகின்றது. தீர்வுக்கான முயற்சிகளும் தொடர்ந்தும் தாமதமடைந்தே வருகின்றன. தமிழ்மக்களின் இந்தத் தீர்வு விடயம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வராத நிலையில், கூட்டு அரசு பன்னாட்டு முதலீடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து, செயற்பட்டு வருகின்றமை குறித்து ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர் அமைப்புக்கள் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

**அரசியல் தீர்வுக்கு அல்லாமல், பன்னாட்டு முதலீடுகளுக்கும் பொருளாதார உயர்வுக்குமே கூட்டு அரசு முக்கியத்துவம் அளித்து வருவதை தலைமை அமைச்சர் ரணிலின் அண்மைய ஆஸ்திரேலியப் பயணம் நன்கு தெளிவுபடுத்தியது.**

இதன் ஒரு அங்கமாக ரணிலின் ஆஸ்திரேலியப் பயணத்தின்போது ஈழத்தமிழர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. மெல்பேர்னில் அமைந்துள்ள டீக்கின் பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்வொன்றில் தலைமை அமைச்சர் ரணில் உரையாற்றிக் கொண்டிருந்த போது அந்த அரங்குக்கு வெளியே கூடிய ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முதலீடுகளைத் தேடி ஓடுவதை விடுத்து, முதலில் இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசு முன்வைக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ரணிலின் ஆஸ்திரேலியப் பயணத்தின் போது அங்குள்ள தமிழர் தரப்புக்கள் எதனையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவில்லை. இது அங்குள்ள தமிழர் மத்தியில் பெரும் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணியுள்ளது. தமிழர் அமைப்புக்களைச் சந்தித்துப் பேசாமல் முதலீட்டாளர்களை மட்டும் ரணில் சந்தித்துப் பேசியமை இனப்பிரச்சினை விடயத்தை கூட்டு அரசு கைவிட்டுவிட்டது என்றே எண்ணத்தோன்றுகின்றது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அரசு தரப்புப்பிலும் ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து எந்தக் கருத்துக்களும் வெளிப்படுத்தப்படவில்லை. இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வழிவகைகள் குறித்தே ஆஸ்திரேலிய அரச தரப்பும் அக்கறை காட்டியதைக் காண முடிந்தது.

இதன் வெளிப்பாடாக வெகு விரைவில் ஆஸ்திரேலியாவின் முதலீட்டாளர்களும் இலங்கையில் காலூன்றுவார்கள் எனக் கொள்வதில் தவறேதுமில்லை.

**"ரணிலின் ஆஸ்திரேலியப் பயணத்தின்போது அங்குள்ள தமிழர் தரப்புக்கள் எதனையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவில்லை. இது அங்குள்ள தமிழர் மத்தியில் பெரும் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியுள்ளது. தமிழர் அமைப்புக்களைச் சந்தித்துப் பேசாமல் முதலீட்டாளர்களை மட்டும் ரணில் சந்தித்துப் பேசியமை இனப்பிரச்சினை விடயத்தை கூட்டு அரசு கைவிட்டுவிட்டது என்றே எண்ணத்தோன்றுகின்றது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**



## வாசகர் திருமுகம்

### மின்சார சபை கவனம் செலுத்துமா?

குருநகர் தண்ணீர்த்தாங்கிக்கு முன்னால் உள்ள மத்திய கிழக்கு வீதியில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளில் இரண்டு ஒளிராத நிலையில் காணப் படுகின்றன. இதனால் குருநகர் தண்ணீர்த்தாங்கி முன்புறமும், றெக்கிளமேசன் சனசமூக நிலையப் பகுதியும் இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் காணப்படுவதால், இந்தப் பகுதியூடாக இரவில் பயணிப்போரும் இந்தப் பகுதி மக்களும் மிகுந்த சிரமத் துக்கு உள்ளாகுகின்றனர்.

இந்தப்பகுதி மக் களின் நலனைக் கவனத்தில் எடுத்து, ஒளிராத நிலையில் காணப்படும் இந்தத் தெருவிளக்குகளை ஒளிர வைக்க மின்சார சபையினர் நடவ டிக்கை எடுப்பார்களா?

திலிப், குருநகர்

### மாணவ சமூகம் கருத்தில் கொள்ளுமா?

பல்கலைக்கழகங்களுக்குப் புதிதாக அனுமதிபெற்றுச் செல்லும் மாணவர்கள், புதிய சூழலுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நன்நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டதே பகிடிவதைச் செயற்பாடு.

ஆனால் அது காலப்போக்கில் தவறான அர்த்தப்படுத்தல்களால் பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் உள, உடல் ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்படும் அளவுக்கு வன்முறைச் செயற்பாடுகளாக ஆகியுள்ளமை கவலைக்கு உரியதொன்றே.

அண்மையில் கூட பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான பீட மாணவர்களால் புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் பகிடிவதை என்ற பெயரில் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டமை குறித்த செய்திகள் வெளிவந்திருந்ன. அந்த வகையில் மாணவ சமுதாயம் இத்தகைய வன்முறைப் போக்கைத் தவிர்த்து புதிதாக அனுமதி பெற்று வரும் மாணவர்களுடன் சிநேகபூர்மான விதத்தில் நட்புப் பாராட்டிச் செயற்படுவதே எமது கலாசார விழுமியங்களுக்குப் பெருமைதரும்.

பகிடிவதை இலவசக்கல்வியின் ஒரு சாபக்கேடு என நாட்டின் அரச தலைவரே மனம் நொந்து கருத்து வெளியிட்டிருப்பதை மாணவ சமுதாயம் கருத்தில் எடுத்துச் செயற்படுமா?

த.பிரவிந்தன், கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்சுலின் ஊசி மருந்தை பாவிப்பது எப்படி?



1. கைகளைச் சுத்தமாகக் கழுவுதல் வேண்டும்.



2. இன்சுலினையும் ஊசி ஏற்றுவதற்கான சரி யான கருவியையும் தெரிவு செய்தல் (இன்சுலின் சிறிஞ் - 29G/100 Unit)



3. இன்சுலின் குப்பியில் ஒட்டப்பட்ட தாளை சரி பார்த்தல் வேண்டும் (இன்சுலின் வகை, காலாவதி திகதி, மருந்தின் அளவு)



4. உணவு தயாராக உள்ளது என்பதை உறுதி செய்தல். (ஊசி ஏற்றிய உடன் அல்லது ஊசி ஏற்றி அரை மணித்தியாலத்துக்குள் சாப்பிடல் வேண்டும்)



5. ஊசி ஏற்றுவதற்கான உடலின் பகுதியைத் தெரிவு செய்தலும் சுத்தப் படுத்தலும் (மேல் கை, முன்புற தொடை, பின்புறம்)



6. இன்சுலின் குப்பியின் மூடியை ஸ்பிறிட்டால் துடைத்தபின் சரியான அளவு மருந்தை சிறிஞ்சினுள் ஏற்றுதல் வேண்டும்.



7. ஊசியை ஏற்ற சரியான நுட்பத்தைக் கையாளுதல் (ஊசியை 450 இல் வைத்து மேற்தோலினூடாக ஏற்றுதல் வேண்டும்.



8. ஊசி போடும் பகுதியை ஒரு மாதத்துக்கு ஒரு முறை மாற்றுதல் வேண்டும். ஆனால் ஊசி போடும் புள்ளியை ஒவ்வொரு நாளும் மாற்றுதல் சிறந்தது.



9. சிறிஞ் இனுள் உள்ள மருந்து முழுவதையும் ஏற்றுதல் வேண்டும்.



10. ஊசி மருந்தை குளிரூட்டியின் நடுப்பகுதியில் (2.80C) வைத்து பேணல் வேண்டும். (மேல்பகுதியிலோ, கீழ்ப்பகுதியிலோ, கதவுப் பகுதியிலோ வைத்தல் கூடாது)



11. நேரடி சூரியஒளி படும் பகுதியில் ஊசி மருந்தை வைத்தல் கூடாது.



12. குளிரூட்டி இல்லாத சந்தர்ப்பத்தில் அரைவாசிக்கு நீர் நிரப்பப்பட்ட மண் பானையிலோ அல்லது பனிக் கட்டி இடப்பட்ட குடுவை ஒன்றிலோ வைத்துப் பாதுகாக்கலாம்.




### நீரிழிவு நோயாளிகளின் கவனத்துக்கு

# கண்ணும் நீரிழிவும்

மருத்துவர் எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார்

உடலின் தசையி சுரப்பியினால் (Pancreas B cell) சுரக்கப்படும் ஹோர்மோன் இன்சுலின் (Insulin) ஆகும். இது உடலின் உயிர்க் கலன்களுக்குத் தேவையான குருதியிலுள்ள குளுக்கோசை உயிர்க்கலத்தினுள் உற்செலுத்த உதவுகின்றது. இன்சுலின் தொழிற்பாடு குறைவதனாலோ(Insulin resistant) அல்லது தசையி சுரப்பியினால் குறைவாக சுரப்பதனாலோ அல்லது சுரக்கப்படும் இன்சுலின் தரம் குறைவதனாலோ இது போன்ற காரணங்களால் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு கூடி இறுதியில் சிறுநீருடன் வெளிச் செல்வதே நீரிழிவு ஆகும்.

இதனை (Diabetes Mellitus) என்று மருத்துவத்தில் அழைக்கப்படும். (Diabetes) என்றால் (Topass) அல்லது (Flow throught (Excessive urination)) அத்துடன்(Mellitus) என்றால் (Sweet) என்று பொருள்படும்.


இந்த நோயானது சகல வயதினருக்கும் சகல வகுப்பினருக்கும் கண், மூளை, இதயம் மற்றும் சிறுநீரகம் போன்ற சகல அங்கங்களையும் பாதிப்பதனாலும் இந்த நோய் வந்தால் மற்றைய சகல நோய்களும் (ரோகங்கள்) சேர்ந்து வருவதனால் இந்த நோயை சலரோகம் என்று சொல்வதிலும் பார்க்க சகலரோகம் என்று சொல்வது தான் மிகப் பொருத்தமாக இருக்கும்.

**கண்பார்வையைப் பாதிக்கும் நீரிழிவு**

01.நீரிழிவு நோய் கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகத்தைப் பாதிக்கும்.

02.இந்த நோய் உள்ளவர்களுக்கு மற்றவர்களை விட பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகம்.

03.கண்ணில் முக்கியமாக பின்புறமுள்ள விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.




04.விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களால் மட்டுமே பரிசோதித்துக் கண்டறிய முடியும். மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகங்களிலும்இதே மாறுதல்கள் ஏற்படுவதால், இந்த பரிசோதனைகளால் இவற்றின் தன்மைகளையும் அறிய முடியும்.

05.நீரிழிவு நோயால் ஏற்படும் விழித்திரையின் பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுள்ளார் என்பதைப் பொறுத்தது.

06.பல வருடங்கள் நோய் உள்ளவர்களின் 70 முதல் 80 சதவீதம் பேருக்கு விழித்திரைப்பாதிப்பு ஏற்படும்.

07.நீரிழிவு நோயாளிகளுக்கு பார்வை இழக்கும் வாய்ப்பு மற்றவர்களை விட 25 மடங்கு அதிகம் உள்ளது.

08.குறைந்த பார்வை அல்லது பார்வை இழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.

09. விழித்திரைப்பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து, லேசர் சிகிச்சையளித்தால் கணிசமான அலவில் பார்வை இழப்பைத் தடுக்கலாம்.

10.இலேசர் சிகிச்சையால் இருக்கும் பார்வையை பாதுகாக்க முடியுமே தவிர இழந்த பார்வையை திரும்பப் பெற முடியாது.

11. விழித்திரைப் பாதிப்பால் ஏற்படும் பார்வை இழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவரும் 12 மாதத்துக்கு ஒரு முறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வை முற்றிலும் இழக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

கண் மருத்துவ நிபுணர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

---

மருத்துவர் எம்.அரவிந்தன்

## கேள்வி பதில்

**கேள்வி** - எனது வயது 62 ஆகும். எனக்கு கடந்த 16 வருடங்களாக நீரிழிவு நோய் உள்ளது. எனது நீரிழிவு நோய்க்கு மெற்போமின், கிளிக்கிளசயிட் மற்றும் சிற்றகிளிப்ரின் ஆகிய மருந்துகளைப் பயன்படுத்தி வருகின்றேன்.

எனது குளுக்கோஸின் அளவு குருதியில் அதிகமாக இருப்பதாக குடும்ப வைத்தியர் கூறியிருந்தார். இதனைக் கட்டுப் படுத்துவதற்கு இன்சுலினை ஆரம்பிப்பதே சிறந்தது என்று அவர் கூறுகின்றார். இது பற்றி விளக்கிக் கூறவும்?

**பதில்** - நீரிழிவு (சலரோக) நோயைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கு சிறந்த உணவுக் கட்டுப்பாடும் மருந்துகளைக் கிரமமான முறையில் உள்ளெடுத்தலும் அவசியமாகும். உங்களைப் போன்ற நீண்டகாலமாக நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு காலப்போக்கில் குளிசை மருந்துகள் செயற்படாத நிலை (Oral hypoglycaemic drugs failure) ஏற்பட நேரிடுகின்றது. எனவே, அவ்வாறான சந்தர்ப்பத்தில் இன்சுலின் மருந்தையே பயன்படுத்த வேண்டியேற்படுகின்றது. எனவே உங்களின் குடும்ப வைத்தியரின் ஆலோசனைப்படி இன்சுலின் மருந்தை ஆரம்பிப்பதே சிறந்ததாகும். இவ்வாறு இன்சுலின் மருந்தை ஆரம்பிக்கும்போது நாளொன்றுக்கு ஒருமுறை அல்லது இருமுறை பயன்படுத்துகின்ற இன்சுலினை உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி பயன்படுத்த முடியும். இன்சுலின் மருந்தை பயன்படுத்துகின்ற முறை பற்றிய விளக்கங் களையும் இது தொடர்பான மேலதிக விளக்கங்களையும் அறிவுரைகளையும் உங்கள் வைத்தியரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதி,
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

---

## ஊசி மருந்தைப் பாவிக்கும்போது ஏற்படும் வலியைக் குறைக்கக்கூடிய வழிகள்



ஒரே ஊசியை நீண்ட நாள்களுக்கு தொடர்ந்து பாவித்தல் கூடாது (3 நாள்களுக்கு மேற்படல் கூடாது)



ஊசி மருந்து குளிரூட்டியில் வைக்கப்பட்டு இருந்தால் பாவிப்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன் அறை வெப்ப நிலையில் வைத்தல் வேண்டும். (குளிர் வலியை அதிகமாக்கும்)



மெல்லிய கூர் உடைய ஊசியைத் தெரிவு செய்தல் வேண்டும்.



உள்ளங்கைகளுக்கு இடையில் வைத்து ஊசி மருந்தை மெதுவாக உருட்டல் வேண்டும்.



ஊசி போடும் உடலின் பகுதியை குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை மாற்றுதல் வேண்டும்.



சவர்க்காரம், நீர் கொண்டு ஊசி போடும் இடத்தை கழுவுதல் வேண்டும் (ஸ்பிறிற் தோலை [illegible] கூடும்)



சிறிஞ்சினுள் வளிக்குமிழிகள் இல்லாதவாறு மருந்தை எடுத்தல் வேண்டும்



ஊசியை மென்மையாகவும் விரைவாகவும் ஏற்றுதல் வேண்டும்.

நீரிழிவு சிகிச்சை நிலையம் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 26.02.2017

தருமுதவக்குறுச்சி

*அம்மையாருக்கு அன்பான வணக்கம்...!*

உங்கட நாட்டை நீங்கள் ஆண்டதால, உங்கட பெயரையும் அந்த நாட்டு அரசியல் வரலாற்றில ஒருமாதிரிப் பதிவு செய்து போட்டியள். உங்க குவிஞ்சு கிடந்து, அந்தக் கதிரைக்கு அடிபடுகிறதுகளோட போட்டி போட்டு, அந்த இருக்கையைக் கைப்பற்றுறது ஒண்டும் இலேசான காரியமில்ல எண்டது எனக்குத் தெரியாமலில்லை.

அதுவும் நீங்கள் ஒரு பொம்பிளை...! ஆனாலும் அதுகளுக்கு எவ்விதத்திலும் நீங்கள் சளைத்தவளில்லை எண்டு உங்கட கதிரை பிடிப்பின் பிற்பாட்டிலிருந்து எனக்கு விளங்கிச்சுது.



# சும்மா புழுடா விடாதேங்கோ!

## சந்திரிகாவுக்கு ஒரு பகிரங்க மடல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனால அப்பாவும் அம்மாவும் பிள்ளையுமாய் இந்த இன ஒடுக்குமுறை ஆட்சியில பங்கெடுத்த பெருமையை முழுக்குடும்பத்துக்குமாக 1994இலை கதிரையைப் பிடிச்சு ஒருமாதிரித் தக்கவைச்சுக் கொண்டியள். அதுக்குப் பிறகு உங்கடை ஆட்சியின்ர தாற்பரியத்தைச் சொல்லவும் தேவையில்லை. உங்கடை இனசனத்தோட ஒப்பிடேக்க, எல்லாம் ஒரே குட்டையில் ஊறின மட்டையள்தான் எண்டதும் எனக்கு விளங்கிச்சுது.

1950களில உங்கட அப்பா, உங்க தலைமை அமைச்சராக இருக்கேக்க தமிழைப் புறக்கணிச்சுத் தனிச் சிங்களக் கோட்பாடுகளைக் கையாளத் தொடங்கினதும், 1970களில உங்கட அம்மா தலைமை அமைச்சராக இருக்கேக்க ஆரம்பிச்சு வைச்ச தமிழ்ப் புறக்க ணிப்புக்களும் அட்டூழியங்களும்தான் இப்ப தலை விரிச்சு ஆடுது எண்டும், அவைதான் பிற்பாடு நாட்டில இனப்பிரச்சினையைஅதிகரிக்கச்செய்தனஎண்டும்எனக்குத் தெரியாமலில்லை. சரி, அதுகள் கிடக்கட்டும்; ஆகப் பழசுகள். இப்ப உங்கட விசயத்துக்கு வருவம். 2005தோடை ஓய்ந்திருந்த உங்கடை குரல் இப்ப கொஞ்சம் கொஞ்சமாக வெளியில வாற மாதிரி எனக்கு ஒரு உணர்வு. அது சரி... உங்களை அரசியலில இருந்து விரட்டினவர் இப்ப 'பேமஸ்' ஆகியிருக்கிற மாதிரி, இப்ப அரசியலில மீண்டும் பேமஸ் ஆகுறதுக்கு உங்களுக்கும் பெரு விருப்பு இருக்குதெண்டு எனக்கு விளங்குது. ஆனால், இப்ப இருக்கிறவர் எப்பிடிக் கதிரையைப் பிடிச்சவர் எண்டும் கொஞ்சம் கவனிச்சு, கதைக்கிறதுகளை அந்தப் பக்கத்தையும் கையுக்க வைச்சுக் கொள்ளக்கூடியமாதிரிக் கதைக்கப் பழகினியளெண்டால் நீங்களும் கொஞ்சம் 'பேமஸ்' ஆகிவிடலாம். இந்த அரசியல் திருகுதாளங்கள் பற்றியெல்லாம் உங்களுக்கு நான் சொல்லித்தான் தெரியவும் வேணுமோ என்ன...? ஆனால் இதுவரைக்கும் கொஞ்சம் சீராகக்கதைச்சுக்கொண்டுவந்தஉங்கடநிலைப்பாடு, பேச்சுக்கள் எங்கையோ திசை மாறுகிற மாதிரிஎனக்குள்ஒருபிரமை. 'நல்லாட்சி' நடுக்கட்டத்தில நிக்கேக்க ஏன் அப்பிடி ஒரு தலைச்சுத்து உங்களுக்கு வந்திருக்கு எண்டதும் எனக்குக் கொஞ்சம் குழப்பமாய்த்தான் கிடக்குது...!

2005க்குப் பிறகு உங்களைப் பற்றிய கதை, பேச்சு பெரிய அளவுக்கு அடிபட இல்லை. அதுக்குப் பிறகு வந்தவர், தன்னுடைய ஆட்சி முடிய முன்னுக்கே இடையில கதிரையப் பறிகொடுத்தாலும், இப்ப வரைக்கும் அவற்ற கதை கொஞ்சம் காரசாரமாய்த் தான் போய்க்கொண்டிருக்குது. அவரைப்போல'பேமஸ்' ஆகவேண்டிநீங்களும் 'நல்லாட்சிக்காரரோட' இணைஞ்சு உங்களுக்கும் ஒரு மவுசை உருவாக்கச் சில கதையள அவிழ்த்து விடுகிறீர்கள் எண்டு பார்த்தால், சம்பந்தமில்லாத ரெண்டு விசயங்களைத் தொட்டுப் பேசி சின்னதாய் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறியள் எண்டு அண்மையில எனக்கு அறியக் கிடைச்சுது. அதுதான் உங்களுக்கு நான் இந்த மடல் எழுதுறதுக்கும் முக்கிய காரணம்.

தீர்க்க தரிசனவாதியின் 'ஸ்ரைலில்' நீங்கள் வெளிப்படுத்தின அந்தக் கருத்துக்களில இருந்து உங்களுக்கு 'அறளை' பேர்ந்திருக்குது என்று புரிந்து கொண்டன். இதை மறுப்பீரானால் அல்லது இது உண்மையில்லை என்றால் ஏதோ ஒரு அரசியல் உள்நோக்கத்துக்கு அடித்தளம் போடுகிறியள் என்றும் நினைக்க வேண்டியுள்ளது. ஏனென்றால், உள்ளே ஏதோ ஒன்று இல்லாமல், வாய் சும்மா திறவாது எண்டும் எனக்கொரு சந்தேகம் உண்டு. ஆனால் நீங்கள் இப்ப கையாலாகாத பிள்ளையாகி விட்ட பிறகு இப்பிடிப் 'புசத்தி'த்தான் என்ன பயன்?

நீங்களுட்பட இதுவரை கதிரையிலிருந்தவர்கள் அனைவருமே இழுத்தடித்துக் கொண்டு வரும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான புதிய அரசமைப்பு உருவாக்கமும், தனது ஆட்சிக்காலத்தில் மக்களைக் கொன்று குவித்த மகிந்த அரசு இழைத்த போர்க் குற்றங்களுக்கான தண்டனையும் ஒன்றின் மீது ஒன்று தங்கியுள்ளதாகத் தாங்கள் காட்ட முற்பட்டிருந்த 'குறளிவித்தை' என்பது, கொஞ்சம் 'மப்பில்' இருப்பவர்களுக்குக் கூடத் தெட்டத் தெளிவாகப் புரிந்து விடும். இப்போது மறுபடியும் எனக்கொரு சந்தேகம்...! மப்பு என்று சொன்னவுடன் தான் அதுவும் ஞாபகத்துக்கு வருகுது; கதிரையில இருந்த காலத்தில எந்தநேரமும் கையில் குவளையுடன் இருந்த நீங்கள், அப்பிடியே தான் இப்பவும் சுத்துகிறீர் போல கிடக்குது. அந்த அசுமாத்தத்தில தான் வாய் புசத்தி இப்பிடி உளறித் தள்ளினீர்களோ தெரியேல்ல. 'அந்த' விசயத்தில கொஞ்சம் கட்டுப்பாடு வைச்சுக் கொள்ளும். அதுதான் கடைசிக் காலத்தில உங்கட உடம்புக்கும் நல்லது.

உங்கட இந்தச் 'சித்து விளையாட்டு'க்களை ஆயிரமாயிரமாய்க் கண்டு களிச்சுப் பழக்கப்பட்ட சனம் எண்டதால இப்பிடி நீங்கள் சொன்னது கண்டும் காணாமலும்போச்சுது. ஆனால்எந்தவொருஆதாயமும் இல்லாமல் நீங்கள் இப்படிக் கூறியிருக்க முடியாது எண்டு சிலர் புலனாய்வு செய்யவும் தவறவில்லை. ஒண்டுக்கொண்டு சம்பந்தமில்லாமல் உளறிக் கொட்டும் உங்கடை இந்த மாதிரியான திருக்கூத்துக்களை எல்லாம் அந்தக் காலத்திலை' இருந்தே பார்த்துப் பழக்கப்பட்ட பழசு எண்டதால, நல்ல காலம் எனக்கு எந்த ஒரு சந்தேகமும் வரயில்லை. அந்தக்காலத்தில அன்ரன்பாலசிங்கத்துக்குக்கிட்னிமாத்திறதுக்கு கடும் எதிரியாயிருந்த நீங்கள் நோர்வே அரசைப் பணித்ததாக எந்தவொரு சம்பந்தமுமில்லாம பேப்பர் ஒண்டுக்கு எடுத்துவிட்ட இதே மாதிரியான கதை ஒண்டுதான் இப்ப எனக்கு ஞாபகத்துக்கு வருகுது. முன்னுக்குப் பின்னுக்குச் சம்பந்த, சம்பந்தமில்லாமல் இதைப்போல நிறையவே நீங்கள் எடுத்து விட்டிருக்கிறீங்கள்.

கடைசிக் காலத்திலயாவது நீங்கள் செய்த அநியாயங்களுக்குக் கொஞ்சம் பரிகாரம் தேடிக் கொள்ளுங்கோ. நீங்கள் பதவியில இருந்தாலும் பரவாயில்லை ஏதோ பணம் சம்பாதிக்க இரட்டை வேடம் போடுறீங்கள் எண்டு நினைக்கலாம்... ஆனால், அதுவும் இல்லை. திரும்பவும் கதிரை உங்களுக்குக் கிடைக்கப் போவதுமில்லை. 'முன்னாள் தலைவர்' என்றிருக்கும் மரியாதை மாண்பையாவது தக்க வைத்துக் கொள்ளும் வகையில் உங்களது நடத்தைகளை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும்என்பதேஎன்னால் உங்களுக்குக் கூற முடிந்த அறிவுரை. முடிக்குக் கொள்கின்றேன்.

நன்றி.

உங்கட இந்தச் சித்து விளையாட்டுக்களை ஆயிரமாயிரமாய்க் கண்டு களிச்சுப் பழக்கப்பட்ட சனம் எண்டதால இப்பிடி நீங்கள் சொன்னது கண்டும் காணமல் போச்சுது. ஆனால் எந்தவொரு ஆதாயமும் இல்லாமல் நீங்கள் இப்படிக் கூறியிருக்க முடியாது எண்டு சிலர் புலனாய்வு செய்யவும் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம் சில புரிதல்கள்



பெண்ணியம் என்பது, பால்நிலைச் சமத்துவம் கோரி நிற்பது. உரிமைகள் மறுக்கப்பட்ட பெண்களுக்கான சகல உரிமைகளையும் பெறுவதற்குக் குரல் கொடுப்பது. அதற்காகப் போராடுவது-உழைப்பது. இந்தச் சொல்லின் அர்த்தத்தைச் சிலவற்றுள் அடக்கிவிடமுடியாது.

பெண்ணியக் கோட்பாட்டின் ஆணிவேராக அமைந்திருப்பவை பல ஆழமான சமூக, பொருளாதார, வரலாற்றுக் காரணிகள். அவற்றை ஆழமாக ஆராய்ந்து, விவாதித்து, சிந்தனைப்பொறிகளைச் சமூகத்தில் பரவச்செய்யும் வேலையை பெண்ணியம் செய்கிறது. பெண்ணாக இருப்பதனாலே உணரும் மனத்தடைகள், இறுக்கங்கள், மரபுவழிக் கடமைகள், அவளைத் தளைப்படுத்தும் சமூகக் கட்டுக்கள் என்பவற்றையெல்லாம் பொறுப்புணர்வோடு சிந்தித்துப் பெண்ணின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதே பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படை நோக்கமாகும்.

இன்று தமிழ்ப் பெண்கள் மட்டுமன்றி உலக நாட்டுப் பெண்கள் கூட ஏதோ ஒருவகையில் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு அவர்களைக் கட்டிப்போட்டுள்ளது ஆணாதிக்கச் சிந்தனை. இது குறித்த விழிப்புணர்வைப் பெண்களுக்கு மாத்திரம் அல்லாது, ஆண்களுக்கும் ஏற்படுத்தும் கைங்கரியத்தைச் செய்கிறது பெண்ணியம். ஏனென்றால், பெண் விடுதலைக்கு ஆண்களின் துணையும் அவசியம்.



## விதியை மாற்றி எழுதிடு பெண்ணே!

சிந்திக்கும் திறனிலும் செயல் வேகத்திலும் ஆணை விட, ஒருபடி விஞ்சி நிற்கிறாள் பெண். இதனை ஆய்வுகளும் நிரூபித்துள்ளன. ஆனால், தாம் வெறும் உற்பத்திக் கருவி என்றே இன்னமும் பல பெண்கள் நம்பிக்கொண்டிருக்கின்றனர். தம்முள் குடிகொண்டிருக்கும் வலிமையை உணராது வாழ்கின்றனர்.

இயற்கையின் கொடையால் அளப்பரிய ஆற்றலையும் அறிவையும் பெற்றுள்ள பெண், சில சமயங்களில் செய்யும் செயல்கள் தோல்வியில் முடியும்போது மனதளவில் சோர்வடைகின்றாள். அந்தநேரம், “பெட்டைக் கோழி கூவிப் பொழுது விடியுமா?” என்று ஏளனம் செய்து அவளை இன்னும் சோர்வடையச் செய்கிறது சமூகம்.

இச்சமயத்தில், “ஏன் தோற்றேன்? எப்படித் தோற்றேன்? எதற்காகத் தோற்றேன்? எதனால் அல்லது யாரால் தோற்றேன்? என்ற வினாக்களைத் தொடுத்து, தோல்விக்கான விடைகளைத் தேட வேண்டும். காரணங்களைக் கண்டறிய வேண்டும்.

கண்டறிந்ததும், நேர்மறை எண்ணங்களை மனதில் நிறைத்து, ‘என்னால் முடியும்’ என்ற மந்திரத்தை நினைத்து, கடுமையாக உழைக்க வேண்டும். அப்போதுதான் உன்னைத் தூற்றிய சமூகத்தின் முன்னே தலை நிமிர்ந்துநிற்கமுடியும்.

வாழ்க்கையில், ஆணை விட வலிகளை அதிகம் சுமப்பவள் பெண். ஒரு பிள்ளையைப் பெற்றெடுப்பதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அந்தப் பிள்ளையை வளர்த்தெடுப்பதும் பெரும் பணிதான்-சுமைதான். இதன் மூலம் இயற்கையின் இடையறா இயக்கத்தைக் காக்கிறாள் பெண். அப்படிப்பட்ட பெண் தன் ஆற்றலை உணராமல் இருப்பது கவலையளிக்கிறது.

பெண்ணே! எந்த வேலையாக இருந்தாலும் எந்தக் காரியமாக இருந்தாலும் உன்னால் செய்ய முடியும்.

## தோல்வியின் விடை தேடு வெற்றிபெற நடைபோடு




தனித்து பிரயாணிகள் அற்று மறைக்கப்பட்ட
ஒரு சிறிய ரயில் நிலையம் போல
ஒவ்வொருவருக்கிடையிலும்
சிரிப்புடன் கூடவே எழும்
மதிற் சுவர்களிடையே ஒரு மாலை...
என்னுடைய நண்பர்களுடன் நான்
கதைத்துக் கொண்டிருக்கிறேன்
எந்த விசேசமுமற்ற
ஏராளமான காயங்களுக்கிடையில்
மகிழ்ச்சியாயிருக்க விரும்பும்
பொழுதுகள் பேசுவதற்கு சொற்களற்று
மறக்கப்பட்ட பாடலுக்கு
தாளந்தட்டிய நண்பனும், விரல்களும்
நடுமேசையில் சிதறிக்கிடந்த
தேநீர்த் துளிகள்...
அவற்றைக் குடித்து அப்புறமாய்
மேலே கிடந்த ஒட்டறைகளில்
அகப்பட்டுக் கொண்ட இலையான்கள்...
தோள்கள் சிவக்க எனது நண்பி
தனக்குள் சிரித்தாள்
பகிடி விட்டது யார்?
எனக்குத் தெரியாது
கண்ணாடி ஓடுகளுக்கு மேலாய்
நகர்ந்த மேகங்கள்
அதனுடன் கூடவே நேரமும், நிமிடமும்
முகரக் கூட சுவடுகளற்று எஞ்சிநின்ற
மேசையும் கதிரையும்
வெற்றுக் கோப்பைகளையும் விட்டு...
கதவின் வழியாய் புகுந்த
மேற்கின் சூரியக் கதிர்கள் விரட்ட
நாங்கள் எழுந்தோம்
உலகை மாற்ற அல்ல,
மீண்டுமொரு இரவை நோக்கி...

– நிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வேண்டாமே மன(ண)முறிவு

எஸ்.மல்லிகா

**இளவயதுக் காதல்**

வாழ்க்கை முழுதும் வசந்தம் வீசவேண்டும் என்று நினைக்காத மனிதர்களே இல்லை. இதிலும் ஒருபடி அதிகமாகச் சிந்திப்பவர்களாக உள்ளனர் புதிதாக மணமுடிக்கும் தம்பதியர். ஆனால், சிற்சில காரணங்களால் பெரும்பாலானவர்களுடைய வாழ்க்கையில் வெறுப்புச் சூறாவளி வீசி அவர்களைச் சின்னாபின்னமாக்கி விடுகின்றது. இதற்கு அவர்களுக்குள் முகிழ்க்கும் இளவயதுக் காதலும் ஒரு காரணம்.

ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி தனது துணை இன்னொருவருக்குச் சொந்தமாக இருந்தமையை அல்லது இன்னொருவரின் காதல் நினைவைச் சுமப்பதை விரும்பமாட்டார்கள். முற்று முழுதும் அவர்கள் தமக்கே ஆட்பட்டு இருக்கவேண்டும் என்ற நப்பாசையுடன் இருப்பர். தவறான எண்ணங்களை அடுக்கடுக்காய்ச் உருவாக்குவர். தொட்டதுக்கெல்லாம் அதையே காரணம் காட்டிச் சண்டையும் பிடிப்பர். இவை யாவும் சேர்ந்து அவர்களுக்குள் மனமுறிவை ஏற்படுத்தும். மனம் பிளவடையும் உச்சத்தில் மணமுறிவைக் கேட்பர்.

காதல் என்பது உணர்வு சார்ந்தது. ஒருவரைப் பார்த்தவுடன் பிடித்துப்போகச்செய்வதல்ல.


ஆண் பெண் உடலில் சுரக்கும் ஓமோன்தான் இதற்குக் காரணம். சிலரைச் சில காரணங்களால் பிடிக்கும், பலரைப் பல காரணங்களால் பிடிக்காமலும் இருக்கும். ஆனால், எந்தவிதக் காரணமும் இன்றி இந்தக் காதல் ஆண் பெண் மனங்களைப் பீடிக்கும். சிலரில் தொற்றும் இந்தக் காதல், மரணம் வரை நீடிக்கும். நினைவலைகளை ஆர்ப்பரிக்கும். உணர்வு சார்ந்த இந்த விடயத்தை அறிவு சார்ந்து சிந்தித்தால், அங்கே எதுவும் இல்லை.

இன்னும் சிலரிடம், கண்டதும் காதல் மலரும். இளவயதில் அது இன்னும் அதிகமாக மலரும். எண்ணங்கள் மனதுக்குள் பூப்பூக்கும் பருவம் அல்லவா அது! தெளிவான முடிவும், சிந்திக்கும் திறனும் அற்றிருக்கும் அந்தக் காலத்தில் தலைநீட்டிப் பார்க்கும் இந்தக் காதல், கல்யாணம் வரை வருவதும் அப்படி வந்தாலும் சாவு வரைத் தொடர்வதும் குறைவு.

இவ்வாறு ஒன்றிணையாத் தண்டவாளங்கள் போன்றிருக்கும் இந்த இளவயதுக் காதலர்கள் வேறு ஒருவருக்கு வாழ்க்கைப்படும் போது, அவர்களது முன்னைய காதல் குடும்பத்தில் வெளிப்பட்டால் வெடிக்கும் ஆத்திரப் பூகம்பம். அடிக்கும் வெறுப்புச் சூறாவளி.

தேவைக்கு ஒருத்தன் தாலிக்கு இன்னொருத்தன் என வாழும் பெண்களும், மனதினில் ஒருத்தி மனையினில் இன்னொருத்தி என வாழும் ஆண்களும் குடும்பத்தில் எதிரெதிர்த் துருவங்களாகவே மனதளவில் இருக்கின்றனர். இவர்கள், நிகழ்காலத்தில் இருந்தாலும் இறந்த காலத்தில் வாழ்பவர்கள். நடைமுறை வாழ்க்கையை அதிகம் விளங்கிக்கொள்ளாதவர்கள். இந்த இரட்டுரு நிலையால் இவர்கள் வாழ்க்கையைத் தொலைத்துவிடுகின்றனர். அது கைவிட்டுப் போனபின்தான் இன்னும் வாழவே இல்லை ஆனால் வாழ்வைத் தொலைத்துவிட்டோமே என்று சலிப்படைகின்றனர். பிடிவாதமாய்க் கணவனிடமிருந்து மணமுறிவுபெற்றமாதவியும்இதேநிலையில்தான் இருக்கிறாள்...






## வேற்றுலக மனிதர்கள்...

இப்போதெல்லாம்
என் மனதில்
அடிக்கடி ஒரு சலனம்
அதிர்ச்சியுடன் முகிழ்கின்றது.
வேற்று உலகத்தார்
உண்மையா...?

வேற்றுலக மனிதர்கள்
இருப்பது உண்மையா?
பறக்கும் தட்டுக்களில்
வருவதும் உண்மையா?
அது பூமியைக் கைப்பற்றி
போர் செய்யும் உத்தியா?

அவர்கள்
சுவாசிப்பது எதனை?
உண்பதும் தான் எதனை?
எம்மைப்போல் அவர்களும்
உணவுண்ணிகள் தானா?
அல்லது மனிதர்களைப்
பிடித்துண்ணும்
மாமிச உண்ணிகளா?

இலக்கியங்களை
அவர்களும்
இரசிப்பவர்கள் தானா?
இல்லை இலக்கணம் வகுக்க
முடியா இரசனை
அற்றவர்களா?
எங்களைக் கண்டால்
ஏளனம் கொள்வார்களா
இல்லை நட்பெனும் பெயரில்
நல்லுறவு கொள்வார்களா?

அன்பு, பாசம் அவர்களுக்கு
அறிமுகம் ஆனதா இல்லை
இயந்திர நாளங்களுகக்குள்
இயைபாக்கம்
கண்டவர்களா?
தொழில் நுட்ப உலகில்
தொலைதூரம்
சென்றவர்களா?

என்னதான் இருந்தாலும்
சிந்திக்க வேண்டி இருக்கிறது
பூமிக்கு வருகை தரும்
புது உலக மனிதர் பற்றி

பா.பாலாஜினி
பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் பெண்ணியக் கவிதைகள்

04



அனார்

இன, மத பேதமற்று போர், மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சிதைத்தது. மனித அவலங்களைத் தனித்துப் பேசிய போர்க்கால பெண் கவிதைகள் விரிவாகவும் வேறுபடுத்தியும் பார்க்கப்பட வேண்டியவை. இவற்றில் போராளிப் பெண்கள் தாங்கள் போராளிகளாகவும் கவிதை எழுதுபவர்களாகவும் இருந்து பதிவுசெய்த பல கவிதைகளையும் இணைக்க வேண்டும். சில பெண் கவிஞர்களது கவிதைகளைக் காலத்திற்குக் காலம் சக பெண்ணியலாளர்கள் தொகுத்து வந்திருக்கின்றனர்.

2000ஆம் ஆண்டிற்குப் பின்னரும் சமகாலத்திலும் நம்பிக்கை தரும் கவிதைகளை எழுதுகின்ற பெண்கள் பலர் இருக்கின்றனர். அந்தவகையில் பிரதீபா, தான்யா, கற்பகம் யசோதரா, சலனி, ஸர்மிளா ஸெய்யத், பாயிஸா அலி, லறீனாஹக், சமீலா யூசுப் அலி, விஜயலட்சுமி என இன்னும் பலரைக் குறிப்பிட முடியும். இவர்களோடு 80, 90களில் எழுதத் தொடங்கிய குறிப்பிடத்தக்க பெண்கள் சிலரும் கவிதைகளை எழுதி வருகின்றனர்.

கவிதை எழுதும் சுயமும் அந்தச் சுயத்தினூடாகக் கண்டெடுக்க விழையும் 'பெண்'எனும் ஆளுமையை வளர்த்தெடுக்கவும் இன்றைய நவீன பெண் கவிதைகள் புதிய வடிவமெடுக்கின்றன. காதல், காமம், ஆண் பெண் உறவு, உடல், அரசியல் எனப் பிரத்தியேகமான பெண்மொழியை, சுயாதீனமும் விடுதலையும் கோரும் கவிதைகளாகவும் கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரம் பெறுதல், தெரிவுகளுக்கான சுதந்திரத்தை அடையும் நோக்கம், பாலியல்சமத்துவம், தனித்துவம், எதிர்ப்பு அரசியல் ஆகிய பெண்ணியத்தின் கூர்மையான பார்வைகளைத் தம்முடைய சமகாலக் கவிதைகளிலும் எழுதி வருகின்றனர். அவரவருக்கான அடையாளம், வித்தியாசமான கோட்பாட்டுரீதியான அணுகுமுறை என்பனவும் இன்றைய கவிதையின் பொருள்கள் சார்ந்து காண முடிகின்றது. ஆதிக்கக் குரல்களை எதிர்த்தபடியும் பெண் விடுதலைக்கான கலகக் குரலில் முழங்கியவாறு பெண் எனும் கர்வமும் கம்பீரமும் கொண்டவர்களாகக்கூட சில பெண் கவிஞர்கள் எழுதி வருகின்றனர்.

பொதுவாகவே பெண்கள் ஒரே விடயத்திற்காகவே கண்ணீர் சிந்துகிறார்கள், போராடுகிறார்கள், கனவு காண்கிறார்கள், கவிதை எழுதுகிறார்கள், அது அவர்களுடைய விடுதலையை முன்னிட்டேயாகும். நம்பிக்கையை, தன்னுடைய மன உறுதியை, சுயத்தை வலிமையாகப் பதிவுசெய்யும் பெண்ணியாவின் கவிதை இது.

*இறுகிய பாறைகளினூடிருந்து*
*வீறு கொண்டதொரு புல்லாய் நிமிர்வேன்*
*கூவத்தான் முடியாதாயினும்*
*ஈனஸ்வரத்திலேனும்*
*என் பாடல்களை முனகியபடி*
*யார் முன்னும் பணிதலன்றி*
*எனது உணர்வுகளோடும் அவாக்களோடும்*
*எவ்வகை வாழவெனப் புரியாத இது*
*குழப்பமிகு வாழ்வேதானாயினும்*
*வாழ்வேன்*
*வாழ்வேன்*
*வாழ்வேன் நான்*
*(புத்துயிர்த்தல் பெண்ணியா)*



எழுத்தாளரும் பெண்ணியச் செயற்பாட்டாளருமான வ. கீதா, என்னுடைய, 'மேலும் சில குருதிக் குறிப்புகள்' கவிதை பற்றிக் கூறும்போது, 'பெண்மைக்கேயுரிய மாதாந்தக் குருதிப்போக்கு வாடையையும் வரலாற்றின் மீது படிந்துள்ள குருதிக்கறையையும் நினைவூட்டும் விபரீதத்தைக் கவிதையாக்கி, அகமும் புறமும் ஒன்றை மற்றொன்று ஊடுருவியுள்ள நிலையை, அரசியலுக்கு நூதனப்பொருள் வழங்கிப் பதிவு செய்கின்றது அனாரின் கவிதை என்கிறார்.

'மாதம் தவறாமல்
குருதியைப் பார்த்துப்
பழக்கப்பட்டிருந்தும்
குழந்தை விரலை அறுத்துக்
கொண்டு அலறி வருகையில்
நான் இன்னும் அதிர்ச்சியுற்றுப்
பதறுகின்றேன்
இப்போதுதான் முதல் தடவை
யாகக் காண்பதுபோன்று....'

(மேலும் சில இரத்தக்
குறிப்புகள் – அனார்)

(தொடரும்)

காதல், காமம், ஆண் - பெண் உறவு, உடல், அரசியல் எனப் பிரத்தியேகமான பெண்மொழியை, சுயாதீனமும் விடுதலையும் கோரும் கவிதைகளாகவும் கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரம் பெறுதல், தெரிவுகளுக்கான சுதந்திரத்தை அடையும் நோக்கம், பாலியல் சமத்துவம், தனித்துவம், எதிர்ப்பு அரசியல் ஆகிய பெண்ணியத்தின் கூர்மையான பார்வைகளைத் தம்முடைய சமகாலக் கவிதைகளிலும் எழுதி வருகின்றனர்.



சிரிப்பு

டாக்டர்:
"சார், என்னைத் தெரியுதா? நான் உங்க முன்னாள் மாணவன்."
நோயாளி:
"ஐயையோ... பழைய பகையை ஆபரேஷன்ல காட்டிடாதப்பா!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவுகளின் சமாதி...

மல்லாவிக் கஜன்

மழை ஓய்ந்து நீண்ட நேரமாகி விட்டது. ஆனாலும் முற்றத்திலிருந்து முழுமையாக நீர் வடிந்திருக்கவில்லை. வடிந்த பகுதிகளும் சேறும் சகதியுமாய் கால்வைக்கும் போதெல்லாம் 'சதக்புதக்'என்று புதைந்து கொண்டிருந்தன.

இரவு பெய்த மழை ஒழுக்குக்கு வைக்கப்பட்ட பாத்திரங்கள் மனநிறைவுடனிருந்தன. அவை ஒவ்வொன்றையும் எடுத்து எடுத்து முற்றத்தில் ஊற்றிக் கொண்டிருந்தாள் ரேகா.

சாணகம் இட்டு மெழுகியிருந்த அந்தக் குடிசையில் மழைச் சன்னங்களின் ஊடுருவல்கள்.

சின்னச் சின்ன அந்தக் குழிகளை மெல்லக் குடைந்து அதனுள் நீர் நிரப்பி விளையாடிக் கொண்டிருந்தாள் சர்மி.

"இப்ப ஒராள் என்னட்ட அடிவாங்கப் போறா. கையைக் கழுவிப்போட்டு அங்கால போங்க சர்மி"

கண்டிப்பும் பரிவும் கலந்த தாயின் குரல் சர்மியின் காதுகளில் எதிரொலித்தது.

"சரியம்மா..."

கைகளைப் பாத்திரத்திலிருந்த நீரில் அலசிவிட்டு அறைக்குள் நுழைவற்கு சர்மி, அறைவாசலில் நின்று கொண்டிருந்தாள். அவளது பார்வை தான் விளையாடிய விளை யாட்டையே நோக்கி நின்றாலும் அவள் மனதை ஏதோவொரு துன்பம் வாட்டிக்கொண்டிருந்தது.

கொடியில் கிடந்த பாட்டியின் பழைய சேலையை எடுத்துத் தரையில் விரித்து விட்டு சுருண்டு படுத்துவிட்டாள் சர்மி.

கறுத்த கனத்த மேகக்கூட்டங்கள் வானத்தை விட்டு இன்னும் முற்றாக நீங்கிவிடவில்லை. சூரியன் எங்கோ தொலைந்து போயிருந்தான்.

உடனடியாக மழை வரக்கூடிய அறிகுறிகள் இல்லை. துவைக்க வேண்டிய சர்மியின் உடைகளையும், தனது உடைகளையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு விரைந்தாள் ரேகா.

ரேகாவுக்கு இப்போதுதான் வயது இருபத்து மூன்று. அது விதியோ சதியோ தெரியவில்லை. ஒருவருடம்தான் அவளது இல்லறம் நல்லறமாய் இருந்தது. க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிந்து ஓரிரு வாரங்கள் உருண்டோடியிருந்த நிலையில் கேசவனோடுவந்துவிட்டாள்ரேகா. போரிலே இரண்டு பிள்ளைகளை இழந்த ரேகாவின் பெற்றோர் மீதியுள்ள ரேகாவையாவது நல்ல நிலைக்கு ஏற்றிவிட வேண்டுமெனக் கற்பனைகளில் மிதந்திருந்த தருணத்தில் அவை யாவும் சில்லறைகளாய் சிதறிக்கப்பட்டன.

ரேகாவின் முடிவு உறுதியானது. இரண்டு வருடங்களாக ஒரே வகுப்பில் ஒன்றாய்ப் படித்த கேசவன் மீதான காதல் இருவரது வீட்டுக்கும் ஒவ்வாக்கரையாய்ப் போனது. "பிள்ளை, அவன் கேசவன் சாதி குறைஞ்ச பொடியன். போயும் போயும் அவனைப் பார்த்தியே.... எங்கட குலம், பெருமைஉனக்குதெரியும்தானே...அதோடஅப்பாட குணமும் உனக்குத் தெரியாமலில்லை......"

அன்பாகவும், ஆதரவாகவும் அறிவுரைகள் புகட்டிய தாயின் பேச்சுக்கள் யாவும் செல்லாக்காசாய்.....

தினமும் யாதுமொரு பிரச்சினை தலைதூக்கிக் கொள்ளும். ஆனாலும் தான் கொண்ட முடிவில் ரேகா உறுதியாக இருந்தாள். வீட்டாரின் பேச்சுக்களுக்கு மௌனத்தை மட்டும் பகர்ந்து விட்டு அகன்றுவிடும் மனப்பான்மை அவளிடம் நிறைந்திருந்தது.

'இஞ்ச ரேகா, சோதினைக்கு இன்னும் இரண்டு கிழமைதான் கிடக்கு, காதல் கத்தரிக்காய் எண்டு அலையாமல் படிக்கிற அலுவலப் பார்.. அதைப் பிறகு பார்ப்பம்..." தந்தை தறுமுவின் வார்த்தைகளை ரேகா கரிசனைகொள்ளவில்லை. ''என்ன படிச்சாலும் பிறகு யாரையாவது கட்டித்தானே விடப்போயினம். அவையும் அவையிட கதையும்..."

மனதுக்குள் கறுவிக் கொண்டாள் ரேகா. பரீட்சைகள் நிறைவு பெற்றன. ஒன்றிரண்டு வாரத்திலயே பெற்றோருக்குக் கடிதம் எழுதிவைத்திட்டு கேசவனுடன் சென்றுவிட்டாள் ரேகா.

"இஞ்ச பாக்கியம், அந்தச் சனியன் துலைஞ்சு போனது துலைஞ்சு போகட்டும். இனி அதின்ர கதை இந்த வீட்டில இருக்கக் கூடாது. செத்தவீட்டுக்குக் கூட அந்தச் சனியன் இந்த வீட்டு முத்தம் மிதிக்கப்படாது.."

என்று தனது மனக்குமுறலை தீக்கனலாய் அள்ளிக் கொட்டிய தறுமு, சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ரேகாவின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு எடுத்த புகைப்படத்தை தரையில் உடைத்தெறிந்த அந்தக் கணம், பாக்கியத்தின் கண்கள் கூட நீர்நிறை அகழியாகி விட்டது.

பந்த பாசங்களைப் பிரிந்து, பெற்றவர்களை மறந்து சாதி குறைந்த ஒருவனோடு மகள் சென்றதனால் தனக்கும், தனது குடும்பத்துக்கும் ஏற்பட்ட, ஏற்படவல்ல அவமானங்களைத் தாங்கிக்கொள்ள இயலாதவராய் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தார் தறுமு.

கேசவனைக் கரம் பிடித்த ரேகாவின் வாழ்க்கை தொடக்கத்திலிருந்தே தடுக்கியெழும் குழந்தையாகவே நகர்ந்து கொண்டிருந்தது. திருமணம், குடும்பம் வாழ்க்கை என்றால் என்னவென அறியாத வயதில் வாழ்க்கைப்பட்ட இருவரும் தனித்துவிட்ட தனிமரமாய் நின்றனர்.

➡ 43

ரேகாவின் முடிவு உறுதியானது. இரண்டு வருடங்களாக ஒரே வகுப்பில் ஒன்றாய்ப் படித்த கேசவன் மீதான காதல் இருவரது வீட்டுக்கும் ஒவ்வாக்கரையாய்ப் போனது. ''பிள்ளை, அவன் கேசவன் சாதி குறைஞ்ச பொடியன். போயும் போயும் அவனைப் பார்த்தியே.... எங்கட குலம், பெருமை உனக்கு தெரியும் தானே... அதோட அப்பாட குணமும் உனக்கு தெரியாமவில்லை....."

பந்த பாசங்களைப் பிரிந்து, பெற்றவர்களை மறந்து சாதி குறைந்த ஒருவனோடு மகள் சென்றதனால் தனக்கும், தனது குடும்பத்துக்கும் ஏற்பட்ட, ஏற்படவல்ல அவமானங்களைத் தாங்கிக்கொள்ள இயலாதவராய் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தார் தறுமு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எட்டாதிருக்கும் எட்டாவது கண்டம்

ந. ஜெயதாஸ்

பூமியிலுள்ளநிலப்பரப்புக்களைக்கண்டங்கள் என்றும்– நீர்ப்பரப்புக்களைச் சமுத்திரங்கள் என்றும் வரையறுத்துள்ளோம். கண்டங்கள் 07 என்றும் சமுத்திரங்கள் 05 எனவும் அவற்றுக்கு எல்லையும் இட்டுள்ளோம். 5என இங்கு நாம்எல்லைப்படுத்திப்பெயர்குறித்துள்ளகண்டங்கள் நம்மால்07ஆகப்பிரிக்கப்பட்டுள்ளநிலப்பரப்புக்களை விடவும்அதிகூடியபரப்பளவிலேபூமியில்பரந்துள்ளவை. அதாவது பூமியின் நிலக்கோளம்(தரைப்பரப்பு) என்பது இங்குள்ள நீர்க்கோளத்தின்(சமுத்திரங்கள்) மூன்றில் ஒரு பகுதியளவு மட்டுமே.

## நீரும் நிலமும்...

பூமியில் 29.1சதவீதம்(148,647,000 ச.கி.மீற்றர்கள்) மாத்திரமே நிலமாகவும் மிகுதி 70 சதவீதப் பகுதிகள்(361 மில்லியன்கள் ச.கி.மீற்றர்கள்) சமுத்திரங்களாகவும் காணப்படுகின்றன. இதிலும் நீர்ப் பகுதிகள் என்ற வரையறைக்குள் உள்நாட்டு நீர் நிலைகளும் (நதிகள், குளங்கள், தரைக்கீழ் நீர் நிலைகள்) சமுத்திரங்களுடன் இணைந்தால், பூமியில் நிலப்பரப்பை விடவும் நீர்ப்பரப்பு அதிகம் என்பது எமக்கு இலகுவாகப் புலப்படும்.

ஆசியாக் கண்டம், ஆபிரிக்காக் கண்டம், வட அமெரிக்காக் கண்டம், தென் அமெரிக்காக் கண்டம், அந்தாட்டிக்காக் கண்டம், ஐரோப்பாக் கண்டம், ஆஸ்திரேலியாக் கண்டம் என நிலப்பரப்பை 07 கண்டங்களாகப் பரப்பளவில் கூடியவையிலிருந்து குறைந்தவையாக நிரல்படுத்தலாம். அதேபோல் பசுபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம், அந்தாட்டிக் சமுத்திரம், ஆட்டிக் சமுத்திரம் என நீர்ப்பரப்பை 05 சமுத்திரங்களாகப் பரப்பளவில் கூடியவைலிருந்துகுறைந்தவையாகநிரல்படுத்தலாம். இவ்வாறாகப் பூமியை மேவிப்பரந்துள்ள இவ்விரு நீர், நிலக் கூறுகளும் காலத்துக்கேற்ப தமது பரப்பளவில் கூடிக்குறைந்துவருகின்றன. மனிதர்கள்மேற்கொள்ளும் இயற்கை அழிப்பாலும் வளி மாசாலும் பூமி வெப்பமடைந்துஅதன்வட,தென்துருவங்களில் உறைந்துள்ள பனிக்கட்டிப் பாறைகள் உருகி நீராகிச் சமுத்திரங்களுடன் கலந்து சமுத்திர நீர்ப்பரப்பை அதிகரிக்கச் செய்கின்றன. இதனால்நிலப்பகுதிகளின் விளிம்புகளை ஒட்டியுள்ள கரையோர நீர்மட்டம் மெல்ல மெல்ல அதிகரிக்கின்றது. ஆகவே ஏலவே குறைவான விகிதத்திலுள்ள நிலப்பரப்பின் அளவு மேலும் குறைய நீர்ப்பரப்பு மேலும் அதிகரிக்கின்றது.

## குந்தியிருக்கும் நிலம் குறையும் அபாயம்!

இப்போதுபூமியில்நீரால்மூடப்படாதஆனல்எப்போதும் தான்உள்ளிழுத்துக்கொள்ளப்போவதாகஅச்சுறுத்திக் கொண்டிருக்கும் சமுத்திரங்களின் மேல் தெரியும் எஞ்சியுள்ளதரைத்திட்டுக்களின்மேலாகநாம்வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனாலும், நிலப்பரப்பை விடவும் ஏலவே அதிகமாகக் காணப்படும் நீர்ப்பரப்பு மேலும் மேலும் அதிகரித்தே செல்கின்றது. இதனால் நமது இருப்பிடம்(தரைப் பரப்பு) குறைந்து வருகின்றது. அதாவது மேலும் தரைப்பகுதிகள் நீரினுள் மூழ்கி வருகின்றன. இவ்வாறு முற்றிலுமாக நீர்ப்பகுதிக்குள் மூழ்கிவிட்டதொரு தரைப்பகுதியைக் குறிப்பிட்டே அது உலகின் எட்டாவது கண்டமாக இருந்திருக்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்;. பசுபிக் கடலில் மூழ்கியிருப்பதாக,குறிப்பிட்டநிலப்பரப்பைஅடையாளம் காட்டும் அவர்கள் அதற்குச் 'ஸீலாண்டியா' என்று பெயரும் இட்டுள்ளனர்.

## ஸீலாண்டியாவின் அமைவிடம்

ஆஸ்திரேலியா – நியூசிலாந்துத் தீவுகளை அடுத்து நியூசிலாந்துடன் இணைந்ததாக தென் மேற்குப் பசுபிக்கடலின் அடியில்மூழ்கியதாகக்காட்சியளிக்கும் கடலின் கீழ் பரந்துள்ள குறித்ததொரு தரைப் பகுதியே விஞ்ஞானிகள் குறிப்பிடும் இந்தச் 'ஸீலாண்டியா' கண்டம். 'யோலோஜிக்கல் சொசைட்டி ஒவ் அமெரிக்கா'(அமெரிக்கா புவியியல் சமூகம்) என்ற இதழிலேயே மேற்படி எட்டாவது கண்டம் குறித்த விடயங்கள் வெளியாகியிருக்கின்றன. இது ஆஸ்திரேலியாத் தீவின் பரப்புடன் ஒப்பிடுகையில் மூன்றில் இரண்டு பங்குடையதாகும். இதன் பரப்பளவு 4.5 மில்லியன் ச.கி.மீற்றர்கள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இதன் 94சதவீதப் பகுதிகள் கடலுக்கடியில் மூழ்கியுள்ளன.


ஆனாலும் குட்டிக்குட்டித் தீவுகள் சிலவும் கற்பாறைகள் சிலவும் இந்த நிலப்பரப்புக்கு வெளியே தெரிகின்றன. இவைதான் கடலின் உள்ளே பெரியதொரு நிலப்பரப்பு மூழ்கியுள்ளது என்றும் கட்டியம் கூறுகின்றன. நீரில் மூழ்கியுள்ள பகுதியின் மத்தியில் நியூஸிலாந்தும் வடக்குப்பக்கமாகநியூகேலடோனியாவும்அமைந்துள்ளன. தெற்குப் புறமாக அயுக்லாந்தும் தென்கிழக்கு நோக்கி முறையே அடம்ஸ் தீவுகள், கம்பேல் தீவு, பவுண்ரி தீவு, சதம் தீவு, பிற் தீவு போன்றனவும் அமைந்துள்ளன. இவையே கடலில் மூழ்கியிருக்கும் ஸீலாண்டியாவிலிருந்து எஞ்சி, மேல் தெரியும் பகுதிகளாகும்.

ஆகையால் ஸீலாண்டியா ஆஸ்திரேலியாவிலிருந்து 70 80 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாகப் பிரிந்து பசுபிக் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். நியூசிலாந்து மற்றும் நியூ கலிடோனியா தீவுக் கூட்டத்தோடு, இந்தக் கண்டத்தின் பெரும்பாலான நிலப்பகுதி நீருக்கடியில் உள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## நியூசிலாந்தின் பகுதிகளே ஸீலாண்டியா

ஸீலாண்டியா என்ற கடலில் மூழ்கிவிட்ட நிலப்பரப்பும் அதை ஒட்டி மேல் தெரியும் சிறு சிறு தீவுகளும் நியூசிலாந்தைச் சுற்றியே அமைந்துள்ளன. ஆகையால் ஆஸ்திரேலியாவிலிருந்து பிரிந்த நிலத் தொகுதியின் நகர்ச்சியின்போது அதன் பெரும் பகுதி கடலினுள் மூழ்கியிருக்கலாம் என்பதும் வாதமாகி விட்டது. பசுபிக் கடலின் அடியிலுள்ள ஸீலாண்டியா இன்று உலகின் எட்டாவது கண்டமாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும் கடலில் மூழ்கிக் கைக்கு எட்டாமல் போய்விட்டது என்பது மனிதர்களுக்குக் கவலைதான்.

ஆனாலும் இயற்கையாகவே அந்தத் தரைப்பரப்பு கடலில் மூழ்கிவிட்டதால் நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. ஆனால், புவி வெப்பமடைதலைத் தோற்றுவிக்கும் செயல்களைச் செய்து கைவசமிருக்கும்நிலங்களைச்செயற்கைவிளைவால்கடலுக்குள் மூழ்கடிக்க வைப்பது மனிதர்கள் நாம் செய்யும் தவறுகளே.




பசுபிக் கடலில் மூழ்கியிருப்பதாக, குறிப்பிட்ட நிலப்பரப்பை அடையாளம் காட்டும் அவர்கள் அதற்குச் 'ஸீலாண்டியா' என்று பெயரும் இட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல் 3

## கவிதையெனும் கனவு

வேலணையூர் தாஸ்

நீங்கள் புதிதாக ஒருவரைச் சந்திக்கும்போது 'வாருங்கள் கவிஞரே...' எனக் கைகுலுக்கிக்கொள்ளலாம். சொல்லும்போது வேடிக்கையாக இருந்தாலும், இன்றையஇலக்கியயாதார்த்தம்அப்படிஇருக்கிறது. கவிதைஎழுதாதவர்களே இல்லையெனுமளவுக்கு இருக்கிறது நிலைமை. ஒருவகையில் இது தமிழுக்குப் பெருமை எனக் கொள்ளலாம். ஆனால், இவ்வாறு அதிகரித்துவிட்ட இளைய கவிஞர்களின் எழுத்துக்களில் அநேகமானவை கவிதை அல்ல என்பதுதான்கசப்பானஉண்மை. இன்றுதமதுஎழுத்தைவெளிப்படுத்துவதற்குப் பல ஊடகங்கள் இருக்கின்றன. இவற்றைவிட இணைய வளர்ச்சி திறந்த படைப்புக்களத்தைவழங்கியிருக்கின்றது. இதனால்எந்தவிதகட்டுப்பாடுகளும் இன்றி ஒருவரால் எழுத முடிகிறது. இது புதிய எழுத்தாளர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம். ஆனாலும், இந்த இணைய எழுத்துச் சுதந்திரமே கவிதை போன்ற வசனக்கட்டுக்களின் வருகையை ஊக்கி விக்கின்றதெனக் கொள்ளவும் இடமுண்டு.

குறிப்பாக சமூகவலைத்தளங்களிலே கவிதை என்ற தலைப்பில் பெரும்பாலானோர் எழுதுகிறார்கள். அவற்றில் சில சேர்ந்தவுடன் கவிதைத் தொகுதி என்றும் சொல்கிறார்கள். 'எங்கெங்கு நோக்கினும் கவிதையடா...' எனச் சொல்லும் அளவுக்கு ஏனைய படைப்புக்களைவிட கவிதைகள் பெருகிக் கிடக்கின்றன. இது அவர்களது ஆரம்பம் என்பது மகிழ்ச்சிதான். ஆனால், இதற்குள் கவிதைகளைத் தேடிப்பெறவேண்டியிருப்பதுதான் கவலை.

புதுக்கவிதையென்பது வசனங்களை முறித்து கவிதைபோல் அடுக்கி எழுதுவது தான் எனப் பலர் புரிந்து வைத்திருக்கிறார்கள். இப்படிப் பலரும் தொடர்ச்சியாக எழுத முற்படுகிறபோது இவர்களுக்கு அடுத்து எழுத வருகிறவர்கள் இன்றைய கவிதை இப்படித்தான் இருக்கும் எனக் கருதுகிற அபாயம் நேர்ந்து விடுகிறது. தமிழ்க் கவிதை மரபு இரண்டாயிரம் ஆண்டுகள் பாரம்பரியமுடையது. செய்யுள், புதுக்கவிதை, பின் நவீனம் எனப் பல நிலைகளில் அது காலத்துக்கு ஏற்ப தன்னை வளர்த்துக் கொண்டுள்ளது. எனவே புதிதாகக் கவிதை எழுத வருபவர்கள், தமக்கு முன்னுள்ள மூத்த கவிஞர்களைப் படிக்கவேண்டும். மரபின் ஆழமான வாசனையுடையவர்களே சிறந்த நவீன கவிதைகளையும் தந்திருக்கிறார்கள், இது நமக்கு வரலாறு உணர்த்தும் செய்தி, அல்லது ஒருவருக்கு எளிதில் புரியாத சொற்களை அடுக்குதல் என்பதைக் கவித்துவம் என நினைக்கத் தேவையில்லை. மிக எளிமையான சொற்களைக் கொண்டே சிறந்த கவிதைகளைக் கவிஞர்கள் தந்திருக்கிறார்கள். ஈழத்துக் கவிஞர் மகாகவியினுடைய கவிதைகள் பல, மக்கள் அன்றாடம் பேசும் பேச்சு மொழியில் எழுதபட்டவை தான். அவருடைய 'சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும்...' என்ற புதியதொருவீடு நாடகக் கவிதை இன்றும் மறக்கமுடியாத இசைப்பாடலாய் இருக்கிறது. ஒரு நல்ல கவிதையின் சில சொற்களே எம்மை எங்கோ அழைத்துச் செல்கின்றன. நீண்ட கனவுக்குள் தூங்க வைக்கிறது, சில சமயம் தீமூட்டிச் செல்கின்றது!

'சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது'

கவிஞர் பிரமிளின் இந்தக் கவிதை சிறியது ஆயினும், அது சொல்லும் செய்திகள் ஆயிரம். இதேபோல் 'விழியிமை மகரந்தங்களில் திறக்கின்றது' என்பது பாப்லோ நெரூடாவின் அழகிய கவிதை வரி. இது சண்முகம் சிவலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் எமது கற்பனைக்கும் புலப்பட்டது. எது எவ்வாறு இருப்பினும், இன்றைய இளையகவிஞர்களில்சிலர்அழகான உணர்வான செறிவான கவிதைகளை எழுதுகிறார்கள் என்பதும் உண்மை. இதேபோல் ஏனையோரும் கவிதைபற்றிய புரிதலோடும் ஆழமான முன்வாசிப்போடுமே கவிதைகளை எழுதவேண்டும். கவிதையென்பது அழகியகனவு அதுமட்டுமன்றி அதுவே ஓர் இனியவாழ்வனுபவம்.






## கண் முன்னே உன் நிழல்...

உன்மேல் கொண்ட காதலை
என்னவென்று நான்
சொல்வேன்
அது தற்செயலானதா?
தவறானதா?
இறுதிவரை ஏதும் அறியேன்

வார்த்தைகளால்
கூறிவிடவும் முடியாது
அந்தக் காதல் பற்றி...

நீ என்னில்
காட்டிய நேசம்
உனக்குள் இருந்த
அந்த வேசம்...
அறியாமல் நான் கொண்ட
ஆழ்ந்த பாசம்...
பிரிந்தேயிருக்கும்
இந்தத் தேசம் போல்
எஞ்சியது வெறும் நாசம்...

உன்னோடு நான் வாழ்ந்த
காலம்
கண்ணீரில் இட்ட
கோலமானது.
உயிர் உள்ள வரை
மறக்க முடியா
உன் நினைவுகளே எனக்காய்
என்றும் நீ தந்தவை.

ஆர்.வினோஜா

## சிரிப்பு



பேருந்தில்...

**நடத்துநர்**
யோ...யோ...
என்னையா நான் நிறுத்தச் சொல்லி 'மணி' அடிச்சுக் கொண்டேயிருக்கிறன். நீ பாட்டுக்குப் போய்க் கொண்டே இருக்கிறாய்...?

**ஓட்டுநர்**
யோ... போய் இரும் ஐயா...! நான் மாத்திரம் என்ன நிற்க மாட்டன் என்டா சொல்லுறன். 'பிறேக்' அடிச்சுக் கொண்டேயிருக்கிறன் பேருந்து அது பாட்டுக்குப் போய்க் கொண்டேயிருக்கு...! என்னை மாதிரிப் பதற்றப்படாம ஒரு 'சீற்' றில போய் இரும்.

நடத்துநர் !!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பேய்க்காட்டு வேலை

கடும் கோபத்துடன் காத்திருக்கின்ற ஆன்மாக்களிடம் 5 திருடர்கள் சிக்கி க் கொள்கின்ற னர். அதைத் தொடர்ந்து நிகழும் சம்பவங்கள்தான் 'ரம்'.
நாயகன் ரிஷிகேஷ், விவேக், சஞ்சிதா ஷெட்டி உள்ளிட்ட கடத்தல் குழுவினர் பாரவூர்தியில் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்த விலைமதிப்பற்ற, அரிய வகைக் கற்களைக் கொள்ளை அடிக்கின்றனர். இவர்களின் திட்டத்தை முன்கூட்டியே அறிந்த பொலிஸ் அதிகாரி நரேன், அதில் தானும் ஒரு பங்கை எடுக்க வேண்டும் என்ற திட்டத்தோடு, இந்தக் கடத்தல் குழுவுடன் தனது ஆள் ஒன்றையும் கடத்தல் கும்பலுக்குத் தெரியாமல் அவர்களுடன் சேர்த்து விடுகிறார்.
பாரவூர்தியிலிருந்து விலை மதிப்பற்ற அந்தக் கற்களைக் கடத்தியதும், நரேனுக்கு இதில் பங்கு கொடுக்கக் கூடாது என்ற முடிவோடு அவற்றைப் பதுக்கிக்கொள்வதற்காகக் கொள்ளையர்கள் ஒரு பாழடைந்த பங்களாவுக்குள் தஞ்சம் அடைகின்றனர். சாவடைந்த சிலரின் ஆன்மாக்கள் அந்த வீட்டில் உலவுவது அவர்களுக்குத் தெரியவருகிறது. பேய்களிடம் சிக்கிக்கொள்ளும் இவர்களின் நிலமை என்ன? இவர்களைத் தேடும் பொலிஸ் அதிகாரி நரேனால் விலை மதிப்பற்ற கற்களை அவர்களிடம் இருந்து பறிக்க முடிந்ததா? இதுதான் கதை.
பேய்ப் படத்துக்கே உரிய களம், கதையின் கரு, ஆன்மா குறித்த காரணங்கள்போன்றவை இயக்குநர்சாய்பரத்ஆல்சிறப்பாகச்சித்திரிக்கப்பட்டுள்ளது. திரைக்கதையின் வேகத்திலும் படு சுமாராகவே கவனம் செலுத்தியிருக்கிறார் இயக்குநர். திரைக்கதையில் பேய்ப் படத்துக்கான போக்கு இல்லாததால் ஆரம்பம் முதலே படம் மெதுவாக நகர்கிறது. நரேன், விவேக், சஞ்சிதா ஷெட்டி போன்ற நடிகர்கள் இருந்தும் கதையின் ஒவ்வொரு காட்சியும் வலுவின்றி ஊர்ந்து செல்கிறது. பேய்களிடம் அகப்பட்டுக்கொள்ளும்போது விவேக் கையாளும்; நகைச்சுவைகள் சற்றுச் சலிப்பைப் போக்கினாலும் அதில் பல, இரட்டை அர்த்தங்களும் வெளிப்படுவது முகம் சுளிக்க வைக்கின்றது. சில நிமிடங்களே வந்து செல்லும் நாயகி மியா ஜார்ஜ் ஜின் நடிப்பு கச்சிதம். நாயகன் ரிஷிகேஷ் பல இடங்களில் ஒரே மாதிரியான முக பாவனையையே வெளிப்படுத்துகிறார்.
அனிருத்தின் இசை, காட்சிகளுடன் அவ்வளவாக ஒட்டவில்லை. பாடல்களும் கவனத்தைப் பெறவில்லை. இரவையும், பேய் பங்களாவையும் விக்னேஷ் வாசுவின் கமரா காட்சிப்படுத்திய விதம் சற்றுப் பரவாயில்லை.
கடத்தல் காரர்களின் செயல்கள், பெலிஸ் அதிகாரியின் திட்டம், ஆன்மாக்களைச் சாந்தப்படுத்துவதற்கான காரணம் உள்ளிட்டவை தெளிவாக இருந்தும்கூட, எதையும் நேர்த்தியாகப் பிரதிபலிக்காமல் உதறிச் செல்கின்றது 'ரம்'.

# பகடி ஆட்டம்





## வழக்கமான சலிப்பு

பாலியல் வன்முறைக ளுக்குப் பல முகங்கள் உண்டு. அதில் ஒன்றைத் திரைவிலக்கிக் காட்டுகிறது இந்தப் 'பகடி ஆட்டம்'.
செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தின் ஒரே வாரிசு சூர்யா (சுரேந்தர்). தனது வசதியையும் வசீகரத்தையும் தூண்டிலாகப் பயன்படுத்திப் பெண்களுக்கு வலை வீசுவது அவனது பொழுது போக்கு. அப்படி அவனிடம் சிக்கிய ஒரு பெண் கௌசல்யா (மோனிகா) நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். தனது வம்சத்தில் முதல் முறையாகப் பட்டதாரியாக உருவாக வேண்டியவள். அவள் சூர்யாவின் வலையில் சிக்கிச் சின்னாபின்னம் ஆக, துடித்துப் போகிறது குடும்பம். அதன் பின்னர் அடுத்த பெண்ணுக்கு வலைவிரிக்கத் தயாராகும் சூர்யாவோ திடீரென்று காணாமல் போகின்றான். அவனைக் கண்டுபிடிக்கப் பிரதிப் பொலிஸ் ஆணையர் ரகுமான் தலைமையில் ஒரு குழு களமிறங்குகின்றது. அதன் முடிவுகள் என்ன என்பதுதான் 'பகடி ஆட்டம்'.
பாத்திரங்களை அவரவர் நிலைகளில் அறிமுகப்படுத்தியபடி இயல்பாகத் தொடங்குகிறது படம். ஆனால், சூர்யா கௌசல்யா காதல் காட்சிகள் எந்தப் புதுமையும் இல்லாமல், எளிதில் ஊகிக்கக் கூடிய காட்சிகளாக நத்தை போல நகர்வதால் முதல் பாதித் திரைக்கதை அயர்வைத் தருகின்றது. முதல் பாதியில் சூர்யா கடத்தப்பட்டுச் சிக்கிக்கொள்ளும் காட்சிகள் தவிர எல்லாக் காட்சிகளுமே பழைய நகல்கள்.
காணாமல்போன இளைஞனைக் கண்டுபிடிக்கும் புலன் விசாரணையாக மாறும் இரண்டாவது பாதி, நிமிர்ந்து உட்கார வைத்துவிடுகின்றது. நம்பகத்தன்மை மிக்க காட்சிகள் மூலமாகப் புலன்விசாரணையை நகர்த்துகிறார் இயக்குநர். கைபேசிகளையும் சமூக வலைத்தளங்களையும் இன்றைய இளைஞர்கள், இளம் பெண்கள் எப்படிப் பயன்படுத்துகின்றார்கள்? அவர்களிடத்தில் எதற்கு அதிக முக்கியத்துவம் இருக்கிறது? சமூகப் பொறுப்பு மிக்க ஒரு பொலிஸ் அதிகாரி சட்டத்தின் எல்லையைத் தாண்டி நீதி வழங்க முடியுமா? எனப் பல்வேறு அம்சங்கள் கச்சிதமாகவும் நேர்த்தியாகவும் கையாளப்பட்டிருக்கின்றன.
கௌசல்யாவாக நடித்திருக்கும் மோனிகா, அவரது அக்காவாக நடித்திருக்கும் கவுரி நந்தா ஆகியோரது நடிப்புகள், பாத்திரங்களுக்கு நம்பகத்தன்மையைச்சேர்க்கின்றன. எதிர்மறைக்கதாபாத்திரம் ஏற்றிருக் கும் சுரேந்தர், பாத்திரத்தை நன்கு உள்வாங்கி நடித்திருக்கிறார்.
பொருத்தமான உடல்மொழியால் ரகுமான் இயல்பாகக் கவர்ந்துவிடுகிறார்.
நிழல்கள் ரவி, ராஜ ஆகியோரது அனுபவமிக்க நடிப்பு, அவர்களது பாத்திரங்களுக்கும் வலுச் சேர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இங்கும்... அங்கும்...

அழகாய்ப் பதுங்கியும்
அன்பாய் நெருங்கியும்
அறவழிக்காரர்
ஆளுக்கொரு
ஒளிப்படம்
அவை என்ன அழகு
பார்க்கவா...!

மண்ணுக்காய்ப்
போராடும் மக்கள்
மனிதம்
அற்றவர்களோடு
மல்லுக்கட்டும்
கட்டாயம் இங்கு

உயிரைக் காக்க
வேண்டி
தன் தேசம் மறந்து
நாடோடியாக
கடல் கடந்த
சிலருக்கும் உபதேசம்
- அங்கு
'நான் பிரதமர்...
வாருங்கள் நாட்டுக்கு
இப்போதும் எப்போதும்
நம் நாடு காக்கும்
உங்களை'
எப்படியிருக்கு இச்
செப்படி வித்தை...?

■ நிலவன்



# காஸி

வீணடிப்பு சினிமா

இந்தியசினிமாஎன்பது, அதன் தேசியத்தைக் கொண்டாடுவதையும் மிகைப்படுத்துவதையும் முதன்மையாகக் கொண்டதுஎன்பதுயாவரும்அறிந்ததே. இதற்குப் பாகிஸ்தான் என்னும் அண்டை நாடே அனைத்துத் தளங்களிலும் எதிர்த் தரப்பாக உருவகிக்கப்பட்டிருக்கும். அதனை வைத்தே இந்தியன் என்கின்ற கோசமும் சினிமாத் தளத்தில் படர்ந்த ஒரு கொடியாகிவிட்டது. திரயரங்குகளில் தேசியகீதம் இசைக்கப்படுவது வரையில் நீண்ட அந்த நாட்டின் தேசியப் போக்கு அதிகமாக இந்தச் சினிமாக் கலையூடே வளர்த்துவிடப்பட்ட ஒன்று என்றும் கூறலாம். இந்தப் பின்னணியுடன் அதன் சினிமாவைப் பார்த்துப் பழக்கப்பட்ட எமக்கு அண்மையில் சங்கல்ப் ரெட்டி இயக்கி, வெளிவந்த 'காஸி' ஒரு புது அனுபவத்தைத் தந்திருந்தது.

1971ஆம் ஆண்டுக்கு முன்னதான காலகட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் நடக்கும் மக்கள் போராட்டத்தின் மீது பாகிஸ்தான் அரசு வன்முறைகளை ஏவுகின்றது.

இதனால்எந்தநேரமும்இந்தியா–பாகிஸ்தான்இடையே போர் மூளும் சூழல். இந்தச் சமயத்தில் இந்தியாவின் கிழக்குக் கடலோரப் பகுதியில் பாகிஸ்தான் அதிரடித் தாக்குதல் ஒன்றையும் நடத்தவிருக்கிறது என்னும் செய்தி இந்தியக் கடலோரக் காவல் படைக்குக் கிடைக்கிறது.

பாகிஸ்தானின் திட்டத்தைக் கண்டறிந்து அதை முறியடிக்க வேண்டும் என்பதற்காக கப்டன் ரன்விஜய் சிங் (கே கே மேனன்) தலைமையில் 'எஸ் 21' எனும் நீர்மூழ்கிக் கப்பல் அனுப்பப்படுகிறது. கப்டன் ரன்விஜய் சிங் மிகுந்த திறமைசாலி. ஆனால், எதிரியை அழிப்பதில் சட்டவிதிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் செயலில் இறங்கிவிடக்கூடியவர். இவரைக் கட்டுப்படுத்தி வைக்கவேண்டும் என்பதற்காக அர்ஜுன் வர்மா (ராணா டகுபதி) என்னும் அதிகாரியையும் உடன் அனுப்புகிறது காவல் படையின் தலைமை. கூடவே தேவராஜ் (அதுல் குல்கர்னி) என்னும் உயர் அதிகாரியும் இருக்கிறார்.

வங்காளவிரிகுடாக்கடல்பிராந்தியத்தில் பாகிஸ்தானின் 'காஸி' என்னும் நீர்மூழ்கிக் கப்பல் உலாவுவதைக் கண்டுபிடிக்கும்கப்டன், அந்தக் கப்பலைத் தாக்கத் திட்டமிடுகிறார். அதற்காக அபாயகரமான செயலில் இறங்கவும் தயாராகிவிடுகிறார். ராணா அதைத் தடுக்கிறார். மேலிடத்திலிருந்து உத்தரவு வரும்வரை காத்திருக்க வேண்டும்என்கிறார். கப்டன் அதைக்கேட்பதாக இல்லை.

இதற்கிடையே 'காஸி' தன்னைப் பாதுகாக்கப் பொருத்தியிருக்கும் கண்ணி வெடியில் இந்தியாவின் 'எஸ் 21' சிக்கிக்கொள்கிறது. இதனால் கப்பலின் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. கப்பலுக்குள் உயிர்ச் சேதமும் நிகழ்கிறது. பாகிஸ்தானின் 'காஸி' அடுத்தடுத்து 'எஸ்21' மீது குண்டுகளைப் பொழிகிறது. ஒரு கட்டத்தில் கப்பலின் பொறுப்பு ராணாவிடம் வருகிறது.

காஸியின் திட்டத்தைத் தடுக்க எப்படி வியூகம் செய்கிறார்? 'எஸ் 21' தப்பித்ததா? காஸி என்னவாயிற்று? என்பதே படம்.

2 நீர்மூழ்கிக் கப்பல்களை வைத்துக் கொண்டு பார்வையாளர்களை 2 மணிநேரத்துக்கு முழுமையாகக் கட்டிப் போடுகிறார் சங்கல்ப் ரெட்டி. திரைக்கதையும் படமாக்கப்பட்டுள்ள விதமும் போர்க்களத்தை அருகில் இருந்து பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்திவிடுகின்றன.

குண்டுகள் வீசப்படும்போது கப்பலுக்குள் ஏற்படும் பதற்றம் பார்வையாளர்களையும் தொற்றிக்கொள்கின்றது. போர் வியூகங்கள் பார்வையாளர்களின்மனங்களையும்ஆக்கிரமிக்கின்றன.

நெருக்கடி, ஆவேசங்கள், மனிதர்களின் மாறுபட்ட இயல்புகளால்எழும்மோதல்கள், தேசப்பற்றும்உயிர்ப்பற்றும் முரண்படும் தருணங்கள் ஆகியவற்றை அபாரமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர். கப்டனுக்கும் அவரது சக அதிகாரிகளுக்கும் இடையே நடக்கும் உரையாடல்கள் பொருத்தமாக உள்ளன.

போர்க்கப்பல் இயங்கும் விதம், நெருக்கடிகளின்போது அது செயற்படும் விதம், அதற்கான தொழில்நுட்ப அம்சங்கள், கப்பலில் இருக்கும் போர் வீரர்களின் மனநிலை ஆகியவை துல்லியமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இயக்குநரின் களப் பணி பிரமிக்கவைக்கிறது. பாத்திர வார்ப்புகளும் நடிகர்களின் தெரிவும் கச்சிதம். கதையைச்சிதைக்காமல்போர்ச்சூழலைவிவரிப்பதுபக்குவமான அணுகுமுறை.

இந்திய – பாகிஸ்தான் போர் வரலாற்றில் காஸி நீர்மூழ்கிக் கப்பலுக்கு என்ன ஆனது என்பது விடையற்ற மர்மமாகவே உள்ளது. மோதலுக்கான சாத்தியக் கூறுகளையும் 1971 காலகட்டத்தின் வரலாற்று நிகழ்தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு அந்த மர்மத்தைத் தகர்த்திருக்கும் இயக்குநரின் கற்பனைத் திறன் பாராட்டத்தக்கது.

படம் 2 மணிநேரத்துக்குள் முடிந்து விடுகிறது. எனினும் படத்தின் நீளத்தை இன்னும் குறைத்திருக்கலாம். குறிப்பாக, இரண்டாம் பாதியில் சில இடங்களை மேலும் இறுக்கமாக அமைத்திருக்கலாம். கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அகதியாக வரும் தப்ஸிக்கும் அவர் குழந்தைக்கும் கதையில் எந்த முக்கியத்துவமும் இல்லை. கடைசிக் காட்சியில் ராணா மேற்கொள்ளும் சாகசம் படத்துடன் ஒட்டவில்லை.

மதியின் ஒளிப்பதிவும் கேயின் பின்னணி இசையும் போர்ச் சூழலை உருவாக்குவதில் செவ்வனே செயல்பட்டிருக்கின்றன. ராணா டகுபதி, கே கே மேனன், அதுல் குல்கர்னி, பாகிஸ்தான் அதிகாரியாக வரும் ரஸாக் ஆகியோர் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

கே கே மேனனின் உடல்மொழியும் அலட்சியமான முகபாவனைகளும் தனித்து நிற்கின்றன. நாசர், ஓம் பூரி ஆகியோர் மிகச்சிறிய வேடங்களில் சிறப்பாக நடித்துப் படத்தின் நம்பகத்தன்மைக்கு வலுச் சேர்க்கிறார்கள்.

ஆரம்பக் காட்சிகளில் பின்னணியில் கம்பீரமாக ஒலிக்கும் நடிகர் சூர்யாவின் குரல் படத்துக்குக் கூடுதல் மதிப்பை அளிக்கிறது. தெலுங்கு, ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் வெளியாகியிருக்கும் இந்தப் படம் மொழி மாற்றப்பட்டாலும் ஓரளவாயினும் யதார்த்தக் களத்தைச் சித்திரிக்கின்றது.





## சிரிப்பு










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பல் இளிக்கின்றது பனங்கிழங்கு

ஜெ. காயா

கறுத்த தோற்றத்தில் நீண்டு வளர்ந்த பனைகள் தாம் யாழ்ப்பாணத்தின் முதன்மைப்பாரம்பரியங்கள். அவை இந்தத் தமிழர் மண்ணுக்குத் தாம் தான் குறியீடு என்றுணர்த்தவும் தவற வில்லை. வலிந்த தேகம் கொண்டு உழைக்கும் யாழ்ப்பாண மண்ணின் மனிதர்க ளின் நிறமும் அதுவே. யாழ்ப்பாணம் பனைகள் நிறைந்ததேசம் மட்டுமல்ல, பனைகளால்வளர்ந்த தேசமும்கூட. 'ஒடியல்பிட்டும், பனாட்டும்பழஞ்சோறும்தான் மோனே இண்டைக்கும் நான் தள்ளாடாமல் நடக்கக் காரணம்...' என்பதைக் கடந்தும் என்னைத் தோளில் ஏந்தியவாறு ஊர்ப்புதினமளக்கும் அப்புவின் தைரியக் குரல் இப்போதும் என் காதுகளில் அப்படியே உயிர் பெறுகின்றது...!

பனங்காய்க் களியில் உடுப்புத் தோய்த்ததாகவும், ஒடியல் மாவும் பனம் பண்டங்களையும் மூன்று நேரமும் உணவாகக் கொண்டதாகவும் அப்பு கூறியதை எப்படி இன்னமும் என்னால் மறக்க முடியும்...! பனம்தேகம் போன்ற அவரது உடலிலிருந்து உயிர் பிரியக் கடினமான தன் உள்ளார்ந்தம் இப்போதுதான் எனக்கும் புரிகின்றது. அவர்கள் வீரவான்கள், தைரியசாலிகள். இயற்கையோடு ஒட்டி உறவாடிக்காலத்தை வென்ற மனிதர்கள்.

எமது மூதாதையர்கள் பனை தரும் வளங்கள் அனைத்தையும் தம்பால் ஈர்த்தனர். பனங்களி, பனங்கிழங்கு எனும் இரண்டுவகையான தனது வளத்திலிருந்து பனாட்டு, பனங்காய் பணியாரம், பனங்காய்ப் பிட்டு, கிழங்கு அதிலும் துவையல், அவித்து உலர்த்தினால் புழுக்கொடியல், வெறுமனே உலர்த்தினால் ஒடியல், அதிலும் மா அதில் பிட்டு, இடியப்பம் எனப் பரந்து-விரிந்த உடலுக்குத் தெம்பு தரும் ஏராளம் ஏராளம் உணவுகளை வழங்கி, அந்தக் கால மனிதர்களை நீண்ட ஆயுள் கொள்ளச் செய்திருந்தன இந்தப் பனம் பொருள்கள். இப்போது புரிகின்றதா உங்களுக்கு? எமது மூதாதையர்கள் நீடித்த ஆயுள் பெற்றிருந்ததற்கும் சிறுவயதிலேயே தற்போது உங்களை நோய்கள் ஆட்கொண்டிருப்பதற்கும் காரணம் என்னவென்று...? பனையுடன் மட்டுமல்ல முருங்கை போன்ற இன்னும் பல இயற்கைகளுடன் இணைந்திருந்ததாலேயே அவர்கள் தேக வலிமைபெற்று நோய் நொடிகளற்று நீடித்த ஆயுளுடன் வாழ்ந்து மடிந்தனர். இதனால்தான் யாழ்ப்பாணம் பனைகள் நிறைந்த தேசம் மட்டுமல்லாமல் பனையால் வளர்ந்த ஆரோக்கியமான மனிதர்களைக் கொண்ட தேசமாகவும் மிளிர்ந்தது. ஆனால் இப்போது பனைகளைக் காட்சிப் பொருள்களாகக் கடக்கின்றனர் இன்றைய சந்ததிகள்.

பனை தரும் முதலும் முக்கியமானதுமான அதீதமாக அது தரும் வளங்களில் ஒன்று பனங்கிழங்கு. பனம் பழங்களாக விதைகள் பனையிலிருந்து வீழ்ந்ததும். அது கொண்டுள்ள களியைப் பக்குவப்படுத்தி, பதப்படுத்திப் பனாட்டாகவும், இன்னும் பல உணவுப் பொருள்களாகவும் ஆக்கிக் கொள்வர். பின்னர் களி பிரித்தெடுக்கப்பட்ட பனம்விதைகளை ஒன்று சேர்த்து (பாத்தியிட்டு) மண்ணில் முளை கொள்ளச் செய்வர். அவை முளைகொண்டு கிழங்காகும் பருவத்தில் பிடுங்கி எடுத்து உணவாக்கிக் கொள்வர். மேலதிகமாகவே எப்போதும் இவை காணப்படுவதால், மறு வருடம் கிழங்குகள் கிடைக்கும் வரைக்கும் பத்திரப்படுத்தியும் கொள்வர். புழுக்கொடியல் மாவு, ஒடியல் மாவு எனப் பலவிதங்களில் பத்திரப்படும் அவையே மூதாதையர்களின் நாளாந்த உணவும் கூட.

கிழங்குகள் கிடைக்கும் காலத்திலும் இரண்டு வேறுபாடுகள் இருக்கும். பனம்பழங்கள் விழுவதற்கு ஆரம்பிக்கும். ஆரம்பத்தில் மண்ணை வந்தடையும் விதைகள் துரிதமாக முதலில் முளை கொள்ளும். ஆகையால், முதலில் விழுந்ததால் முதலில் முளை கொண்ட அந்த விதைகளைத் தனியாக்கி முளைப் பாத்தியிலிட்டு அந்தக் கிழங்குகளை முன்கூட்டியே விளைவித்துக்கொள்வர். பின்னர்தான் மீதமுள்ள அதிகளவான பனம் விதைகளும் கிழங்காக்கப்படும். இவ்வாறு இரண்டு பிரிவாகப் பாத்தியமைத்து முளை கொண்ட கிழங்குகளின் தொகை வருடக்கணக்கில் அவர்கள் உணவாகக் கொள்ளுமளவுக்குப் போதியவையாக இருக்கும். இன்றும் பனங்கிழங்குகள் விளைவிக்கப்படுகின்றனதான். ஆனால், யாழ்ப்பாண நகரச் சந்தையில் அவை சிங்கள மக்களுக்கும் வெளிநாட்டு வாசிகளுக்கும் பல்லிளித்துக்கொள்வதற்கு மட்டுமே.



> யாழ்ப்பாணம் பனைகள் நிறைந்த தேசம் மட்டுமல்லாமல் பனையால் வளர்ந்த ஆரோக்கியமான மனிதர்களைக் கொண்ட தேசமாகவும் மிளிர்ந்தது. ஆனால் இப் போது பனைகளைக் காட்சிப் பொருள்களாகக் கடக்கின்றனர் இன்றைய சந்ததிகள்.




அன்பே! நம்ம காதலைப் பற்றி உங்க வீட்டில் சொல்லிட்டியா?"

என் வீட்டில் சொல்லிட்டேன்.

இன்னும் புகுந்த வீட்டில சொல்லலை...

## ஏதோ சம்பவித்துள்ளது...!

வீதியின் இரு மருங்கும்
கூட்டம் கூட்டமாய்க் குழுமி
ஏதோ கதைக்கின்றனர் சிலர்
ஏதோ சம்பவித்துள்ளது!


போனவாரம் போனவனாம்
சேருமிடம் அவன் சேரலையாம்
போனவிடம் எவருக்கும்
தெரியலையாம்
தேடிப்போகுமிடம் புரியலையாம்
ஏதோ சம்பவித்துள்ளது.

பற்றைக்காட்டில் பாதையொன்று
இரு சில்கள்பதித்த தடங்கள்
தடையறுத்துத் தெரிகிறது
புற்களில் ஆங்கே
குருதிக்கறை.
புரிகிறது
ஏதோ சம்பவித்துள்ளது.

பாவம் பரிதவித்துப் பால்
கொடுத்த
மார்பைத்[illegible] அழுகின்றாள்
ஓடோடிவந்த தாயொருத்தி
தாயுள்ளம் தாங்கிடுமோ !
தாய்மூச்சு நீங்கிடுமோ !
ஏதோ சம்பவித்துள்ளது.

மறுநாள் பார்த்திடுவோம்
பத்திரிகையில்
ஒரு செய்தியாய்
அந்தச் சம்பவம் எதுவென்று.

[illegible] அ. அஜந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT






# ஒற்றுமை

ஒரு காட்டில் ஆடுகள் கூட்டம் கூட்டமாகச் சென்று மேய்வது வழக்கம். வழி தவறிப்போகும் ஆடுகளை ஓநாய் ஒன்று கொன்று உணவாக்கி வந்தது. ஒருநாள் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்த போது, நரி ஒன்று ஆட்டுக்குட்டி ஒன்றை வாயில் கவ்விக்கொண்டு ஓட்டம் பிடித்தது.

அதைப்பார்த்த ஆடுகள், "திருட்டு ஓநாய் வந்து ஆட்டைக் கவ்விக்கொண்டு ஓடுகிறதே" எனக் கூச்சல் போட்டன. ஆட்டுக் குட்டியை கவ்விக் கொண்டு ஓடிய நரி ஓநாயைப் பார்த்து, "ஓநாயே! உன் மீது இன்று எந்தத் தவறும் இல்லாத போதும் அந்த ஆடுகள் உன் மேல் பழியைச் சுமத்துகின்றனவே ஏன்?" என்று கேட்டது. அதற்கு ஓநாய், "ஆடுகள் சொல்வதிலும் உண்மை உள்ளது. நான் பலமுறை அவற்றின் மீது பாய்ந்து பல ஆடுகளைக் கவர்ந்து வந்திருக்கிறேன். ஆதலால், எப்போது அவைகளுக்குக் கொடுமை நடந்தாலும் என் நினைவு வருகிறது" என்றது.

இருவரும் கதைத்துக்கொண்டிருந்த போது, ஆடுகள் அணிதிரண்டு வந்து போரிட்டு ஆட்டுக்குட்டியை மீட்டன. அன்று முதல் அவை ஒற்றுமையாக இருக்கவும் கற்றுக்கொண்டன.

**நீதி- ஒன்றுபட்டால், உண்டு வாழ்வு. ஒற்றுமை குன்றேல், அனைவருக்கும் தாழ்வு.**

# அறிந்துகொள்வோம்

- ★ மனிதனின் ஆயுள்காலம், 60-100வருடங்கள்.
- ★ வரிக்குதிரையின் ஆயுள்காலம், 22 வருடங்கள்.
- ★ அணிலின் ஆயுள்காலம், 82 வருடங்கள்.
- ★ செம்மறி ஆட்டின் ஆயுள்காலம், 16 வருடங்கள்.
- ★ சிம்பன்சியின் ஆயுள்காலம், 41 வருடங்கள்.
- ★ பெருங்கரடியின் ஆயுள்காலம், 20 வருடங்கள்.
- ★ தீக்கோழியின் ஆயுள்காலம், 50 வருடங்கள்.
- ★ பென்குயினின் ஆயுள்காலம், 22 வருடங்கள்.
- ★ திமிங்கிலத்தின் ஆயுள்காலம், 30-40 வருடங்கள்.
- ★ கடலாமையின் ஆயுள்காலம், 200 வருடங்கள்.

# நேற்று, இன்று, நாளை

இன்றிருக்கும் நான், நேற்றிருந்ததைவிட அறிவு, எண்ணம், படிப்பு, செயல், திறமை, பழக்கம் ஆகிய ஏதோ ஒன்றிலாவது சிறிதளவாவது முன்னேறி இருக்க வேண்டும். நான் யாரோடும் போட்டியிடத் தேவையில்லை. நேற்றைய நானுடன் இன்றைய நான் போட்டியிட்டு முன்னேற வேண்டும். நாளைய நான் இன்றைய விட ஒரு படியாவது முன்னேற வேண்டும். இந் மாற்றம்தான், உலகில் எங்களை நிலைக்க வைக்கும்.

ஞா.கார்த்திகா

# பூக்கள் மலரும் ஆண்டுகள்

**12 வருடத்துக்கு ஒருமுறை மலரும் பூ**


குறிஞ்சிப் பூ

**50 வருடத்துக்கு ஒருமுறை மலரும் பூ**


- மூங்கில் பூ


அன்னப்பறவை மலர்


காக்டஸ்

**100 வருடத்துக்கு ஒருமுறை மலரும் பூ**


நூற்றாண்டு மலர்
(PUYA RAIMONDII)

# இளநீர்...

கோடை வெயில் வந்தவுடன்,
கொளுத்தும் சூட்டைத் தணிப்பதற்கு
ஓடை நீரின் குளுமையுடன்
ஊரில் எங்கும் இளநீர்கள்!

பச்சை ஆடை அணிந்திருக்கும்,
பாரம் ஏறிக் கனத்திருக்கும்.
இச்சையோடு நாம்கையில்
எடுத்துக் குடிக்க ஏலாது!

இளநீர் விற்கும் அண்ணன்மார்
எழிலாய்ச் சீவித் தருவார்கள்,
மளமள வென்று நாமதனை
மகிழ்ந்தே குடித்துக் குளிர்ந்திடலாம்!



குடித்துத் தீர்ந்த இளநீரைக்
குறுக்கே வெட்டி அதனுள்ளே
படிந்தே ஜொலிக்கும் வழுக்கையைப்
பதமாய்க் கீறித் தருவார்கள்!

வழவழ வென்று அவ்வழுக்கை
வாயில் வழுக்கிச் சுவையேற்ற,
குழந்தை, பெரியோர் எல்லோரும்
குஷியாய்ச் சிரிப்பர். ஆனந்தம்!

வேதிப் பொருளைக் குடித்தால்,பின்
வேதனை நம்து உடலுக்கு.
பாதிப் பில்லா இளநீரைப்
பார்த்தே குடிப்போம் அனுதினமும்!

என்.சொக்கன்



*சிந்தனைக்கு*

உனக்குத் தேவையான உறுதியும் வலிமையும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன. – *விவேகானந்தர்*


பா.தாட்சாயினி
தரம் – 8 G,
கொக்குவில் இந்துக் கல்லூரி.


ஜ.கிரிஷிகேசன்,
தரம் – 7,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# பறக்கும் யானை

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*


அது ஒரு கோடைக்காலம். காடு முழுவதும் வெளிச்சம் அள்ளித் தெளித்திருந்தது. ஜுஜுவின் அம்மாவும் அப்பாவும் அந்த மருத மரத்தின் அடியில் நின்றுகொண்டிருந்தன. ஜுஜுவின் அம்மாவுக்குப் பிரசவ வலி. ஜுஜுவின் அப்பா அருகிலிருந்து தன்னுடைய தும்பிக்கையினால் ஜுஜுவின் அம்மாவின் உடம்பைத் தடவிக்கொடுத்து ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தது. ஜுஜு மெல்ல அம்மாவின் வயிற்றிலிருந்து வெளியே வந்தது. கீழே விழுந்து தட்டுத்தடுமாறி எழுந்து நின்றதும், அம்மாவைப் பார்த்துத் தலையைத் தூக்கியது. அப்போது அதன் கண்களில் தங்க நிறத்தில் ஒரு பெரும் பறவை பறந்து போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. அவ்வளவுதான். அன்றிலிருந்து எப்போதும் அம்மாவிடம் பறப்பதைப் பற்றிய பேச்சுத்தான்.

அம்மா எனக்குச் சிறகுகள் முளைக்குமா? பறவைகள் மட்டும் எப்படிப் பறக்கின்றன? பறந்தால் விரைவில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போய்விடலாம்- இல்லையா?வானத்திலிருந்து காட்டைப் பார்த்தால் எப்படி இருக்கும்?

அம்மாவால் ஜுஜுவின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. சிலநேரம் அதட்டும். சில நேரம் கெஞ்சும். ஆனால், ஜுஜு மற்ற யானைக்குட்டிகளைப் போல நடப்பதே இல்லை. குதித்துக் கொண்டே வரும். ஒரு தடவை நானும் பறக்கிறேன் என்று ஒரு மேட்டிலிருந்து குதித்து விட்டது. நல்லவேளை. சிறிய காயங்களோடு தப்பித்தது. ஜுஜுவின் அம்மா கோபத்தில் ஜுஜுவை நன்றாகத் திட்டி விட்டது. கோபித்துக்கொண்டு ஜுஜு காட்டின் வேறு ஒரு திசையில் போய்விட்டது.

காட்டின் அந்தப் பகுதியில் பெரிய மரங்களே இல்லை. எல்லாம் சின்னச் சின்ன மரங்கள். ஜுஜுவின் குட்டித் தும்பிக்கையைத் தூக்கினால் அவ்வளவு உயரம்தான். நிறைய விதவிதமான பறவைகள். வானவில்லின் அத்தனை நிறங்களிலும் அவை பறந்து திரிந்தன. ஒரே கீச் கீச் சத்தம்தான். ஜுஜு அப்படியே சொக்கிப்போய் அவற்றைப் பார்த்துக்கொண்டு நின்றது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குளிர்காலத்தில் உதடுகளை பாதுகாக்கும் வழிகள்

குளிர்ந்த காற்றும் வறட்சியான சூழலும் உங்கள் உதடு மற்றும் தோலின் தன்மையை அதிக அளவில் பாதிக்கும். குளிர் மிகுதியாக உள்ள காலத்தில் எம்முடைய உதடுகள் வறட்சியையும் வெடிப்புகளையும் கொண்டு காணப்படுகிறது.

பொதுவாக உதடுகளை உள்ளடக்கிய தோல் பகுதி உடலின் மற்ற தோல் பகுதிகளை விட பத்து மடங்கு வறட்சியை கொண்டு காணப்படும்.

எனவே, குளிர்காலத்தில் உதடுகளை கவனமாக பார்த்துக் கொள்வதற்கான குறிப்புகளை கவனமாக பின்பற்றினால் உதடு வெடிப்புகளில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

குளிர்காலத்தில் உதடுகளை கவனமாக பார்த்துக் கொள்வதற்கான குறிப்புகளை இங்கு காணலாம்.

1. உதடுகளுக்கு ஸ்க்ரப்:

உங்கள் உதடுகளை வாரத்திற்கு ஒருமுறையாவது அழுத்தி தேய்க்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வெடிப்பை ஏற்படுத்துகிற இறந்த செல்களின் பாதிப்புகளிலிருந்து விடுபட முடியும்.

தோல் பரப்பை நன்கு தளர்வாக வைப்பதன் மூலம் அதனை அழகாகவும் புத்துணர்வு உடனும் வைத்துக் கொள்ள முடியும்.

சிறிது சர்க்கரையும் தேனும் கலந்து உதடுகளில் தேய்ப்பதன் மூலம் இயற்கையான இளஞ்சிவப்பு நிற உதடுகளைப் பெற முடியும்.

2. உதட்டுக்கு இரவில் தேன் உபயோகித்தல்:

குளிர்ச்சியான காலத்தின் இரவு நேரங்களில் உதடு கடுமையாக பாதிக்கப்படுகிறது. இதற்கு தேன் மிகச்சிறந்த மருந்தாக பயன்படுகிறது.

அது தோலின் ஈரப்பதத்தை தக்கவைத்து உதடுகளுக்கு நீர்ச்சத்தைக் கொடுக்கிறது. தேனில் இயற்கையான ஈரம் கவரும் தன்மை உள்ளதால் உதடுகளுக்கு ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் கொடுக்கிறது.

3. உதடுகளை கடிக்காதீர்கள்:

குளிர்காலத்தில் உங்கள் உதடுகளை கடித்தால் உலர்ந்த தோலின் தன்மையை அது பாதிக்கும். வெடிப்புகளினால்உதட்டிலிருந்துரத்தம்வருவதற்கானவாய்ப்புஉண்டு. அவ்வாறான சமயத்தில் எச்சையை கொண்டு உதடுகளை தேய்க்கக் கூடாது. இதன் மூலம் உதடுகளின் வறட்சியை தவிர்க்க முடியும். உதட்டு தைலத்தை சரியான கால அவகாசத்தில் உபயோகிப்பதன் மூலம் நல்ல உதட்டுத் தன்மையை பெற முடியும்.

லெமன் சாறு, தேன், நெய் மற்றும் வெள்ளரிக்காய் உபயோகிப்பதன் மூலம் நல்ல முன்னேற்றம் காணலாம்.



# கரட் சட்னி

**தேவையான பொருள்கள்**

**கரட்- 04**
**பச்சை மிளகாய்- 03**
**பூண்டு- 3 பற்கள்**
**புளி நெல்லிக்காய்- தேவையான அளவு**
**எள்- ஒரு தேக்கரண்டி**
**தேங்காய்த் துருவல்- 3 தேக்கரண்டி**
**உப்பு- தேவையான அளவு**
**கறிவேப்பிலை, கடுகு, உளுந்து,**
**சீரகம், பெருங்காயம்,**
**தே. எண்ணெய்- தேவையான அளவு**

**செய்முறை**

கரட்டை சிறு சிறு துண்டுகளாக நறுக்கவும். எள், சீரகப் பொடி, உப்பு, புளி ஆகியவற்றைச் சேர்த்துச் சிறிது தண்ணீர் விட்டு நன்றாக அரைத்தெடுக்கவும். எண்ணெய்ச் சட்டியில் சிறிது எண்ணெய் விட்டு கடுகு, உளுந்து, பெருங்காயம் போட்டுத் தாளித்து, அரைத்த சட்னியில் சேர்க்கவும். இந்த சட்னி ரவை உப்புமா, இட்லி உப்புமா, இட்லி தோசையுடன் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.,



# இடையழகு வேண்டுமா?

துடியிடை, மின்னலிடை என்றெல்லாம் வர்ணிக்கப்படும் இடையழகை நீங்களும் பெறுவதற்கு உணவுப் பழக்கத்தையும் இலேசான உடற்பயிற்சியையும் மேற்கொண்டால் போதும். இதோ அந்த உடற்பயிற்சி...

படுத்து எழுதல் எனும் "சிட் அப்ஸ்" உடற்பயிற்சியைத் தினமும் அரை மணி நேரம் செய்யுங்கள். ஆனால், அதனை அதற்குரிய வழிமுறைகளுடன் செய்தால்தான் உரிய பலன் கிடைக்கும். முதலில் மல்லாக்கப் படுத்த நிலையில் இரு கைகளையும் தலைக்குப் பின்புறம் கோர்த்து வைத்துக்கொள்ளுங்கள். கைகளைத்தளர்வில்லாமல் இறுக்கமாக்கிக் கொண்டு, தரையிலிருந்து ஓர் அடி உயரத்துக்குப் பிணைந்திருக்கும் கைகளை உயர்த்துங்கள். உங்கள்தலையும்உடம்பும்உயரும். இரண்டு விநாடிகள் அந்த நிலையில் வைத்திருந்து விட்டுப் பின்னர் பழைய நிலைக்கு வாருங்கள்.

அதேபோல இடப்பக்கக் கை முட்டியால் வலது முழங்காலையும்வலதுகைமுட்டியால்இடது முழங்காலையும் தொட முயற்சிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இடுப்பின் பக்கவாட்டுத் தசைகள் இழுபடுவதை உணரமுடியும்.

# மிளகு...

**ஏழு துளசி இலைகளுடன் மூன்று முழு மிளகு சேர்த்து மென்று சாப்பிட்டு வர காய்ச்சல் குறையும்.**

**கால் கரண்டி மிளகு தூளை மோரில் கலந்து அதில் நறுக்கிய சின்ன வெங்காயத்தைச் சேர்த்துக் குடித்தால், கொழுப்புக் குறையும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்நிலம் காணாத் தவிக்கும் தளிர்கள்



நிர்த்தேவ்

பலநாள்கள் கடந்தும் தீர்வுகள் எட்டப்படாமல் கேப்பாபிலவு மக்களின் அறவழியிலானஅறவழி ப் போராட்டம் அந்த வான்படை முகாமுக்கு முன்பாக அமைதியாகத் தொடர்கின்றது. வயது, பால் வேறுபாடின்றி குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பனியிலும் வெயிலிலும் இரவு பகலாக அங்கு வாடிக் கிடக்கின்றனர். அவர்களுள் அடங்கும் ஏராளமான சிறுவர்களும் தம்மை வாட்டிக் கொண்டு போராடி வருகின்றனர். கல்வியைத் தவிர்த்து மனதளவில் பாதிக்கப்பட்டவர்களாய் அந்தச் சிறுவர்கள் போராட்டத்தில் காட்டிக் கொண்டிருக்கும் ஈடுபாட்டை அவர்கள் வரைந்துள்ள ஓவியங்கள் புடம்போட்டுக் காட்டுகின்றன. வெறும் கிறுக்கல்களாகவும் குறியீடுகளாகவும் வெளித் தெரியும் அந்த ஓவியங்களில் ஏராளம் அர்த்தங்களைப் புதைத்து வைத்திருக்கிறார்கள் அந்தச் சிறுவர்கள்.

### விதைக்கப்படும் விசம்

போர் முடிந்ததும் மாதிரிக்குடியிருப்பில் சில காலம் அமர்த்தப்படுவதாகக் கூறிக் குறித்த பகுதிக்குள் குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்க்கை இராணுவத்தின் கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் தொடர்ந்தும் நிகழ்ந்தது. அதுவே அவர்களுக்கு நிரந்தரமும் ஆனது. தமது காணிகளில் வான்படை தரித்திருப்பதும் அதைப் பார்த்தபடியே மாதிரிக்கிராமத்தில் வசதிகளற்றுத் தாம் வாழ்வதும் எத்தனை கொடுமையானது என்ற சிந்தனைகள்தான் இந்தச் சிறுவர்களின் ஓவிய வெளிப்பாடுகள். இவர்கள்தான் இனி வரும் இளைஞர்கள். இவர்களது மனதில் இப்போது விதைக்கப்படும் இந்த விதை எப்படி விருட்சம் கொள்ளும் என்பதைக் கடந்த மூன்று தசாப்த கால வரலாற்றிலிருந்து கூடச் சிங்கள அரசு புரிந்துகொள்ளாதிருப்பது தான் கவலை தரும் விடயம்.

### அறிவித்தல் பலகையின் எதிரொலி

இந்தப் போராட்டத்தில் தமது உரிமைக்காக வாடிநிற்கும் பல சிறுவர்கள், அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளனர். இராணுவமயமாக்கப்பட்ட கேப்பாப்பிலவில் தாம் அகதி களாக்கித் தாழ்த்தப்பட்ட மாதிரிகளாக நடத்தப்படுவதை அவர்கள் உணர்கிறார்கள். ஆகையால் அமைதியாகவும் ஆதங்கத்துடனும் தமது ஏக்கங்களையும் எதிர்பார்ப்பையும் ஓவியங்களாகக் காண்பித்துள்ளனர். கடந்த பல நாள்களாக நடைபெற்றுவரும் போராட்டத்தில் இவர்களின் கருத்துக்கள் வெளிப்படுத்த வாய்ப்பளிக்கப்படவில்லை. ஆனால் இராணுவத்தால், 'இது விமானப்படைக்கான காணி. அத்துமீறி உள் நுழைந்தால் சுடப்படுவீர்கள்'என்றுஅச்சுறுத்தல் பலகைகள் அங்கு ஒன்றன்பின் ஒன்றாக நடப்பட்டதன் பின்னர் அதன் விளைவாகச் சிறுவர்களின் ஓவியங்கள் அனேகமானவற்றில் இந்த அச்சுறுத்தல் பலகை பாதிப்பை ஏற்படுத்தியது.

### கல்வி தொடரும் சிறார்கள்

கேப்பாப்பிலவுப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கச் செல்பவர்களினதும் ஊடகவியலாளர்களினதும் ஒளிப்படக் கருவிகளின் பார்வைகளை இந்த ஓவியங்கள் ஈர்த்துள்ளன. தவழ்ந்து திரிந்த வீட்டிலும் ஓடிவிளையாடிய முற்றத்திலும் சீருடைகள் தரித்திருப்பதை ஏற்க மறுக்கும் எந்தவொரு அரசியல் கலப்படமுமற்ற ஆதங்கங்களாகவே இந்த ஓவியங்கள் திகழ்கின்றன. இன்னும் சில குழந்தைகள் தமது பூர்வீக மண்ணில் தம் பிஞ்சுக் கால்களின் தடங்களைப் பதிப்பதற்கான முனைப்பில் பெற்றோரின் நிழலைத்தொடர்ந்து அவர்களும் போராட்டத்தில் முக்கியமான தமது பங்களிப்பைக் செலுத்துகின்றனர். கேப்பாப்பிலவில்



வியாபித்து ஆக்கிரமித்திருக்கும் விமானப்படை முகாம்களைத் தாண்டி சிறுவர்கள் பாடசாலை செல்வதிலுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளால் சில நாட்களாகப் பள்ளிசெல்லவில்லை. இருந்தபோதிலும் அழிக்கமுடியாத சொத்தான கல்வியை அவர்கள் மறுதலிக்கவுமில்லை. வீதியின் மருங்கில் புழுதி மண்ணில் அவர்கள் கல்வி கற்பதிலிருந்து ஆதிக்க வர்க்கத்தை அடக்கக்கூடிய ஒரே ஆயுதம் கல்வி என்பதில் அவர்கள் தெளிவாக உள்ளமை புரிகின்றது.

### மாறுபட்டிருக்கும் மனநிலை

முட்கம்பிகள் எப்பொழுதுமே எமது இனத்துக்கு அபாயக்குறியீடாகவே காண்பிக்கப்படுகின்றன. இராணுவத்தினரின் ஆதிக்கத்தைக் குறிக்கும் முட்கம்பி வேலிகள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தும்வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இந்த முட்கம்பிக் குறியீடு போரின் வடுக்களாக சிறுவர்களின் மனதில் பதிந்துள்ளதை இந்த ஓவியங்கள் வெளிப்படுத்தியுள்ளன. முட்கம்பி வேலிகளை விரும்பாத சிறுவனொருவன் சிவப்புப் புள்ளடியூடாகத் தனது வெறுப்பை வெளிப்படுத்தியிருக்கின்றான். அவர்களின் ஓவியத்தில் பயன் தரு தென்னை போன்ற மரங்கள் இருப்பதையும் காணமுடிகிறது. கேப்பாப்பிலவு பெண்களுக்குரிய வாழ்வாதார நிலங்களாகவும் விளைச்சல்மிகு மண்ணாகவும் அடையாளப்படுத்தப்படக்கூடிய வளங்களைக் கொண்ட பூமி என்பதை இந்த ஓவியங்கள் நினைவுபடுத்துகின்றன.

### கைகளில் கருவிகளைத் தீர்மானிக்கும் முடிவு

தமது சொந்த நிலத்தையும் வீட்டையும் அடையவேண்டுமென்ற அந்தச்சிறார்களின் ஆசையைக்கூடக் கண்டுகொள்ளமுடியாத அரசின்மீது நமக்கிருந்த நம்பிக்கை கேள்விக்குறியாகிறது. அரச பிரதிநிதிகளும் அதிகாரிகளும் அரச வாக்குறுதிகளைக் காவிவருகின்ற வெறும் தபாற்காரர்களாகச் செயற்படுவதையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டோர் வருந்திக் கொள்வது எமது துரதிர்ஸ்டவசமே. தூரிகையையும் பேனாவையும் ஏந்தித் தமது போராட்டத்தில் பங்களிப்பைச் செய்துள்ள சிறுவர்களின் எதிர்காலச் சிந்தனைகளை எப்படிக் கையாள்வது என்பதும் அவர்களின் கரங்களில் பேனா வையும் தூரிகையையும் மட்டும் தக்கவைத்துக்கொள்வதும் இனி அரசின் முடிவிலேயே தங்கியுள்ளது. இந்த அறப்போர் வெற்றிபெறுவதே அறவழியின் வலிமையை நிரூபிக்கின்ற ஒரு சந்தர்ப்பமாக அமையும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையிலிருந்து...!





**முஸ்லிம் காங்கிரஸில் தனக்கு நேர்ந்த நிலைக்கு மத்தியில் மார்க்கக் கடமைக்காக உம்றாவுக்குப் பயணம் சென்ற முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி, இந்த வாரம் திரும்பி வந்ததும் தலைமைக்கு எதிராகப் பொங்கி எழுவாரா? என்ற எதிர்பார்ப்புடன் தென்கிழக்கு மக்கள் உள்ளனர்.**

அனார்கலி

**கரையோரம் அம்போ?**

முஸ்லிம் காங்கிரஸ் நீண்ட காலமாக வலியுறுத்தி வந்துகொண்டிருந்த அம்பாறையில் புதிய கரையோர மாவட்டம் குறித்த கோரிக்கைகளை அந்தக்கட்சி அம்போவெனக் கைவிட்டு விட்டதா? எனத் தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் இப்போது பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடுகளில் தொடர்ச்சியாக இந்தக் கரையோர மாவட்டக் கோரிக்கைத் தீர்மானங்களில் மாநாட்டுத் தீர்மானங்களிலும் உட்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், அண்மையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் 27ஆவது பேராளர் மாநாட்டுத் தீர்மானங்களில் குறித்த கரையோர மாவட்டக் கோரிக்கைத் தீர்மானம் உட்படுத்தப்படாமை சல சலப்பை ஏற்படுத்தியுள்ளது.

"புதிய அரசமைப்பில் அம்பாறை கரையோர மாவட்டம் குறித்த தீர்மானங்கள் உட்படுத்தப்படாவிட்டால் பிரதி அமைச்சர் பதவியைத் தூக்கி வீசிவிட்டு மக்களிடம் வருவேன்." எனச் சபதமிட்டிருந்த முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பிரதி அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸிடம் இது பற்றி வினவியபோது, கட்சியின் அடுத்த உயர்பீடக் கூட்டத்தில் தீர்மானம் உட்படுத்தாமை குறித்து தாம் கேள்விக்கணைகளைத் தொடுக்கவிருப்பதாகக் கூறியுள்ளார்.

**தனிச் சிங்களம்!**

அம்பாறை மாவட்டச் செயலகத்திலிருந்து தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் பெரும்பாலான சுற்றறிக்கைகள், அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள் தனிச் சிங்கள மொழியிலேயே அனுப்பி வைக்கப்படுவதாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் வருத்தம் தெரிவித்துள்ளதுடன், உரிய மேலிடங்களுக்கு ஆட்சேப மகஜரையும் அனுப்பி வைத்துள்ளார். அத்துடன் சுற்றறிக்கைகளைத் தமிழில் மொழிபெயர்த்து நடைமுறைப்படுத்துவதில் பிரதேச செயலாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தனைக்கும் அங்கு மேலதிக மாவட்டச் செயலாளராகவிருக்கும் தமிழ்பேசும் மகன் ஒருவரின் ஒப்பத்துடன் கூட சில தனிச் சிங்களச் சுற்றறிக்கைகள் வருகின்றன எனவும் லோகநாதன் விசனம் தெரிவிக்கிறார்.

**போராட்டம்**

கல்முனை வலய ஆசிரியர்களுக்குச் சம்பள நிலுவை வழங்கப்படாமையை ஆட்சேபித்தும் அவற்றைத் தாமதமின்றி வழங்கக் கோரியும் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றில் குதித்திருந்தனர்.

இலங்கை மகா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்முனை வலயக் கல்வி அலுவலகம் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் பெருமளவு ஆசிரியர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. அதில் மாகாணக் கல்விப் பணிப்பாளரே... சம்பள நிலுவை வழங்கல் தொடர்பில் நீங்கள் தந்த வாக்குறுதிகள் காற்றில் பறந்து விட்டனவா? கல்முனை வலயம் அரசியல் அதிகாரமற்ற வலயமா? நல்லாட்சிக்குக் களங்கம் விளைவிக்காதே. என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் ஏந்தியிருந்தனர்.

**திடீர் சந்திப்புக்கள்**

கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிடவென முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த கூட்டு முன்னணி ஒன்றை ஆரம்பிப்பதில் முனைப்புக் கொண்டுள்ள இடைநிறுத்தப்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்து சந்திப்புக்களை நடத்தத் தொடங்கியுள்ளார்.

இத்தகைய சந்திப்புக்களில் ஒன்று சில தினங்களுக்கு முன் மாவடிப்பள்ளி கிராமத்தில் நடைபெற்றபோது நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு அவரிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்தபோதும் பட்பட்டெனக் கச்சிதமான பதில்களை பஷீர் அளித்திருந்தார். இளைஞர்களைக் கிளர்ந்தெழச் செய்யும் காய் நகர்த்தலோ இது...?

**அமோகம்! அமோகம்!**

அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பமாகி அமோகமாக நடைபெற்றுவரும் நிலையில், இம்முறை விவசாயிகளுக்குச் சிறந்த விளைச்சல் கிடைத்து வருகின்றது. இந்த நிலையில் 66கிலோ கொண்ட ஒரு மூடை நெல் 2,600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

**ஏன் இந்தப்புறக்கணிப்பு?**



1989ஆம் ஆண்டு கல்முனை தமிழ் மக்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட கல்முனைத் தமிழ் பிரதேச செயலகம் 27 வருடங்கள் கழிந்தும் முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்படவில்லையென கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம். இராஜேஸ்வரன் கவலை வெளியிட்டுள்ளார். நிதி மற்றும் காணி விடயங்கள் இன்னமும் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டதாகவே உள்ளன. கல்முனை தமிழ் பிரதேச செயலகத்துக்கு அதில் ஏன் இந்தப் புறக்கணிப்பு எனத் தமிழ் மக்கள் கேட்கின்றனர். தமிழ்த் தலைமைகளின் காதுகளுக்கு இந்தக் குரலாவது கேட்குமா...?

**அபாயச் சங்கு**

ஒலுவில் மீன்பிடித்துறைமுக நிர்மாணத்தையடுத்து, அந்தப் பகுதியில் நிலவி வந்த கடலரிப்பைத் தடுக்க கரையோரங்களில் பெரிய கற்கள் அடுக்கப்பட்டன. இதன் காரணமாக அங்கு தடைப்பட்ட கடலரிப்பு அயல் கிராமங்களுக்குத் தாவியுள்ளது.

குறிப்பாக நிந்தவூர்ப் பகுதியில் வழமையை விடவும் சுமார் நூறு மீற்றர் வரை கரையை நோக்கி கடல் பெருகி அலைகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

நிந்தவூர்ப் பிரதேச இணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதிச் சுகாதார அமைச்சர் எம்.பைஸால் காசிம் இந்தப் பாதிப்புப் பற்றிக் கூறி அபாயச் சங்கை ஊதி விட்டதுடன், விரைந்து அதனைத் தடுக்க உபாயங்களை வகுக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார். நடக்குமா அந்தக் காரியம்?

**பொங்கி எழுவாரா?**

முஸ்லிம் காங்கிரஸில் தனக்கு நேர்ந்த நிலைக்கு மத்தியில் மார்க்கக் கடமைக்காக உம்றாவுக்குப் பயணம் சென்ற முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி, இந்த வாரம் திரும்பி வந்ததும் தலைமைக்கு எதிராகப் பொங்கி எழுவாரா? என்ற எதிர்பார்ப்புடன் தென்கிழக்கு மக்கள் உள்ளனர்.

அடிப்படை சித்தாந்தத்திலிருந்து விலகி சர்வாதிகாரத்தை நோக்கி முஸ்லிம் காங்கிரஸ் செல்கிறது என உரத்துக் கூறியுள்ள ஹஸனலி தலைமைத்துவத்தின் அநியாயத்தை ஊர் ஊராகச் சென்று விளக்குவேன் எனவும் சபதமிட்டிருந்தார். இந்தக் கிராம யாத்திரை எப்போது ஆரம்பமாகுமோ?

**அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பமாகி அமோகமாக நடை வரும் நிலையில், இம்முறை விவசாயிகளுக்குச் சிறந்த விளைச்சல் கிடைத்து வருகின்றது. இந்த நிலையில் 66கிலோ கொண்ட ஒரு மூடை நெல் 2,600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருசுவில் தமிழ்தாசன்



## நகைச்சுவைத் தொடர்

# ஓவசி... 04



சிறுவயதிலேயே பெற்றோரை இழந்துவிட்ட சிங்கார வேலனைத் தாய் மாமன் தணிகாசலமே தன்னுடன் வைத்து வளர்த்து வந்தார். ஆனால் இவன் இப்போது பாடசாலையை விட்டுப் படிக்கப் போகாது ஊர்வம்பளந்து திரிவதனால்அவரும்இவனைவீட்டைவிட்டு விரட்டிவிட்டார். வெட்டியாக ஊர்சுற்றிக் கொண்டிருந்த சிங்கார வேலன் கெட்ட நண்பர்களின் நட்பைக் கெட்டியாகப் பிடித்து விட்டான். கண்ட இடத்தில் படுக்கை. நிரந்தரமாக எந்தவிதமான வேலைகளுமில்லை. வயிற்றுப்பசியைப் போக்குவதற்காக நண்பர்களுடன் சேர்ந்து ஏதாவது தரகுதம்பட்டங்கள், சுத்துமாத்துக்களில் நாள்களை ஓட்டினான்.

சிங்காரவேலு பார்ப்பதற்கு ஒரு ஜல்லிக்கட்டுக்காளையாகக் கம்பீரமாகத் தோற்றமளித்தான். போதிய உடற்பலமிருந்தும் கூடக், கஷ்டப்படாது உடலை வருத்தாது ஏதாவது அடாவடிகள் செய்தே வயிறு வளர்ப்பதில் ஆர்வமாயிருந்தான். எவையெல்லாம் துர்ப்பழக்கமோ அத்தனையையும் ஐயந்திரிபறக் கற்றுவிட்டான். நாதன், தீபன், நகுலன் போன்றவர்களே இவனுடைய நல்லாசான்களாகப் பணிபுரிந்து அவனையும் தங்களுடைய வரிசையில் சேர்த்துவிட்டார்கள். சிங்காரவேலன் கச்சிதமாகக் கற்றுக்கொண்டவைகளொன்றும் ஆயகலைகளோ, தூயகலைகளோவல்ல. அத்தனையும் தீய கலைகளே. அத்தனை கலைகளையும் கற்பித்த நண்பர்கள் அத்துடன் அவனை விடவில்லை. அவனுக்கொரு பட்டமும் சூட்டி அதை அந்த உரிலேயே பிரபல்யப்படுத்தியும் விட்டார்கள்.

ஆம்! சிங்காரவேலனுக்கு இப்போதைய புதிய பெயர் ஓவசியர். நீர்ப்பாசனத்திணைக்களத்திலோ வீதி அபிவிருத்திப்பகுதியிலோ வேலை பார்க்கும் ஓவசியரல்ல. வெட்டியாக வீதியில் அலைவதால் இப்படியொரு விசித்திரமான பட்டம் அவனுக்கு. அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டபடியால் அவனுடைய இயற்பெயர் சேற்றுக்குள்ளே புதைந்து போன ஊசியாகக் காணாமலே போய் விட்டது. இப்போது ஓவசியர் என்றால் தெரியாதவர்களே கிடையாது. அந்த அளவுக்கு அவனுடைய புதிய பெயர் அவனுடன் ஒட்டிக் கொண்டது.

இப்படியே நாள்கள் ஓடிக் கொண்டிருக்க எப்படியோ ஓவசியருக்கும் பதினெட்டு வயதாகிவிட்டது. கிட்டத்தட்ட ஒரு முழுவாலிபனாகவே அவனைத் தோற்றமளிக்கவைத்தது அவனுடைய இயல்பான பருத்த உடல்வாகு.

'மச்சான் ஓவசி...! உந்தக் கண்டறியாத கூலி வேளையையெல்லாம் விட்டிட்டு ஒரு புது வேலையொண்டு செய்வமோடா...!'

'அதென்னடா நாதன். அரச உத்தியோகம் ஏதேனும்...!'

அப்பாவித்தனமாக ஓவசி கேட்டான். 'அதொண்டுமில்லையடா. எங்கடை ஊருக்குப் பக்கத்து ஊருகளிலை இன்னும் கரண்ட் வரயில்லை. அங்கை ஒருத்தரிட்டயும் ரீ.வீ. இல்லை. நாங்கள் ஒரு ரீ.வியும், டெக்கும், இஞ்சினும் வாங்கினமெண்டால் படம் ஓடி உழைக்கலாம் மச்சான். உடம்பிலை நோகாமல் நல்லாய் உழைக்கலாம் என்ன சொல்லுறாய்...?'

'பிளான் நல்லாய்த் தானிருக்கடா. அதெல்லாம் வாங்கக் காசுக்கு எங்க போறது?' 'கவலையை விடு! அதுலீசிங்கிலை வாங்கலாம். உழைச்சு மாதம், மாதம் கட்டலாம் தானேடா பேயா'

நாதனின் இந்த ஐடியாவும் நன்றாகத்தானிருந்தது. தீயாரைக் காண்பதுவும் நன்றே! தீயாரோடிணங்கியிருப்பதுவும் நன்றே! தீயார் சொற்கேட்பதுவும் நன்றே என்று ஒரு புது எண்ணம் அவனுடைய மனத்தில் நுழைந்து முகாமிட்டு விட்டது. இனி அவன் நண்பர்களின் புத்திமதிகளையும் ஆலோசனைகளையும் தான் கேட்டு நடப்பான். யாரும் அவனுடைய வழியில் குறுக்கிடமுடியாது.

'டேய் ஓவசி! படம் ஓடேலாமல் உழைப்புக்குறைஞ்சிட்டுதுஎண்டால்ரீ.வீயை வைச்சு உழைக்கிறதுக்கு இன்னுமொரு நல்ல வழியிருக்குது. நல்ல காசுவாங்கலாம்'

'விளங்கயில்லை'

'இஞ்சை காதைக் கொண்டாடா'

ஓவசி காதைக் கொடுத்தான். நண்பன் நகுலன் தன்னுடைய பங்குக்கு ஒரு புது ஐடியா கொடுத்தான். ஓவசியின் காதுக்குள் ஏதோ கிசுத்தான். இவனுக்கோ ஒன்றும் சரியாகவிளங்கித் தொலையவில்லை.

'என்னடா விளங்கிச்சுதோ?'

'ஒரு கோதாரியும் விளங்கயில்லை. காதுக்கை கூச்சமாய்க் கிடக்கடா'

மீண்டும் ஓவசியின் காதுக்குள் வாயைவைத்து சற்று உரக்கச் சொன்னான் நகுலன். தந்தை சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளின் கருத்தை முருகப் பெருமான் சொல்லிக் கொண்டிருக்கும் ஒரு அரும் பெரும் புராணகாலக் காட்சியாக அது அமைந்திருந்தது.

'ஓ! ஓ! இப்ப விளங்கீட்டுது...விளங்கீட்டுது. ஓம் மச்சான்! நீ சொல்லறதும் நல்லது தான்'

சிரிப்பையடக்க முடியாது ஓவசி தொடர்ச்சியாகச் சிரித்துக் கொண்டேயிருந்தான். அதை நினைக்க நினைக்க மீண்டும் சிரிப்பு பொத்துக்கொண்டுவந்தது.

> இப்படியே நாள்கள் ஓடிக் கொண்டிருக்க எப்படியோ ஓவசியருக்கும் பதினெட்டு வயதாகிவிட்டது. கிட்டத்தட்ட ஒரு முழு வாலிபனாகவே அவனைத் தோற்றமளிக்க வைத்தது அவனுடைய இயல்பான பருத்த உடல்வாகு.



> ஆம்! சிங்காரவேலனுக்கு இப்போதைய புதிய பெயர் ஓவசியர். நீர்ப்பாசனத் திணைக்களத்திலோ வீதி அபிவிருத்திப் பகுதியிலோ வேலை பார்க்கும் ஓவசியரல்ல. வெட்டியாக வீதியில் அலைவதால் இப்படியொரு விசித்திரமான பட்டம் அவனுக்கு. அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டபடியால் அவனுடைய இயற்பெயர் சேற்றுக்குள்ளே புதைந்து போன ஊசி-யாகக் காணாமலே போய் விட்டது. இப்போது ஓவசியர் என்றால் தெரியாதவர்களே கிடையாது. அந்த அளவுக்கு அவனுடைய புதிய பெயர் அவனுடன் ஒட்டிக் கொண்டது.

# அழியும் இனம் நீ...



அழிந்துகொண்டு
இருக்கின்றோம்
எம் நாட்டில் எமக்கு
விடுதலை இல்லை...

தமிழா நீ
சுயநலம் கொள்ளாதே!
அழிவது உன் இனம்தான்,
விழித்து எழு!
தயங்காதே,

இது உன் நாடு!
உன்னை மட்டும்
பாதுகாத்துக்
கொள்ளாதே!

தமிழ் வளர்த்த
எம் நாட்டில்
தமிழ் இனம் இன்று
வழியின்றித்
தவிக்கிறது
உணர்ந்து கொள்.

தலைமுறை
தலைநிமிர்ந்து வாழ
இன்றே சபதமெடு.

தமிழனாய்
தலை நிமிர்ந்து வாழ்ந்திடு!
தயங்காது போரிடு,

த.சர்மினி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரிசியிலும் அரசியல்

ஸ்டரோ ஸ்வாமி

நாட்டின் ஆட்சியைத் தீர்மானிப்பதில் பாணின் விலை செல்வாக்குச் செலுத்துகிறது என்றார்கள். தற்போது அந்தச் செல்வாக்கு பாணில் இருந்து அரிசிக்குத் தாவி விட்டதோ...! என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கிறது. கடந்த திங்கட்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன், அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் அரிசிக்குப் போலியான தட்டுப்பாட்டை உருவாக்கி; நாட்டில் சதி நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டதாக குற்றஞ்சாட்டியிருக்கிறார். தற்போது சந்தையில் 400,000 மெற்றிக் தொன் அரிசி இருப்பதாகத் தெரிவித்திருக்கும் அவர், .இதுவரைக்கும் 86,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

கடந்த ஆண்டுக்கான பருவ மழை வீழ்ச்சி பொய்த்துப் போனதன் காரணமாகவடக்கு கிழக்கு உட்பட்ட நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வறட்சியும் வறட்சியோடு இணைந்த விளைவுகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன. வறட்சி காரணமாக நெற்செய்கை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரிசிக்கான விலை மற்றும் கேள்வி அதிகரிக்கத் தொடங்கியிருந்தன. இது, அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலையை அறிவிக்கச் செய்ததுடன், அரிசியை இறக்குமதி செய்வத ற்கான ஏற்பாடுகளை யும் தூண்டி விட்டிருந்தது.

**இலங்கையின்**
**உள்நாட்டு நெல் உற்பத்தி**

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் புள்ளியியல் பிரிவின் தரவுகளின் அடிப்படையில் நெல் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவுப் போக்கையே காண்பிக்கிறது. அதுவும் 2015ஆம் ஆண்டில் தன்னிறைவு 12.9வீதமாகும். 2015ஆம் ஆண்டுக்குரியநெல்உற்பத்திமதிப்பீட்டுவிவரங்களின் பிரகாரம்,.2015 - 2016 பெரும்போகத்தில் மாத்திரம் 29,02,693 மெற்றிக் தொன் நெல் விளைவிக்கப்பட்டி ருக்கின்றது. அத்துடன் உள்நாட்டு நெல் உற்பத்தியில் அதிகளவான விளைச்சல் அநுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியிருக்கின்றது. 365,988 மெற்றிக் தொன் நெல் விளைச்சல் அங்கிருந்தே பெறப்பட்டிருக்கின்றது. இது தேசிய உற்பத்தியில் 13 வீதமாகும். அநுராதபுரத்தைத் தொடர்ந்து அம்பாறை, குருநாகல் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள் நாட்டின் தேசிய நெல் உற்பத்தியில் அதிகம் பங்களித்திருக்கின்றன.

அரசியல் மேடைகளில் அரிசி பேசுபொருளானதைத் தொடர்ந்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி இறக்குமதியாளர்களுடன் விசேட சந்திப்பு ஒன்றையும் நடத்தியிருந்தார். கடந்த 14ஆம் திகதி நடந்த இந்தச் சந்திப்பில் சந்தையில் ஒருபோதும் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் மக்களுக்கு நியாயமான விலையில் அரிசியை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு முறைமை உடனடியாக ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ரிசாத் பதியுதீன், பி. ஹரிசன் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ. அபேயக்கோன் ஆகியோரும் கலந்து கொண்ட மேற்படி சந்திப்பில் அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரிசி விலை தொடர்பான பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் தொடர்பான முன்மொழிவுகளும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

**இரண்டு முறை அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை**

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்த அரசு அது தொடர்பான விலை அறிவிப்பைப் பிரகடனப்படுத்தியிருந்தது. இதன் பிரகாரம், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சம்பா இன அரிசி கிலோ ஒன்று 80 ரூபாவாகவும் நாடு வகை அரிசி கிலோ ஒன்று 72 ரூபாவாகவும், கெகுளு வகை அரிசி கிலோ ஒன்று 70 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் சந்தைக்கு வரத்தொடங்கியதைத் தொடர்ந்து, கடந்த 17ஆம் திகதி புதிய கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இதில், முன்பு அறிவிக்கப்பட்ட விலைகளுக்கு மேலதிகமாக வேறு சில அரிசி வகைகளுக்கும் விலைகள் வெளியிடப்பட்டிருந்தன. குறிப்பாக உள்நாட்டு நாடு வகை அரிசி கிலோ ஒ்ன்று 80 ரூபாவாகவும், உள்நாட்டு கெகுளு வகை அரிசி கிலோ ஒன்று 78 ரூபாவாகவும், உள்நாட்டு சம்பா அரிசி கிலோ 90 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

இலங்கையருக்கான மாதாந்த அரிசித் தேவை 200,000 மெற்றிக் தொன் ஆக காணப்படுகையில், இலங்கையில் அரிசி விலை பிராந்திய விலைகளுடன் ஒப்பிடுமிடத்து அதிகம் என்று கூறப்படுகின்றது. இந்த அதிகரித்த விலைக்குரிய காரணம் இறக்குமதித் தீர்வையாகும். அண்மைய அரிசி நெருக்கடியை தொடர்ந்து சந்தையில் அரிசி கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் கிலோவுக்கு 75 ரூபாவாகவிருந்த இறக்குமதித் தீர்வை அரசினால் 5 ரூபாவாகக் குறைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சமையலறைகளிலும் சபை சந்திகளிலுமே பேசு பொருளாக இதுவரை இருந்த மேற்படி அரிசி விவகாரம், அரசியல் மற்றும் ஊடகங்களின் கவனயீர்ப்புக்களைப் பெற்றதைத் தொடர்ந்து நுகர்வோர் விவகார அதிகாரசபையும் தனது நடவடிக்கைகளை நாடு முழுவதும் முடுக்கிவிட்டி ரு... கின்றது. அரிசி விலைத் தள... பல் மற்றும் அதுபற்றிய இ... முறைப்பாடுகளை மேற்கொ... வதற்காக 1977 எனும் அவச... தொலைத்தொடர்பு இல... கத்தை அறிவித்திருக்கிறது.

**பரஸ்பர குற்றச்சாட்டுக்க...**

வறட்சியைத் தொடர்ந்... எழுந்துள்ள அரிசிக்கான கே... வியைப் பலரும் தமக்குச் சாத... கமான முறையில் கையாள... முனைவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அரசு தனது கையிருப்பில் உள்ள நெல்லை சந்தைக்கு முறையாக அனுமதிக்காமையே நெருக்கடிக் குரிய காரணம் என்கிறார்கள் அரிசி ஆலை உரிமையாளர்கள். மாறாக அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைப் பதுக்குவதனாலேயே இந்தத் தட்டுப்பாடு நிலவு வதாகத் தெரிவிக்கின்றது அரச தரப்பு.


கடந்த ஆண்டில் தன்னிறைவைக் கண்டிருந்த இலங்கையின் அரிசி உற்பத்தி, இந்த ஆண்டு வறட்சி காரணமாக எவரிடமோ தங்கிவிட்ட நிலவரத்தைத் தோற்றுவித்திருக்கின்றது.

இது, சொந்த மண்ணில் விளைந்த சோற்றுப்பருக்கைகள் இலங்கையரின் உணவுச் சங்கிலியில் முதலிடத்தில் இருப்பதை எப்போதும் உறுதி செய்யும்.



**இலங்கையருக்கான மாதாந்த அரிசித்-தேவை 200,000 மெற்றிக் தொன்ஆக காணப்படுகையில் இலங்கையில் அரிசி விலை பிராந்திய விலைகளுடன் ஒப்பிடுமிடத்து அதிகம் என்று கூறப்படுகின்றது. இந்த அதிகரித்த விலைக்குரிய காரணம்இ றக்குமதித் தீர்வையாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வலை விரிக்கும் வருகைகள்

சந்திரசேகர ஆசாத்

‘நல்லாட்சி’ அமைக்கப்பட்ட பிற்பாடு இலங்கை, அரசியல் பயணங்களைக்கூட ஓர் அரசியலாகவே மாற்றி விட்டது. அரசியல்வாதிகளின் வெளி நாட்டுக்கான பயணங்களும் வெளிநாட்டு ராஜதந்திரிகளின் உள்நாட்டுக்கான வருகைகளும் அதிகரித்துள்ளன. ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டமைச்சர்கள் உட்பட அரசதரப்பினரின் பயணங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கைக்குள் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடனேயே மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டாலும் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அந்த நாடுகள் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வைப்பதற்கான மறைமுக நோக்கத்துக்காகவே இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிநாட்டு ராஜதந்திரிகள் பலரும் வருகை தந்து இலங்கை அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவது மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பல்வேறு தரப்பட்ட அரசியல்வாதிகள் மக்கள் அமைப்பினர் ஆகியோருடன் கலந்துரையாடியும் வருகின்றனர்.

அந்த வகையில் இலங்கை அரசும் வெளிநாட்டு ராஜதந்திரிகளை இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் ஆசிகளையும் ஆதரவையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதுடன் முதலீடுகளை மேற்கொள்ளும்படியும் வரிவிலக்கு உட்படப் பல சலுகைகளைச் செய்வதாகவும் வாக்களித்து வருகின்றது. எப்படியிருப்பினும் இங்கு வருகை தரும் வெளிநாட்டுப் பிரமுகர்களிடம் இங்கு சமாதானமும் நல்லிணக்கமும் நிலவுவதாகக் கூறி ஐ.நாவில் இலங்கைக்கு ஆதரவான சூழலை உருவாக்குவதான முயற்சிகளும் அவர்களின் வருகையின் போது வெகு அவதானமாகவும் கனகச்சிதமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்குவதான ஒரு மாயையை உருவாக்கச் சில முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இந்திய வெளியுறவுச் செயலர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரின் வருகை முக்கியமான தொன்று. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் மிக முக்கியமானவை. தமிழர்களைப் புறந்தள்ளுபவை.

‘இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பு ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். அதன் பின்னர் எவ்வளவோ நடந்து விட்டது. வடக்குக் கிழக்கு இணைப்பு மேசையில் இருக்கட்டும், யாதார்த்தத்தை உணர்ந்து செயற்படுங்கள்’

‘வடக்கு கிழக்கு முன்னேற்றத்துக்கு இந்தியா பல முதலீடுகளைச் செய்கின்றது. இவை இந்தியாவுக்குச் சாதகமாக அமைந்தாலும் வடக்கு, கிழக்கு மக்களுக்கும் நன்மை பயப்பதாக அமையும். நீங்கள் வடக்குக் கிழக்கில் இந்திய முதலீடுகளுக்குத் தடையாயுள்ளீர்கள்’

‘பேச்சு மேசையில் நீங்கள் கேட்பவை நூறு வீதமும் கிடைக்குமென எதிர்பார்க்கக்கூடாது. கிடைத்ததைப் பெற்று மேலும் முயற்சிக்க வேண்டும்’ இவை தான் அவரின் கருத்துக்கள்.

எமது பிரச்சினையை இந்தியாவின் உதவியுடன் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறும் தமிழ்த் தரப்பைச் சேர்ந்த சிலருக்கு இவர் கூறியிருப்பவ்வை இந்தியாவின் உண்மையான நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகின்றன.

> **‘பேச்சு மேசையில் நீங்கள் கேட்பவை நூறு வீதமும் கிடைக்குமென எதிர்பார்க்கக் கூடாது. கிடைத்ததைப் பெற்று மேலும் முயற்சிக்க வேண்டும்’ இவை தான் அவரின் கருத்துக்கள். எமது பிரச்சினையை இந்தியாவின் உதவியுடன் தீர்ப்ப தற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறும் தமிழ்த் தரப்பைச் சேர்ந்த சிலருக்கு இவர் கூறியிருப்பவை இந்தியாவின் உண்மையான நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகின்றன.**

### யதார்த்தம் எது என்பதை உணராதிருக்கும் இந்தியா

வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது நிலங்களின் இணைப்பு அல்ல. அது தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை தொடர்பான பிரச்சினை. வடக்கு கிழக்கு என்பது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடம், தமிழ் முஸ்லிம் மக்களின் மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பன இந்த வடக்கு கிழக்கிலேயே வேர் விட்டு நிலைபெற்றுள்ளன. அத்துடன் நாட்டிலுள்ள ஏனைய இனத்தவர்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழமுடியுமா? என்பதை கடந்த காலங்களிலிருந்து கற்றுணர்ந்துள்ளார்கள். ஆகையால் தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரியத் தாயகம் இணைக்கப்பட்டு மக்களின் வாழ்க்கை பாதுகாக்கப்படவேண்டும். வடக்கு கிழக்குப் பிரிக்கப்படுமானால் கிழக்கு மாகாணம் தமிழ் மக்களிடமிருந்தும், முஸ்லிம் மக்களிடமிருந்தும் பறிக்கப்பட்டுச் சிங்கள மயப்படுத்தப்படும் ஆபத்தைத் தவிர்க்க முடியாது. இது இந்தியாவுக்குத் தெரியாததல்ல. அப்படியான ஒரு நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பைப் பேச்சு மேசையில் வைத்துக் கொண்டே யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி ஆலோசனை செய்வதன் அர்த்தம் என்னவாக இருக்க முடியும்.

### தமிழ், முஸ்லிம் ஒற்றுமையைக் குலைப்பதற்கு...

இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் வடக்குக் கிழக்கு இணைப்பு சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட்டபோதும் அதன் பின்பு ராஜீவ் கொலை உட்பட ஏராளமான விடயங்கள் நடந்து விட்டது என்கிறார். ராஜீவ் கொலைக்கும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழிடம் பிரிக்கப்படுவதற்கும் என்ன தொடர்பு. அப்படியானால் ராஜீவ் கொலை மேற்கொள்ளப்பட்டமைக்கான பழிவாங்கல் நடவடிக்கையாக வடக்குகிழக்குத் துண்டாடப்படுவது நியாயப்படுத்தப்படுகின்றதா?

2010, 2015 ஆகிய காலப்பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு இணைந்த உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் என்ற கோரிக்கையை முன் வைத்ததாலேயே மக்கள் செல்வாக்கை அதிகரித்தது. தனக்கு எதி ராகப் போட்டியிட்ட சகல கட்சிகளையும் புறந்தள்ளி வடக்கு கிழக்கு மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.கவின் வரலாற்றில் மீண்டும்...

இ.யசோதா



எம்.ஜி.ஆர் மறைவதற்கு முந்தைய நாள் வரை அ.தி.மு.கவின் தலைமைப் பொறுப்புக்கு ஜெயலலிதா வருவார் என்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனாலும் பின்னர் ஜெயலலிதா அந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். எம்.ஜி.ஆரைவிட மக்கள் மத்தியில் அதிக உயிர்ப்புடன் இருந்தது ஜெயலலிதாவின் ஆட்சியே என்று கருதுமளவுக்கு 'அம்மா' என்ற வணிகக் குறியீட்டில் பல நலத் திட்டங்கள் அவரால் ஆரம்பிக்கப்பட்டன. எம்.ஜி.ஆர் என்ற பெரும்புள்ளி மீது மக்கள் கொண்டிருந்த பற்றுதலை ஜெயலலிதாவின் இவ்வாறான திட்டங்கள் மெல்ல நீர்த்துப்போகச்செய்தன. இதன்மூலம் உளவியல் ரீதியாக மக்கள் மத்தியில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டார் ஜெயலலிதா.

### அ.தி.மு.காவுக்குள் ஜெயலலிதா

ஜெயலலிதா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவே படிப்படியாக ஜெயலலிதாவை உயர்த்தியிருந்தது. ஆனால் தமிழ் நாட்டை ஆளுகின்ற தலைமை தனக்கு கிடைக்கும் என்று அப்போது ஜெயலலிதா கனவும் கண்டிருக்க மாட்டார். திரைப்படத்துறைக்குள் புகுந்த பின்னர் ஜெயலலிதா எம். ஜி. ஆர் இடையிலான நட்பு 'ஆயிரத்தில் ஒருவன்' எனும் திரைப்படத்தின் ஊடாக மலர்ந்தது. எம்.ஜி.ஆரின் அரசியல் பிரவேசம் 60களில்தான் ஆரம்பித்திருந்தது. இந்தக் கால கட்டத்தில் இவர் நடித்த திரைப்படங்கள் மேலோங்கிக் காணப்பட்டன. அதுவே அவருடைய அரசியல் வளர்ச்சிக்கு அடிகோலியது. எம்.ஜி.ஆர் மக்கள் மத்தியில் நிஜத்திலும் கதாநாயகனாக உருவெடுத்தார். இந்த வேளையில் தான் அதாவது 1967இல் தமிழ் நாட்டுச் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸை வீழ்த்தி தி.மு.க வெற்றி பெற்றது. அண்ணா முதலமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆனாலும் 1969இல் அண்ணா சாவடைந்தார். அந்த இடத்தை நிரப்புவதற்காகக் கருணாநிதி முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்றார். இப்போது எம்.ஜி ஆருக்கும் கருணாநிதிக்கும் இடையில் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

கடலூரில் நடைபெற்ற அ.தி.மு.கவின் கூட்டம் ஒன்றில் ஜெயலலிதாவை எம்.ஜி.ஆர். தனது கட்சியாளராக அறிமுகப்படுத்தினார். ஜெயலலிதாவை கட்சிக்குள் கொண்டு வருவதற்கு அந்தக் கட்சியில் உள்ளவர்கள், ஒரு பிராமணரை எவ்வாறு கட்சிக்குள் என்று...? கூச்சலிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆனாலும் ஜெயலலிதாவுக்குச் சத்துணவுத் திட்டப் பொறுப்பாளர் பதவி வழங்கப்படுகின்றது. இதனை அவர் பரப்புரைகள் மூலம் தமிழ் நாடு முழுவதும் முன்னெடுத்தார். அதில் கண்ட வளர்ச்சி காரணமாக அடுத்த ஆண்டில் 'கொள்கை பரப்புச் செயலாளர்' எனும் பதவி வழங்கப்பட்டது. இதன் பின்னர் படிப்படியாக ஜெயலலிதா பதவி உயர்வு பெறுகிறார்.

### அன்றைய அ.தி.மு.க

சில காலப்பகுதிக்குள் எம்.ஜி.ஆர் சுகவீனம் காரணமாக அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரைப்பார்வையிடுவதற்கு ஜெயலலிதா பல்வேறு வழிகளிலும் முயன்றும் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. 1987இல் எம்.ஜி.ஆர். சாவடைகின்றார். சாவுச் சடங்கிலும் ஜெயலலிதா பல்வேறு அவமானங்களை எதிர் கொள்கின்றார். எம்.ஜி.ஆரின் சாவுக்குப் பின்னர் அவரது மனைவி ஜானகி முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரை முதலமைச்சராகத் தெரிவுசெய்வதற்கு காங்கிரஸ், தி.மு.க. எதிர்ப்புத் தெரிவித்தன. சட்ட சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் ஜெயலலிதாவைவிட ஜானகி அதிக ஆதரவைப் பெற்று முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சட்டமன்றத்துக்குள் கலவரம் நிகழ்ந்தது. கலவரத்தைக் காரணம் காட்டி மத்திய அரசு, 23நாள்கள் வரை முதலமைச்சராகவிருந்த ஜானகியின் ஆட்சியைக்கலைத்தது.

### இன்றைய அ.தி.மு.க

அ.தி.மு.கவின் வரலாற்றில் ஏலவே நிகழ்ந்துவிட்ட மேற்கூறிய நிகழ்வு திரும்பவும் பழைய நிலைக்கு ஒருதடவை தாவியிருக்கின்றது. ஜெயலலிதா அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்குப் பதிலாக முதலமைச்சராக இருந்த ஓ. பன்னீர்செல்வம், ஜெயலலிதாவின் அண்ணண் மகள் தீபா, கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் ஜெயலலிதாவைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.
பின்னர் நிகழ்ந்த ஜெயலிதாவின் சாவு, பன்னீர்செல்வத்தின் பதவி விலகல், சசிகலாவின் சிறைவாசம் என்பவற்றின் தொடர்ச்சியாகப் பின்னர் எடப்பாடி பழனிச்சாமி ஆளுநரால் முதலமைச்சராக்கப்பட்டார். தனது ஆட்சியமைப்புக்குப் பலத்தை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தும் போது அன்று நிகழ்ந்ததைப் போன்று தி.மு.க. எதிர்த்தது. பின்னர் ஸ்ராலின் அதற்கெதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார். அன்று ஜானகியின் அரசு கலைக்கப்பட்டது போன்று இன்று எடப்பாடியின் அரசும் சிலவேளைகளில் மத்திய அரசால் கலைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



# வலை விரிக்கும்....

ஏகமனதாகத் தமது வாக்குகளை வழங்கினர். மேற்படி தேர்தலில் முஸ்லிம் காங்கிரசும் வடக்குக் கிழக்கு இணைப்பை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டது. ஆனால் வடக்குக் கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து வடக்குக் கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் என்ற கோரிக்கைக்கு ஜனநாயக வழியிலான தமது ஆதரவை கூட்டமைப்புக்கே வழங்கினர். ஆனால் ஜெய்சங்கர் தமிழ் முஸ்லிம் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான கருத்தையும் வெளியிட்டுள்ளார். அதாவது கிழக்கில் 37வீதமாக இருந்த முஸ்லிம்கள் வடக்குக் கிழக்கு இணைப்பின் மூலம் 1987இல் 12 வீதமாக மாற்றப்பட்டனர் எனக் கூறியுள்ளார். இது முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடக்கு, கிழ்க்கு இணைப்புக்கு எதிராக அவர்களைத் திருப்பிவிடும் துர்நோக்கம் கொண்டதென்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. எப்படியிருப்பினும் தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகவும் பாரம்பரிய வாழிடம் என்ற உரிமைக்கெதிராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நடந்து கொள்ளும்படி அழுத்தம் கொடுப்பது இந்தியா, சிங்களப் பேரினவாதிகளுக்குச் சேவை செய்யும் ஒரு போக்கே.

### எந்த முதலீட்டைக் கூட்டமைப்பு எதிர்த்தது

சம்பூர் அனல்மின் நிலையத்திட்டம் ஒன்றைவிட இந்தியாவின் வேறு எந்த ஒரு திட்டத்தையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்த்ததாகத் தெரியவில்லை. சுற்றுச்சூழலுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்படுமாதலால் பன்னாட்டு அளவில் சீனாவையும் இந்தியாவையும் விட ஏனைய உலக நாடுகளில் இத்தகைய நிலக்கரி மூலமான மின்உற்பத்தி கைவிடப்பட்டும் விட்டது.
சம்பூர் விவசாயமும் மீன்பிடியும் முக்கிய தொழிலாகக் கொண்ட ஒருபிரதேசம். இந்த மின்நிலையத்திலிருந்து வெளியேறும் தூசு கலந்து புகை சாம்பல் காபனீரொக்சைட் நைதரசன் உட்பட்ட வாயுக்கள் என்பன விவசாய நிலங்களைத் தரிசாக்குவதுடன் நீரையும் மாசுபடுத்திவிடும். மக்கள் சுவாசநோய், சிறுநீரகப் பாதிப்பு என்பவற்றுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுவிடும். மேலும் இந்தப் பகுதிக்கடல் 18 கண்டமேடைகளைக் கொண்டதாகும். இங்கு தான் மீன்வகைகளின் இனப்பெருக்கம் இடம்பெறும். இங்கு அனல்மின் நிலையத்தின் சுடுநீர்கழிவுகள் என்பன கலக்கும்போது சம்பூரில் மட்டுமன்றி முழுக் கிழக்குக் கடலிலும் மீன் வளம் அழிந்து போகும் நிலை ஏற்படும்.
2006ஆம் ஆண்டு படை நடவடிக்கைகள் காரணமாக இங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் பல தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாக மீண்டும் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீண்டும் தமது சொந்த இடங்களிலிருந்து விரட்டப்படும் நிலையும் உருவாகும். எனவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சம்பூர் அனல்மின் நிலையம் தொடர்பாகத் தனது எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார். அவரின் எதிர்ப்பை இல்லாமல் செய்யும் வகையிலேயே ஜெய்சங்கரின் மிரட்டல் அமைந்துள்ளது.

### கிடைப்பதைப் பெற்றுக்கொள்ளுங்கள்

ஆட்சிப் பீடத்தினர் தாம் விரும்பி வழங்குவதைக் கைகட்டி வாய்பொத்தி வாங்கிக் கொள்ளவா 30 வருடங்கள் அஹிம்சை வழியிலும் 30 வருடங்கள் குருதி சிந்தியும் போராடினோம். இலட்சக்கணக்கான உறவுகளை இழந்தோம். ஊனமுற்றவர்களானோம். விதவைகள் நிறைந்த சமூகமானோம். ஊர் ஊராய், நாடு நாடாய் இடம்பெயர்ந்தோம்.
அதாவது இந்திய வெளியுறவுச் செயலரின் வருகை இந்தியாவின் பொருளாதார ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் நோக்குடனேயே மேற்கொள்ளப்பட்டது உண்மை. ஆனால் அதற்குப் பலிப்பொருள்களாகத் தமிழ் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளான வடக்குக் கிழக்கு இணைப்பு, மீள்குடியேற்றம், சுயநிர்ணய உரிமை என்பவற்றைத் தாரை வார்ப்பதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை இணங்கவைக்கவிரிக்கப்பட்ட வலையே ஜெய்சங்கரால் கொடுக்கப்பட்ட அழுத்தங்களாகும்.
தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு இந்தியா ஒரு வலிமையான எதிரி என்பது 1987 தொட்டே எமது மக்களால் உணரப்பட்ட விடயம். எனினும் எம்மில் சிலரின் மயக்கத்தை அல்லது மயக்கம் போன்ற தோற்றத்தை ஜெய்சங்கர் கலைத்து விட்டார். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவரையும் எதிர்பாராமல் எமது மக்களின் பலத்தை நம்பியே எமது போராட்டத்தைத் தொடர வேண்டிய தேவையை உணர்த்தியுள்ளமை ஒரு நல்ல அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை நம்பியவர் வென்றதில்லை

வெற்றி என்பது தானாக வந்து மடியில் விழுந்து விடாது. வெற்றிப் பயணத்தின் போது தடங்கல்கள், தோல்விகள் வழமையானவை என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு ஈடுபாடு குறையாமல் தொடர்ந்தும் பயணப்படுங்கள்.

நிவின்



நமது அன்றாட வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் பல திறமைசாலிகளைப் பார்த்து ஆச்சரியப்படுவோம். இவர்கள் பிற்காலத்தில் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றுப் பிரபல்யமா வார்கள் என்று கணித்திருப்போம். ஆனால், நாளடைவில் அவர்களில் மிகச் சிலரே வெற்றியடைகிறார்கள். பெரும்பாலானவர்கள் நாம் எதிர்பார்த்தது போன்று சாதனைகள் புரிவதில்லை. அவர்களில் சிலர் இருந்த சுவடே தெரியாதபடி காணாமல் போய்விடுவதுமுண்டு.

வெற்றியடைந்தவர்களைக் கண்டு ஆச்சரியப்படுவதைவிட, அதிக திறமை கொண்டவர்களாக நாம் கணித்தவர்கள் சாதிக்காமல் போனது ஏன்? என்று ஆதங்கப்படுவது அதிகமாயிருக்கின்றது. பாடசாலையில் கபடி விளையாட்டில் கில்லாடியாக இருந்த நீங்கள், தற்போது சம்பந்தமே இல்லாமல் கணக்காளராகக் கணக்கு எழுதிக்கொண்டிருக்கிறீர்களே என்று அவ்வாறான ஒருவரைக் கேட்டால், அவர், 'எல்லாம் விதிதான்' என்று சாதாரணமாகப் பதிலளித்துவிட்டுச் செல்வார். 'விதி' என்ற ஒற்றைச் சொல்லில் அவர்களது இயலாமைகளை, முயற்சியின்மைகளை மறைத்துக் கொள்வர். விதி என்ற சாட்டுப்போக்குத் தங்களுக்குத் தாங்களே எழுதிக்கொள்ளும் முடிவுரை என்ற உண்மை அவர்களுக்குப் புரிவதில்லை. விதி என்பது எழுதப்படுவது அல்ல, ஏற்படுத்திக்கொள்வது என்பதே நிதர்சன உண்மை. தோல்வியடைந்த மனிதர்களை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், அவர்களிடம் கீழ்க் கண்டவாறான சில குணாதிசயங்கள் இருப்பதைக் காணமுடியும்.

1. சாதனை புரிந்தே தீர வேண்டும் என்ற திடம் இருப்பதில்லை. இவ்வாறு திட மில்லாதவர்களிடம் எத்தனை திறமை இருந்தும் பயனில்லை.

2. ஒரே குறிக்கோளுடன்; தொடர்ச்சியாக ஒரே விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை. இன்று ஒன்றில் ஆர்வமாக இருப்பவர், நாளை வேறொன்றில் தீவிர ஈடுபாடு காட்டுவார். சில நாள்களில் மீண்டும் வேறொன்றின் மீது ஆர்வம் என்று தமது இலக்கை மாற்றிக்கொண்டே இருப்பார்கள்.

3. சிலர் தற்காலிகத் தோல்விகளால் பின்வாங்கி விடுவார்கள். தற்காலிகத் தடங்கல்களும் நிராகரிப்புக்களும் தோல்விகளும் முயற்சிகளைக் கைவிட அவர்களுக்குப் போதுமானவையாக இருக்கும். இவ்வாறான தவறுகளை இப்போது வெற்றியாளர்களாகக் காட்சியளிப்பவர்கள் ஒருபோதும் செய்ததில்லை. உதாரணத்துக்கு வரலாற்றில் இடம்பிடித்த எடிசனின் சாதனைகள் எப்படிச் சாத்தியமானவை? எத்தனை தோல்விகளைச் சந்தித்தாலும் திடமான உறுதியுடன் தனது கண்டுபிடிப்பில் தொடர்ந்தும் ஈடுபட்டு வெற்றியை அடைந்தவர் அவர். மின்குமிழைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சியில் 10,000க்கும் மேற்பட்ட தடவைகள் தோற்றிருந்தார். ஆனாலும் அது அனைத்தையும் தாண்டிய திடமான அவருடைய திறமை இப்போது வரலாற்றில் என்பதை விதியைச் சாடி விலகி விடுபவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எடிசனுக்கு இந்த உலகம், தோல்வி, கிண்டல், கேலி போன்ற சான்றிதழ்களை அளித்தாலும், அவை எதையும் அவர் பொருட்படுத்தவில்லை. எப்படியும் வெற்றி கிடைக்கும் என்ற தன்னுடைய குறிக்கோளில் திடமாகவிருந்தார். வெற்றியும் கண்டார். ஆகையால் திறமை மட்டுமே வெற்றிபெறப் போதுமானதல்ல என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவர்களுக்குத் தானாக வெற்றி வந்து மடியில் விழுந்தும் விடாது. வெற்றிப் பயணத்தின்போது தடங்கல்கள், தோல்விகள் வழமையானவை என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு ஈடுபாடு குறையாமல் தொடர்ந்தும் பயணப்படுங்கள். விதி என்ற சாட்டுப்போக்கை உதறித்தள்ளுங்கள். நீங்களும் உயர்வீர்கள்.



## தமிழர் இனம்

கட்டிக் காத்த தமிழர் வீரம்
காட்டிக் கொடுத்து
சரிந்து போச்சு...
பேணிக் காத்த
தமிழர் இனம் இப்போ

தோணி ஏறி வந்த இனம்.
வீரத்தில் தேர்ந்த இனம்
[illegible]
இன்று நடுவீதியில் உரிமைக்காய்
கையேந்தி நிற்கின்றது

- இனியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# நாயகனாக மாறினார் சந்தானம்

நகைச்சுவை நடிகராக இருந்து நாயகனாகக் கள மிறங்கியுள்ள சந்தானம் கைவசம் தற்போது 'சர்வர் சுந்தரம்', 'ஓடி ஓடி உழைக்கனும்', 'சக்க போடு போடு ராஜா' 'மன்னவன் வந்தானடி' ஆகிய படங்கள் உள்ளன. அதில், ஓடி ஓடி உழைக்கனும் படத்தில் சந்தானம் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். அது வும் போக்கிரி படப் பாணியில் நடிப்பதாகக் கூறப்படுகிறது.

அதாவது 'போக்கிரி' படத்தில் விஜய், முதலில் போக்கிரியாக இருந்து ஒவ்வொரு வில்லன்களுடனும் சகஜமாகப் பழகி, கடைசியில் தலைமை வில்லனைப் பிடிப்பார். அதேபோல், இந்தப் படத்தில் சந்தானம், முதலில் தான் பொலிஸ் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், ரவுடிகளைக் கடைசியில் எப்படி வீழ்த்துகிறார் என்பது போல் கதையை உருவாக்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்தப் படத்தை 'கண்ணா லட்டு தின்ன ஆசையா' படத்தை இயக்கிய மணிகண்டன் இயக்குகிறார். ஜிப்ரான் இசையமைக்கிறார். கோபிநாத் ஒளிப்பதிவைக் கவனிக்கிறார். 'அனேகன்' படத்தின் நாயகி அமைரா தஸ்தூர் இந்தப் படத்தின் நாயகியாக நடிக்கிறார். வாசன் விசுவல் நிறுவனம் இந்தப் படத்தை பிரம்மாண்டமாகத் தயாரிக்கிறது.



தருபவர்: வித்யா.



**மேடம்:** திட்டமிட்டுப் பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் இருப்பர். வாகனப் பயணம் இனிதாக அமையும்.

**இடபம்:** நேர்மை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினரின் பரிசும், பாராட்டும் வந்து சேரும்.

**மிதுனம்:** சிலர் உங்களைக் குறை சொல்லக் காத்திருப்பர். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர். மாணவர்கள் கல்வியில் முன்னேறுவர்.

**கடகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சாதனை படைப்பீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்ப வளர்ச்சிக் கண்டு பெருமிதம் கொள்வர்.

**சிங்கம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற குறுக்கீடு விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெறுவர்.

**கன்னி:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் பணம், நகை இரவல் கொடுப்பது கூடாது.

**துலாம்:** உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரம் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** அக்கம் பக்கத்தினர் நட்புப் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் விரும்பிய இட மாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர்.

**தனுசு:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப வளர்ச்சிக் கண்டு மகிழ்வர்.

**மகரம்:** தாமதித்த செயல் மளமளவென நிறைவேறும். நல்லவர்களின் நட்பும், உதவியும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் வளர்ச்சி பெறும். குடும்பத் தேவை தாராள செலவில் பூர்த்தியாகும்.

**கும்பம்:** செயலில் நிதானம் காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் அடக்கு முறைக்கு ஆளாவர். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர்.




# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 6 | | | 4 |
| | | | 3 | | | 1 | | |
| | | | 2 | | | | 7 | 9 |
| | 9 | | | 3 | | | 1 | |
| | 5 | | 6 | | 8 | | 3 | |
| | 6 | | | 2 | | | 5 | |
| 6 | 8 | | | | 4 | | | |
| | | 3 | | | 2 | | | |
| 4 | | | 5 | | | | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 3 | 8 | 6 | 2 | 7 | 9 | 4 |
| 2 | 8 | 4 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 |
| 9 | 7 | 6 | 1 | 3 | 4 | 8 | 2 | 5 |
| 7 | 6 | 8 | 5 | 9 | 3 | 1 | 4 | 2 |
| 3 | 4 | 9 | 2 | 1 | 6 | 5 | 7 | 8 |
| 5 | 2 | 1 | 7 | 4 | 8 | 9 | 6 | 3 |
| 6 | 1 | 2 | 3 | 5 | 7 | 4 | 8 | 9 |
| 4 | 3 | 5 | 6 | 8 | 9 | 2 | 1 | 7 |
| 8 | 9 | 7 | 4 | 2 | 1 | 3 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாளை

**மாசி-15**

திங்கட்கிழமை -27.02.2017
திதி: பிரதமை மு.இ. 08.19
நட்சத்திரம்: சதயம் மு.ப.07:48
சுபநேரம்:12.29-01.59 வரை
ராகுகாலம்:07.59-09.29 வரை

சோளிகிட் முறையிலான பஞ்சாபிகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. சோளிகிட்டாகவும் அணிந்துகொள்ளலாம். விரும்பினால் பாவாடை அணியாமல் பஞ்சாபியாகவும் அணிந்து கொள்ளலாம். இவை 6 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# இலட்சியங்களை அடைய குழந்தைகளுக்கு வழிகாட்டுங்கள்

சிறந்த இலட்சியங்களை குழந்தைகள் மனதில் விதையுங்கள். கடுமையாக உழைத்தால்தான் வெற்றிகளை பெறமுடியும் என்று கூறி, கடுமையாக உழைக்கக் கற்றுக்கொடுங்கள்.

குழந்தைகளை வளர்ப்பது பெற்றோருக்கு பொறுப்பு நிறைந்த பணி. அவர்கள் தங்கள் பொறுப்பை சரிவர நிறைவேற்றினால் தான், நமது நாட்டுக்கு சிறந்த குடிமகன்கள் கிடைப்பார்கள். அதனால் பெற்றோர் தங்கள் கோபம், ஆத்திரம், மன அழுத்தத்தை குழந்தைகளிடம் காட்டக்கூடாது. அதுபோல் எதிர் மறையான கருத்துக்களையும் குழந்தைகளிடம் திணிக்கக்கூடாது.

**குழந்தை வளர்ப்பில் பெற்றோர் கவனிக்க வேண்டிய விடயங்கள்:**

குழந்தைகள் செய்ய விரும்பும் செயல்களுக்கெல்லாம் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருக்காதீர்கள். வேண்டாம், அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று பேசுவதையே வழக்கமாக கொண்டிருக்காதீர்கள். எல்லாவற்றுக்கும் தடைபோடும், எப்போதும் தடை போடும் பெற்றோர்களை குழந்தைகள் அவ்வளவாக விரும்பமாட்டார்கள். அதே நேரத்தில் எல்லா செயல்களுக்கும் குழந்தைகளை அனுமதிக்க முடியாதல்லவா! அதனால் எந்தக் காரியத்தை குழந்தைகள் செய்யக்கூடாது என்று நினைக்கிறீர்களோ, அந்தக் காரியங்களை ஏன் செய்யக்கூடாது? என்றும் விளக்கிவிடுங்கள். செய்யக்கூடிய காரியங்களுக்கும், செய்யக்கூடாத காரியங்களுக்கும் எப்போதும் விளக்கங்கள் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

பருவத்திற்கு ஏற்ற செயல்களைச் செய்ய ஊக்குவிக்கவேண்டும். சமையல் அறையில் தாயும், தந்தையும் லாவகமாக பயன்படுத்தும் கத்தியை தானும் எடுத்து பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் குழந்தைக்கு வரலாம். அப்போது கத்தியை கவனமின்றி பயன்படுத்தினால் ஏற்படும் ஆபத்துக்களை விளக்க வேண்டும். அதுபோல் கண்ணாடி, கிளாஸ் கைநழுவி கீழே விழுந்தால் என்னவாகும் என்பதையும் சொல்லுங்கள். அப்போதுதான் நீங்கள் எதிர்பார்க்கும் பயன் கிடைக்கும். அதை விட்டுவிட்டு பதறிப்போய் கத்தியை பிடுங்குவது, கண்ணாடி கிளாசை கையில் கொடுக்க மறுப்பது போன்றவை எல்லாம் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.

கஷ்டம், முடியாது என்ற இரு வார்த்தைகளையும் குழந்தைகளிடம் அதிகம் பயன்படுத்தவேண்டாம். **அது அவர்கள் ஆழ் மனதில் பதிந்து போய்விடும்.**

(தொடரும்)



# தலை சீவும் போது யோசிக்க வேண்டியவை



பெண்களே தலை சீவும் போது முக்கியமாக இந்த விடயங்களை கண்டிப்பாக கவனிக்க வேண்டும்.

தலைக்கு குளித்தவுடன் கூந்தலை சீவ வேண்டாம். ஏனெனில் கூந்தலானது ஈரமாக இருக்கும் போது சீவினால் முடியில் முடிச்சுகள் மற்றும் சிக்குகள் அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சீப்பை கொண்டு சீவினால் முடியானது கொத்தாக வேரோடு தான் வரும்.

கூந்தலை சீவும் போது மண்டை ஓட்டில் நன்கு பதியும்படி நன்கு சீவ வேண்டும். கூந்தலும், தலைச்சருமமும் ஒன்றல்ல. ஆகவே கூந்தலை சீவும் போது தலைச்சருமத்தில் நன்குபடும்படி சீவினால் தலைச்சருமத்தில் குருதி ஓட்டம் அதிகரித்து மயிர்க்கால் நன்கு வளரும். இவ்வாறு தினமும் செய்தால் கூந்தலானது நன்கு ஆரோக்கியமாக வளரும்.

கூந்தலை முதலில் சீவ ஆரம்பிக்கும் போது கூந்தலின் முனையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். ஏனென்றால் கூந்தலில் முடிச்சுகளானது முனையிலேயே அதிகமாக இருக்கும். ஆகவே அப்போது முதலில் இந்த முடிச்சுகளை அகற்றிப் பின் ஆரம்பித்தால் கூந்தல் உதிராமல் இருக்கும். இல்லையென்றால் கூந்தல் வேரோடு தான் வரும்.

மேலும் கூந்தலை இறுக்கமாக கட்டக்கூடாது. நிறையப் பேர் இந்த மாதிரியே கூந்தலைக் கட்டுகின்றனர். கூந்தலை பொனி ஸ்ரைல் போடக் கூடாது. அப்படி போட்டால் முடியானது இடையில் கட் ஆகி உதிரும்.

# ஞாபக சக்தியை அதிகரிக்கும் பர்வதாசனம்



பர்வதாசனத்தை செய்வது மிகவும் சுலபம். இந்த ஆசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும். இந்த ஆசனத்தை எப்படிச் செய்வது என்று பார்க்கலாம்.

**செய்முறை:**

விரிப்பில் கவிழ்ந்து படுக்கவும். கைகளை நெஞ்சருகே பக்கவாட்டில் கொண்டு வரவும். உள்ளங்கை பகுதியினையும், பாதங்கள் இரண்டையும் தரையில் பதித்த படியும் உடலை மேல் நோக்கிய படி முக்கோண வடிவத்தில் படத்தில் உள்ளபடி உயர்த்தவும்.

பின் தலையினை இரு கைகளுக்கிடையே தொங்க விடவும். இப்படி 20 வினாடிகள் இருந்து பின்நிதானமாக உடலை பழைய கவிழ்ந்த நிலைக்கு கொண்டு வரவும். இவ்வாறு இந்த ஆசனத்தை 3 முதல் 5 முறை செய்யவும்.

குருதி அழுத்தம் உள்ளவர்களும், ஒரு தலைவலி, கண் நீர் முட்டல் போன்ற கண் நோய் உள்ளவர்கள் இந்த ஆசனத்தை செய்யக் கூடாது.

**பலன்கள் :**

தலை, மூளைப்பகுதி, கழுத்து, மார்பு, நுரையீரல்பகுதிகளுக்கு குருதி ஓட்டம் சீராக அமையும். ஞாபக சக்தியை அதிகரிக்கும். கண்பார்வை சீராகும். கை, கால்களின் மூட்டு பலமடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளின் சமாதி....

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் கேசவனின் நண்பன் ஒருவனின் உறவுமுறைக்கார பாட்டி ஒருவருடன் இருவரும் இணைந்து கொண்டனர். பாட்டியின் வீடு சிறிய ஒரு கொட்டில்தான். இப்போது. பாட்டியோடு மூவர். குடிசையும் கர்ப்பவதியாகிக் கொண்டது.

கண்ட கடிய வேலைகள் எவற்றுக்கும் சென்று வியர்வை சிந்தி உழைத்தான் கேசவன். அவ்வாறு உழைத்து அவன் கொண்டு வரும் பணத்தை ஒருவாறு மிச்சம் பிடித்து சேமித் தாள் ரேகா. குடும்பச்சக்கரம் மெல்லச் சுழலத் தொடங்கியது.

வாரங்கள் மாதங்களாகிக் கொண்டிருக்க ரேகாவின் வயிற்றிலும் சுமையொன்று தரித்துக்கொள்ளலானது. சுமையைச் சுகமாக ஏற்றுக்கொண்டவளாய் நாள்களை நகர்த்திக் கொண்டிருந்தாள்.

அறுவைச்சிகிச்சை மூலம் அழகானதொரு பெண் குழந்தை அச் சொட்டாய் அவளைப் போலவே. பிரசவ வேலைகளை எதுவித சலிப்புமின்றி பாட்டி பொறுப்பேற்றுச் செய்தாள். நாள்கள் உருண்டோடின.

வேலைக்குச் சென்ற கேசவன் இன்னும் வீடு திரும்பியிருக்கவில்லை. தாமதமாகும் என்றால் போகும்போதே கூறிவிட்டுச் செல்லும் வழக்கமுடையவன். இன்று அவ்வாறு எதுவும் சொல்லியிருக்கவுமில்லை. வானத்தை மட்டுமல்ல ரேகாவின் மனதையும் இருள் கௌவிக்கொண்டது.

"எடி மோனை ஒண்டுக்கும் யோசியாத தம்பி வந்திடுவான். முத்தத்தில இராத புள்ளையையும் வைச்சுக்கொண்டு இருக்கிறாய். உள்ள வா மோனை..."

பாட்டியின் வார்த்தைகள் அவள் மனதைச் சற்றுச் சாந்தமடையச்செய்தாலும், ஏனோ அது நிரந்தரமாயில்லை...அவள் மனதில் சிந்தனைகள் வலிந்து படிமப்படுத்தப்பட்டன. அவளால் எந்தவொரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

கண்கள் பனித்தன..

"பாட்டி, ஏன் பாட்டி இன்னும் இவரை காணேல்ல... கடவுளே.."

ஊர்க்கோயில்கள் எல்லாவற்றுக்கும் விதம்விதமான நேர்த்திகள் மனம் தடுமாறியது.

திடீரெனத் தொலைபேசி அழைப்பு... மறுமுனையில் ஆண் ஒருவரின் குரல்; ஆனால் அது கேசவனாய் இருக்கவில்லை.

"சின்னதொரு அக்சிடென்ற்... கேசவனுக்குக் காயம்தான். ஒண்டுக்கும் யோசிக்காதைங்க. ஆஸ்பத்திரில விட்டிருக்கு" அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

அதிர்ந்து போனாள். கைகால் எல்லாம் பதறிற்று. அந்தத் தகவல் அவளை நிலை குலைய வைத்தது... அவளால் எதையும் சிந்திக்க இயலவில்லை. வைத்தியசாலை நோக்கி நடக்கலானாள்.

கேசவன் உயிர் பிழைக்கவில்லை. அதிகளவில் குருதி வெளியேறியதுடன் முப்பது நிமிடங்களுக்குப் பின்னரே வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதாலும் அவனது உயிர் பிரிந்தது.

நிர்க்கதியற்றவளாய்ப் பாட்டியின் துணையுடன் காலத்தை ஓட்டியவளுக்குத் தொடர்ந்தும், காலத்தை வெல்வது பெரும் சவாலாக இருந்தது. பிள்ளைக்கும் இரண்டு வயது கடந்துவிட்டது. கூலிவேலைகள் யாவற்றுக்கும் சென்று மாடாய் உழைத்துத் தேய்ந்த செருப்பாகிப் போனாள் ரேகா. கிடைக்கின்ற பணம் அன்றாட வாழ்வுக்கே போதுமாக இருந்தது. ரோகாவால் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தெரிந்த ஒருவரின் உதவியுடன் சவூதிக்கு வேலைக்குச் செல்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளத் தலைப்பட்டாள்.

"பாட்டி, சர்மிக்கும் வயது ஏறிட்டு போகுது, இனி அவளை பள்ளிக்கூடம் சேர்த்தால் அந்தச் செலவுகளையும் பார்க்க வேணும்.. ஒருசதம் காசும் கையில இல்லாமல் இங்கையிருந்து என்னத்தைச் செய்ய பாட்டி..."

"அப்ப என்ன மோனை செய்யப்போறாய்?" "வெளிநாடு போவமெண்டு யோசிக்கிறன்..."

"புள்ளை, ஏன் இந்த முடிவு.. அங்கதானே பொம்பிளையளுக்கு ஒரே பிரச்சினையாம்.... அடிக்கடி ரேடியோவிலயும், பேப்பரிலயும் உந்தக் கதையாய்த் தானே கிடக்கு..."

"பாட்டி.... இது பிரச்சினையில்லாத இடம்... நல்ல ஏஜென்சியாய் கதைச்சிருக்கிறன் பாட்டி பிரச்சினையில்லை."

"சர்மியை உங்களோட விட்டுட்டுப் போறன். ரெண்டு வருசத்துக்கு ஏதோ வழியாய்த் தாக்குப் பிடிப்பம்... உங்களைத் தனிய விட்டிட்டுப் போகவும் என்னால முடியல. அதோட இந்தப் பிஞ்சு வயசில சர்மியைத் தவிக்க விட்டுப் போகவும் மனமில்ல... ஆனால்..."என்றவாறு சுவரோடு மெல்லச் சாய்ந்து கொண்ட ரேகாவின் மடியில் ஓடிவந்து தாவினாள் சர்மி.

ரேகாவின் கரங்கள் சர்மியின் முகத்தை வருடிக்கொண்டன. கண்ணீர்த்துளிகள் கட்டுக்கடங்காமல் சர்மியின் மேல் சிந்திச் சிதறின.

ரேகாவால் சர்மியைப் பிரிய இயலவில்லை. .... என்ன செய்வது? மடி மீது தூங்கிவிட்டாள் சர்மி. சர்மியைப் பார்க்கப் பார்க்க ரேகாவால் எந்தவொரு முடிவையும் எடுக்க முடியவில்லை. தான் இந்த இளவயதில் எடுத்த முடிவு, அதனால் ஏற்பட்ட விபத்தும் அவளைப் பெரிதும் வாட்டியது.

அப்பா அம்மாவுடன் செல்லப்பிள்ளையாய் இருந்தவள் இப்போது தனது செல்லப்பிள்ளையை எண்ணித் துடித்தாள்... எனக்கு இனி யார் துணையாய் இருக்கப்போவது? என் மீதி வாழ்வை நான் எவ்வாறு கொண்டு நகர்த்தப்போகிறேன் என பலதரப்பட்ட கேள்விகள் அவள் மனதில்...

"இஞ்செரப்பா, இவள் ரேகாவை நினைக்கத்தான்..." பாக்கியத்துக்கு வார்த்தைகள் தடுக்கின.சாய்ந்த கதிரையில் படுத்திருந்த தறுமு திடீரென எழுந்து கொண்டார்.

"ம்...ம்..." அவரிடம் மெல்லியதொரு பெருமூச்சு இரண்டு தடவைகள் இருமித் தீர்த்துவிட்டு, சால்வையை உதறிக்கொண்டு முகத்தை அழுத்தித்துடைத்தார். அவரது முகம் சற்றுவாடிப்போய்த் தான் இருந்தது. பதிலுக்காய் ஆவ லுடனிருந்தாள் பாக்கியம்.

"................"

மறு நாள்...

நன்றாய் இருட்டியிருந்தது. தன்னிடமிருந்த ஒருசில விளையாட்டுப் பொருள்களை விளக்கு வெளிச்சத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள் சர்மி.

வேலிப்படலை திறக்கப்படுவதாய் ஒரு பிரமை. இல்லை அது உண்மை. இருளைக் கீறிக்கிழித்தவாறு அவளது பார்வை படலையைத் துருவுகிறது. அங்கு யாரோ இருவர் அவளை நோக்கி வருவது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 460

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | 4 | |
| 5 | | ■ | 6 | | ■ | | ■ |
| 7 | | 8 | | ■ | 9 | | |
| | ■ | | ■ | 10 | | | ■ |
| ■ | 11 | | | ■ | | ■ | ■ |
| 12 | | | ■ | 13 | | | |
| 14 | | ■ | 15 | | | ■ | ■ |
| | ■ | 16 | | | ■ | 17 | |

அனுப்புபவர் பெயர்:..............................................
முழுமையான தபால் விலாசம்: ................................
..............................................................
கையொப்பம்:..............................................

**இடமிருந்து வலம்**

1. போர்
3. கடினம்
5. பிரி
6. ஓர் இடத்தில் நிலைத்தல்
7. பருத்த உடல் வாகு கொண்டவன்
9. உமிழ்
10. அரசமைப்பு வரைவு
11. மக்கள் கூட்டம்
12. கடல் நீர் உட் புகுந்துள்ள நீர் நிலை
13.நெருப்பு
14. தங்களுடைய
15. நிதிக் கையாள்கையுடன் தொடர்புடைய நிறுவனம்
16. ஒரு தானியம்
17. உண்

**மேலிருந்து கீழ்**

1. சூளுரை
2. பாம்பாட்டியிடம் இருக்கும் ஊதுகருவி
3. நகைக்கும்படியான ஏவல்
4. ஒரு பொருளின் பெறுமானம்
6. தனது எனப் பொருள் சுட்டும் சொல்
8. சாளரம்
9. சுடுகலன்
11. பூக்களை இடைவெளியிட்டுத் தொடுத்த மாலை
13. அங்கே
14. ஓர் அசைச் சொல்
15. வருவதற்கு...

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 458 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சுகதேகி (6) காமன் (7) காமதேனு (9) தால (10) சுடுகாடு (11) ரம்பை (14) அங்கம் (16) அகிம்சை (17) பறி (18) சளி (19) தகவு (21) கால் (22) மா (23) சிறுமை

**மேலிருந்து கீழ்**

(1) சுகாதாரம் (2) கமலம் (3) தேன் (4) சமகாலம் (5) ஈனு (7) காடு (8) தேடு (12) பைங்கிளி (13) நெற்றி (15) அசைவு (16) அசல் (17)பதறு (20) கசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 458 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை

**2 ஆம் பரிசு**
த.நித்தியகலா,
களபாவோடை,
ஏழாலை மத்தி, ஏழாலை.

**3 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீ கிருஷாந்தி
உமாபதி சிவம்,
இல. 18,வேம்படி வீதி,யாழ்ப்பாணம்

**4 ஆம் பரிசு**
சி.பரிமளகாந்தன்,
இல.422 (614) கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
சியாமளா கிறிஸ்ரோபர்,
கன்னியர்மட வீதி,
பெரிய கடை, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

செ.வைஷ்ணவி,
தரம் (13), கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்

பெ.செல்லக்குட்டி,
நீதிவான் காணி, சோரன்பற்று,
பளை.

எஸ்.சாந்தகுமார்,
'யசோ', பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

சொற்சிலம்பம் போட்டி
இல.460
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(08.03.2017 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.460இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 12.03.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 458 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

26.02.2017 முதல் 05.03.2017 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

பெரும்பான்மை கிரகங்களால் நன்மை உண்டாகும். சாதனை நிகழ்த்தும் எண்ணத்துடன் பணிபுரிவீர்கள். அரசு வகையில் அனுகூலமான சூழல் அமையும். தம்பி தங்கை கேட்ட உதவியை செய்து மகிழ்வீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர்களின் வளர்ச்சி கண்டு பெருமை கொள்வீர்கள். நண்பர்களிடம் கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பாசமுடன் நடந்து கொள்வர். தொழில்,வியாபாரத் தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். ஆதாயம் படிப்படியாக உயரும். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர்.

## இடபம்

சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய் நற்பலனை வாரி வழங்குவர். பேச்சில் நிதானமும், விவேகமும் நிறைந்திருக்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அரசு விடயத்தில் நன்மை உண்டாகும். வாகனப் பயணம் இனிமை தரும். பிள்ளைகள் உங்களின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். விரும்பிய உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடந்தேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், ஞாபகத் திறன் வளர்ந்து படிப்பில் முன்னேறுவர்.

## மிதுனம்

சனீஸ்வரர், ராகு, குரு அனுகூலமாக உள்ளனர். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். சகோதர வகையில் மங்கல நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் பேச்சால் சில குளறுபடி உருவாக வாய்ப்புண்டு. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வேபெண்கள், தாய் வீட்டாரின் உதவியை கேட்டுப் பெறுவர். மாண வர்களுக்கு, படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

## கடகம்

சுக்கிரன், புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். அன்றாட வாழ்வில் குறுக்கிட்ட சிரமம் விலகும். உங்களை அவமதித்தவரும் அன்பு பாராட்டத் தொடங்குவர். சுபவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். வாகனப் பயணம் எளிதாக இருக்கும். பிள்ளைகளின் அறிவுப்பூர்வமான செயற்பாடு கண்டு சந்தோசம் கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். மறைமுக எதிரிகளுக்கு தக்க பதிலடி கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத் தில் சீரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். ஆனால், வருமானத்திற்கு குறை விருக்காது.

## சிங்கம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். மனதில் சாந்த குணம் நிறைந்திருக்கும். வீண் பேச்சில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. வீடு, வாகன வகையில் திடீர் செலவு உண்டாகலாம். பிள்ளைகளின் எதிர்கால நலன் குறித்து ஆலோசிப்பீர்கள். கடனில் ஒரு பகுதி அடைபட வாய்ப்புண்டு. மனைவியின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். லாபம் பன்மடங்கு உயரும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பணவசதி கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களில் செல்லவேண்டாம்.

## கன்னி

சூரியன், புதன், குரு, சனீஸ்வரர் ராஜயோக பலன் அளிப்பர். நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து கூடும். வெகுநாள் எதிர்பார்ப்பு விரைவில் நிறைவேறும். புதிய வீடு வாகனம் விரும்பியபடி வாங்குவீர்கள். புத்திரர் உங்கள் சொல்லுக்கு மதிப்பளித்து நடப்பர். பூர்வீகச் சொத்து மூலம் வளர்ச்சியும் பண வருமானமும் கூடும். மங்கல நிகழ்ச்சிகளில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவி கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். அமோக லாபம் கிடைக்கும். பணியாளர்கள், குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர்; விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

## துலாம்

ராகு செவ்வாயால் அளிப்பரிய நன்மை உண்டாகும். அன்றாடப் பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். கடந்த கால உழைப்பின் பலனைப் பெற்று மகிழ்வீர்கள். சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். அலைச்சலால் அடிக்கடி உடல் அசதிக்கு ஆளாகலாம் கவனம். மனைவியின் ஆலோசனையை ஏற்று முன்னேறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், பணியிலக்கை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள், கணவரின் அன்பைக் கண்டுமனம்நெகிழ்வர். மாணவர்கள், கண்ணும் கருத்துமாகப் படித்து முன்னேறுவர்.

## விருச்சிகம்

புதன், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். பேச்சிலும், செயலிலும் நேர்மை நிறைந்திருக்கும். சமூகத்தில் மதிப்பு அதிகரிக்கும். வாகனப்பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. பிள்ளைகள் விரும்பியபொருளை தாராளபணச்செலவில் வாங்கித்தருவீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் உயரும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு அடிக்கடி நடந்தேறும். மனைவியின் அன்பைப் பெற்று மனம் நெகிழ்வீர்கள். சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு. தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். தொழிலாளர் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பணியாளர்களுக்கு, விண்ணப்பித்த கடனுதவி விரைவில் கிடைக்கும்.

## தனுசு

சூரியன், கேது, குரு, சுக்கிரனால் நன்மை அதிகரிக்கும். குறை சொன்னவரும் பாராட்டுகின்ற புதிய சூழ்நிலை உண்டாகும். சுபவிடயத்தில் எதிர்பார்ப்பு நிறைவேற வாய்ப்புண்டு. வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை காண்பீர்கள். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். நோய் தொந்தரவு விலகும். ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். நண்பர்களிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். தொழில் ரீதியாக அடிக்கடி பயணம் மேற்கொள்வீர்கள். பணியாளர்கள், பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், லட்சியமனதுடன் படிப்பில் ஈடுபடுவர்.

## மகரம்

செவ்வாய், சுக்கிரன், சனீஸ்வரர் ஆகியோர் நற்பலன் அளப்பர். தாமதமான முயற்சியில் முன்னேற்றம் உண்டாகும். தம்பி தங்கை உங்களின் வழிகாட்டுதல் ஏற்று வளர்ச்சியடைவர். உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புத்திரரின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் வளர்ச்சியும், வருமானமும் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக் கான வாய்ப்பு கிடைக்கும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவர். மாண வர்கள், படிப்புடன் விளையாட்டிலும் ஆர்வம் கொள்வர்.

## கும்பம்

குரு, சுக்கிரன் அனுகூலமாக அமர்ந்துள்ளனர். வளர்ச்சிக்கான புதிய மாற்றம் உருவாகும். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை கிடைக்கும். புத்திரரின் செயல் குறையை இதமான அணுகுமுறையால் சரி செய்வது நல்லது. முக்கிய பொறுப்புகளை நம்பகமானவர்களிடம் மட்டும் ஒப்படைக்கவும். வழக்கு விவகாரத்தில் காலதாமதம் ஏற்படும். மனைவியின் ஆலோசனை நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திக்க நேரிடும்.

## மீனம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அன்றாடப் பணிகளில் ஆர்வம் கூடும். உடன்பிறந்தவர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும். ஆரோக்கிய வியத்தில் அக்கறை கொள்வீர்கள். ஆடம்பர எண்ணத்தால் செலவு அதிகரிக்கும். மனைவியின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் தடைகளை முறியடித்து லாபம் காண் பீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் ஆதரவுடன் சலுகை கிடைக்கப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருகிச் செல்லும் சமுதாயக் கட்டமைப்பு

அ. அஜித்சஞ்ஜீவ்

சமுதாயம் என்பது ஒரு குறுகிய கட்டமைப்பைக்கொண்டது. ஆனால் தலைமுறை தலைமுறையாகப் பேணப்படுவதான பாரம்பரியத்தை உடையது. அத்துடன், கிராமத்தை மையமாகக் கொண்டது. இவர்கள் கூட்டுறவு, ஒற்றுமையான மன உணர்வுடையவர்களாக இருப்பர். அவ்வாறான கிராமியக் கட்டமைப்புத் தற்போது அருகி வருகின்றது.

பன்னாட்டு இடப்பெயர்வு, நாகரிக வளர்ச்சி, அதிகரித்த மனிதத் தேவைகள், நாட்டின் அரசியல் சூழ்நிலைகளால் சமுதாயக் கட்டமைப்பு அருகி விட்டதெனலாம். நீண்டகாலமாக ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களும் அவர்களுக்கிடையிலான குருதி வழி உறவு போன்றவற்றை உள்ளடக்கியதாகவே சமுதாய, சமூகம் உருவாக்கப்படுகின்றது. சமுதாயம் வர்க்க வேறுபாடுகளைக்கொண்டதாகக் காணப்படலாம். இது மேல்நிலைச் சமுதாயம், கீழ்நிலைச் சமுதாயம் என்றவாறு காணப்படும். அத்துடன் படித்த சமுதாயம், படிப்பறிவற்ற சமுதாயம் என்ற அடிப்படையிலும் வர்க்க வேறுபாடு நிலவும்.

## கிராம நகர மக்கள் குழுமம்

பாரம்பரிய கிராமியச் சமுதாயத்தில் காணப்படுகின்ற சமூக வாழ்க்கைக்கும் துரிதமான அசைவு கொண்ட நகர வாழ்க்கைக்கும் இடையில் பல வேறுபாடுகளைக் காணலாம். கிராமியச் சமுதாயம் விவசாயம்(மனித உழைப்பு)சார்ந்ததாகவோ சாராததாகவோ வகைப்படுத்தப்படும். நெருங்கிய உறவு கொண்டதாகவும், மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் காணப்படுவர். இவர்கள் ஒரு குறிப்பிட்ட குழுமமாக இணைந்து வாழும் நிலையும் காணப்படும்.



கிராமியச் சமுதாயத்தில் விழுமி யங்கள், பாரம்பரியங்கள் பின்பற்றப்படுகின்றன. பொதுவாக விழுமியங்களை உள்வாங்கி அணிதிரட்டும்போது சக்தி பிறக்கும். அதன் வழியாக ஆற்றல் பிறக்கும். சமுதாயத்தை அணிதிரட்டும்போது சாதி, பொருளாதாரம் போன்றவற்றை நோக்க வேண்டும். சமுதாயத்தில் உள்ள தடைகள், சாதி, வயது, சமயம், கலாசாரம் போன்றவற்றை இல்லாமல் செய்து சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த இந்தச் சமுதாய அணிதிரட்டல் அவசியமாகவுள்ளது. பொதுவாக விழுமியங்களைக் கொண்டு அணிதிரட்டி ஒரு புதிய ஆற்றல்கொண்ட சமுதாயத்தை உருவாக்கி, அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்.

ஒன்றுதிரட்டப்பட்ட சமுதாயம் ஒரு விதமாகவும் ஒன்றுதிரட்டப்படாத சமுதாயம் பிறிதொரு விதமாகவும் காணப்படும். சமூகம் என்றால் என்ன என்பது பற்றிய முழுமையான அறிவின் மூலமே சமுதாய அபிவிருத்தியை ஏற்படுத்தலாம். அதாவது, ஒரு சமூகத்திடையே காணப்படும் சமூகப் பின்புலங்கள், ஏற்றத்தாழ்வுகள், பாரம்பரியங்கள், பண்பாடுகள், பால்நிலைவேறுபாடுகள், விழுமியங்கள், பழக்க வழக்கங்கள் என்பன ஆற்றல் திறன்களைப் புரிந்துகொள்ளத்தக்கதாக அமைதல் வேண்டும்.

## கிராமங்களுக்குள் புகும் நவீனங்கள்

சமுதாயம், சமூகம் இரண்டுக்குமிடையே சில வேறுபாடுகள் உள்ளன. ஆழமான உறவு அல்லது மேலெழுந்தவாரியான உறவு தனிமனித வகிபங்கை மட்டுமே இன்னொருவர் தாம் அறிந்திருக்கக்கூடியதாக இருக்கும். இதனால், சமூகத்தின் மத்தியில் இருப்பவருக்குத் தாம் எல்லோரும் ஒருமித்தவர் என்ற உணர்வு இருக்காது. நெருக்கமான உணர்வோ உணர்வுபூர்வமான உறவாடல்களோ இருப்பதில்லை. வளர்ந்த சமூகத்தில் தாமதித்த திருமணங்களும் பின்தங்கிய சமூகங்களில் இளநிலைத் திருமணங்களும் நிகழ்வது இயல்பாகின்றன.

கிராமங்களில் மக்களின் வருமானம் விவசாயம் அல்லது மீன்பிடி, கைத்தொழில், சேவைத் தொழில் முதலானவற்றால் பெறப்படுகின்றது. வீட்டுத் தோட்டங்கள், சிறுகைத்தொழில் மூலமாகவும் வருமானங்கள் பெறப்படுகின்றன.

இதுவரை காலமும் கிராமங்களில் மக்கள் நீண்டகாலமாக ஒரே தொழிலையே மேற்கொண்டு வந்தனர். தற்போது ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி, இயந்திர மயமாக்கல், மக்கள் தொகை அதிகரிப்பு போன்ற காரணங்களினால் தொழில்மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது கிராமத்தின் பாரம்பரிய வேலைகள் இழக்கப்பட ஏதுவாகின்றது. கடந்த காலங்களில் ஏற்பட்ட இயந்திர மயமாக்கல் உற்பத்தி நடவடிக்கைகள் யாவும் இயந்திர உபகரணங்களின் உதவியுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதுதொழிலாளர்களுக்கானதேவையைக் குறைத்துள்ளது. அவ்வாறே மக்கள் தொகை அதிகரிப்பால் பலருக்கு வேலைவாய்ப்புகள் அற்றுப் போகும் நிலை ஏற்பட அவர்கள் வேறு தொழில்களில் கவனம் செலுத்த வேண்டிய நிலை உருவாகிறது. அத்துடன் மக்களின் கல்விநிலை உயர்வடைய அவர்கள் கீழ்மட்ட வேலைகளைப் புறக்கணிக்கின்றனர்.

## துரிதத்தை விரும்புவதால் இழப்புக்கள்

தற்போதைய பூகோளமயமாக்கலால் ஒவ்வொரு கிராமமும் கிராமத்துக்கேயுரித்தான பண்புகளை இழந்து வருவதைக் காணமுடிகிறது. இதனை விட மக்கள் கூடுதலாக அரசதுறைகளில் பணிபுரியவதையே பெரிதும் விரும்புகின்றனர். அரச வேலையில் கிடைக்கும் மாதாந்த வருவாய், கடன் வசதி, ஓய்வூதியம், அரச சலுகைகள் என்பன காரணமாகவே இவர்கள் அரச வேலைவாய்ப்புக்களை நாடுகின்றனர். தனியார் துறையில் தொழில் பாதுகாப்பு இன்மை, அதிக வேலை, அழுத்தங்கள், போதிய தினத்தில் சம்பளம் கிடைக்க ப்பெறாமை என்பன காரணமாகவே மக்கள் அரசதுறையிலே வேலை செய்ய விரும்புவதைக்காணலாம்.

கிராமிய சமூகங்களில் சமூகப் பிணைப்புக் காணப்படும். அதற்கேற்ப பொருளாதார, சமூகச் செயற்பாடுகள் இடம்பெறும். ஒவ்வொரு கிராமத்துக்குமான விழுமியங்கள், சமய தத்துவங்கள், சடங்குகள் என்பன வேறுபடுகின்றன. இவை துன்ப துயரங்களைப் பகிர, சமூகத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன. அத்துடன், சமூக உணர்வை வலுப்படுத்துவனவாகவும் விளங்குகின்றன. ஆனால் தற்போதைய போட்டி நிறைந்த உலகம், முதலாளித்துவ நடவடிக்கைகள் என்பன சமூகக்கட்டமைப்புக்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

இன்றைய சமூகங்களில் கல்வி, பணம் என்பனவற்றில் போட்டிகளும் பொறாமைகளும் கௌரவம் அந்தஸ்து பார்க்கும் நிலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவை சமூகங்களில் மக்களிடையேயான பிணைப்புகளைச் சிதைவுறச் செய்கின்றன. முன்னைய சமூகங்கள் கூட்டாக வேலைகளில் ஈடுபட்டன. பலர் சேர்ந்து ஒன்றாக வேலை செய்வர். தற்போது அவ்வாறான தன்மைகள் மாற்றமடைந்துள்ளன. தான், தன்னுடைய கடமைகள், வேலைகள் என மக்கள் சுயநலத்துடன் செயற்படுபவர்களாக இருக்கின்றனர். மக்களின் வாழ்க்கை முறைமைகளும் மாற்றமடைந்துசெல்கின்றன. இவை சமூகத்தில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் அறிமுகம்

**நூல்- முஸ்லிம் சமஸ்டி**
**ஆசிரியர்- வேதாந்தி சேகு இஸ்ஸதீன்**




### முஸ்லிம் தேசியத்தின் முழக்கம்

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையை அடுத்து, முஸ்லிம் தேசியம் பற்றிச் சிந்திக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது - முஸ்லிம் சமஸ்டி நூல்.
வடக்கு - கிழக்கு தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து இதுவரை எந்தவிதமான தீர்வுத்திட்டமும் முன்மொழியப்படவில்லை. இந்த விடயம் குறித்து ஆசிரியர் மிகவும் மனவருத்தத்துடன் கூறுகிறார். அத்துடன், தொண்ணூறின் மாதங்கள் என்ற கவிதையில், தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் பிரச்சினை வெடிக்கக் காரணமாய் இருந்தது யார் என்ற வினாவையும் எழுப்புகிறார். சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழர்கள் எப்படித் தனித்து நின்று போராடினரோ - அதுபோன்று தாமும் தனித்து நின்று போராடுவதற்கான வழியை ஏற்படுத்தித் தந்ததும் தமிழர்கள்தான் என்றும் ஆசிரியர் கூறுகிறார்.
தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினை, அதற்கான காரணம், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை என்பன பற்றியும் நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். தமிழ் - முஸ்லிம் அரசியல் அவதானிப்புள்ளவர்களுக்குப் பயனளிக்கும் நூல் இது.




**நூல் - மகிழ்ச்சியாக வாழ நாளொரு உவமையுடன் கூடிய நற்சிந்தனைத் துளிகள்**
**தொகுப்பாசிரியர் - அராலியூர் வி.செல்வரத்தினம் (ஜே.பி.)**
**வெளியீடு - செல்வி அருள்ஜோதி விஜய தெய்வேந்திரன்**
**விலை - 125 ரூபா**

### ஆன்மிக அறிவூட்டும் தத்துவம்

மனித வாழ்க்கையில் இன்பம் - துன்பம் சக்கரம் போல சுழன்றுகொண்டிருப்பது. இதில், இன்பத்தை மட்டும் அனுபவிக்கவே மனிதர்கள் விரும்புகின்றனர். அத்தகைய இன்ப வாழ்க்கைக்குரிய தத்துவச் சிந்தனைகளைத் தாங்கி நிற்கிறது இந்த நூல்.
உலகில் புகழ்பெற்ற ஞானிகள், அறிஞர்களின் நூல்களைப் படித்தின்புற்ற ஆசிரியர், தான் பெற்ற இன்பம் இந்த வையகமும் பெறவேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன், அந்நூல்களில் உள்ள தத்துவச் சிந்தனைகளைத் தொகுத்து நூலாக்கியுள்ளார். மனுக்குலம் படித்து இன்புற வேண்டிய பயனுள்ள நூல் இது.
அராலியூர் வி. செல்வரத்தினம், சிறந்த ஆன்மிக எழுத்தாளர். ஆன்மிக நூல்கள் மட்டுமன்றி, பாடசாலை மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய கணித - விஞ்ஞான நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். எழுத்துப் பணிக்காக எண்ணற்ற விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ள இவர், எழுத்துலகில் மென்மேலும் சாதனை படைத்திட வாழ்த்துக்கள்.

அன்பார்ந்த எழுத்தாளர்களே! நூல் அறிமுகத்தில் உங்களின் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின், புத்தகத்தின் இரண்டு பிரதிகளை- ஆசிரியர், நூல் அறிமுகம்,

**உதயன் பத்திரிகை,**
**இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# உலகம் நிலைக்க காரணமானவர்கள்

அராலியூர்நிலா


மறத்தமிழர்வீரத்தைமட்டுமன்றி, நெஞ்சின் ஈரத்தையும் எடுத்தியம்பும் தங்கத் தமிழ் எனும் சங்கத் தமிழ் நூல் புறநானூறு. அன்பு, விருந்தோம்பல் பண்பு முதலான நல்ல பண்புகளைக் கற்றுத்தரும் நன்னூல். பிறருக்காக வாழும் வாழ்க்கையின் அர்த்தம் சொல்லும் அறநூல்.
பழமை பொருந்திய இந்த உலகம் இன்றும் நிலைபெற்று இருப்பதற்குக் காரணம் நல்லவர்கள்தான். இதனை அற இலக்கியங்கள் அழகுற எடுத்தியம்புகின்றன. அந்த இலக்கியங்களின் சாரமாக அமைந்த பாடல் இது.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்; பழி
யெனின்
உலகுடன்பெறினும்கொள்ளலர்;அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.
(புறநானூறு)

பிறருக்காக வாழ்பவர்களால்தான் இந்தப் பழமை பொருந்திய உலகம் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. இவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும், அது இனிமையானது என்று தனித்து உண்ணமாட்டார்கள்; யாரையும் வெறுக்கமாட்டார்கள்; சோம்பலின்றிச் செயற்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால் தம் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பர்; பழி வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைப்பதானாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; மனம் தளரமாட்டார்கள். இத்தகைய சிறப்புடையவர்களாகித் தமக்காக உழைக்காமல், பிறருக்காக வலிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது.
திருக்குறளில் பல அதிகாரங்களில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கும் கருத்துகள் இப்பாடலில் சுருக்கமாகக் கூறப்படிருக்கின்றன. குறிப்பாக, விருந்தோம்பல், அன்புடைமை, வெகுளாமை, அறிவுடைமை, மடியின்மை, தீவினையச்சம், ஊக்கமுடைமை, புகழ், ஈகை, ஒப்புரவு, பண்புடைமை ஆகிய அதிகாரங்களின் மையக்கருத்துகளை இப்பாடலில் காணலாம்.
பொற்காலம் எனப்படும் சங்க நற்காலத்தில், பிறருக்காக வாழ்ந்த மனிதர்கள் இலக்கியங்களில் நிறைந்தனர். எல்லோருக்கும் பாடமாய் அமைந்தனர். இன்றைய இயந்திர உலகில், இத்தகைய நல்ல மனிதர்களைக் காண்பது அரிதாகிவிட்டது.



**நூல்- தெய்வீக வாழ்வு**
**ஆசிரியர் - பிரம்மஸ்ரீ இ. குமாரநாத சர்மா - B.A**
**வெளியீடு- பிரம்மஸ்ரீ கு. நந்தகோபன்**




### நல்வழி காட்டும் புத்தகம்

மனிதன், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வ தற்கான நல்வழிகளைக் காட்டுகின்றது தெய்வீக வாழ்வு எனும் நூல்.
நாம் தெய்வீக வாழ்வு வாழ, அறிஞர்களும் சான்றோர்களும் ஞானிகளும் காலந்தோறும் அரிய சிந்தனைகளைத் தத்தமது உபதேசங்கள் மூலம் எடுத்துக்கூறி ஆற்றுப்படுத்தி வருகின்றனர். அந்தவகையில், சிவாச்சாரிய மரபு சிறக்க அரிய பணியாற்றி வரும் சிவாச்சாரியார்களை வாழ்த் திப் பாராட்டியும் மனிதர்களின் வாழ்வு தெய்வீக வாழ்வாகப் பரிணமிக்க ஆலயங்கள், இறை வழிபாடு, சமயச் சடங்குகள், மந்திர மகிமை, பிறவியின் மாண்பு, பெற்றோர்கள் மற்றும் முன்னோர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் உள்ளிட்ட கட்டுரைகளை மிகச் சுருக்கமாகவும் அழகாகவும் தொகுத்தளித்துள்ளார் ஆசிரியர். மனிதர்கள் அனைவரும் படித்துப் பயனுற வேண்டிய சிறந்த நூல் இது. இந்த நுலின் தொகுப்பாசிரியர், ஓய்வுபெற்ற அரச சேவையாளர். ஏற்கனவே பல நூல்களை எழுதி வெளியிட்டவர். மனிதர்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் எனும் நல்லெண்ணத்தில் தொடர்ந்தும் அவர்களுக்கு வழிகாட்டும் நூல்களை எழுதி வருகிறார். அவரது எழுத்துப்பணி சிறக்க, வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரகாஸ்

# அணியில் தொடர்வாரா தரங்க?

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடரை இலங்கை அணி கைப்பற்றிய போதிலும் ஒரு வீரராக தரங்க தோல்வியடைந்துள்ளார். மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடருக்காக இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. முதலாவது ஆட்டத்தில் 5 இலக்குகளாலும், இரண்டாவது ஆட்டத்தில் 2 இலக்குகளாலும் வெற்றிபெற்றது. மூன்றாவது ஆட்டத்தில் தோல்வியடைந்தாலும் முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்ற காரணத்தால் 2:1 என்ற அடிப்படையில் இலங்கை அணி கிண்ணம் வென்றது.

இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் இந்தத் தொடரில் இருந்து விலகியிருந்தார். தரங்க அணித்தலைவராகச் செயற்பட்டார். ஒரு தலைவராக அவர் தனது அணியை சிறப்பாக வழிநடத்தி கிண்ணத்தைக் கைப்பற்ற வைத்த போதிலும் ஒரு வீரராக தோல்வியடைந்தவராகவே உள்ளார்.

முதலாவது ஆட்டத்தில் தரங்க ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். இரண்டாவது ஆட்டத்தில் 4 ஓட்டங்கள், மூன்றாவது ஆட்டத்தில்.14 ஓட்டங்கள் என்றவாறாகவே அவரது பெறுபேறு அமைந்திருந்தது. ஒருமுறையேனும் அவர் பதின்மத்தைத் தாண்டவில்லை. எனவே தரங்கவின் மட்டில் திருப்திப்பட அவரது தலைமைத்துவம் ஒன்றே உள்ளது. ஆனால் இலங்கை அணியின் தற்போதைய தேவை அதுவல்ல. மத்தியூஸே மூன்று வகை ஆட்டங்களுக்குமான ஒரே தலைவர் என்பதில் இலங்கை கிரிக்கெட் சபை உறுதியாக உள்ளது. இதனால் தன்னை ஓர் அனுபவ வீரராக அணியில் நிலைநாட்ட வேண்டிய அவசியம் தரங்கவுக்கு உள்ளது. ஆனால் அவர் அதைச் செய்யத் தவறிவிட்டார்.

முன்னதாக நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கை அணி 0:5 என்று படுதோல்வியடைந்தது. ஆனால் அரைச்சதம், சதம் என்பனவற்றைப் பதிவுசெய்து ஒரு வீரராக தன்னை நிலைநிறுத்தியிருந்தார் தரங்க. தற்போது அவரது ஆட்டத்தில் தடுமாற்றம் வெளிப்பட்டுள்ளது. எனவே அடுத்தடுத்த தொடர்களில் வாய்ப்புக் கிடைத்தால் அவற்றை இறுகப்பிடித்துக்கொள்ள வேண்டிய நெருக்கடி தரங்கவுக்கு உள்ளது.

# டோனியின் சிக்குப்புக்கு பயணம்...

இந்திய மாநிலங்களுக்கு இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட விஜய் ஹசாரே தொடர் நேற்று ஆரம்பமானது. இந்தத் தொடரில் கலந்து கொள்வதற்காக தனது சக வீரர்களுடன் ரயிலில் பயணம் செய்தாராம் டோனி.

விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள்கள், சொகுசுக் கார்கள் ஆகியவற்றைச் சேகரிப்பதில் டோனிக்கு அலாதிப் பிரியம். அவருக்கு இந்திய மத்திய அரசால் பலத்த பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.

இதனால் ஏதேனும் தொடர்களுக்கோ அல்லது நிகழ்வுகளுக்கோ செல்வதென்றால் தனது சொகுசுக் காரிலேயே டோனி பயணம் செய்வார்.

கிட்டத்தட்ட 13 வருடங்களின் பின்னர் அவர், ரயிலில் இளம் வீரர்களுடன் பயணம் செய்தமை சில ஊடகங்களின் முக்கிய செய்தியாகக்கூட மாறியிருந்தது.

விஜய் ஹசாரே தொடரில் ஜார்கன்ட் மாநிலத்தின் தலைவராக டோனி செயற்படுகிறார். அவர் தன்னுடன் இருக்கும் இளம் வீரர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே 13 மணிநேரம் அவர்களுடன் பயணம் செய்தார்.

கிட்டத்தட்ட 4 மணிநேரங்கள் ஆலோசனை வழங்கினார் என்று ஜார்கன்ட் நிர்வாகம் தெரிவித்திருந்தது. அணி தரையிறங்கியதும் டோனி அதி உச்சப் பாதுகாப்புக்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.



# சொந்தத் தொடர்களை தொடர்ந்தும் இழக்கும்

## பாகிஸ்தான் கிரிக்கெட்



பாகிஸ்தானில் பன்னாட்டுக் கிரிக்கெட் ஆட்டங்கள் இனிவரும் காலங்களிலும் நடக்காது என்பதற்கு அங்கு கடந்த இரு வாரங்களில் அரங்கேறிவரும் பயங்கரவாதச் சம்பவங்கள் தக்க சான்றாக அமைந்துள்ளன.

2009 ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய போது இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதற்குப் பின்னர் எந்த அணியும் பாகிஸ்தான் சென்று விளையாடவில்லை. பாகிஸ்தானில் பாதுகாப்பு உள்ளது. அங்கு ஏனைய அணிகள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று அப்ரிடி, இன்சமாம், மலிக் உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் வலியுறுத்தியுள்ளனர். இவர்களின் அழைப்பு பரிசீலனைக்கு உரியதொன்றாக இதுவரை அமையவில்லை. இனிவரும் காலங்களிலும் அமையாதென்பதும் நிதர்சனம். பாகிஸ்தானின் செவான் நகரில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 100 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதன்பின்னர் தற்போது ஆயுததாரிகளுக்கு எதிரான போர் பாகிஸ்தானெங்கும் பரவலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. லாகூர், இஸ்லாமபாத் போன்ற முக்கிய நகர்கள் உள்ளடங்கலாக பல நகர்களில் ஆயுததாரிகள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இது பாகிஸ்தானில் தேசிய ரீதியில் ஆயுததாரிகள் வியாபித்துள்ளனர் என்பதற்கான சான்றாகவும் மாறியுள்ளது. எனவே ஐக்கிய அரபு இராச்சியமே கிரிக்கெட்டைப் பொறுத்தவரை பாகிஸ்தானின் மைதானமாக மாறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா சாந்தசோலை ஸ்ரீ இராமர் ஆலய குடமுழுக்குப் பெருவிழா முதன்மைக் குரு சிவாகம பூஷணம் சிவஸ்ரீ மு.இ.வைத்தியநாதக் குருக்களின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (10)



முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப் போட்டி பாடசாலையின் விளையாட்டுத்திடலில் அண்மையில் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் செபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும், வடக்கு மாகாணசபை உறுப்பினரு மான துரைராசா ரவிகரன் கலந்து கொண்டார். (10)





முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டி பாடசாலையின் விளையாட்டுத் திடலில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் இ.அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தனும், சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்து கொண்டனர். (10)



வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி சுதர்சினி யொய்ஸ் நியூட்டன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும் சிறப்பு விருந்தினராக வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொ.சிவானந்தராஜா உட்பட பலரும் கலந்துகொண்டனர். விளையாட்டுப்போட்டிகளை பிரமுகர்கள் பார்வையிடுவதையும் சிறார்தள் தமது திறமைகளை வெளிக்காட்டுவதையும் வெற்றியீட்டிய சிறார்களுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (10)



இமையாணன் கிராம அபிவிருத்திக் குழுவினரால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவி செல்வராசா சாளினிக்கு, போக்குவரத்தை இலகுபடுத்தி கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் துவிச்சக்கர வண்டி இலவசமாக அண்மையில் வழங்கப்பட்டது. (ஐ-422)



இலுப்பைக் கடவை ரூபி முன்பள்ளி பாடசாலை சிறார்களுக்கு கற்றல் உபகரணமான அப்பியாச கொப்பிகளை போக்குவரத்து அமைச்சின் அமைச்சர் பா.டெனிஸ்வரன் மன்னாரில் உள்ள மீன்பிடி உப அலுவலகத்தில் வைத்து வழங்கினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் இரட்டைக் குண்டுவெடிப்பு 42 பேர் உடல்சிதறி பரிதாபச் சாவு




டமஸ்கஸ், பெப். 26

சிரியாவின் ஹோம்ஸ் நகரில் நேற்று நடத்தப்பட்ட இரட்டைக் குண்டுவெடிப்புத் தாக்குதலில் 42 பேர் உடல்சிதறிச் சாவடைந்தனர்.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் உள்ள நகர்களை மீட்கும் போர்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிரியாவின் ஹோம்ஸ் நகரில் ஓர் குறிப்பிட்ட அளவு பகுதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடமே உள்ளது. ஏனைய இடங்கள் அண்மையில் சிரிய அரச படையால் மீட்கப்பட்டன. அவ்வாறு மீட்கப்பட்ட பகுதியில் நேற்று நடத்தப்பட்ட இரட்டைக் குண்டுவெடிப்புத் தாக்குதலில் 42 பேர் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. தாக்குதல் நடத்தப்பட்டு சில மணிநேரத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. கிட்டத்தட்ட 20 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## மரண அறிவித்தல்கள்



### சோமசுந்தரம் கேதீஸ்வரநாதன்

சுதுமலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கேதீஸ்வரநாதன் நேற்று (25.02.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் – வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கேதீஸ்வரன் மற்றும் காலஞ்சென்ற இந்திராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், தர்ஷினி, சுபாஷினி, கஜந்தன், நிரோஷினி, கஜந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஷனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் அருணகிரிநாதன், சோதிநாதன், காலஞ்சென்ற சௌந்தரநாயகி ஆகியோரின் சகோதரனும், புஷ்பலதா, புஷ்பவதனி, சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மலைவேம்படி ஒழுங்கை,**
**சுதுமலை கிழக்கு,**
**மானிப்பாய்.**

(AJA/1430) (11.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

077 383 3886, 077 358 7991



### நாகேந்திரர் தவராசா

(கரப்பியன் வைரவர் கோயிலடி, பள்ளம்புலம்)

சரவணை கிழக்கு, 9ஆம் வட்டாரம், வேலணையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரர் தவராசா 22.02.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் பொன்னம்மா (கனடா) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் (குஞ்சு - லண்டன்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் மனோன்மணி, அருமைநாயகம், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, தியாகராசா மற்றும் நாகநாதபிள்ளை, காலஞ்சென்ற தாட்சாயினி மற்றும் அம்பிகாவதி, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகராசா மற்றும் கமலாம்பிகை (கனடா), பாலாம்பிகை (சுவிஸ்), கர்ணாவதி (டென்மார்க்), இந்திராணி (லண்டன்), சறோஜினி (கொலண்ட்), தேவராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2017) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.336/1, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
பெறாமகள் (முத்தம்மா)

பெறாமகள் -(முத்தம்மா -இலங்கை- 077 498 8982)
சகோதரன் - ( அருமை நாயகம் - இலங்கை- 077 954 7685)
மனைவி - ( குஞ்சு - 0044 7832 967230 )

## மரண அறிவித்தல்கள்



மலர்வு
26 . 09 . 1953

உதிர்வு
24 . 02 . 2017

பண்ணாகம்

### திருமதி யோகலட்சுமி திருச்செல்வம்

யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பண்ணாகத்து யோகலட்சுமி 24.02.2017 வெள்ளிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் - பறுவதம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பண்ணாகத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், சோமதிருச்செல்வத்தின் (பாராளுமன்ற முன்னாள் அலுவலர்) மனைவியும், திருமகன் (கனடா),அருள்முகன் (இங்கிலாந்து), பூரணன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயமாலினி, சர்மிளா ஆகியோரின் மாமியும், திருமுகன், பூரணி, சரண்யா ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா (வத்தளை), தம்பிராசா (வவுனியா), இராசதுரை (கொழும்பு), சிவஞானம் (வவுனியா), தவமணி (பண்ணாகம்) மற்றும் பாலச்சந்திரா (கனடா) ஆகியோரின் சகோதரியும், தங்கரத்தினம், பத்மாதேவி, அற்புதமேரி, செல்வம், காலஞ்சென்ற தியாகராசா, சர்வேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், நாகபூசணி, காலஞ்சென்ற தெய்வேந்திரம், காலஞ்சென்ற அன்னபூரணம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிவரை அவரது இல்லத்திலும், காலை 9 மணிமுதல் பொரளை ஜயரத்தின மலர்ச்சாலையிலும் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் தகனத்துக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

11/01, **மஜெஸ்ரிக் அவனியூ,**
**கொழும்பு - 04**

(C/2821)(11.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

011 259 6899 / 077 778 0182



### திருமதி சின்னம்மா கணபதிப்பிள்ளை

ஆனைப்பந்தி, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கணபதிப்பிள்ளை 24.02.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் செல்வமலர்(மலர்), தனலஷ்மி(தனம்), சண்முகநாதன்(சண் - கனடா), சிவனருட்செல்வன்(அருள் - கனடா), பாக்கியலஷ்சுமி(பாமா - சுவிஸ்), ஜெயலஷ்மி(ஜெயா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம்(யா/இடைக்காடு மகாவித்தியாலயம்), இரவீந்திரன், பவானந்தம்(சுவிஸ்), கணேசதாசன் (லண்டன்), கிருஷ்ணவேணி(கனடா), எழில்வாணி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுரா(யாழ்.பல்கலைக்கழகம்), ராகுல், மதுசன், யதுசன், அபிரா, ஆகாஷ்(சுவிஸ்), அஸ்வினா(சுவிஸ்), நிருசா(கனடா), அபினாஷ்(கனடா), அபிசேன் (கனடா), பிரஜீத்(கனடா), சுவாகதா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(27.02.2017) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனைப்பந்தி,**
**அல்வாய் தெற்கு, அல்வாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்பு: 077 845 5948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

நாவலர் வீதியில் கல்வி நிலையம் நடத்துவதற்கு உகந்த 8 பரப்பு காணி வாடகைக்கு உள்ளது.கல்வி நிலையம் மற்றும் ஏனைய வசதிகள் எம்மால் ஏற்படுத்தி தரப்படும்.

தொடர்பு :- 077 397 3166

## உழவு இயந்திரம் (Tractor) விற்பனைக்கு

Massey Ferouson -1965
MF-135 இங்கிலாந்தில் தயாரித்த Tractor விற்பனைக்கு உண்டு.
077 397 3166

## ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

3 நாள், 2 மாத, 3 மாத, ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஒரு நாள் ஊர்க் கோழிக் குஞ்சுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:- 077 245 3673

## IPS

இலவச கணினிவகுப்புக்கள் பிரிவு V
(Skills Development Programme)

பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், கணினி பொதுப்பரீட்சைகளிற்கு தோற்றுபவர்களுக்கானது

*Diploma in Msoffice
*Diploma in Internet Technology
*பெறுமதிமிக்க சான்றிதழ் *காலம் 3 மாதங்கள்

ஆரம்பம் - 04.03,2017 சனி, 10 AM, 3.30 PM

IPS Thirunelvely (சாயி சமித்திக்கு அருகில்).
Hot line - 076 685 2529

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி சிவசுப்பிரமணியம்



நடுத்தெரு, காரைநகரைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சிவசுப்பிரமணியம் நேற்று (25.02.2017) சனிக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-அபிராமன் தம்பதியரின் அருந்தவப் புதல்வியும் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை-பரிமளம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிர மணியம் (ஓய்வுபெற்ற கட்டட மேற்பார் வையாளர், பத்து நாற்பது மணியம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ் சென்ற சிங்காரம் மற்றும் சிந்தாமணி (மலேசியா), காலஞ்சென்ற சோதிமணி மற்றும் சுந்தரம்மா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, கனகரத்தினம், நாகலிங்கம், அரசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகலியும் சரஸ்வதியின் சிறியதாயாரும் காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் நாகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், பால சுப்பிரமணியம், சிவயோகம், அருள்சோதி, கானரசன், தீபசோதி, கலாசோதி, தேன்மொழி, சோதிலிங்கம், சிவரஞ்சினி(கனடா), சிவரஞ்சி (ஜேர்மனி), சிவராஜினி, (கனடா) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2017) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு, காரைநகர்.

தகவல்:
மருமக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### இராசையா நவரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,
சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)




எமது பெரியப்பாவின் திடீர் மரணச் செய்திகேட்டு துயருற்றிருக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபத்தை தெரிவிப்பதோடு அன்னா ரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சண்டிலிப்பாய் மேற்கு.
சண்டிலிப்பாய்.

பிரிவால் துயருறும்
இராசரத்தினம் செல்லம்மா குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### இராசையா நவரத்தினம்

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நவரத்தினம் நேற்று (25.02.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற நாகேந்திரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி மற்றும் கனகசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, குணபாலசிங்கம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மணிவண்ணன் (சிரேஸ்ட நிறைவேற்று உதவி பொறியியலாளர், சிறிலங்கா ரெலிகொம் திருகோண மலை), ரவிவண்ணன் (அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலை), மணிமாலா (ஆசிரியர், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), கமலவண்ணன் ( N.R.K வாணிபம்), அருள்வண்ணன் (கம்சா களஞ்சியம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் நிர்மலவதனி, இராசமலர், செல்வராசா (அதிபர், பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம்), வாசுகி, கோமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் மேகலா (வைத்தியர், பொது வைத்தியசாலை, திருகோணமலை), அருள்மாறன் (சிரேஷ்ட நிறைவேற்று உதவி கணக்காளர், சிறிலங்கா ரெலிகொம்), மைதிலி (SLEAS - பிரதிக்கல்விப்பணிப்பாளர்), சேகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்டச்செயலகம், திருகோணமலை), சுகன்ஜா (மாணவி பொறியியல்பீடம், தென்கிழக்கு பல்கலைக்கழகம்), மதனராஜ் (மாணவர் பொறியில்பீடம், சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), மோகன்ராஜ், லக்சலா, நிகேதன், நிகேதினி, துவாரகா, வசீகரன், சர்மினி, நிரஞ்சனா, சயானா, கம்சாளினி, தரணிகா, பிருந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் அனன்யாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

சண்டிலிப்பாய் மேற்கு.
சண்டிலிப்பாய்.

077 840 3173, 071 536 0948,
077 327 2501, 077 416 2019

## காணி விற்பனைக்கு

மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வீட்டுடன் 1 பரப்பு 6 குளி நிலம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 2553220

## வயலின் வாய்ப்பாட்டு வகுப்புகள்

யாழ் நுண்கலைப்பீடம் இசைமாணிப்பட்டம் பெற்ற பிரபல ஆசிரியரால் வயலின், வாய்ப் பாட்டு வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். அத்துடன் சினிமாப் பாடல்களும் மற்றும் குறுகியகாலத்திலும் கற்பிக்கப்படும்.

Tel :- 021 222 0076, 077 350 5466
No. 36, செட்டித்தெரு, நல்லூர்

## காணி விற்பனைக்கு

கோப்பாய் மேற்கு, இராசபாதை வீதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 077 909 1944

## வீடு வாடகைக்கு

ஆறுகால்மடம், மானிப்பாய் வீதி, MODERN HOSPITAL வளவில் உள்ள 5 அறைகள், குளியலறை இணைந்த சகல வசதியும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு நேரில் அல்லது கைபேசியில்

077 483 3303


## விற்பனைக்கு

அரைக்கும் ஆலை, ரயர்கடை, வாகன சுத்திகரிப்பு நிலையம் என்பனவற்றுக்குரிய பொருள்களும் வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. மேலும் பொதியிடல், உதவியாளர் என்பனவற்றுக்கு பெண்கள் தேவை. தொடர்பு :- 077 991 2304

## மரண அறிவித்தல்

### நாகமணி சண்முகம்

(ஓய்வுநிலை சாரதி - இலங்கைப் போக்குவரத்துச்சபை)



மறவன்புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி சண்முகம் நேற்று (25.02.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி- சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், அமிர்தலிங்கம் (Italy), பாக்கிய லட்சுமி, மகாலட்சுமி, பால சரஸ்வதி (India), குகேசன் (U.K), சபேசன் (France), கணேசலிங்கம் (Canada), ஞானகௌரி (U.K), அமுத வதி, மகேந்திரலிங்கம் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசபூபதி, காலஞ்சென்ற குமாரதேவன் மற்றும் சுகுணராஜா, சண்முகவேலு, காலஞ்சென்ற ரஜிந்தினி மற்றும் இராஜமலர், யோகேஸ்வரன், வசந்தி, விஜயரூபன், ஜெயச்சந்திரன், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிநாதனின் பாசமிகு பெரியப்பாவும், சுகிர்தா, தர்சன், சசிதா, சர்வேஸ், மயூரன், மிதுராஜினி, இந்துஜா, டானியஸ், காயத்திரி, கோகுலன், நிருபன், கிருசாந், கோபிசாந், தேவமேனன், கிருத்திகா, ஹர்சியா, யதுசன், ஆருஷன், சர்மிகா, சரண்யா, சௌமியா, சேருஜன், யதுசன், அனோஜா, கவின், பானுசன், கௌரிசங்கர், பிரவுஜன், சயந்தவி, அரிஷ், அனுஷ், லரீபா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், சமீரா, சைடன், பிறைசன், ஆருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(27.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ், சிங்கள கத்தோலிக்க மக்களை இணைக்கும் மருதமடு அன்னையின் பூர்வீக இடம் மாந்தை மாதா ஆலயம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

புதிய மாந்தை மாதா ஆலயம் 18 பெப்ரவரி 2017 அன்று மன்னார் மறைமாவட்ட அப்போஸ்த்தலிக்க பரிபாலகர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை - யாழ். மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை - கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் இம்மனுவல் பர்னாண்டோ ஆண்டகை மற்றும் குருக்கள் துறவியர் இறை மக்கள் முன்னிலையில் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

இவ்வாக்கத்துக்கான தகவல்களை மாந்தை பங்குத்தந்தை ச.மரியதாசன் சீமான் அடிகளாரிடமிருந்தும் மாந்தை மாதா என்ற பெயரில் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட ஆலயத்திறப்புவிழா மலரில் ம.க. அருள்பிரகாசம் எம்.ஏ. அடிகளார் எழுதிய ஆக்கத்தில் இருந்தும் பெற்றுக் கொண்டோம். மண்ணாறு ஆற்றின் பெயர் மன்னார் என இந்தப் பிரதேசத்துக்குரிய பெயராக உருப்பெற்றது.

### மூன்று பிரதான பிரிவுகள்

இலங்கையின் வடமேற்கே அமைந்துள்ள மன்னார் மாவட்டம் மன்னார் தீவு மாந்தை முசலி என மூன்று பிரதான பிரிவுகளாக முற்காலத்தில் விளங்கியது. மாதோட்டப் பெரு நிலப்பரப்புக்கும் மன்னார் தீவுக்கும் இடையே மண்ணிறத்தில் ஓடுகின்ற மண்ணாறு ஆற்றின் பெயர் மன்னார் என இந்தப் பிரதேசத்துக்குரிய பெயராக உருப்பெற்றதென போக் என்ற ஆய்வாளர் தனது மன்னார் என்னும் ஆய்வு நூலில் 1888ம் ஆண்டு கூறியுள்ளார். மாதோட்டமெனும் பெரு நிலப்பரப்பில் அமைந்திருந்த புராதன மாந்தை நகரானது கி.மு. 300 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையிலும் சர்வதேசத்திலும் பிரசித்திபெற்ற நகரமாகவும் துறைமுகமாகவும் விளங்கியது.

மாதோட்ட அரசு இலங்கையில் முதன்முதல் உருவாக்கப்பட்டு நீண்ட காலம் நிலை பெற்ற அரசாகும். மாதோட்ட அரசுக்குப் பின்னர்தான் யாழ்ப்பாணம் - கண்டி - கொழும்பு - சீதவாக்கை போன்ற அரசுகள் உருப்பெற்றன. இலங்கை வரலாற்றில் முதன் முதல் நகரமாக வளர்ச்சியடைந்தது மாந்தை நகரமேயாகும். (எல்லாவல 1969 : 116-121) அத்துடன் மிகத் தொன்மைவாய்ந்த பிரசித்தி பெற்ற சர்வதேச துறைமுகமாகவும் மாந்தை நகர் விளங்கியது.

### 1520ஆம் ஆண்டில் மாந்தை மாதா கோவில் சிறு குடிசையாக ஆரம்பம்

மன்னார் நகரிலிருந்து தெற்கு நோக்கி வடக்காக 10 கிலோ மீற்றர் தொலைவில் புராதன மாந்தை நகரம் அமைந்துள்ளது. மாந்தை நாற்சந்தியிலே மாந்தைகோவில் பிட்டியிலே தற் போது அழகான தூய லூர்து அன்னை கெபியும் புதிதாக நிர்மானிக்கப்பட்ட திருத்தலமும் அமைந்துள்ளது. மாந்தை துறைமுக மேட்டிலே ஆரோக்கிய அன்னைக் கோர் ஆலயம் பிரான்சிஸ்கன் சபைக் குருவானவரான பேதுரு டி பெற்றாங்கோ என்பவரால் அமைக்கப்பட்டது. (பேணியோலா : 1991:224) போத்துக்கேயர் இலங்கை வந்தபோது மன்னார்த் தீவும் மாதோட்டமும் யாழ்ப்பாண இராச்சிய எல்லைக்குள் 7ம் செகராசசேகரம் என்னும் சங்கிலி மன்னனின் ஆட்சியின் கீழ் இருந்தது.

### ஆரோக்கிய அன்னைக்கு ஆலயம்

மாந்தை ஆரோக்கிய அன்னை ஆலயம் 1590இல் பெரிதாக கட்டப்பட்டது. 1543ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையினர் மாதோட்டப் பகுதிகளில் விரைவாக கத்தோலிக்க சமயத்தைப் பரப்பத்தொடங்கினர் 1544ஆம் ஆண்டு மன்னார் தீவில் கத்தோலிக்க மறையை யேசு சபை குரு புனித பிரான்சிஸ் சவேரியரினால் அனுப்பப்பட்ட ஒரு மறைத்தொண்டரினால் மனமாற்றப்பட்டு அதே ஆண்டில் அறுநூறுக்கு மேற்பட்ட கரையாளர் என அழைக்கப்பட்ட சுதேச மக்கள் மறைசாட்சிய



மரணத்தைத் தழுவிக்கொண்டனர். நற்சீசன்.சே.ரோ. புனித பிரான்சிஸ் சவேரியார் (1989). 1544ல் மன்னார் தீவில் வேதசாட்சிகளாய் மரித்தவர்களைத் தவிர ஏனையோர் மாதோட்டத்துக்கு வந்து பிரான்சிஸ்கன் சபையினரின் கண்காணிப்பில் வாழ்ந்தனர். (அன்ரனைனஸ்:1956: (1976: 5) அருட்தந்தை பெற்றாங்கோ என்பவரால் இந்தப் பிரதேசத்தில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. 1583ஆம் ஆண்டில் மன்னார் மாதோட்டப் பகுதிகளில் 43ஆயிரம் கத்தோலிக்கர்களும் 26 ஆலயங்களும் காணப்பட்டன. மன்னாரிலிருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் மாதோட்ட பெரு நிலப்பரப்பில் மாந்தை நகரில் அமைந்திருந்த ஆரோக்கிய அன்னை ஆலயம் பிரதான ஆலயமாக விளங்கியது. (மருதமடு (கைநூல்) 1976 : 1) கி.பி 1899ஆம் ஆண்டு குறிப் பிடப்பட்டுள்ள நிலத்தோற்றப் படத்தில் மாந்தைக்குளத்தின் மேற்கரையில் இவ்வாலயம் கட்டப்பட்டிருந்ததற்கான சான்றுகள் போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியர்களின் நூல்களில் இருந்து கூறக்கூடியதாக உள்ளது. வழக்கறிஞர் ஜெய ராஜ் 1964ம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையில் மாந்தை ஆரோக்கிய அன்னை ஆலயம் 1590இல் பெரிதாக கட்டப்பட்டது என குறிப்பிடுகின்றார்.

### மடு அன்னையின் ஆதி இருப்பிடம் மாந்தையில் அமைந்துள்ள தற்போதைய லூர்த்துக்கெபி

1886இல் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த மெய்சட் அடிகளார் மடுத்தேவாலய தொடர் பதிவேட்டுப் புத்தகத்தில் 1670 இல் மாந்தையில் ஆரோக்கிய அன்னை எனும் பேரில் ஓர் ஆலயம் இருந்ததாகவும் அதை அருட்தந்தை பெற்ரோ டீ பெற்றாங்கோ 1614 இல் கட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அன்ரனைனஸ்:1956:(1976): 16) செபமாலை மாதாவென்று தற்போது அழைக்கப்படும் மடு மாதா சொரூபத்தின் உண்மையான ஆதி இருப்பிடம் மாந்தை கோவில் பிட்டியில் அமைந்துள்ள தற்போதைய லூர்த்துக்கெபி கோவிலடியாகும். மடு மாதாவின் தொடக்க இருப்பிடம் மாந்தைப் பதியேயாகும் என்பது பாரம்பரியமாக நம்பப்பட்டு வந்த ஒரு விடயமாகவும் உள்ளது. தூய பிரான்சிஸ் சவேரியார் 1622 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12ம் திகதி புனித நிலைக்கு உயர்த்தப்பட்ட வேளை மாந்தை ஆலயப் பங்கிலிருந்து மனு வல் டி தையிட்டி என்பவர் சாட்சி பகர கோவா நகர் சென்றுள்ளார். (மொத்தம் போல் : 1965:7 இ நற்சீசன் : 1989 : 36).

### மாந்தை ஆரோக்கிய அன்னை சொரூபம் கலாபனை காரணமாக மடுவிற்கு எடுத்துவரப்பட்டது

மாந்தையில் இருந்த மாதா சொரூபத்தை சில பிரான்சிஸ்கன் சபைக் குருக்களும் மாந்தை மக்களும் 1670ல் இடம் பெற்ற வேதகலா பனையால் இடம் பெயர்ந்து மடு மாதாவை மடுவுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். 1670 இல் ஒல்லாந் தர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் கத்தோலிக்கர்களுக்கு எதிரான கலாபனை ஆரம்பமானது. மாந்தை ஆலயத்திலிருந்த ஆரோக்கிய அன்னை சொரூபத்தை ஒல்லாந்தரின் கலாபனை காரணமாக 20 பக்தியுள்ள கத்தோலிக்க குடும்பங்களினால் எடுத்துவரப்பட்டு மடுவில் பாதுகாக்கப்பட்டது. அதே காலப்பகுதியில் 700 கத்தோலிக்கர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தப்பி வன்னிப் பிரதேசம் வந்து மடுவை அடைந்தனர். இம்மக்களினால் பாதுகாக்கப்பட்டு வந்த மாந்தை மாதா சொரூபம்தான் தற்போது 'மடுமாதா செபமாலை மாதா' என அழைக்கப்பட்டு வரும் சொரூபமாகும். (மருத மடு (கைநூல்) :1976:1)

### மாந்தை மாதா மடுவுக்கு பயணித்த பாதை ஒல்லாந்தர் காலத்தில் அழிவு

போர்த்துக்கேயர் காலத்தில் மிகவும் பற்றுறுதியோடி ருந்த கத்தோலிக்க விசுவாச வாழ்வு ஒல்லாந்தருடைய காலத்தில் முற்றாக அழிவுக்குள்ளானது. இந்த பயங்கரமான கலாபனையிலிருந்து பல அற்புதங்களும் பாதுகாப்பும் வழங்கி வந்த மாந்தை ஆலயத்திலிருந்த ஆரோக்கிய அன்னை சொரூபத்தைப் பாதுகாக்க 1670இல் மாந்தை மக்கள் விரைந்து செயற்பட்டனர். தமது உடைமைகள், காணி பூமிகள், கால்நடைகள், சொத்துக்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு கோவில் மூப்பரா யிருந்த மோசேசுடன் 20 குடும்பங்களுக்கு மேல் நள்ளிரவிலே மௌனதியானத்துடன் சொரூபத்தை எடுத்துக்கொண்டு காட்டுப் பகுதிகளில் திருச்செப மாலை ஓதிக் கொண்டு சென்றனர். (மொத்தம் போல் : 1965:16) அந்த மாதா சொரூபத்தை எடுத்து வந்து பெரிய நாவற்குளத்தில் இளைப்பாறிய போது ஒரு நாவல்மரம் வளைந்து அந்த மாதாவை மறைத்துப் பாதுகாத்தது என்று ஒரு பாரம்பரிய கதையும் உண்டு. பின்னர் அச்சொரூபத்தை 1670இல் கள்ளிக் கட்டைக்காட்டில் ஒரு பெரிய புளியமரப் பொந்தில் ஒளித்து வைத்து வழிபட்டனர். இரவு வேளைகளில் தான் அவ்விடத்தில் ஒன்று கூடி செபமாலை ஓதுவார்கள். ஆறுமாதகாலமாக அவ்விடத்தில் வைத்து பாதுகாத்தனர். (மொத்தம் போல் : 1965:16) அப்புளியமரம் ஊர்மனைக்குள் தான் இருந்த தென்று கீதம்பிள்ளைப் புலவர் எழுதிய ஓர் ஓலைச் சுவடியில் காணப்படுகின்றது.

### மாந்தை ஆலயம் ஒல்லாந்தர்களால் இடிப்பு

மாந்தை ஆலயத்தை ஒல்லாந்தர்கள் இடித்துவிட்டனர் என்று கேள்விப்பட்டதும் மாந்தை மக்கள் கட்டுக்கரைக் குளத்துக்குள்ளிருந்த மாதாவை விடத்தல் வேம்பு என்னும் இடத்திற்கு எடுத்து சென்று மூன்று மாதங்களுக்கு மேலாக ஒளித்து வைத்துப் பாதுகாத்தனர். அதன்பின்னர் குருவில் காட்டுப் பகுதிக்கு எடுத்துச் சென்று ஒரு பாலைமரப் பொந்தில் வைத்து செபமாலை ஓதி வணங்கி வந்தனர். குருவில் பகுதியில் ஒருவருடகாலம் ஒளித்து வைத்திருந்தனர். இப்பதியில் வாழ்ந்த ஒரு கத்தோலிக்கர் தொடர்ச்சியாக இம்மாதா சொரூபத்துக்கு வெளிச்சம் ஏற்றி வந்தார் என்று ஓர் பாரம்பரிய கதையும் மாதோட்டப்பகுதியில் நிலவி வருவதைக் காணலாம். பின்னர் வன்னிக் காட்டில் அலைந்து திரிந்தபின் தேவஒளி அவர்களை வழிநடத்தத் தொடங்கியதை உணர்ந்தவர்களாக ஒல்லாந்தரின் எல்லையைக் கடந்து கண்டி இராச்சிய ஏல்லைக்குள் நுழைந்து மருதமடுப் பகுதியை அடைந்தனர். இவ்விடத்தை அடைந்ததும் அவர்களின் தாகம் தீர தெளிந்த நீர் கிடைத்தது. மனதிலே ஓர் அமைதியும் பாதுகாப்பும் கிடைத்தது. இவ்விடத்தில் மாதாவை மிகவும் கண்ணியமாக பக்தி வைராக்கியத் தோடு பாதுகாத்து தினமும் திருச் செப மாலை சொல்லி வாழ்ந்தனர். மருத மரங்கள் சூழ்ந்த குளம் காணப்பட்டதால் காலப்போக்கில் மருதமடு என இவ்விடம் பெயர் பெறத் தொடங்கியது.



ஒல்லாந்த கல்வினிஸ்டு சபையினரால் புராதன மாந்தை தூய ஆரோக்கிய அன்னை ஆலயம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. ஆனால் அவ்வாலயத்தில் நற்கருணைக் கிராயின் ஒரு சிறு பகுதி அழிக்கப்படாமல் இருந்தது. அதை மையமாகக் கொண்டு கி.பி 1926 ஆம் ஆண்டு வண.பிதா எஸ். ஆர். மாட்டீன் அடிகளாரால் ஓலைக் குடிசை ஒன்று கட்டப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் 1949ஆம் ஆண்டு அடம்பன் பங்குத்தந்தையாக விளங்கிய ஜே . சிங்கராயர் அடிகளாரால் அக்காலத்தில் யாழ்ப்பாண ஆயராயிருந்த கியோமர் ஆண்டகையின் வழிநடத் தலில் தூய லூர்து மாதாவுக்கு ஒரு கெபி அமைத்து யாத்திரை ஸ்தலமாக உருவாக்கினார். இக் கெபி விடயமாக இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையே குழப்பங்கள் ஏற்பட்ட போது அதைப் பாதுகாக்க யாழ் மற்றும் மன்னார் ஆயர்களும் அடம்பன் பங்கில் பணியாற்றிய பங்குத் தந்தையர்களும் ஊர் மக்களும் அயல்கிராம மக்களும் அரும்பாடுபட்டனர்.

### மாந்தைப் பங்கின் முதற் பங்குத்தந்தையாக ச.மரியதாசன் சீமான் அடிகளார்

பிரான்சிஸ்கன் சபைக் குருக்களினால் மாந்தை ஆலயத்தில் வைக்கப்பட்ட ஆரோக்கிய மாதா சொரூபம் 450 ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் மடுவில் 'மடுமாதா' என பக்தர்களால் அன்பாக அழைக்கப்பட்டு வருகிறார். மாந்தை கெபிக்கு அருகில் தற்போது பிரமாண்டமான ஆலயம் கட்டப் பட்டு மாந்தை தூய லூர்து அன்னை ஆலயத்தை மையமாகக் கொண்டு நாகதாழ்வு புனித தோமையார் ஆலயம், பெரியநாவற்குளம் புனித மரியமாதா ஆலயம், பாப்பாமோட்டை புனித சிந்தாத்திரை மாதா ஆலயம், கண்டல் புனித செபஸ்ரியார் ஆலயம், தேனுடையான் அப்போஸ்தலரான புனித பிலிப்பு ஆலயம் ஆகியவற்றை உள்ளடக்கி புதியதொரு பங்கு பிரகடனப்படுத்தப்பட்டு தொடர்ந்து யாத்திரைத் ஸ்தலமாக இயங்கி வருகின்றது. மாந்தைப் பங்கின் முதற் பங்குத் தந்தையாக ச.மரியதாசன் சீமான் அடிகளார் பணியாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி...

கட்டைக்காடு கடற்படைக் காவல் நிலையம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வடமராட்சி கிழக்குக் கடலில் ஊடுருவிய இந்திய மீனவர்களால் வெற்றிலைக்கேணி மீனவர்களின் வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன. இதனால் ஒரே நாளில் 40 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது.
வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு ஊடுருவிய 150 க்கும் மேற் பட்ட இந்திய இழுவைப் படகுகள் இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
கடற்படையினர் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.
மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டவேளை அங்கு வந்த மருதங்கேணிப் பிரதேச செயலாளர், அவர்களது கோரிக்கை தொடர்பில் கேட்டறிந்து கடற்படையினருடன் உரையாடினார்.
இதற்குப் பிரதேச கடற்படைத் தளபதி, தமது பிரதேசக் காவல் பிரிவிடம் இதற்கான படகு வசதி கிடையாது எனவும், இது தொடர்பாக காங்கேசன்துறைக் கடற்படையினருடனேயே தொடர்பு கொள்ளுமாறும் பதிலளித்துள்ளார்.
இது தொடர்பில் உடனடியாகவே மாவட்டச் செயலருடன் தொடர்பு கொண்டு பிரதேச செயலாளர் நிலமையை விளக்கினார். மாவட்டச் செயலர் உடனடியாகவே வடக்கு மாகாணக் கடற்படைத் தளபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.
குறித்த பிரதேசத்துக்குள் இந்திய மீனவர் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக அந்தப் பகுதிக் கடற்படையினருக்கு இரு டோறாப் படகுகள் வசதியை வழங்குவதாக வடக்குக் கடற்படைத் தளபதி பதிலளித்தார் என்று மாவட்ட செயலர் பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்தினார். (த-101)

## இந்திய...

டுள்ளதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.
கடந்த இரு நாள்களாக வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி மீனவர்களின் 50 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் நாசமாக்கப்பட்டுள்ளன.
இந்திய மீனவரின் ட்ரோலர் படகுகளைத் துரத்திப் பிடிப்பதற்கு தம்மிடம் டோறாப் படகு இல்லை என்று நேற்றுக் கடற்படையினர் கைவிரித்தனர் என மீனவர்கள் குற்றம் சாட்டினர்.
நேற்று மட்டும் 40 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான சொத்தழிவுகள் ஏற்பட்டுள்ளன. நேற்று முன்தினமும் 10 லட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகள் இந்திய மீனவர்களால் அறுத்து செல்லப்பட்டுள்ளன.
'இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது எமது மீனவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குகின்றார்கள். நேற்றைய சம்பவம் தொடர்பில் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவிடமும் முறையிட்டிருக்கிறோம். எதிர்வரும் நாள்களில் இந்தியத் தூதரகத்துக்குச் சென்று முறையிடவுள்ளோம். யாழ்ப்பாண மாவட்ட செயலர், கடற்படை உயரதிகாரி ஆகியோரிடமும் தெரிவித்துள்ளோம் என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் வே. தவச்செல்வம் தெரிவித்தார்.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இரவு மன்னார் கடற்பரப்பில் பாய்ச்சப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகளை இந்திய மீனவர்கள் தமது படகுகளில் ஏற்றிக்கொண்டிருந்ததை உள்ளூர் மீனவர்கள் அவதானித்தனர். வலைகள் தாழ்வுப்பாடு கிராம மீனவர்களுடையது என்பதை உறுதிப்படுத்தியபோதும் இந்திய மீனவர்கள் வலைகளை ஒப்படைக்காது கொள்ளையடித்துச் சென்றிருந்தனர். சுமார் 40 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வலைத் தொகுதிகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.
கடந்த மாதம் 22ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை முல்லைத்தீவு மீனவர்கள் அவதானித்தனர். இது தொடர்பாக உடனடியாகவே முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர், மாவட்டச் செயலர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என அனைவருக்கும் தகவல் வழங்கப்பட்டது.
இந்திய மீனவர்களின் அத்துமீறல் தினமும் அதிகரித்துவரும் நிலையில் கடற்படையினரோ வேடிக்கை பார்க்கின்றனர்.
கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாண சுண்டிக்குளம் தொடுவாய் பகுதியில் இந்திய மீனவர்களினால் உள்ளூர் மீனவர்களின் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியிலான வலை கள் திருடிச் செல்லப்பட்டன. இதனைக் கட் டைக்காடு சென்.மேரிஸ் கடற்றொழில் சங்கத் தலைவர் ஜெ.கிறிஸ்ரிராஜா உறுதிப் படுத்தியிருந்தார்.
கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் இந்திய மீனவர்களின் படையெடுப்பு அதிகரித்துக் காணப்பட்டது. பொக்கணை, மாத்தளன் பகுதிகளில் இருந்து தொழிலுக்குச் சென்ற மீனவரின் 80 லட்சம் ரூபா பெறுமதியான வலைகளையும் இந்திய மீனவர்கள் அறுத்து நாசப்படுத்தியிருந்தனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்துக்குள் நுழைந்த இந்திய இழுவைப் படகுகள், சுப்பர்மடம் கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உள்ளூர் மீனவர்களின் படகுகள் மீது மோதிச் சேதப்படுத்தின. பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் துண்டு துண்டாக நறுக்கப்பட்டன.
'தொடர்ச்சியாக இடம்பெறும் இந்தச் சம்பவங்கள் வடக்கு மீனவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தன. கடந்த நான்கு மாத காலமாக வடக்கு மாகாணத்தின் கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவரின் ட்ரோலர் படையெடுப்புக்கள் ஆரம்பித்துள்ளன. இது குறித்துக் கடற்படையினர் பாராமுகமாக உள்ளனர். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தியப் படகுகள் அத்துமீறி நுழைவதைத் தடைசெய்யக் கோரி யாழ்ப்பாண மாவட்டத்தின் 122 கடற்தொழிலாளர் சங்கங்களும் இணைந்து கடற்தொழில் அமைச்சிடம் ஏற்கனவே மனு ஒன்றையும் கொடுத்துள்ளோம். இத்தகைய சம்பவங்கள் மேலும் நடக்குமாக இருந்தால் வடபகுதியை முழுமையாக உள்ளடக்கி பெருமளவான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும்" என்று மீனவர்கள் எச்சரித்தனர். (த-21-ரி)

## தீர்வு...

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்படும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 6 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.
கடந்த திங்கட்கிழமை தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.
நேற்று மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் மக்களுடன் சென்று கலந்துரையாடினார்,
இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களின் விடுதலை தொடர்பான தெளிவான வெளிப்படுத்தலை இலங்கை அரசு உடனடியாக நம்பத் தகுந்த வகையில் வெளி யிடவேண்டும். எங்களுக்குத் தீர்க்கமான முடிவுகள் கிடைக்கப் பெறாது விட்டால் போராட்ட வடிவம் மாறும். அது உணவு ஒறுப்புப் போராட்டமாக அமையாது எனக் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.
வவுனியாவிலும் இரண்டாம் கட்டமாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறையான உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று 2 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (த-21-6-35)

## சீனா...

ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதாக நம்பும் இந்தியா, வடக்கு - கிழக்கில் காலூன்றுவதற்கு கூட்டமைப்பின் ஆதரவைக் கோருவதற்காகவே அவர் இந்தச் சந்திப்பைப் பயன்படுத்தியுள்ளார்.
இந்திய அயலுறவுச் செயலரின் இலங்கைப் பயணம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா, ஜெய்சங்கரின் இலங்கைப் பயணமானது தமிழர் விவகாரத்தில் இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதாக அமைந்திருக்கவில்லை. இந்தியாவின் தேசிய நலன்களை முதன்மைப்படுத்துவதாகவே அமைந்திருந்தது. இலங்கை - சீனா இடையிலான பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் இந்தியாவின் அதிருப்தியை வெளிப்படுத்தவே இவ்வாறான பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்று குறிப்பிட்டுள்ளார்.
அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில், புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் சீனாவின் ஆர்வம் எப்படியுள்ளது என்று வினவியுள்ளனர். மேலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அவர்கள் சந்தித்துப் பேசினர். சந்திப்பின் முடிவில் அரச தலைவர் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கையில் பெரிய முதலீடுகள் தொடர்பான உடன்படிக்கை மேற்கொள்ளப்படும்போது தேசிய, பிராந்தியப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று அரச தலைவர் தெரிவித்தாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.
இலங்கை இதுவரை பெரிய முதலீட்டு உடன்படிக்கையைச் சீனாவுடன் மாத்திரமே மேற்கொண்டுள்ளது. இதனை மையப்படுத்தியே அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்களும், அரச தலைவருடன் பேச்சு நடத்தியுள்ளனர்.
கூட்டு அரசும், கடந்த மகிந்த அரசைப் போன்று சீனாவுடன் பொருளாதார நலன்களை முன்னிறுத்தி நெருங்குவதாகக் கருதும் இந்தியா - அமெரிக்கா, அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந்தப் பயணங்களை முன்னெடுத்துள்ளன. (த-5)

## புதியதொரு...

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக நம்பகத் தன்மையான புதிய தீர்மானத்தைக் கொண்டு வருமாறும், அதில் ஐ.நா. தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணையை உள்ளடக்குமாறும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளிடம், பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.
அந்த நாடுகளுக்குப் பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட விடயங்களை நிறை வேற்றுவதில் இலங்கை காண்பித்துள்ள முன்னேற்றங்கள், அர்ப்பணிப்புகள் தொடர்பில் மிகத் துல்லியமாக ஆராயவேண்டும். இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நான்கு சிறப்பு அறிக்கையாளர்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரும் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அவர்களது பயணத்துக்கு அரசின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.
அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான தேசிய அளவிலான மக்கள் கருத்தறியும் செயன்முறை நடைபெற்றுள்ளது. நல்லிணக்கம் மற்றும் நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கான அலுவலகத்தை ஏற்படுத்தியுள்ளது. காணமற்போதல் தொடர்பான பன்னாட்டுப் பிரகடனத்தை இலங்கை அங்கீகரித்துள்ளது.
இவற்றை நிறைவேற்றியுள்ள அதே வேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு அரசு தயாராக இல்லை. நிலைமாற்றுக்கால நீதியின் நான்கு பொறிமுறைகளிலும் பன்னாட்டுப் பிர சன்னத்தை உள்வாங்குவதை அரசு எதிர்த்து வருவதன் காரணமாக நிலைமாற்றுக்கால நீதி விவகாரத்தில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது.
இலங்கை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக நம்பகத்தன்மை மிக்க புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையைக் கேட்டுக் கொள்கின்றோம். புதிய தீர்மானம் முன்னைய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு இலங்கையைக் கோரவேண்டும் - தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணையை ஏற்படுத்த வேண்டும். இதற்கு குறைவானது எதுவும் பொதுமக்களின் நம்பிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்-என்றுள்ளது. (த-5)

## வடக்கு...

கும் இது தொடாபாக அறிவிக்கப்படும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளா ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
தற்போது வடக்கில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. அதனைத் துரித கதியில் கட்டுப்படுத்தும் நோக்கில் மாகாண சுகாதார அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.
கலந்துரையாடலில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். உள்ளூராட்சி மன்றங்களும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்து தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் இணைந்த செயற்றிட்ட முன்னெடுப்புத் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.
வடக்கில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிப்பதற்குத் திண்மக் கழிவகற்றப்படாமையே முக்கிய காரணமாக உள்ளது. திண்மக் கழிவுகள் அகற்றப்படுவதற்கு ஆளணிகள் தேவைப்படின் அந்த விவரங்களை அமைச்சின் செயலருக்கு அறிவித்து மேலதிக ஆளணியை அதிகரித்து கழிவுகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு நடடிவக்கை எடுக்கவேண்டும்.
கழிவு முகாமைத்துவம் சீராகும் பட்சத்தில் டெங்குத் நோய்த் தாக்கம் குறைவடைய வாய்ப்புள்ளது. பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவத்துக்காகக் குப்பைத் தொட்டிகளை வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும் இடங்களைப் பார்வையிட்டு அறிவுறுத்தல் வழங்கவேண்டும்.
வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்ய வேண்டும். பொது இடங்கள், வீடு கள், வைத்தியசாலைகள் என்பவற்றில் டெங்குத் தாக்கம் உள்ளதா என்று தொடர்ச்சியான அவதானிப்பு வேண்டும் என இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது. (த-10)

## புலனாய்வு...

பில் இடப்பட்டுள்ளதாக, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சிங்கள ஊடகமான ராவய வெளியிட்டுள்ளது.
இலங்கை வங்கியில் உள்ள மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவின் நடப்புக் கணக்கிலேயே இந்தப் பணம் யாழ்ப்பாணம், கொட்டாஞ்சேனை, அக்கரைப்பற்று, தம்பிலுவில், நுகேகொட, கொள்ளுப்பிட்டி, திருநெல்வேலி, பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து வைப்பில் இடப்பட்டுள்ளது.
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கேபிள் தொலைக்காட்சியை நடத்தும், நபர் ஒருவர் ஒரு மில்லியன் ரூபாவை வைப்பில் இட்டுள்ளார். வைப்பில் இடப்பட்ட பணம், மேஜர் ஜெனரல் ஹெந்தவிதாரண, மற்றும் ஐ.எம்.ஜி.குமார, பராகொட கமகே.வசந்த டயஸ், மற்றும் வஜிர லியனகே ஆகியோரால் மீளப் பெறப்பட்டுள்ளது.
செய்மதி தொழில்நுட்பத்தின் மூலம், பிரான்சில், அரச தொலைக்காட்சிச் செய்திகள் மற்றும் நிகழ்ச்சிகளை, தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்புவதற்கு, அரச அதிபர் செயலகத்தினால், 153 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது என்ற விவரமும் இந்த விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான சுரேஸ் சாலி மூலமாக, தனியார் தொலைக்காட்சி உரிமையாளர், அப்போதைய அரச தலைவரின் செயலரான லலித் வீரதுங்கவைச் சந்தித்திருந்தார். இதற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டபோதும், நிகழ்ச்சிகள் பிரான்சில் ஒளிபரப்படவில்லை.
இந்தத் தொலைக்காட்சி வடக்கு, கிழக்கில் அரச தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை எந்தக் கட்டணமும் செலுத்தாமலேயே ஒளிபரப்பி வருகிறது. (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி...

பெறாத நிலையில் புதுக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டம் 23ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது.

தமது அறவழிப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் 48 மணி நேரச் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தையும் புதுக்குடியிருப்பு மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். நேற்று சிறிஸ்கந்தராசா நிர்மலாதேவி, விஜயகுமார் கமலநாயகி ஆகிய இருவரும் உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (த-7)

## பன்னாட்டு...

தலைவர்கள் எல்லோரிடமும் எடுத்துரைத்துவிட்டேன்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிப்பதற்கு இணை அனுசரணை வழங்கிய பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக எழுந்துள்ள நிலையிலுமே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொலநறுவையில் நேற்று மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பு மீது பன்னாட்டுச் சமூக மட்டத்தில் விமர்சனங்கள் எழுந்தன. இதனால் நீதித்துறை மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. முன்மாதிரியானநீதிக்கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்காக இந்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும். இதற்கு நீதிபதிகளினதும் அதன் கீழான நிர்வாகத்தினரதும் ஒத்துழைப்பு அவசியம்.

பன்னாட்டுநீதிபதிகளை வரவழைக்க வேண்டும்என்றுஎழுந்தபிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். பன்னாட்டு நீதிபதிகளை அழைக்க-அனுமதிக்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் தயாரில்லை என்று ஐ.நா. செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், பலம் வாய்ந்த நாடுகளின் தலைவர்கள் ஆகியோரிடம் மிகவும் தெளிவான முறையில் எடுத்துரைத்துள்ளேன். பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிப்பதற்கு நாட்டுச் சட்டத்தில் இடமில்லை. அவ்வாறு செய்வதாக இருந்தால் அரசமைப்பை மாற்றவேண்டும். இலங்கை நீதிமன்றக் கட்டமைப்பு மீது நம்பிக்கை உள்ளது. எம்மவர்களுக்குநம்பகமானமுறையில்சேவையாற்ற முடியும் - என்றார். (த-5)

## வடக்கு கல்வியில்...

ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேளின் மணிவிழா வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். பளை மத்திய கல்லூரியின் அதிபர் கே.பாலகிருஸ்ணன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இந்த விழா நேற்றுக் கிளிநொச்சி கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அங்குஅவர்மேலும்தெரிவித்ததாவது:

இன்று வடக்கு மாகாணக் கல்வி வேறுவிதமான நெருக்கடிகளைச் சுமக்கின்றது.

கல்வியில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துச் செல்கின்றன. அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் சுயமாகச்செயற்படமுடியாது.பக்கம்சார்ந்த அரசியலால் பலரும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை அதிகரித்துச் செல்கின்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு ஒரு வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த பலர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கெஞ்சி மன்றாடும் அளவுக்கு கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் பல்வேறு நெருக் கடிகள் இருப்பதாகபலரும்நினைக்கின்றனர். எதுவானாலும் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள மாணவர்களின் கல்வியில் அனைவரும் அக்கறை கொண்டு புதிய பணிப்பாளரை உடனடியாக நியமனம் செய்ய வேண்டும். இதில் அரசியல் உள்நுழைவுகளுக்குத் துளியளவும் இடம்கொடுக்கக் கூடாது-என்றார். (த-4)

## கல்வி...

புக் கிளம்பியுள்ளது. இதுபோன்றே தகவல் தொழில்நுட்பப் பாடத்துக்கும் கல்வியில் தொடர்பில்லாத ஒருவர் நியமிக்கப்படவிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அதற்கும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் எதிர்வரும் புதன்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்ட மொன்றை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைக் கல்வி நிர்வாக சேவை ஊழியர்களின் தொழிற் சங்கங்கள் தெரிவித்தன.

இராணுவ கேணல் அதிகாரியான மஞ்சுள காரியவசம் கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவுக்கான பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நேர்மையாகச் செயற்படவேண்டும்.

இராணுவ அதிகாரியின் நியமனத்தை அரசு உடனடியாக விலக்கிக் கொள்ளவேண்டும். தவறின் போராட்டம் முன்னெடுக்கப்படும்என்றுஇலங்கை ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இந்த நியமனத்துக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன், வலய, மாகாண, தேசிய மட்டப் பாடசாலை ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளிலிருந்தும் விலகியிருக்க தீர்மானித்துள்ளதாகவும், இலங்கைக் கல்வி நிர்வாக சேவை ஊழியர்களின் தொழிற்சங்கச் செயலாளர் பிரபாத் விதானகே தெரிவித்துள்ளார். (த-4)

## சு.க.வின்...

கட்சியின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் மகிந்தவையும் இணைப்பதற்குரிய முயற்சியில் இறங்கியுள்ள சு.கவின் நடுநிலைக் குழு, நிறைவேற்றுக்குழுக் கூட்டத்துக்கு மகிந்தவையும் அழைக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளது. (த-4)

## பிலக்குடியிருப்பு...

யாழ்ப்பாணம், பெப். 26

தங்களுடைய உரிமைகளுக்காக எவரையும் எதிர்பாராமல் தாங்களாகவே அகிம்சை வழியில் போராடுபவர்கள்தான் உலகில் உன்னதமான மக்கள். அப்படித்தான் பிலக்குடியிருப்பு மக்களும் போராடுகின்றார்கள். அவர்களின் போராட்டம் வெற்றி பெறும். இவ்வாறு தமிழகத் திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் தெரிவித்தார்.

பிலக்குடியிருப்பு மக்கள் நேற்று 26 ஆவது நாளாகவும் போராட்டம் நடத்தி வருகின்றனர். நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இரவு 7 மணியளவில் பிலக்குடியிருப்பு மக்களை நேரில் சென்று சந்தித்தார் புகழேந்தி தங்கராஜ். சுமார் அரை மணி நேரம் அந்த மக்களுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

'உலகில் கட்டாயமாகப் பார்க்க வேண்டிய இடங்கள் என்று சில இடங்களைச் சொல்வார்கள். அந்த இடங்களுக்கெல்லாம் சென்றால் ஒரு பரவசம் தோன்றும். நான் இன்று பிலக்குடியிருப்பில் தமது உரிமைக்காக உறுதியோடு போராடும் மக்களின் மண்ணில் எனது பாதங்கள் படும்போது அந்தப் பரவசத்தை உணர்கின்றேன். அகிம்சை முறையில் எங்கள் நிலத்தை எங்களுக்குக் கொடு என்ற ஒற்றைக் கோரிக்கையுடன் போராடும் இந்தக் குழந்தைகளுடனும் தாய்மார்களுடனும் இடையில் இருந்து பேசுகின்ற வாய்ப்பு இறைவன் எனக்குக் கொடுத்திருக்கின்ற ஓர் அருட்கொடையாகும். உறுதியான நியாயமான போ[illegible] தில் ஈடுபட்டுள்ள இந்த மக்[illegible] தும் குழந்தைகளினதும் [illegible] ளைத் தொட்டு வணங்க வே[illegible] என்ற உணர்வு எனக்கு ஏற்[illegible] றது. இந்த மக்களின் உறு[illegible] போராட்டம் நிச்சயம் வெற்றி [illegible] வெற்றி பெறும் நாளில் நான் [illegible] இருக்கமாட்டேன். இந்த [illegible] என்று வெற்றி பெறுகின்றார்[illegible] அன்று நானும் நான் சா[illegible] தமிழகமும் இந்த வெற்றி[illegible] கொண்டாடும்' என்றார் புகழேந்[illegible]

இதேவேளை நாட்டின் பல பாக[illegible] களிலிருந்தும் நேற்று முன்தினம் வருகை தந்த இளைஞர்கள் ஒரு நாள் முழுவதும் அந்த மக்களுடன் தங்கியிருந்தனர். இந்த மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொருவர் வரவேண்டும் என்று அந்த இளைஞர்கள் கோரிக்கை விடுத்தனர். (த-5-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டிபி.செயலக தடகள இறுதி இன்று

யாழ்ப்பாணம், பெப். 26
கரவெட்டிபிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகளத்தொடரின்இறுதிநாள்நிகழ்வுநெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான 100 மீற்றர், பெண்களுக்கான 100 மீற்றர். ஆண்களுக்கான 800 மீற்றர், பெண்களுக்கான 800 மீற்றர், 4 வீரர்கள் பங்கு பற்றும்100மீற்றர்அஞ்சலோட்டம்,4வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகிய தடகள நிகழ்வுகளும், வதிரி டயமன்ஸ் வதிரி பொம்மர்ஸ் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட இறுதியாட்டமும் இடம்பெறவுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மேலதிகமாவட்டச்செயலர் சு.முரளிதரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர்கிருஸ்ணகுமார், வடமராட்சிகல்விவலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் ச. செல்வக்குமரன், யாழ். மாவட்ட செயலக விளையாட்டு உத்தியோகஸ்த்தர் க.விஜிதரன் ஆகியோர்கலந்து கொள்ள வுள்ளனர். (ம-422)



## விக்ரோறியா அணி வென்றதுகிண்ணம்

யாழ்ப்பாணம், பெப். 26
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுக் குட்பட்ட ஆண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாகல்லூரி அணிசம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்தபுதன்கிழமைநடைபெற்றஇறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி.

அடுத்த இரு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய விக்ரோறியாக் கல்லூரி அணி 25:22, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்களைக் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை வயாவிளான் மத்திய கல்லூரிதனதாக்கியது. (ம-422)

## இளங்கதிர் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 26
வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வல்வை இளங்கதிர் அணி சம்பியன். வல்வையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ரேவடி அணியை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது இளங்கதிர் அணி. (ம-23)

## மகிழங்குளம் அ.த.க. பாடசாலை கரப்பந்தில் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 26
வவுனியாவடக்குகல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலை களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுப் பெண்கள் பிரிவில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க.பாடசாலை அணி சம்பியனானது.

ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மாதர் பனிக்கர் மகிழங்குளம்அ.த.க. பாடசாலைஅணியை எதிர்த்து சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி மோதியது. இதில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணி 25:13, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில்முதல் இருசெற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் சம்பியனானது. மூன்றாமிடத்தை கோயிற் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயஅணிபெற்றது. (ம-422)



## நுவரெலியாவில்விரைவில்வரவுள்ளது பன்னாட்டுத்தர விளையாட்டுத் தொகுதி



நுவரெலியா, பெப். 26
பன்னாட்டு அந்தஸ்து பெற்றதும் உச்சத் தொழில்நுட்பத்துடன் கூடியதுமான உள்ளக விளையாட்டரங்கு மற்றும் விளையாட்டுத் தொகுதி ஒன்று நுவரெலியாவில் அமைக்கப்படவுள்ளது.

35 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலேயே இவை அமைக்கப்படவுள்ளன.

இதற்கான வர்த்தக உடன்படிக்கை பிரான்ஸ் நிறுவனமான 'எலிப்ஸ் புரஜக்ட் எஸ்.ஏ.எஸ்.' விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர நாளை கைச்சாத்திடலாம்.

உள்ளக அரங்கின் மொத்தச் செலவு 8 ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் என்று கொழும்பு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## சென். அன்ரனிஸ் கழக நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 26
பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தால்புதிதாகநிர்மாணிக்கப்பட்ட கழக நிலையம் நாளை மாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டுநிலையத்தைத்திறந்துவைக்கிறார். சிறப்புவிருந்தினராகவடமாகாண கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சர் ரி.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். திறப்பு விழா நிகழ்வை முன்னிட்டு பிற்பகல் 3 மணிக்கு வீதியோட்டம் உட்பட சில நிகழ்வுகள்நடைபெறவுள்ளன. (ம-23)

## கரவெட்டிக் கோட்ட பாடசாலைகளுக்கு வடமராட்சி லீக்கினால் உபகரணங்கள்



யாழ்ப்பாணம், பெப். 26
கரவெட்டிக் கோட்டத்தில் இருந்து கால்பந்தாட்டத் தொடர்களில்பங்கெடுக்கும்பாடசாலைகளுக்குவடமராட்சி லீக்கினால்பயிற்சிஉபகரணங்கள்வழங்கப்பட்டன.

நாவலர் மடத்தில் அமைந்துள்ள கரவெட்டி - கோட்டக் கல்வி பணிமனையில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. வடமராட்சி கல்விவலய கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், கரவெட்டி கோட்டப் பணிப்பாளர் கே.கே.யோகநாதன், வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் ச.செல்வகுமரன், வடமராட்சி லீக்கின் தலைவர் தா.மு.வேதாபரணம், வடராட்சிலீக்கின் செயலாளர் தி.வரதராசன் மற்றும் பாடசாலை களின் உடற்கல்விஆசிரியர்கள்எனபலரும்கலந்துகொண்டனர். 14 பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன (ம108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெற்றிநடைக்கு முற்றுப்புள்ளி

இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் வென்றதன் மூலம் அந்த அணியின் தொடர் வெற்றி நடைக்கு ஆஸ்திரேலிய அணி முற்றுப்புள்ளி வைத்தது.
இந்திய அணி கடந்த 2015 ஆம் ஆண்டு மத்திய பகுதியில் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடியபோது காலியில் நடைபெற்ற ஆட்டமொன்றில் தோற்றது. இதுவே டெஸ்ட் ஆட்டங்களில் அந்த அணி சந்தித்த இறுதித் தோல்வியாக அமைந்தது. அதன் பின்னர் கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களாக 19 ஆட்டங்களில் தோல்வியே காணாமல் வெற்றி நடை போட்டுவந்தது. இந்த வெற்றி நடைக்கு இந்திய மண்ணில் வைத்தே முடிவுகட்டியது ஆஸ்திரேலிய அணி. (ம)

## சொந்த மண்ணில் சுருண்டது இந்தியா

### சுழலை வைத்து அடித்தது ஆஸி. மூன்று நாள்களில் முடிந்த டெஸ்ட்

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 333 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது ஆஸ்திரேலிய அணி.
நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் புனேயில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரென்சொவ் 68 ஓட்டங்களையும், ஸ்ராக் 61 ஓட்டங்களையும், வோர்ணர் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாதவ் 4 இலக்குகளையும், அஸ்வின் 3 இலக்குகளையும், யடேஜா 2 இலக்குகளையும் ஜெயந் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி 105 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ராகுல் 64 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கெபி 6 இலக்குகளையும், ஸ்ராக் 2 இலக்குகளையும், ஹசில்வூட், லையன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா இரண்டாம் நாளான நேற்றுமுன்தின முடிவில் 143-4 என்றிருந்தது. சிமித் 59 ஓட்டங்களுடனும், மிச்செல் மார்ஷ் 21 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 31 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார் மிச்செல். வேட், ஸ்ராக் இருவரும் முறையே 20, 30 ஓட்டங்களைப் பெற்றனர். மறுமுனையில் சதம்கடந்தார் ஸ்ரீவ் சிமித். சுழலுக்குச் சாதகமான ஆடுகளத்தில் ஓர் அபார சதமாக அது பதிவானது. 285 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா.
பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 107 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. புஜார பெற்ற 31 ஓட்டங்களே அதிகபட்சம். வேறெவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. அத்தனை இலக்குகளையும் ஆஸியின் சுழல் வீரர்களான கெபி, லையன் இருவருமே கைப்பற்றினர். கெபி 6 இலக்குகளையும், லையன் 4 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 26
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென். பிலிப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து முத்தமிழ் அணி மோதவுள்ளது. (ம-23)



## ஆப்கானுக்குப் பதிலடி சிம்பாப்வே கவனித்தது

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரில் தனது இருப்பைத் தக்கவைத்தது சிம்பாப்வே.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது ஆட்டம் சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 111 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் ஸ்ரானிக்சை 19 ஓட்டங்களைச் சேர்த்தார்.
பந்துவீச்சில் மொபு 3 இலக்குகளையும், கிறீமர், சட்ரா இருவரும் தலா 2 இலக்குகளையும், மிரி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி 22.2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக மிரி 46 ஓட்டங்களையும் மூர் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் பெற்றனர். ஓர் ஆட்டம் மீதமிருக்க இரு அணிகளும் தற்போது தலா 2 வெற்றிகளுடன் உள்ளன. (ம-23)

## கே.ஸி.ஸி.ஸி. – ஜொலிஸ்ரார் இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 26
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி இன்று மோதவுள்ளது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமை யும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வெள்ளவத்தை வர்த்தக வங்கியின் முகாமையாளர் ராசமனோகரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## றெட் றேஞ்சர்ஸ் ஊரெழு றோயல் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், பெப். 26
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கொற்றாவத்தை றெட் றேஞ்சர்ஸ், ஊரெழு றோயல் அணிகள் அபார வெற்றி பெற்றன.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் தொடர் இடம் பெற்று வருகிறது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில், கொற்றாவத்தை றெட் றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது. இதில் கொற்றாவத்தை றெட் றேஞ்சர்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## நியூசிலாந்தை வீழ்த்தி தென்னாபிரிக்கா முன்னிலை

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் 159 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்று தொடரில் ஆதிக்கம் செலுத்துகிறது தென்னாபிரிக்கா.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது தென்னாபிரிக்க அணி. வழக்கம்போல அடித்தாடினார் குயின்டன் டி ஹொக். 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார் அம்லா. பிளாசிஸ் - குயின்டன் இணை மற்றொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்கள் வரை தாக்குப்பிடித்தது. 36 ஓட்டங்களுடன் பிளாசிஸை வீழ்த்தினார் கிராண்ட்ஹோம்.
அரைச்சதம் கடந்த [illegible] பவிலியனுக்குத் [illegible] குயின்டன். அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அரைச்சதம் கடந்தார் வில்லியர்ஸ். 80 பந்துகளில் 85 ஓட்டங்களைக் குவித்த நிலையில் வில்லியர்ஸ் வீழ்த்தப்பட்டார். முடிவில் தென்னாபிரிக்க அணி 271-8.



பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்துக்கு ஆரம்ப வீரர்களான பிரவுண்நீல் மற்றும் லாதம் முறையே 2 ஓட்டங்களுடனும் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர். முன்வரிசையில் வில்லியம்சன் பெற்ற 23 ஓட்டங்களும் மத்திய வரிசையில் கிராண்ட்ஹோம் பெற்ற 34 ஓட்டங்களுமே அதிகபட்சம். 112 ஓட்டங்களில் நியூசிலாந்து சுருண்டது. 159 ஓட்டங்களால் வென்றது தென்னாபிரிக்கா. வில்லியர்ஸ் ஆட்ட நாயகனானார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள ஒரு கௌரவமான குடும்பத்தில் வீட்டுப்பணி செய்வதற்கு பணிப்பெண் தேவை.

உணவு, தங்குமிட வசதிகளுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**077 730 8106**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் நியூ மைதிலி ஜுவலர்ஸில் தங்கி நின்று வேலைசெய்யக் கூடிய துடிப்பான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

தங்குமிட வசதி உண்டு.

ஆர்வ முள்ளவர்கள் எமது ஜுவலர்ஸ்க்கு நேரில் வரவும்

**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**
இல.38-40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## Vacancy
## Accounts Assistant-Female

**Requirements**

- AAT Completed/Degree/Part Qualified in CIMA/CMA/ICA or Similar qualification
- Good interpersonal skills and good communication skills in English
- Age below 30 years

E-mail your CV and covering letter with details of two non-related referees to career@dailyfoodcity.com within 07 days of this advertisement.
The short listed candidates will be contacted.

**Daily Food City**
No:26,Aadiapatham Road, Kokkuvil East, Jaffna.
**Tel: 021 492 7871**

## RAJAPAKSA ELECTRICALS (pvt) Ltd
Kurunagala

## பணிநிலை வெற்றிடம்

**நாடு முழுவதும் மின்னியக்க உபகரணங்களை**

விற்பனை செய்யும் விற்பனை முகவர்களுக்கு விற்பனைத்துறையில் 25 வருட காலமாக முன்னோடியாகத் திகழும் நற்பெயரினைப் பெற்ற

**குருணாகல ராஜபக்ஷ (எலக்ரிக்கல்ஸ்)**

தனியார் நிறுவனத்தினூடாக யாழ்ப்பாணக்கிளைக்கு விற்பனைத்துறையில் அனுபவமுள்ள, திறமையான விற்பனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

**நேர்முகத் தேர்வு 2017.02.27 தொடக்கம் 2017.03.01 வரை**

தொடர்புகளுக்கு - Karan Watch & Radio
No.26, Kasthuriyar Road, Jaffna.
T. P : 021 222 6807, 077 327 5774

முதன் முறையாக IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் கல்வி நிறுவனம்

**BRITISH COLLEGE**
OF EDUCATION

கல்வி கற்க மற்றும் குடியேற

*Now prepare for your*

**IELTS**

*Do the exam at British College*

*SPOUSE* விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS** Life Skills A1 B1

23, Kachcharinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Street, Mannar. Tel : 023-4924124

**Hot Line : 0777-596148**

பிரபல கண்டி ஆசிரியர்
A.C. Faizal Mohamed அவர்களின்
**ஜேர்மன் மொழி ( DEUTSCH )**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
**BRITISH COLLEGE** 23, Kachchari nallur Rd, Jaffna. **0777-596148**

## களமிறங்கார் மத்தியூஸ்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ் களமிறங்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டது. பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான இலங்கை அணி விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், மத்தியூஸ் தொடரில் இருந்து விலகினார். இதனால் ஹேரத் தலைவராகச் செயற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. (ம)

## பிரதான கணக்காளர் தேவை


இலங்கையில் இறக்குமதித் துறையில் முன்னணி வகிக்கும் தனியார் கம்பனி ஒன்றுக்கு கணக்கியல் தகைமையும் ஆகக் குறைந்தது 05 வருட கால முன்னனுபவமும் உடைய பிரதான கணக்காளர் தேவை.

தொழில் புரியும் இடம் - யாழ்ப்பாணம் குறைந்தது 50 000/= (தகுதிக்கேற்ப தீர்மானிக்கப்படும்) கல்வி அனுபவ சான்றிதழ்களுடன் சுயவிவரக்கோவையை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல 5524**
**மே / பா. உதயன்**
**361 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் துரைசிங்கம் ஜெயசிங்கம்



எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறுவழியிலும் உதவி புரிந்த அன்பான உறவுகளுக்கும் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குடும்பத்தினர்.*
உடுவில்றோட்,
பொன்னம்பலம் லேன், மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.